MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR MADRAS





ஸ்ரீ சங்கர பகவத்பாதாசாரிய ஸ்வாமிகள்



ஸ்ரீ சாரதாம்பாள் (சிருங்கேரி).

உ

சிவமயம்.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# சங்கரவிஜயம்

என்று வழங்கும்

## சங்கராச்சாரியர் சரித்திரமும்,

அரும்பதவிளக்கமும்.

இவை

சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜில் தமிழ்ப்புலமை நடாத்தியவரும்

சமரசவேத சன்மார்க்கசங்க வித்வான்களிலொருவருமாகிய

உபயகலாநிதிப்பெரும்புலவர்

தொழுவூர் - வேலாயுதமுதலியாரால்

தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்ட

முதற்பதிப்பிற்கிணங்க,

ஷை முதலியார் மூத்த குமாரர்

தொழுவூர் - வே. திருநாகேஸ்வர முதலியாரால்

பரிசோதிக்கப்பெற்று,

ஷை முதலியார் இளைய குமாரர்

தொழுவூர் - வே. செங்கல்வராய முதலியாரால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

[இரண்டாவது பதிப்பு.]

1909.

விலை ரூபா 1.

[Copyright Registered.]

கணபதிதுணை.

# பொருளடக்கம்.


| எண். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1. | இரண்டாம் பதிப்பின் முகவுரை ... ... | ௧—௫ |
| 2. | நூலாசிரியர் வரலாற்றுச் சுருக்கம் ... | ௬—௯ |
| 3. | அரும்பதவிளக்கம் ... ... ... | ௧௦—௧௭ |
| 4. | அதிகார அட்டவணை ... ... ... | ௧௮—௨௦ |
| 5. | சங்கரவிஜயமென்று வழங்கும் சங்கராச்சாரியர் சரித்திரம் ... ... | 1—112 |
| 6. | பிழை திருத்தம் ... ... | 113-114 |

கணபதி துணை.

# இரண்டாம்பதிப்பின் முகவுரை.

சங்கரவிஜயமென்று வழங்கும் சங்கராச்சாரியார் சரிதம், சென்ற 1879-ம் வருஷத்திற்குச் சரியான பிரமாதிவருஷத்தில் எந்தையாராகிய உபயகலாநிதிப் பெரும்புலவர் தொழுவூர் - வேலாயுத முதலியாரால் பெங்களூர் சித்தாந்தி-ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரியார் உதவியைக்கொண்டு வடமொழியினின்றும் தமிழில் வசனமாக ஸ்ரீகள், பாலர், அறிவோர், அறவோர், முதலிய யாவரும் எளிதி லுணர்ந்துய்ய வெளியிடப்பட்டது. அப்பதிப்பின் பிரதிகள் நாளடைவில் விலையாய்விட்டமையால் பல நேயர்கள் மறுமுறை யச்சிட வடியேனைத் தூண்டிவந்தனர்.

ஸ்ரீ சங்கராச்சாரியரது அற்புத சரிதம் வடமொழியில்:—

1. பிருகத்சங்கரவிஜயம்.
2. கேரளீயம்.
3. மற்றொருவகைக் கேரளீயம்.
4. வியாசலீயம்.
5. சங்கரவிஜய விலாசம்.
6. சங்கரவிஜயம்.
7. சங்கராப்யுதயம்.
8. பதஞ்ஜலிவிஜயம்.
9. இராஜதரங்கணி.

என ஒன்பது வகைகளாக எழுதப்பட்டுள்ளன. இவைக ளில் விசேஷங்கள் கிடைத்தமட்டில் எந்தையாரது மூலக்கிரந் தத்தை வைத்துக்கொண்டு மற்றையவற்றை அடிவரையிட்டுக் குறித்திருக்கின்றனன். எந்தையார்தாம் வெளியிட்ட பதிப்பின் முகவுரையில், "சங்கரவிஜய விலாசம்," "வியாசலீயம்", "பதும பாதர் எழுதிய சரித்திரம்," "சங்கரவிஜயகாவியம்" என்னும்

நூல்களிற் செப்பிய கதைகளையெல்லாம் தழுவிச் சுருக்கி யெழுதப்பட்டதாகக் குறித்திருக்கிற காரணத்தால், மூலக்கிரந்தத்தில் யாதொரு திருத்துப்பாடு செய்ய அடியேனுக்கு மனந்துணியவில்லை. ஸ்ரீரங்கம் "வாணிவிலாஸ்" அச்சுக்கூடத்தி லச்சிட்ட **சங்கரபகவத்பாதாசார்யர் சரித்திரம்** என்னும் புத்தகமும் நடேசன் அண்டு கம்பெனியாரால் இங்கிலீஷில் அச்சிட்ட புத்தகமும் உதவிபுரிந்தன.

சிலருக்கு எந்தையார் இச்சரிதம் மொழி பெயர்த்தது சம்மதமிராது. வேறொருவர் செய்யப்புகின் உண்மை வெளியாகாது தலைதடுமாறு மென்பதே தெள்ளிதிற் றுணியப்படும். இப்பதிப்பில் அரும்பதவிளக்கம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ சங்கரப் பெருந்தகை காலத்திருந்தாரும், இவருடன் வாதஞ்செய்தாரு மென்று இந்நூலுட் குறிக்கப்பட்ட ஸ்ரீ நீலகண்டரது "சரிதம்" முதலியவை விவரமாய்க் கிடைக்கின் பலர்க்கு முபயோகமாக வெளியிடக் காத்திருக்கின்றனன். இப் பூவுலகில் நிலவுறும் மதாசிரியர்களது சரிதங்களை யுண்மையாய்த் தமிழில் வெளியிடுவது பெருநன்மையென்னும் எந்தையார் கொள்கை யடியேனுக்கு மிருப்பது மிழுக்காது. எந்த மதாசிரியரது சரிதமும் பிறழாது கிடைக்குமாயினதனினும் உலகிற்குபகாரமெது?

இந்நூலை இரண்டாமுறை பதிப்பிக்க முன்னின்றுதவிய, சென்னை ஐகோர்ட்டுவக்கீல் ம-ா-ா-ஸ்ரீ, **சை. சிவசங்கர செட்டியாரது** குணநலனை வாசிப்போர் யாவரும் மறக்கற்பாலதன்று. இவரைப்போன்ற வபிமானிகள் தமிழிலூக்கம்வைத் துழைப்பது பெருமையிற் பெருமையே. இவர் வயதிற் சிறியரேனு மறிவிற் பெரியரே. இவரையு மென்றுக்கும் பற்றுவடியேனையு மிப்புண்ணியத்திற் றாண்டி முற்றச்செய்த பரமகாருண்ணிய மூர்த்தியாகிய **சற்குரு "திருவருட்பிரகாச வள்ளலாரது"** இணையடியை முக்காலும் மறவாது வணங்கி யுய்வேனாக.

இந்நூலை முதலில் தமிழுலகிற் களித்த புலவர் திலகராகிய எந்தையாரது சரிதச்சுருக்கம் சில ஆன்மநேயர்களது வற்புறுத்தலினால் ஒருவாறு சுருக்கிச் சேர்க்கப்பட்டது. விரிவாகப்பின்னர் வெளிவரும். எந்தையாரியற்றிய செய்யுள்நடை, வசனநடை நூல்கள் ஏராளமாகையால் அவற்றைச் சிறுகச்சிறுக வெளியிட்டு அவரதிஷ்டர்களது மனங்களிப்புறச் செய்ய உத்தேசங்கொண்டுள்ளேன். அவர்களனைவரும் மடியேனுக் குற்றதுணையாயிருந்து அந்நூல்களைப் பரப்பியும், நூல்களைத் தந்து மாதரிக்கப் பிரார்த்

திக்கின்றனன். எந்தையாரியற்றிய நூல்களிற் சிலவற்றினட்டவணையொன்று சேர்த்துள்ளேன். மற்றுமரிய பெரிய தமிழ்நூல்களைப் பெற்றுள்ள பெரியோர்கள் தயைசெய் தடியேனுக் கனுப்புவராயி னவற்றை நன்றியுடனேற்று வெளியிடக் காத்திருக்கின்றனன்.

ஸ்ரீ சிருங்கேரி குருபரம்பரை அட்டவணை முற்பதிப்பிலுள்ளது. ஷை சிருங்கேரியை யடுத்த கூடலி என்னும் கிராமத்திலுள்ள மடத்திற்கும் இம்மடத்திற்கும் ஷை பரம்பரை முதலியவற்றைப்பற்றி வியவகாரம் நடக்கிறபடியால் இப்பதிப்பில் விடப்பட்டது.

இச்சங்கரப் பெருந்தகையின் சரிதம் இந்நிலவுகத்து நிலைத்துலவ வெல்லாம் வல்ல பரசிவப்பிரபு காப்பரென்றவர் திருவருளைச் சிந்திக்கின்றனன்.

இங்ஙனம்

அடியார்க்கடியன்,

தொழுவூர்-வே-திருநாகேஸ்வரன்.

கணபதி துணை.

# இந்நூலாசிரியர்
# வரலாற்றுச் சுருக்கம்.

"வேழமுடைத்து மலைநாடுமேதக்க
சோழவளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன்
தென்னாடுமுத்துடைத்துத் தெண்ணீர்வயற்றொண்ட
நன்னாடு சான்றோருடைத்து."

என்று நமது ஔவைப்பிராட்டியார் புகழ்ந்த தொண்ட மண்டலத்தைக் குறும்பரசர்களைக் களைந்தாண்ட ஆதொண்டமான் சக்கிரவர்த்திக்குப் படைத்துணையாய் நற்குடி நாற்பத்தெண்ணாயிர வேளாளருள் அறுநான்கு கோட்டத்துள் மூன்றாவதாம் ஈக்காட்டுக்கோட்டத்தைச்சார்ந்த தொழுவூர்கிராமத்தில், பூவிருந்தவல்லி மரபு, சதாசிவமஹரிஷிகோத்திரம், போதாயன சிவசூத்திரத்திலுற்பவித்து வியாபாரநிமித்தம் சென்னைவந்து நிலைத்தகுடும்பத்தில், சகல நற்குணங்களமைந்த தொழுவூர்-செங்கல்வராயமுதலியாருக்குமவர் தர்மபத்தினியார் ஏலவார்குழலியம்மைக்கும் இந்நூலாசிரியராகிய தொழுவூர்-வேலாயுதமுதலியார், சாலிவாகனசகம் ௧௭௫௪-க்குமேற்சொல்லாநின்ற நந்தனஸும், ஆவணிமீ ௩௨ அஸ்வனி நக்ஷத்திரங்கூடிய குருவாரத்தன்று அம்மரபிற்கும், குடும்பத்திற்கும் பெருங்கீர்த்தி விளக்கவவதரித்தனர். இவரதுபெரியபாட்டனார் வேலாயுத முதலியார் சிவபதம் பெற்றதினத் திரவு பிறந்த காரணத்தா லிவருக்கு அவர் பெயரிடப்பட்டது. இவருக்குப் பின்சகோதர ரொருவரும் சகோதரியொருவரு முண்டாயினர்.

இவர்ஐந்துவயதில் பள்ளிக்குச்சென்று முதலில்தெலுங்கும், வடமொழியுங்கற்றுப் பின் தமிழ் கற்றனர். இளமையிற்றானே, அன்பு, அடக்கம், பொறை, வாய்மை, தூய்மை, பத்தி, ஆசாரம், நல்லோர்கேண்மை, பெரியாரைத் துணைக்கொள்ளல் முதலியவைகளைக் கடைப்பிடித்து, வெறுப்பு, இறுமாப்பு, சோம்பல், பிணக்கு, கடுஞ்சொல், வெகுளல், கடுஞ்சினம், பொச்சாப்பு முதலிய குற்றங்களைக் கடிந்தே வந்தனர். தமக்குரிய வயதில் தந்தையொடு இலௌகிகம் பழகும்போது, வாணிபமேற்கொண்டு, வடக்கே பூடிக்கிராமத்திற்குத் தந்தையுடன் சென்று அவர் இராஜபிளவையால் சிவபதமடையச் சென்னை திரும்பிக்குடும்பம் பொறுத்தார்.

அக்காலத்தில், "பூவுலகவிது சிவலோகமென்றே மெய்த்தவத்தோ, ரோதுந்திருவொற்றியூர்" என்று நமது திருவெண்காட்டடிக

ளுண்மையிற்கண்டு பேறுபெற்ற திருவொற்றித் தியாகராஜப்பிர புவிற்குப் பத்திசெய்யும் ஊக்கமேற்கொண்டு நாடோறும் தரிசனத்திற்குச் செல்வாராயினர். அக்காலையில் இவர் தந்தையின் ஆன்மநேயர்களிலொருவரும் இவரைமகமை பாராட்டிவந்தவருமாகிய, காளவாய்-குப்பண்ண முதலியாரென்பவர் இவர் அறிவின் விளக்கத்தை யறிந்து, சென்னையில் முருகக்கடவுள் வரப்பிரசாதமும், சிவானுபூதிச்செல்வமும், சதாசிரியரிலக்கணமும், ஒருங்கேயமையப்பெற்று, முத்தி, சித்தி, வியக்தியுபாயங்களை விளக்கவெழுந்தருளிய குருமூர்த்தமாகிய திருவருட் பிரகாசவள்ளலாரென்னும் சிதம்பரம்-இராமலிங்க சுவாமிகளிடம் சேர்த்தார். அக்குருமூர்த்தியும் இந்நூலாசிரியர் வரவை எதிர்பார்த்திருந்தவ ரானபடியால் தூற்றுவெனக்கனிந்து ஆசீர்வதித்து மகமைபாராட்டி "புதியவனல்லன், என்பிள்ளை யெனக்குக் கிடைத்தது" என்றனுக்கிரகித்தனர். அன்று முதல் நாடோறும் இலௌகிக வேலையொழிந்தவேளைகளில் ஆசிரியரிடத்து "பொழுதொடுசென்றுவழிபடன்முனியான் முன்னு பின்னு மிரவினும் பகலினும், மகலானகியன்பொடு கெழீஇக், குணத்தொடு பழகிக்குறிப்பின்வழிநின், றாசறவுணர்ந்தோன் வாவெனவந்தாங், கிருவெனவிருந்தடவிமொனவவிழ்த்துச், சொல்லெனச் சொல்லிச்செல்லெனச்சென்று, பருகுவனன்னவார்வத்தனாகிச் சித்திரப்பாவையினத்தக வடங்கி செவி வாயாக நெஞ்சு களனாகக் கேட்டவை கேட்டவை விடாதுளத்தமைத்துப் போற்றிக்" கொண்டொழுகி எவ்விடங்களையும் தமதாசிரியர்பால் பெரும்பாலும் உபந்நியாசவாயிலாகவே தெளிந்து வந்தார். இவரை ஷ்டி சுவாமிகள் பலவகையாலும் சோதித்து, இளையபிள்ளையார் உபாசனை சித்திக்கச்செய்தார். இவரும் முருகக்கடவுளது அனுக்கிரகத்தால் சகல விடயங்களையும் இலேசிற்றனே சூட்சுமமாக ஆசிரியரிடத்துணர்ந்து அவர்மாணக்கருட் சிறந்தார். ஷ்டிசுவாமிகள் இவர் தேர்ச்சியை யறிந்து இவரை வாதில் வெல்ல வல்லராகக் கருதித் தானே கக்ஷிப் பிரதிகக்ஷிகளை வகுத்து இவருடன் தானே நேரில் வாதித்தும், பிறர் யிவரிடத்து வாதிக்கவும், யிவரைப் பிறரிடத்து வாதிக்கச் செய்தும் வெல்லத் தேற்சியடைவித்தார்.

அஃதற்றுக, இவர்தமது குலகுருவாகிய வயலெல்லா நெல்லூர்-இரத்தின குருக்களென்னும் ஆதிசைவ வேதியரிடம், சமயம் விசேடம், நிருவாணம் முதலிய தீக்ஷைகளைப்பெற்று "அப்பனை நந்தியை யாராவமுதினை, யொப்பிலிவள்ளலை யூழிமுதல்வனை, யெப்பரிசாயினுமேத்துமினேத்தினு, லப்பரிசீச னருள்பெறலாமே" "என்பேவிறகாயிறைச்சியறுத்திட்டுப்பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினு மென்போடுருகி யகங்குழைவார்க் கன்றி, யென்போன் மணியினை யெய்த வொண்ணாதே" என்ற மந்திரங்

களைச் சிந்தித்துப் பரமசிவத்திற்கிடையறாப்பத்தியும், சைவசித்தாந்தக்கொள்கையு முடையரானார். அக்காலத்தில் திருவொற்றியிலெழுந்தருளியிருக்கும் "தாய்மறைபாடும்வாயார்" ஆளுடைய நம்பிகளுக்கு "அன்பிற்பெருகிய சிறப்பின்மிக்க அருச்சனை பாட்டேயாகும், ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்றனுக்கிரகித்ததைச் சிந்தித்துக் கரைந்து அத்தேவர் பிரானைச் செந்தமிழ்ப் பாக்களாற் றுதித்து வந்தனர்.

இவர் செய்கையிங்ஙனமாக, மைசூர் ராஜ்ஜியத்தைச் சார்ந்த பெங்களூரில் இலௌகிகார்த்தமாய் நிலைத்து இவர் குடும்பத்திற்குப் பழைய சம்பந்திகளாகிய திருக்கலைசை (தொட்டிக்கலை) கிருஷ்ணசாமி முதலியாரென்பவருக்கும் அவர் தர்மபத்தினி இலட்சுமம்மாளுக்கும் தவப்பேறா யவதரித்த, எனதருமைத் தாயாகிய மாது ஸ்ரீ "சீரங்கம்மாள்" என்னும் கற்பரசியாரைத் தமது குல குருவின் சகாயத்தால் பெங்களூரிலேயே மணமுடித்து அவ்விடத்தில் ஐகோர்ட்டு துவிபாஷி அலுவலிலமர்ந்து, அத்தேசபாடையாகிய கன்னடமும், கொஞ்சம் ஆங்கிலேயம், மகராஷ்டிரம், இந்துஸ்தானி ஆகியபாடைகளையுங்கற்றுத் தமதலுவலைச் சிலகாலம் பார்த்துவந்தார். இவரிடையிடையே சென்னைசென்று தனதாசிரியரையும், திருவொற்றியிடங்கொண்ட படம்பக்க வாணரையும் தரிசித்துப்போவார். சிலகாலத்திற்குமேல் சென்னை திரும்பி நிலையாக வதிந்தார். அக்காலத்தில் இவர் தனதாசிரியர் தென்னார்க்காடுஜில்லா கூடலூரில் வசிக்க அவர் தமது பத்திப்பேரன்பிற்ற தும்பிப் பொறித்துவைத்த செந்தமிழ்ப்பாக்களையெல்லாம் திரட்டித் திருமுறைகளாக வகுத்து, ஷை பாக்களில் ஓரோர்பகுதிகளை மாத்திரம் ஓதிவந்த பரிபாகிகள் முற்றுமோதியுய்யவச்சிட்டு அதற்கோர்வரலாறும் சேர்த்து அப்புத்தகத்திற்கு "திருவருட்பா" என்று திருநாமமிட்டு வெளியிட்டனர்.

இதுகாரணமாக அக்காலத்தில் சென்னையில் ஈழநாட்டிலிருந்துவந்த வித்வான் யாழ்ப்பாணம்-நல்லூர்-ஆறுமுகநாவலரவர்கள் அபிமானிகளுக்கும், திருவருட்பிரகாச வள்ளலார் அபிமானிகளுக்கும் பலவகையில் வாதம் நிகழ்முடிவில் "போலியருட்பா மறுப்பு" என்னும் குதர்க்கம்நிறைந்த புத்தகமொன்று நாவலரவர்களெழுதி மாவண்டூர்-தியாகேச முதலியாரியற்றியதாக முகபத்திரத்தோடு வெளியிட்டனர். அதைக் கண்டு இவர் அதன் மறுப்பாக "போலி யருட்பா மறுப்பென்னும் குதர்க்காரண்ணிய நாச மஹாபரசு" என்னும் புத்தகமெழுதி சமரசவேத சன்மார்க்க சங்கத்தார் பெயரால் வெளியிட்டு ஷை திருவருட்பாவின் உண்மையை யாவரு முணர்ந்துய்யும்படி செய்தனர். உடனே நாவலர் தமது சொந்த நாடேகினர். அதோடு அவ்வாதம் முற்றுப்பெற்றது.

பிறகு திருவருட்பிரகாச வள்ளலார், பார்வதிபுரம், உத்தர ஞான சிதம்பரம், என்னும் வடலூரில் தங்கியபொழுது இவர் குடும்பத்துடன் அவ்விடஞ் சென்று ஆசிரிய பணிவிடையிற்றலை நின்றார். அப்போது இவர் தமதாசிரியர், உபசுனுமூர்த்தம்,பெரிய பெருமான், மூத்தபிள்ளையார், உலகமாதாவாகிய பார்வதியார் முதலியர் விடயமாகத் தோத்தரித்த அரிய பல செந்தமிழ்ப் பாக்களை "திருவருட்பிரகாசவள்ளலார்" கேள்வியுற்று வரவழைத்து, அவ்விடம் கூடியிருந்த சமரசவேத சன்மார்க்க சங்கத்தினராகிய ஆனந்தநாத சண்முகசரணாலய சுவாமிகள் முதலிய மகத்துக்கள் முன்னிலையில் தானுமுடனிருந்து அவைகளி னருமை பெருமைகளை யாராய்ந்து, வியந்து "நமது முதலியரப்பா மதுவாக்கிது" "வித்வான் பாட்டிது" என்றிடையிடையே யருமை பாராட்டி, "மலர்வாய் மலர்ந்தமணி வார்த்தை யிது"என்று தமது திருக்கரங் கொண்டே வரைந்து "உபயகலாநிதிப் பெரும் புலவர்" என்று பட்டமளித்துப் பொறித்து வைத்துக்களித்தனர். இதற்கான வாதாரம் அடியேனிடம் தற்காலத்திலுமுள்ளது.

அவ்விடத்தில் இவர் நீறுபூத்த நெருப்புப்போன்று ஆசிரிய பத்தி செய்துவந்தனர். பின்னர்மேல் வருங்கருமம் நோக்கி "வள்ளலார்" இந்நிலவுலகத்தாரது ஊனக்கண்ணுக் கெட்டாது மறைந்தபிறகு, இவரது உயிர்த்துணையாகிய "சீரங்கம்மாள்" இவரது ஏகபுத்திரியும் அடியேன்சகோதரியுமாகிய "சிவகாமியம்மையார்" முதலிய நெருங்கிய உறவினர் பலர் "மேட்டுக்குப்பம்" என்னும் கிராமத்தில் சிவபதமடைய, அடியேனைக் கைப்பிடித்து நடுவில் சிதம்பரம், திருவதிகைவீரட்டானம், திருமுதுகுன்றம்,திருவண்ணாமலை முதலிய திருப்பதிகளைத் தரிசித்துச் சென்னை சேர்ந்தார். இவர் தமது இளைய சகோதரருக்கு மணமுடித்து இல்லறத்திருத்தி, பிதுரார்ச்சித வீடொன்றையும் அடியேனையு மொப்பித்துத் தான் தனதிச்சைவழி செல்ல உத்தேசித்து அவருக்கு விவாகஞ் செய்வித்தனர். ஆனால் அவர் இவர் செய்த நன்றியை மறந்து "ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று, சூழினுந்தான் முந்துறும்" என்ற தமிழ் மறையின்படி வினைவயத்தராய்ச் சென்னையில் பிதுரார்ச்சித வீட்டையும் மற்றுமுள்ள பொருள்களையும் எனதன்னைக்குக் கொடுத்துள்ள ஸ்ரீதனசொத்துக்களையும் கைப்பற்றி இவரையும் அடியேனையும் அநாதரணை செய்து பலவித வஞ்சகங்களால் சொத்துக்களைக் கெடுத்து, தானுஞ் சரிவர வனுபவிக்காது, தமையனார் குடும்பமு மனுபவிக்க வொட்டாது சந்ததி விருத்தியின்றி,வறுமையால் மிகவும் பீடிக்கப்பட்டுச் சென்ற 1905ஆ ஜூலைமீ 1உ சிவபதம் பெற்றார். அவர் பெயர் சபாபதி முதலியார்.

இவ்வாறு இளைய சகோதரரால் வஞ்சிக்கப்பட்ட இவ்வாசிரியர், சென்னையில் தனதான்ம நேயர்களும், பிரபுக்களுமாகிய பாளையம்-சோமசுந்தர செட்டியாரவர்கள், நாகை கண்ணு-இராமலிங்கம் பிள்ளையவர்கள்,* கூடலூர்-கனகசபை பிள்ளையவர்கள், தென்னேரி-அமிர்தலிங்கஜோசியரவர்கள் முதலியோரும், தண்டலம் ஆறுமுக முதலியாரவர்கள், தோட்டிக்கலை-சின்னதம்பி முதலியாரவர்கள், கோ-பாலகிருஷ்ண முதலியாரவர்கள் முதலிய உறவினர்களும் ஆதரணை செய்ய சென்னையையடுத்த அருணாசலேஸ்வரன் பேட்டையில், முத்து கிருஷ்ண பிரமமடத்தில் சில காலம் வாசஞ்செய்து, பிறகு, முத்தியாலுப்பேட்டையில் நிலைத்தார். அப்போது அடியேனை ஆங்கிலேய பள்ளிக்கு வைத்து, தெலுங்கும், வடமொழியும் கற்கும்படி செய்தார். அவ்வமயத்து சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் கன்னடபண்டிதராயிருந்த, பெங்களூர்-சித்தாந்தி-பிரமஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரியார் நேசம் நேரிட அவரதுதவியைக்கொண்டு, கலியுகத்திற்கடுத்த தர்மசாஸ்திரமாகிய ஸ்ரீ பராசரஸ்மிருதியை வடமொழியினின்றும் தமிழில் மொழிபெயர்த்து சஞ்சிகைரூபமாக வெளியிட்டு வந்தனர். அக்காலத்தில் சென்னை பிரஸிடென்ஸிகாலேஜில் மாதமெடிக் புரொபெஸராக (கணிதநூற்புலவர்) இருந்து காலஞ்சென்ற இராயபஹதூர்-பூண்டி - அரங்கநாத முதலியாரவர்கள், எம். ஏ., நண்பராயினர். [இம்முதலியாரொருவர்தான் இவ்வாசிரியர் சிவபதம் பெற்றதும், இவரது ஜேஷ்ட குமாரனாகிய அடியேனுக்கு தாம் மேற்பார்த்துவந்த தமிழ் டிரான்ஸிலேட்டர் ஆபீஸில் உத்தியோகஞ்செய்வித்து அதன் மூலமாய்க் குடும்பத்தைத் தன் நண்பரைப்போல் பாவித்துக் காப்பாற்றினவர். அந்நன்றியென்றும் மறக்கற்பாலதன்று.]

இது இப்படியிருக்க 1879-ம் ௵ ஆகஸ்டு மாதத்தில் சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் தமிழ்த் தலைமைப் பண்டிதராயிருந்த பூச்சம்பாடி - ஸ்ரீனிவாச ராகவாச்சாரியர் உபகாரச் சம்பளம் பெற்று விலகிய காலத்தில் ௸ சோமசுந்தர செட்டியார் ரெவினியு போர்டாபிஸில் முதல் அஸிஸ்டெண்ட் வேலைபார்த்துவந்த, சிவசங்கர முதலியார், ௸ அரங்கநாதமுதலியார் ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரியார் ஆகிய இவர்கள் தூண்டுதலாலும், முயற்சியாலும் இவர் இரண்டாவது தமிழ்ப்பண்டிதராக நியமிக்கப்பட்டார். 1881-ம் வருஷத்தில் தனதிளைய மாமனாராகிய தோட்டிக்கலை - சுப்பராயமுதலியாருக்கும் காமாக்ஷியம்மாளுக்கும் அவதரி

* இப்பிரபு தற்காலம் உபகாரச் சம்பளம் பெற்று முத்தியாலுப்பேட்டை, இராமசாமித் தெருவில் சிவத்தியானத்திற் காலங்கழித்து சுகஜீவியாக வசித்து வருகின்றனர். இவர் மிக்க புண்ணிய சீலரென்றே கொள்ளப்படுவர்.

த்த மாது ஸ்ரீ "சுவர்ணம்மாள்" என்பவர் தமது மூத்தமனைவி போன்ற நற்குண நற்செய்கை யமையப் பெற்றவரென்று கண்டு மறுமணம் முடித்தார். [இந்தம்மாள் தற்காலம் தாபதநிலையை வழுவாது நடத்திக்கொண்டு, ஏக குடும்பத்தினராக அடியேன் வசமாக சிவத் தியானத்தோடும் ஜீவந்தராக விருக்கின்றனர். இந் தம்மாள் உண்மையாய் அடியேனுக்கு மாற்றாந்தாயாகவே நடந்து அடியேனைக் காப்பாற்றிக் கீர்த்தி பெற்றிருக்கின்றனர். அந்நன் றியை அடியேனும் என்குடும்பத்தினரும் என்றும் மறக்கற் பால தன்று.] பிறகு சென்னையையடுத்த தண்டையார்ப் பேட்டையில் ஓரில்லம் வாங்கி அதில் அடியேனுக்கு இல்லற வியல்பு நடத்திக் காட்டியும், அடியேனுக்குச் சகாயமாக தனதிரண்டாம் மனைவி யர்பால் தொழூர் - வே-சேங்கல்வராய முதலியாரென்னும் கண் மணியைப் பெற்றுவைத்தும், டி காலேஜில் சுமார் பத்துவருட காலம் தமிழ்ப்புலமை நடாத்தியும் வந்து, தமக்கு 57-ம் வயதில் 1889-ம் வரு பிப்ரவரிமீ 22-உக்குச் சரியான சர்வதாரிவரு மாசிமீ கஉஉ கிருஷ்ணபக்ஷம் சப்தமிதிதி விசாக நக்ஷத்திரங் கூடிய சுக்கிரவாரதினம் தன தான்மார்த்தமாகிய படம்பக்க நாதரது திருவடி நீழலைச் சேர்ந்தனர். இவரது அருமைத் திரு மேனி திருவொற்றியூரில் க்ஷேமித்துப் பூசிக்கப்படுகிறது. இவர் தண்டையார்ப் பேட்டையிலிருக்கும்போது டி அரங்கநாதமுத லியாரவர்கள் ஆசுகவியாகச் சொல்லக் கேட்டுக்கொண்டபடி "மகிழ்மாக்கலம்பகம்" என்னும் பிரபந்தம்பாடி அரங்கேற்றினர். இவர் சதபங்கியும் செய்திருக்கின்றனர். அது இடம்மாறி யிருப்ப தால் வெளியிடத் தடையுண்டா யிருக்கிறது.

இவ்வாசிரியர் வசன நடையிலும், செய்யுள் நடையிலும் இயற்றியுள்ள நூல்கள் பலவுள. அவற்றில் "பட்டினத்துப்பிள்ளை யார்" என்றுவழங்கும் "திருவெண்காட்டடிகள் சரித்திரவசனம்" இரண்டாம் பதிப்பு வெளிவந்திருக்கிறது. இந்நூலும் இரண் டாம் பதிப்பே. மற்றவைகளை ஒவ்வொன்றாக வெளியிட உத் தேசங்கொண்டுள்ளேன். அவைகளில் முக்கியமானவைகளின் அட் டவணையொன்று சேர்த்திருக்கின்றனன். இவருடைய சரித்திர விரிவு பின்னர் தனிப்புத்தகமாக வெளியிடப்படும்.

இங்ஙனம்:

தொழூர் வே. திருநாகேஸ்வரன்.

கணபதிதுணை.

# சங்கரவிஜய அரும்பதவிளக்கம்.

———(o)———

## அ.

அகண்டம்—அபின்னம், கண்டிக்கப்படாதது, எல்லாம்.
அகரம்—பார்ப்பனச்சேரி.
அங்கப்பழுதினர்—குறைந்த கைகாலுள்ளவர்.
அசுரர்—அவுணர்.
அச்சுறுத்தல்—பயமுறுத்தல்.
அஞ்சலி—கும்பிடல்.
அஞ்ஞானம்—ஞானமின்மை, தெய்வ வறிவின்மை.
அட்டாங்கம்—எண்வகையுறுப்பு.
அணித்து—சமீபம்.
அத்தியயனம்—படித்தல்.
அநந்தசயனன்—சேடசயனன், விஷ்ணு.
அநாதி—கடவுள், சிவன், புராதனம்.
அநுதாபம்—மனத்தாபம்.
அந்தணர்—பார்ப்பார்.
அபிசாரகருமம்—மாரணகருமம்.
அபிமானம்—உருக்கம். நேசம்.
அமிசம்—பங்கு.
அமைச்சன்—மந்திரி.
அயலவர்—அண்டையிலுள்ளவர்கள்.
அரணி—தீக்கடைக்கோல், தீத்தட்டிக்கல்.
அரவணை—பாம்புப்படுக்கை, அநந்தன்.
அரவு—பாம்பு.
அருகியவொலி—குறைந்த சத்தம்.
அருக்கியம்—பூசை முறையுளொன்று, மந்திரநீரிறைத்தல்.
அருக்கிய நோக்கம்—பராமுகமான பார்வை.
அருணோதயம்—சூரியோதயம், வைகறைப்பொழுது.
அரையன்—அரசன்.
அலங்காரம்—அழகுசெய்தல்.
அல்லல்—துன்பம்.
அவதாரம்—உற்பத்தி.
அவமிருத்யு—துன்மரணம்.
அவித்தை—அஞ்ஞானம், பஞ்சமாயையினொன்று.
அவிர்ப்பாகம்—தேவருணவு.
அவை—சபை.
அவைக்களம்—சபை.
அழல்—நெருப்பு, தீ.
அழுக்காறு—பொய், பொறாமை.
அளவை—எல்லை, தர்க்கம், பிரமாணம்.
அறவொழுக்கங்கள்—தரும ஆசாரங்கள்.
அறியாமை—அறிவீனம்.
அற்பித்தல்—காணிக்கை கொடுத்தல், பலிகொடுத்தல், நிவேதித்தல்.
அனுட்டானம்—ஆசரித்தல், நிலைநிறுத்தல்.
அனுமானம்—ஓர் பிரமாணம் அஃது உரைத்தவற்றைக் கொண்டுரையாத பொருளை யறிதல்.
அக்ஷயவடம்—ஆலமரம்.
அஸ்தம்—கை.
அத்துவிதம்—ஒற்றிப்பு, இரண்டல்லாதது (பலவென்றும் பொருள் சொல்வாருமுளர்).

## ஆ.

ஆகமம்—முதல்வன்வாக்கு, சதாசிவரது பஞ்சமுகத்தினின்றும் தோன்றியது.
ஆகருடணம்—அழைத்தல், இழுத்தல்.
ஆக்கம்—செல்வம்.

ஆச்சிரமம்—நிலை, முனிவர் வசிக்குமிடம்.
ஆஞ்ஞை—ஆணை, உத்தரவு.
ஆடவர்—ஆண்மக்கள்.
ஆணவம்—ஆங்காரம், மூலமலம்.
ஆணை—உத்தரவு.
ஆண்டு—வருடம், வயது.
ஆதரித்தல்—அன்புவைத்தல்.
ஆமா—காட்டுப்பசு.
ஆராய்ச்சி—ஆராய்தல், தேடல்.
ஆர்ப்பு—பேரொலி, சிரிப்பு.
ஆற்றல்—வல்லமை.
ஆஸ்திகம்—தெய்வ மொன்றுண்டென்னுங்கொள்கை.

## இ.

இங்கிதம்—இனிமை.
இச்சித்தல்—விரும்புதல்.
இடக்குரை—குதர்க்கமாகப் பேசுதல்.
இடியேறு—இடி.
இதம்—நன்மை.
இமயம்—இமயமலை, பொன்மலை.
இரத்தல்—யாசித்தல்.
இரவி—சூரியன்.
இராஜசம்—முக்குணத்தொன்று (கோபமுண்டாகும் குணம்)
இருசுடர்—சூரியசந்திரர்.
இலங்கம்—அடையாளம்.
இளவேனில்—சித்திரை வைகாசியின்பருவம், வெப்பம்.
இறுதிக்கடன்—இறந்தபின் செய்யுங்காரியம்.

## உ.

உசாவல்—கேட்டல்.
உச்சம்—உயர்ச்சி.
உடுக்கள்—நட்சத்திரங்கள்.
உத்தரக்கடன்—இறந்தபின் செய்யுங்காரியம்.
உத்தராயணம்—சூரியன் வடக்கிற் சஞ்சரிக்கும் தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி என்னும் ஆறுமாதகாலம்.
உத்தி—தந்திரஉத்தி.
உபக்கிரமம்—காரியமுயற்சி செய்தல்.
உபசங்காரம்—ஆட்சேபம்.
உபநயனம்—பூணூற்சடங்கு.
உபவனம்—தோட்டம்.
உபவாசம்—உணவொழிதல்.
உம்பர்—மேல்.
உரிமைத்தொழில்—சுதந்தரத்தொழில்.
உலகோம்பல்—தேசத்தை யாளுதல்.
உவகை—சந்தோஷம்.
உலகபாலனம்—தேசத்தைக் காத்தல்.
உற்பாதம்—கொடுமை.

## ஊ.

ஊக்கம்—உற்சாகம்.
ஊக்கல்—எழுப்பல்.
ஊறுபாடு—இடையூறு, இரணம்.

## எ.

எல்லை—அளவு.

## ஏ.

ஏது—நிமித்தம், காரணம்.

## ஐ.

ஐயம்—சந்தேகம்.

## ஒ.

ஒட்டம்—பந்தயம்.
ஒப்புக்கண்டு—சரியாக விருக்கக்கண்டு.
ஒருதலைவிதி—தீர்மானிக்கப்பட்ட ஏற்பாடு.
ஒழுகுதல்—நடத்தல்.

## ஓ.

ஓதப்புரோதம்—குறுக்கிழை, நெடுக்கிழை.
ஓதல்—வாசித்தல்.
ஓம்பல்—பாதுகாத்தல்.
ஓரை—நாழிகை ; ஐந்துநாழிகைநேரம்.

## க.

கபோலம்—வானவட்டம்.
கசடற—குற்றநீங்க,

கடைக்கணோக்கம்—கடாட்சம்.
கட்டளை—உத்தரவு; ஆணை.
கணிதம்—என்; எண்ணிக்கை; சோதிடநூல்.
கண்கூடு—பிரத்தியட்சம்.
கதிர்கலைகள்—சாரங்கள்; நடை.
கதிரவன்—சூரியன்.
கமழ்தல்—மணத்தல்.
காாளம்—தீக்குளம்.
கருணை—தயவு.
கருதல்—நினைத்தல்.
கருமகாண்டம்—கன்ம நிவிர்த்தி முதலியவற்றைச்சொல்லும்நூல்.
கருவாசம்—கற்பவாசம்; பிறப்பு.
கலுழன்—கருடன்.
கலை—கூறு; கல்வி.
கவந்தி—உடல்.
கவற்சி—எண்ணம்; ஏக்கம்.
கழகம்—சபை.
கழல்—பாதம்.
கழுவாய்—கழுவினிடம்.
கற்காணம்—கருங்கல்லாலாகிய செக்கு.

கா.

காணுதம்—கணுதமுனிவரியற்றிய நூல்.
காணுபதம்—கணபதிபூசைசெய்யு மமதம்.
காதலன்—கணவன்; மகன்; தோழன்.
காபாலிகம்—வைரவமதம்.
காமதேனு—வேண்டியதைக்கொக்கும் தெய்வப்பசு.
காம்யதவம்—ஒருபொருளை யிச்சித்துச்செய்யுந் தவம்.
காரிகை—உரை, விருத்தியுரையுமாம்.
காலஞானம்—பருவங்களை யறியும் ஞானம்.
காலவாதம்—காலமே தெய்வமென்று சித்தாந்தம் செய்தல்.

கி.

கிரககதி—கிரகங்களின்வழி.
கிரகசமாகமம்—கிரகங்கள் ஒன்ருய் நடப்பது.
கிரகத்தாச்சிரமம்—இல்லறம்.
கிரகமோசனம்—கிரகங்களின்பீடை நீக்கம்.
கிரமம்—வரிசை; ஒழுங்கு.
கிராந்திவிருத்தம்—ஓர்நூல்.

கு.

குதர்க்கம்—முறைகெட்டவாதம்.
குபேரம்—குபேரனுடைய மதம்.
குயுக்தி—முறைகெட்டயுத்தி.
குரவன்—ஆசான்.
குருபரம்பரை—ஆசிரியவழி; குருவமிசவழி.
குருமனைவாசம்—ஆசியரினில்லில் வாசஞ்செய்தல்.
குழல்—ஊதிடுகுழல்; புள்ளாங்குழல்.

கூ.

கூட்டுறவு—இணைந்த உறவு.

கே.

கேகாரவம்—மயில் சந்தோஷத்தாற் செய்யுந்தொனி.
கேசம்—மயிர்.

கை.

கைசன்னை—கைஜாடை.
கையடை—அடைக்கலம்; வெகுமானம்.
கைவந்த பெரியோன் — பயிற்சி முதிர்ந்த அறிஞன்.
கைவல்லியம்—உபநிடத முப்பத்திரண்டினொன்று; சித்தி; மோட்சம்.

கொ.

கொளுத்தல்—விருத்தி செய்தல், உண்டாக்கல்.

கோ.

கோசங்கள்—சிகண்டுகள்; பண்டாரங்கள்.
கோடரி—கோடாலி.
கோத்திரம்—வர்க்கம்.
கோமகன்—அரசன்.
கோயில்—மாளிகை.

கௌ.

கௌதமம்—தருமநூல் பதினெட்டினொன்று.
கௌடம்—ஓர்தேயம், பாஷை.

ச.

சகத்திரம்—ஆயிரம், சிவாகமமிருபத்தெட்டினொன்று.
சகத்திரவிரதம்—ஓர்வகைவிரதம்.
சகுணம்—காசரூதி குணவுடைய மூர்த்திகள்.
சகோரப்புள்—பேராந்தை; நிலமுகிப்புள்.
சங்கற்பம்—எண்ணம்; விருப்பம்.
சச்சிதானந்தம் — ஞானத்துக்குக் காரணமாயுள்ளது; பிரமம்.
சதி—மனைவி; வஞ்சனை, தாளம்.
சதுட்டயம்—நான்மடங்குகொண்டது.
சதுரப்பாடு—சாமர்த்தியம்.
சதுரம்—சமர்த்து; விவேகம்.
சத்துவம்—சாத்துவிககுணம்.
சந்தி—இசைப்பு;
சந்தர்ப்பணை—மயேசுரபூசை.
சந்தானம்—வமிசம்; சந்ததி.
சந்நியாசம்—துறவு.
சமம்—இந்திரியநிவர்த்தி.
சமயம்—தருணம்; மார்க்கம்.
சமாதிநிட்டர்—சமாதியில் தேர்ச்சியுள்ளவர்.
சமுகவெளி—சந்நிதியாலாகிய பிரகாசம்.
சருவதந்திரசுதந்திரன்—ஈச்சுரன். தனக்குமேல் அதிகாரியில்லாதவன்.
சலம்—தணியாக்கோபம்.
சலவுரை—கோபத்தோடு சொல்லும்சொல்.
சற்கருமம்—நற்காரியம்.
சற்பம—பாம்பு.
சற்பத்தி—உண்மையானபத்தி.
சன்னை—ஜாடை.

சா.

சாகை—வேதநூற்பிரிவு.
சாதகருமம்—ஜாதகமெழுதுதல்.
சாதனம்—பயிற்சி; அடையாளம்.
சாது—சற்குணத்தோன்.
சாதேயம்—சத்திசமயம்.
சாந்திக்காப்பு—தோஷநிவாரணத்திற்குச் செய்யும் கிரியை.
சாமகானம்—சாமவேதத்தையோதல்.
சாருவாகன்—உலகாயுதமதத்தைப் பின் பற்றுவோன்.
சாலாது—போதாது; குறைவு.
சால்பு—மேன்மை.

சி.

சித்தரகசியம்—காயசித்திமுதலிய சித்திகளைப்பெற்றவர்களது உள்ளுறைவிடயம்.
சித்தன்—சித்திபெற்றோன்.
சித்தாந்தம்—முடிவு; தருக்கமுடிவு.
சித்திரித்த—அலங்கரித்த.
சிரத்தை—விசுவாசம்; அன்பு.
சிலேடை—இரண்டர்த்தமுள்ளது.
சிவாகாரம்—பிரமஸ்வரூபம்.
சிவோகம்—சோஹம்பாவனைசெய்தல்.
சிறுகி—குறுகி.
சின்முத்திரை—ஞானமுத்திரை.
சிக்ஷை—பாடங்கேட்டல்.

சீ.

சீரணோத்தாரம்—கிலமாகியதைப் புதுப்பித்தல்.
சீர்த்தி—கீர்த்தி; பெருமை.

சு.

சும்மாதிருத்தல்—சும்மாவிருத்தல்.
சுயம்புரூபதது—தானே யுண்டான உருவம்.
சுரகாலம்—சங்கீதத்தின் காலபேதம்.
சுருதி—வேதவாக்கியம்.
சுரம—இசை.
சுரௌதங்கள்—ஸ்மிருதி சம்பந்தமான கர்மங்கள்.
சுழுத்தி—மயக்கமான நித்திரை; மூன்றுமவத்தை அஃதாவது துயத்தானம.
சுற்றம்—பந்து.

சூ.

சூளறவு—சபதம்.

### செ.

செபவடம்—செபஞ்செய்யுமாலை.
செய்யுள்—பாட்டு.
செருக்கு—ஆங்காரம்; களிப்பு.
செவிசாத்தல்—கேட்டல்.

### சே.

சேடம்—மிகுதி.

### சை.

சைதந்நியம்-அறிவு;தத்துவஞானம்

### சொ.

சொற்சித்தி—சொல்லானது பலித்தல்.

### சோ.

சோடை—விடாய்.

### சௌ.

சௌகதர்—சூனியவாதி.
சௌரம்—அட்டாதச உபபுராணத்தொன்று.
சௌளம்—மயிர்கழித்தல்.

### ஞா.

ஞானகாண்டம்—ஞானத்தைக் கூறும்பாகம்.
ஞானம்—அறிவு; தெளிவு.
ஞாதியர்—பங்காளிகள்.

### த.

தகர்தல்—உடைதல்.
தடம்—இடம்; விசாலம்.
தண்டம்—சிக்ஷை; தடி.
தண்டனை—சிக்ஷை.
ததாஸ்து—அப்படி யாகக்கடவது.
தமருகம்—உடுக்கு.
தரம்—பக்குவம்.
தரித்தல்—பூணல்.
தரு—விருக்ஷம்.
தருக்கம்—வாது.
தருணம்—சமயம்.
தருப்பையாசனம்—தருப்பைப்படுக்கை.
தன்னியன்—தனவான், நீவினீங்கினோன்.

### தா.

தாதுக்கள்—சத்ததாது, அஃது இரதம் இரத்தம் எலும்பு சுக்கிலம் தசை தோல்மூளை.
தாபதர்—தவத்தைச்செய்பவர்.
தாமதம்—பொழுதுபோக்கல்.
தாரணை—அட்டாங்க யோகத்தொன்று அஃது இதயம் கண்டம் கபாலம் நாபி நெற்றியிவற்றொன்றிற் சிந்தைவைத்திருத்தல்.
தாவரம்—நிலையியைப்பொருள்.
தாழ்த்தல்—குறைத்தல்.

### தி.

திக்குவிஜயம்—நாற்றிக்குஞ் சென்று ஜெயித்தல்.
திங்கள்—மாதம்.
திட்பம்—திண்மை; நிசம்.
தியானயோகம்—அட்டாங்கயோகத்தொன்று அஃது ஐம்புலனடக்கிச்சிவயோகஞ் செய்தல்.
திரிபு—மாறுபாடு.
திரியக்கு—குறுக்கு.
திரிவேணி—ஓர்தலம் அஃது கங்கை சரஸ்வதியமுனை யென்னு மூவாறுகளின் சந்திப்பு.
திரோபவம்—மயக்கம்.

### தீ.

தீக்ஷை—உபதேசம்; விரதநியமம்.

### து.

துய்த்தல்—அனுபவித்தல்.
துவைதம்—இரண்டு.
துறக்கம்—மோக்ஷம்.
துன்மரணம்—அவமிருத்தியு

### தூ.

தூணம்—தூண்.

### தே.

தேட்டம்—சம்பாத்தியம்.
தேவதாகாண்டம்—தேவதைகளின்பெருமைகளைக் கூறும்பாகம்.
தேவிபாரமியம்—ஸ்ரீதேவியின் பெருமையைத் தெரிவித்தல்.

தேறுதல்—தெளிதல்.
தேற்றம்—உண்மை.

## தொ.

தொடக்கு—சம்பந்தம்.
தொண்டர்கள்—அடியவர்கள்.

## ந.

நடித்துகாட்டல்—செய்துகாட்டல்
நட்பினர்—சிநேகர்.
நரமடங்கல்—நரசிங்கம்.
நல்லோரை—நல்லவேளை.
நனவு—சாக்கிரம்.
நன்குமதித்தல்—சன்மானித்தல்.

## நா.

நாத்திகர்—தெய்வமில்லையென் போர்.
நாமகரணம்—பெயரிடுதல்.
நாவன்மை—நாக்கின்வல்லமை.
நாஸ்திகம்—தெய்வ மில்லை யென்னும் கொள்கை.

## நி.

நிக்கிரஹம்—தோல்வி; நீக்கல்.
நிடேதங்கள்—தள்ளத்தக்கவைகள்
நிட்காமம்—விருப்பின்மை.
நிதித்தியாசனம்—சிந்திப்பு.
நிபுணர்—வல்லவர்.
நிமந்திரணம்—வரித்தில், ஏற்படுத்தல்.
நிமித்தங்கள்—காரணங்கள்.
நியமம்—முறைமை; அட்டயோகத் தொன்று அவைதத் துவநூலோர் தல்.
நியாயம்—தருக்கசாத்திரம்.
நிரீச்சுரஸாங்கியம்—சூனியவாதம்
நிர்க்குணம்—குணமின்மை.

## நீ.

நீத்தோர்—துறவோர்
நீர்க்கடன்—தர்ப்பணம்.

## நு.

நுதல்—நெற்றி.

## நை.

நைட்டிகப்பிரமசாரியன்—நிட்டையோடு கூடி விவாகமில்லாத சந்நியாசி.
நைமித்திகம்—விசேடாராதனை.

## நோ.

நோக்கம்—பார்வை.

## ப.

பசுநிரை—பசுக்கூட்டம்.
பஞ்சகௌடம்—சுத்த கௌடம். கானிகுப்பசம், சாரசுவதம், உற்கலம், மைதிலை ஆகிய ஐந்து
படகம்—இரணபேரி; கலசம்.
பட்டம்—விருது.
பணிமாதர்—வேலைசெய்யும்ஸ்திரீகள்.
பண்டசாலை—களஞ்சியம்.
பண்டாரம்—பொக்கிஷம்.
பதம்—இடம்; வரிசை.
பயத்தல்—கொடுத்தல்.
பயிக்கம்—சோறு.
பரகாயப்பிரவேசம்—வேறு தேகத்துள் பிரவேசித்தல்.
பரதம்—கூத்து.
பரிகாரம்—வைத்தியம்; மாற்றுமருந்து.
பரிவாரம்—படை.
பரோபகாரி—அயலாருக்கு உதவி செய்பவன்.
பரஞானம்—இல்லாபத்தைக்கொடுக்கும் ஞானம்.
பல்லவி—பதத்தினுருறுப்பு.
பழுதுபட்ட—கெட்டுப்போன.
பழுதை—வைக்கோற்புரி.
பற்பபாதர்—பதுமபாதர்.
பன்னி—மனைவி.

## பா.

பாசுபதம்—உட்சமயமாறினொன்று
பாஞ்சராத்திரம்—ஐந்து நாளளவும் பிரமாவுக்கு விட்டுணுவுபதேசித்த ஓர் சமயம்; வைணவாகமமிரண்டினொன்று.
பாட்டப்பிரதீபம்—வேதமே தெய்வமென்னும் மதம்.
பாதோதகம்—கால்கழுநீர். [குநீர்.
பாத்தியம்—பாதமலம்பக் கொடுக்
பாரிடதர்—காவற்காரர்.
பார்த்திவம்—பூமி.
பாவை—பதுமை, பொம்மை.
பாஸ்கரம்—உபநிடத முப்பத்திரண்டினொன்று.

## பி.

பிணித்தல்—கட்டுதல்.
பிதிர்வேள்வி—மகட்பெறுதல்; தர்ப்பணம்.
பிரகரணம்—அத்தியாயம்.
பிரசாபத்யம்—பெண்சுற்றமு மாண்சுற்றமு மொத்துத்தீ முன்னர்க் கொடுக்குமணம்.
பிரசினை—கேட்டல், வினா.
பிரதிஞ்ஞை—உறுதிச்சொல்.[றல்
பிரதிட்டை—தாபனம்;நிறைவேற்
பிரதிஷ்டாபனாசாரி — தாபனஞ் செய்த வாசிரியன்.
பிரமஞானம்—பிரமத்தை யறியு மறிவு.
பிரமம்—கடவுள்; வேதம்.
பிரமசரியதீக்ஷை—கற்றுவிரதங்காத்து விவாகமின்றி யிருக்குநிலை.
பிரமாணம்—அத்தாட்சி; அளவு.
பிரவணம்—கதி.
பிரவர்த்தகர்—ஆக்கியோர்.
பிரவிடைகள்—மத்திய பருவமுள்ள பெண்கள்.
பிரளயம்—அழிவுகாலம்.
பிராகாரம்—மதில்.
பிழம்பு—திரட்சி.
பிறந்தகம்—பிறந்தவீடு. [து
பின்னிடைந்து—தோல்வி யடைந்

## பீ

பீசசமஸ்காரம்—காரணகாரியமிதுவதுவென முற்பிற்பாடு வரையறுக்கப்படா வழக்கு.
பீழை—துன்பம்.

## பு.

புதர்—தூறு.
புத்தன்—பௌத்தன்.
புரத்தல்—காத்தல்.
புருடார்த்தம்—மனிதன் அடையவேண்டுவது, அது, அறம்பொருள் இன்பம் வீடென்பனவாம்.
புலர்தல்—வாடல்.
புலந்தெறுகாட்சி—இந்திரியவுணர்ச்சியைக்கெடுக்கும் காட்சி.
புளகம்—மயிர் சிலிர்த்தல்.
புறம்பழித்து—தூஷித்து.

## பூ.

பூகோளம்—பூமி.
பூரணகலசம்—நீர்நிறைந்த குடம்.
பூருவமீமாம்ஸை—மீமாஞ்சையின் முற்பகுதி.

## பெ.

பெருநோயர்—தீராவியாதியாளர்.
பெருமான்—தலைவன்; சிவன்.

## பே.

பேறு—இலாபம்.

## போ.

போதித்த—சொல்லிய.
போது—பூ.

## ம.

மகத்துவம்—மேன்மை.
மகவு—பிள்ளை; குழவி.
மகிமை—பெருமை.
மகுடம்—கிரீடம்.
மங்களாசரணை—ஆசீர்வாதம்.
மடம்—சத்திரம்; முனிவர்வாசம்.
மந்தாகினி—கங்கை.
மந்திரோபாகருமம்—மந்திரத்துடன்வேதமோதுவதற்கு முன்செய்யுஞ் சடங்கு.
மயிர்வினை—மயிர்கழித்தல்.
மரணாந்தத்தண்டம்—கொலைபுரிதல்; தூக்குப்போடுதல்.
மரபு—வமிசம்.
மருட்கை—மயக்கம்.
மருள்—மயக்கம்.
மலிவு—நயம்; மிகுதி.
மறுதலை—மறுதலிப்பு; கண்டனை.
மன்பதை—மக்கட்பரப்பு.

## மா.

மாணி—பிரமசாரி.
மார்த்தாண்டன்—சூரியன்.
மான்மியம்—மகிமை.

## மி.

மித்திஞ்சயன்—சிவன்; யமனைஜெயித்தவன்.
மிருதி—தருமநூல்.

### மு.

முஞ்சி—உபவீதத்திற் கட்டும்புல்.
முதிர்ச்சி—தேர்ச்சி.
முயலல்—பிரயத்தனஞ்செய்தல்.
முரசு—பேரிகை.
முரண்—விரோதம்.
முற்பவம்—முன்ஜென்மத்திற்செய்த பாவம்.

### மூ.

மூவேடணை—ஏஷணாத்திரயங்கள்.

### மே.

மேதை—தோல்.

### மௌ.

மௌலி—முடி; மயிர்முடி.

### யோ.

யோகவட்டம்—காரணப்பெயர்.

### வ.

வசியம்—வசமாக்கிக்கொள்ளுதல்.
வரதக்ஷிணை—கலியாணமாப்பிள்ளைக்குக் கொடுக்குந்தக்ஷிணை.
வருணம்—ஜாதி.
வருணாச்சிரமம்—ஜாதியும் நிலைமையும்.
வல்லாமை—தேர்ச்சி, வல்லமை.

### வா.

வாச்சியாயனம்—களாநூல்.
வாய்மை—மெய்.
வாரணம்—யானை.
வார்த்திகம்—விருத்தியுரை; கிழத்தன்மை.

### வி.

விடயம்—விஷயம்.
விடலை—முப்பதுவயதிற்குட்பட்டவன்.
விதண்டம்—வாதவகை.
விதி—கட்டளை.
விதைவழங்கல்—விதை (தானியம்) கொடுத்தல்.
விநயம்—வணக்கம்.
விமோசனம்—நிவிர்த்தி
வியப்பு—ஆச்சரியம்.
விரதோச்சர்ஜனம்—விரதமுடித்தல்.
விரிந்த—பரந்த.
விருத்தம்—விரோதம்.
விருத்தை—கிழவி
விரோதாபாசம்—ஓரலங்காரம்.
விளக்கம்—தெளிவு.
வெகுளல்—கோபித்தல்.
வெளிமுகம்—பட்டையினின்றும நீங்கி உலகைப்பார்த்தல்.

### வே.

வேட்டை—துன்பம்.
வேள்வி—யாகம்.

### வை.

வைகானசம்—வைணவாகமத்தொன்று.
வைதிகம்—வேதத்திற் சொல்லியபடி நடப்பது.
வைரவம்—வைரவரைத் தெய்வமென்று கொள்வது.
வைராகம்—தீர்மானம்.
வைஷ்ணவம்—விஷ்ணுவே கடவுள் (மேலானதெய்வம்) என்று சித்தாந்தஞ்செய்வது.
ஸ்மார்த்தம்—ஸ்மிருதிகளிற்சொல்

# அதிகார அட்டவணை.

## க-வது அத்தியாயம்.


| | பக்கம். |
|---|---|
| சரித்திரவரலாறு ... ... ... ... ... | 1 |
| தேவர்கள் முறைப்பாடு ... ... ... ... | 2 |
| தேவர்களவதரித்தல் ... ... ... ... | 4 |
| பட்டபாதர் புத்தரொடு வாதிடல் ... ... ... | 4 |
| புத்தரைத் தண்டித்தல் ... ... ... ... | 5 |
| பூருவமீமாம்ஸவிருத்தி ... ... ... ... | 7 |


## உ-வது அத்தியாயம்.


| | |
|---|---|
| சிவகுரு அவதார முதலியன ... ... ... ... | 9 |
| ஆசிரியனில்லறம் பூணவிதித்தல் ... ... ... | 10 |
| சிவகுரு வைராகப் பிரசங்கம் ... ... ... ... | 11 |
| சிவகுருவை ஆசிரியன் விதித்தது ... ... ... | 13 |
| சிவகுரு மணம்புரிதல் ... ... ... ... | 13 |
| சிவகுரு மக்கட்பேறு விரும்புதல் ... ... ... | 14 |
| சிவகுரு புதல்வர்க்காகத் தவம்புரிதல் ... ... ... | 16 |
| சங்கரர் திருவவதாரம் ... ... ... ... | 17 |


## ங-வது அத்தியாயம்.


| | |
|---|---|
| தேவர்கள் மண்ணிற் பிறத்தல் ... ... ... | 20 |


## ச-வது அத்தியாயம்.


| | |
|---|---|
| சங்கரர் பாலலீலை ... ... ... ... ... | 25 |
| சிவகுரு தீக்ஷிதர் கதியடைதல் ... ... ... | 27 |
| சங்கரர்க்கு உபநயந முதலிய நடத்தல் ... ... ... | 28 |
| சங்கரர் ஒழுக்கம் ... ... ... ... ... | 29 |
| சங்கரர்க்குத் தூர்வாசர் அருளல் ... ... ... | 30 |
| சங்கரர் சித்தியாடல் ... ... ... ... | 30 |


## ரு-வது அத்தியாயம்.


| | |
|---|---|
| சங்கரர்க்கு முனிவர்கள் வந்தருளல் ... ... ... | 32 |
| சங்கரர் துறவுபூண முயலல் ... ... ... | 33 |
| சங்கரர்க்கு நாரதர் முதலியோர் அருளலும், துறவும் ... | 34 |
| சங்கரர் ஆசிரியனை நாடிச்செல்லல் ... ... ... | 38 |

சங்கரர் குருவருள் பெறுதல் ... ... ... ... 40
கோவிந்தபாதர் பாடியஞ்செய்யக் கட்டளையிடல் ... ... 42
சங்கரர் காசிக்கேகல் ... ... ... ... 43

## சு-வது அத்தியாயம்.

பற்பபாதர் மாணாக்கராயது ... ... ... ... 44
சங்கரர் விஸ்வநாதர் திருவருள் பெற்றது ... ... 45
சங்கரர் வியாசரைத் தேடிச்சென்று மீளல் ... ... 47
சங்கரர் பரமதவாது ... ... ... ... 49

## எ-வது அத்தியாயம்.

சங்கரர் வியாசரோடு பிரசங்கித்தல் ... ... ... 52
வியாசர் சங்கரர்க்கு வெளிப்படல் ... ... ... 53
சங்கரர் வியாசரிடம் அருள்பெறல் ... ... ... 54
சங்கரர் பிரயாகை யடைதல் ... ... ... ... 55
சங்கரர் பட்டபாதரைச் சந்தித்தல் ... ... ... 56
சங்கரரிடம் பட்டபாதர் அனுக்கிரகம் பெறல் ... ... 59

## அ-வது அத்தியாயம்.

சங்கரர் மகிடமதி யடைதல் ... ... ... ... 61
சங்கரர் மண்டனபண்டிதரைச் சந்தித்தல் ... ... 62
சங்கரர் மண்டன பண்டிதரது பிச்சையை யேற்றல் ... 63
சங்கரர் மண்டன பண்டிதரோடு வாதிடல் ... ... 64
மண்டன பண்டிதர் தோல்வி ... ... ... ... 72

## கூ-வது அத்தியாயம்.

சங்கரர் மண்டன பண்டிதர்க்கு ஐயமகற்றல் ... ... 75
உபயபாரதியாருடன் சங்கரர் வாதித்தல்... ... ... 77

## க0-வது அத்தியாயம்.

சங்கரர் உபயபாரதியாரை வென்றது ... ... ... 86
மண்டனர் சந்நியாசம் ... ... ... ... 87

## கக-வது அத்தியாயம்.

உக்கிர வைரவனைத் தண்டித்தது ... ... ... 88

## கஉ-வது அத்தியாயம்.

சங்கரர் இறந்த அந்தணமகனை யெழுப்பியது ... ... 90
சங்கரர் அத்தாமலகரைச் சந்தித்தல் ... ... ... 90

சங்கரர் சிருங்ககிரி யடைதல் ... ... ... 92
சங்கரர் ஆனந்தகிரியாருக்கு அருளல் ... ... ... 93


## கங-வது அத்தியாயம்.


சங்கரர் சுரேச்சுரர் முதலியோர்க் கருளல் ... ... 96


## கச-வது அத்தியாயம்.


பதுமபாதர் யாத்திரை ... ... ... ... 99
சங்கரர் தாய்க்கருமம் புரிதல் ... ... ... ... 99
பதுமபாதர் பாஷியவுரை யிழந்துபோனது ... ... 101
பதுமபாதர் துன்பொழிந்தது ... ... ... ... 102


## கரு-வது அத்தியாயம்.


சங்கரர் திக்குவிஜயத்திற்குச் செல்லல் ... ... ... 103
சங்கரர் பிரசங்கம் ... ... ... ... ... 103
சங்கரர் தேசசஞ்சாரமும் வாதும் ... ... ... 104


## கசு-வது அத்தியாயம்.


சங்கரர் சருவஞ்ஞ சிங்காதனத்திருத்தல் ... ... 110
சங்கரர் கைலைக்குச் செல்லல் ... ... ... 111

ஓம்சிவகணபதயேநம:

ஓம்சிவகுரவே நம:

# சங்கர விஜயமென்று

வழங்கும்

## சங்கராசாரியர் சரித்திரம்.

பொன்னேன வுளத்துப் பொருந்திய வுரவோன்
றன்னிரு சரணந் தலைக்கணி யாமே.

ஸ்ரீ கந்தபுராணம் சிவரகசியகண்டம் நவமஹாம்சம் பதினாறு வது அத்தியாயத்துள்ளும் சிவபுராணத்துள்ளும் தேவர்களாற் கூறப்பட்ட எதிர்காலத்து, ஸ்ரீ சங்கரகுரவன் சரிதம், வியாசர் முதலிய முனிவர்களாற் கூறப்பட்டது. அவ்வாறே நடந்த அவர் அவதார சரித்திரத்தைக் கண்ணாரக்கண்டும் கேட்டும் உணர்ந்த பெரியோர்களாகிய ஆசிரிய பரம்பரையால், எனவே அவ்வாசிரியர் காலத்துள்ளவர்களால் விளங்கும்படி எழுதப்பட்டிருந்த சரிதை நூல்களாலும், சித்துவிலாசசுவாமி, விஞ்ஞான கந்தசுவாமி, என்னும் சித்தபுருடர்களாகிய சந்நியாசிகள் எழுதியிருந்த சங்கர விஜயவிலாசம் என்ற நூலாலும், வியாசஸீயமென்னும் மகாகாவியத்தாலும், அவ்வாசிரியர் மாணாக்கரு ளொருவராகிய "பதும பாதர்" எழுதிய சரித்திரத்தாலும், சாயணமாதவாசிரியரால் செய்யப்பட்டுப் பதினாறு சருக்கமுள்ள சங்கரவிஜய காவ்வியத்தினாலும் கூறப்படுகின்ற ஸ்ரீ சங்கராசாரியர் கதையைச் சுருக்கி இளையோர்யாவர்க்கும் உபயோகமாம்படி இவ்வாசகம் எழுதப்பட்டிருக்கின்றது.

ஓம்சிவகணபதயேநம:

ஓம்சிவகுரவேநம:.

# சங்கரவிஜயமென்று

வழங்கும்

# சங்கராசாரியர் சரித்திரம்.

## காப்பு.

உம்பரேத்துறும், தும்பவாரணத்
தெம்பிரான்கழல், நம்புநெஞ்சமே.

## முதல் அத்தியாயம்.

### தேவர்கள் முறைப்பாடு.

உலகத்துள் சன்மார்க்க வழக்கம் சிறுகி வரக்கண்ட தேவர்கள் கவலையடைந்து ஸ்ரீ கைலாசத்தைச்சேர்ந்து சிவபெருமானைத் தரிசித்தார்கள். அப்பொழுது பெருமான் உமையோடும் இருந்ததாகத் தோற்றியதால் தேவர் யாவரும் கண்டு தங்கள் எண்ணமுடிந்ததாகப் பெருங் களிப்பை யடைந்து, தூரத்திற்றனே பல முறை தாழ்ந்து எழுந்து தொழுது வேதவாக்கியங்களாற் றுதித்துச்சென்று சமீபத்தையடைந்து வணங்கி யெழுந்துநின்று அஞ்சலியஸ்தர்களாய் ஒழுக்க முறையோடு விண்ணப்பஞ் செய்யத் தொடங்கினார்கள்.

எம்பெருமானே! எங்களுக் குள்ளகுறை எல்லாமுணர்ந்த தேவரீர் சந்நிதியறியாததல்ல. ஆனாலும், எங்கள் தரத்தினளவாகச்சிறிது விண்ணப்பஞ் செய்கின்றோம். திருச்செவி சாத்தியருள வேண்டும், என்னெனில்?

முன்னுயிர்களை அலைத்திருந்த அசுரர்களை மயக்குவிக்கும்படி விஷ்ணுவானவர் புத்தராக அவதாரஞ்செய்து அவர்களுக்குப் போதித்த யுத்தி நியாய வலிமையால் உலகத்துள் நாத்திகர்

# தேவர்கள் முறைப்பாடு.

அதிகரித்து யாவர்க்கும் வேதத்துள் நம்பிக்கையும் பத்தியும் வரவொட்டாது அவர் அறிவைக்கெடுத்து, நற்கருமமும், சற்பத்தியும், மெய்ஞ்ஞானமும், யோகநிலையும் தலையெடுக்க வொட்டாது புறம்பழித்து விலக்கி நல்லோர் யாவரையும் கெடுத்து வருகின்றனர். மந்திரம் செபம் முதலிய சற்கருமமும், பாவத்திற்குப் பயந்து நடக்கும்நடையும், மெய்கூறுதலும், சுத்தமாயிருத்தலும், தேவபூசையும், வேதமோதலும், யாகமுதலியதும், சந்நியாசமும், உடையவர்கள் இப்போது பூவுலகத்துள்ளும் கிடைப்பது அருமையாக விருக்கின்றது. யாகமென்று சொன்ன மாத்திரத்தில் கேட்கவும் சகியாமல் காதுகளை மூடிக்கொள்பவராகவே யிருந்தால் எமக்கு அவிர்ப்பாகமெங்கே கிடைப்பது. அல்லல் எங்கே ஒழிவது. ஆதலால்தேவரீர் ஆணையாகவிருக்கப்பட்ட வேதத்தை நிலைநிறுத்துவதும், தேவரீர் திருவடித் தொண்டர்களாகிய எங்களைக் காத்தருளுவதும் திருவருளின் கடனாக விருப்பதன்றி மற்றொருவராலு முடியாததாக விருக்கின்றது. அன்றியும் அஞ்ஞானத்தினால் துன்மார்க்கத் துட் பிரவேசித்து, சனனமரண நரகத்துள் வருத்தப்படுகின்ற உயிர்களைச் சன்மார்க்க நெறியில் பிழைப்பிக்குங் கருணை, தாயாகிய தேவரீருக்கல்லாமல் வேறு யாரிடத்தில் உள்ளது? என்று விண்ணப்பித்து வேதாகமங்களாற் றுதித்து நின்றார்கள்.

அப்போது, பெருமான் வலக்கடைக் கண்ணின் கருணை நோக்கம் சூரியகிரணம் தாமரைமலர்மேற் பட்டாற்போலும் தேவர் கூட்டத்திற் றாக்கினது. இடக்கண்ணோக்கம், சந்திரகிரணங்கடல் மேற்பட்டாற் போலும் குமாரக்கடவுண்மேற்பட்டது. உடனே அத்தேவரைப் பெருமான் அருள்செய்து, ஓ! தேவர்களே! நம்மொருகலை, பூவுலகத்தில் அந்தணர் குலத்துட்டோன்றும், நீவிர் அனைவரும் அவ்வாறே மானிடராகப்பிறந்து, நீங்களிச்சித்த படியெல்லாம் பெறுவீர்கள்! அஞ்சவேண்டாம் என்று அருளிச்செய்து, ஸ்ரீ குமாரக்கடவுளை யழைத்து, வேதமே எமது ஆணைமொழியாதலால் அதனுட்கூறியபடி நடத்துவிக்கும் அதிகாரம் உமக்கன்றோ கொடுக்கப்பட்டுள்ளது, இத்தேவர்கள் விண்ணப்பிப்பதற்கு முன்பாகவே என்னாலேவப்பட்ட விஷ்ணுவும், ஆதிசேடனும்—சங்கரிடணர், பதஞ்சலி, என்னு முனிவர்களாய் அவதரித்து வேதத்துள்ள தேவதா காண்டத்தினையும் யோக காண்டத்தினையும், விளக்குகின்றார்கள். இப்போது, நீரும் பூவுலகத்தில் அவதரித்து, நமது நல்லன்பராகிய ஜைமினியாற் கூறப்பட்டநூலை ஆதரித்து அவ்வேதத்தின் கருமகாண்டத்தை நிலைநிறுத்தி நாத்திகரைத் தண்டிப்பித்து, வைதிகமார்க்கத்தைச் சீர்திருத்தஞ் செய்துவையும். பிரமதேவன் மாணுக்கனும், இந்

திரன் அரசனும் பிறந்து உமக்குத்துணையாக விருக்கக்கடவர், பின்னர் ஞானகாண்டத்தை நிலை பெறுத்துவதற்கு நமதுகலையே அவதரிக்கும். அவ்விடயம்பற்றித் தேவர்கட்கு அபயம் கொடுத்திருப்பதாற் றெரிந்து கொள்ளலாமே என்று பெருமான் கட்டளையிட்டருளினார். அப்போது அத்திருநகை நிலவொளியில் வானவர்களெல்லாம் சகோரப்புட்போலுமிருந்தனர். பின்பு விதிக்கு விதியாயுள்ள சிவாக்கினையை அவ்விருவரும் தலைமேற்கொண்டு சென்றனர்.

## தேவர்களவதரித்தல்.

அதன்பின்னர் இந்திரன் பூவுலகத்தில், சுதந்வன் என்னும் அரசனாகப் பிறந்து, நீதிதவறாது மன்பதை புரந்து விரிந்த அரசாட்சி, சேனை, பொருட் செல்வமுடையனாய், நாத்திகர் நூல்களில் வஞ்சகக் கருத்தோடும் அன்புடையவனாக நடித்துக்காட்டி, சாருவாகன் புத்தன் முதலிய மதஸ்தர்களை யாதரித்து அவருட் சிறந்தவரனைவரையும் தன்னிடத்துச் சேர்த்து வைத்திருந்தனன். குமாரக்கடவுளும், * பட்டபாதாசிரியராகவும் அவர் பரிவாரதேவர் வைதிக வேதியர்களாகவும் அவதரித்தனர். பிரமதேவன் † மண்டனமிசிரர் என்னும் வேதியனாய் அவதரித்துப் பட்டபாதருக்கு மாணாக்கராயினார். பின்பட்டபாதர், "பாட்டப் பிரதீபம்" என்னும் பூருவமீமாம்ஸை நூலைச்செய்து, பலமாணாக்கர்க்கும், வேத சுரௌதங்களோடும் ஓதுவித்து, தாம்புத்தர் முன்னிலையாகவே அவர்களாலை யெல்லாமுணர்ந்து அவற்றிற்கெல்லாம் மறுதலை எழுதி வெளிப்படுத்தித் திக்கு விஜயத்தின் பொருட்டு வெளிப்பட்டு அங்கங்கு பிரசங்கித்து வாதித்து நாத்திகரைவென்று, சுதந்வராஜன் பட்டணத்திற்கு வந்தார்.

## பட்டபாதர் புத்தரொடு வாதிடல்.

அவர் வரவை அரசனறிந்து எதிர்சென்று உபசாரத்தோடும் அழைத்துவந்து பூசித்தனன். அவ்வரசசபையில் பொற்பீடத்திருந்த அந்தப்பட்ட பாதர் காமதேனுவானது இந்திரனது நந்தவனத்தை யலங்கரித்தாற்போலும் அவ்வரச னவையை யலங்கரித்தனர். அவ்வளவில் அச்சபையருகிருந்த தோர்தருவின் மீதிருக்கும் குயிலின் இனியகுரற் கேட்டலும், அதனைமுன்னிட்டுக் கூறியதாக அரசனைக் குறித்து, "ஓ! குயிற் பிள்ளாய்! சுரு

* இவர்க்கு, பட்டகுமாரிளனர் எனவும், பட்டகுமாரர் எனவும் பெயர் வழங்கும். இவர் செய்த நூலுள் வியாகரணம், கௌமாரம் எனவும் குமாரிளம் எனவும் வழங்கும்.

† மண்டன மிசிரருக்கு விசுவரூபர் எனவும் வேறோர் பெயர் வழங்கும்.

திக்கு இதமில்லாமலே கடினமாகக் கூவுகின்ற நீசமாகிய காக்கையின் சம்பந்த மில்லாவிடின் நீ சிறப்படைவாயன்றோ" என்று * முன்னிலைப் புறமொழியாக வோர் செய்யுளைக்கூறினர். † உள்ளுறைப் பொருளினையுடைய அவ்வுரையைக்கேட்ட "சடபிஞர்"—புத்தர்கள், மிதியுண்ட அரவுசீறி யெழுந்தாற்போலும் வெகுண்டெழுந்து சமயதருக்கத்திற்குத் தாமே முன்னிட்டு வாதிக்கத் தொடங்கினர். பட்டபாதாசிரியர், உத்திக் ‡ கோடரியால் புத்தர் நூற்கிளைகளை யறுத்தெறிந்து பழுதுபட்ட வப்புத்த நூற்கட்டை முன்னுகக் கோபவழலை விருத்திசெய்தார். அப்புத்தர்களும் பலவினுக்களை வினவுதலும் அதற்கிவர் விடைகொடுத்தலுமாகிய பேரிரைச்சல் மிகப்பரவியது. கலுழன் எதிர்ப்பட்டபோது தலைகாட்ட மாட்டாத பாம்பைப்போலும் புத்தர் வாய்திறக்கவும் ஆற்றலற்றவர்களாய்ச் சித்திரித்த பாவைபோலும் நாவடங்கி நின்றூர்கள். அப்பொழுது, அரசன் உண்மையுணர்ந்தவனு யிருந்தும், அரச நீதிபற்றி, அவ்விருதிறத்தரையு நோக்கி, நம்மிருவகையாருள்ளும் கல்விப்பயிற்சிக்கும் அறிவின் நுட்பத்திற்கும் தக்கவாறு சந்தியில் உத்திவகைகள் தோற்றுகின்றன. அதனுல் மதங்களை யுயர்வுதாழ்வென்று மதிக்கலாகாது. ஆதலால், யார் மலையுச்சியேறித் தமது மத சித்தாந்தத்தைக் கூறிக் கீழே குதித்து வீழ்ந்து ஓர் அபாயமும் இன்றிவருகின்றூர்களோ அவர்கள் மதமே சிறப்புடைய தென்று கொள்வேனென்றூன்.

## புத்தரைத் தண்டித்தல்.

அது கேட்ட புத்தர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு மனத்தி லச்சத்தோடும் பின்னிடைந்து நின்றூர்கள். அப்போது பட்டகுமாரர் ஊக்கத்தோடும் எழுந்து யாவரும் பார்க்கும்படி மலையேறி மனத்தில் வேதநாயகராகிய சிவபெருமானைத் தியானித்து, வேதமே பிரமாணமாயிருந்தா லெனக்குத் துன்பமின்றிச் சுகம் உண்டாகட்டும் என்று யாவருங்கேட்கும்படிக்கு உரத்துச்சொல்லி கீழ்குதித்தனர். அவர் உலக குருவாகலின் பஞ்சின்செண்டு வந்து வீழ்ந்தாற்போலும் யாதொரு துன்பமுமின்றிச் சுகமாகவே யிருந்தனர். வேதந்தன்னை நம்பினவர்களின் துன்பத்தை யொழிக்காதும் விடுமோ? காத்தருளியது. அப்போது அரசன் அதுவரையிற் றனக்குண்டாயிருந்த துட்டர் கூட்டுறவால் அசுத்தமுற்றிருந்த தன்னை மிகவும் வெறுத்துக் கொண்டனன். உடனே புத்தர்கள் அரசன் கருத்தைக் குறிப்பி

* முன்னிலைப்புறமொழி—அந்நியாபதேசமென்ப.

† உள்ளுறை—ஸாகூதம்—அருத்தகருப்பம்.

‡ கோடரி—கோடாலி என மருவியது.

னறிந்து விரைவிலே அரச சபைக்கு வந்து, மணிமந்திர அவிழ்த வல்லமையால் இப்படி அரிய செய்கைகளைச் செய்து காத்துக் கொள்வாரு முண்டு என்றார்கள். இங்ஙனம் பேதையராகிய புத்தர்காட்சியாற் கண்ட மான்மியத்தையும் வேறுபடுத்திக் கூறியதனால் அரசன் வெகுண்டு அதிக கொடுமையான பிரதிஞ்ஞை செய்தான். என்னை? ஒரு இரகசிய விடயத்தைப் பற்றி இருவகையாரையும் கேட்கின்றேன்; யாரதனைக் கூறாது விடுகின்றார்களோ? அவர்களைக் கற்காணத்திலிட்டு ஆட்டி விடுகின்றேன். என்று சொல்லிப் பிறரொருவரும் அறியாதபடி கொடுவிஷமுடைய கரும்பாம்பை ஒரு குடத்திலடைத்துக் கொண்டுவந்து, இதனுள்ளிருப்பது என்னென்று இருவகையாரையும் வினவினன். அப்போது, நாளைகாலை சொல்வோமென்று புத்தர் கூறினர். அதற்கரசன் இருவர்க்கும் அதுவே கால வெல்லையாக நியமித்தனன். பின்னர் புத்தர்சென்று அவ்விரவெல்லாம் ஓர் குளத்திற் கழுத்தளவு நீரினின்று தவம்புரிந்தனர். அருணோதயமாதலும் அவர்களுக்குச் சூரியன் அருளாலுண்மை தோற்றப்பட்டது. அந்தணர்களோ, வேதத்தை நம்பிக் கடவுளே திக்கு என்று கவலையற்று நித்திரைசெய்தனர். மறுநாள் அவ்விருதிறத்தவரும் அரச சபைக்கு வந்தபோது, புத்தர்கள் அக்குடத்திற் கரும்பாம்புள்ளதென்று முன்னர்க்கூறிவிட்டனர். பட்டபாதர் அநந்த சயனராகிய விஷ்ணு இருக்கின்றாரென்று கூறினர். அதுகேட்ட புத்தர்கள் முகமலர்ந்தனர். வேந்தன்முகம் புலர்ந்து சிறுபொழுது சிந்தித்திருந்தனன். இது தருணமென்று புத்தர் விரைந்து, இவ்வேதியர் கூறுவது உண்மையாயிருந்தால் அவரே கையிட்டு எடுத்துக்காட்டினால் நாங்கள் தோற்றபக்ஷத்தில் தண்டனைக்குள்ளாவோமென்றார்கள். உடனே பட்டபாதாசிரியர் மேலெழுந்து அக்குடத்தை வலம்வந்து பணிந்து குடத்துள் கையிட்டு அரவணையிற்கிடந்த திருமாலது பொன்னுருவத்தின் விக்கிரஹத்தினை மேலெடுத்து, யாவரும் காணக்குடத்துள் மற்றொன்று மில்லையென்பதனை யாவர்க்குங் காட்டி இக்கடவுளையே உலகத்தைக் காக்குங் கடவுளென்று வேதங் கூறுகின்றது என்றார். அப்போது, அரசன் வேதமே உண்மையென்பதனை யிப்போது நன்றாகவுணர்ந்தேனென்று கூறினன். புத்தர்கள் ஓ! வேந்தனே! உமக்கு நம்பிக்கை யுண்டுபண்ணின வேதத்தினிடத்தில் உயிர்களை வருத்தலாகாதென்ற விதியுமையில்லையா? என்று இரந்துகொண்டார்கள். அப்போது புத்தர் குலத்தையே யழிப்பது கொடுமையாக விருக்குமோ, என்று வேந்தன் சிறிது ஐயப்பட்டுக்கொண்டிருந்தனன். பட்டபாதர் அரசனை நோக்கி ஓய்! அறிவுடைய அரசனே! தருமத்தின் பொருட்டுச் செய்யும் கொலைத்தண்டனையால் இம்சைக் குற்றம் வருவதில்லை. வேள்வியின் பொருட்டு

விதிப்படி பசுக்கொலை செய்தலும், அரசன் போரில் பகைவர் படைகளைக் கொல்லுதலும், பெருங் குற்றவாளிகட்கு உயிர்த் தண்டஞ்செய்தலும், சாது உயிர்களைத் துன்பஞ் செய்யும் புலி முதலிய கொடுமிருகங்களை வேட்டையாடுதலும் அதிகாரி பேதத்தால் அவரவர்க்கும் பாவமல்லவென்று சுருதி மிருதிகள் கூறுகின்றன என்றார். அவ்வளவில் அசரீரிவாக்கொன்று "ஓ! வேந்தனே! ஐயப்படவேண்டாம் நீ செய்த பிரதிஞ்ஞையை முடித்துச் சத்தியத்தைக் காத்துக்கொள்" என்று உண்டாயிற்று. உடனே அவ்விறைமகன், புத்தர் முதலிய நாத்திகருள் பாலன் முதல் விருத்தன் வரையில் எங்கிருக்கினும் அவர்களைப் பற்றிக் கற்காணத்திலிட்டு அரைத்துக்கொல்லாத அரசபரிவாரர்கள் மரணாந்தத் தண்டஞ் செய்யப்படுவர் என்றதிறமான கட்டளையைத் தேயமுழுவதும் பரவச்செய்தனன். உடனே விரைவில் சாருவாகர், புத்தர், சௌகதர் முதலியவர்க்குப் பிரளயமுண்டாயிற்று.

## பூருவ மீமாம்ஸ விருத்தி.

இங்ஙனமாக நாத்திகர் என்னும் மதயானைகள் பட்டபாதராகிய சிங்கத்தால் அழிபட்டமாத்திரத்தில் வேதக்கிளைகள் எல்லாம் தழைத்துப் பழுத்தன. இவ்வரலாற்றைக் கேள்வியுற்றுத் தேய தேயங்களிலும் அடங்கிக்கிடந்த வேதியர் பலர் மேகமுழக்கங் கேட்டுப் புதருளடங்கிக்கிடந்தெழுந்து கேகாரவஞ்செய் மயில்களைப்போல வெளிப்பட்டு வந்து சேர்ந்தனர். பட்டபாதர் சாத்திரயுத்திகளாகிய இடியேறுபட்டு நாத்திக நூல்களாகிய மலைகள் தகர்ந்தொழிந்தன. அதுமுதல் அரசனும், அரசபரிவாரர்களும், அந்தணர் முதலிய வருணாச்சிரம அறவொழுக்கங்கள் முறைமையே நடக்கும்படிப் பாதுகாத்து வந்தனர். குயுக்தி, குதர்க்கம், என்னும் குருட்டு ஈக்கள் வேதக்காற்றினு லடிபட்டோடி யொழிந்தன. சிரத்தை பத்தியென்னும் சூரியசந்திர ரொளியால் ஐயம் திரிபு அறியாமை யென்னும் இருள் தூரத்தே சென்றது. வேதமோதல், ஆன்றோரொழுக்கம், வேள்விக்கருமம், தானதரும உபகாரங்கள், தேவர் திருவிழாச் சிறப்பு முதலிய நல்லறங்கள் விருத்தியாகத்தொடங்கின. ஆயின், கருமமேதலைமையதாய்த் தருமமே புருடார்த்தமாகிய வுறுதிப்பொருளாயிருந்தது. தேவர் திருத்தியால் உலகத்தில் பெருமழை, மழையில்லாமை, கள்ளர், நோய், முதலிய ஊறுபாடுகள் இல்லாமலே யாவரும் சுகமாக விருந்தார்கள். பிரமம் என்பது வேதம் அதனை நம்பி அடைந்தவன் பிராமணன். அவ்வேதத்தை நிலைநிறுத்தி அந்தணரைக் காத்ததால் குமாரக்கடவுளுக்குச் சுப்பிரமணியரென்னும் பெயர் தகுதிப் பெயராயிற்று. இங்ஙனம் சுப்பிரமணியர் பட்டபாதராக அவதரித்துக் கருமகாண்டத்தை நிலைநிறுத்தி வேதியர் குலத்துள் வேத

ப்பயிற்சி அனுட்டான முறைகளைத் திருத்தஞ்செய்து, பிரமன் கலையிற்றோன்றிய மண்டனாசிரியர் முதலிய மாணாக்கர்க்குக் கரும வாதத்தை முற்றும் ஓதுவித்து மகிமையோடுந் தவச்செல்வ ராய்த் தருமநிலைநாட்டி நின்றனர். அப்போது உலகத் துயிர்க ளெல்லாம் பிரமஞான மில்லாமலே அநாதியாகவந்த அஞ்ஞானத் துன்பங்களை அனுபவித்து சமுசாரபாசத்துள் கட்டுப்பட்ட பசுக் களாய் இருந்தனர். அதனால் கருணைக்கடலாகிய பசுபதி தாமே திருவவதாரஞ்செய்து ஞானகாண்டத்தை நிலைநிறுத்தத் திருவு ளஞ் செய்தனர்.

முதல் அத்தியாயம் முற்றிற்று.

# இரண்டாம் அத்தியாயம்.

## சிவகுரு அவதாரமுதலியன.

அதன் பின்னர் கேரளநாட்டில் இடபாசலத்துப் பூரணாந் திநதிக்கரையில் கருணைக்கடலாகிய பரமேச்சுரன் தானேமுளைத்த சோதிமய இலிங்கோற்பவராக எழுந்தருளியிருந்தார். இருந்து அத்தேயத்தரையன் * கனவிலெழுந்தருளி அனுக்கிரகித்தபடி அவ்வரசன் அச்சுயம்பு மூர்த்திக்கு ஆலயம் கோபுரம் விமானம் பிராகார முதலிய திருப்பணி செய்து நித்த நைமித்திக முதலிய கட்டளைகளை நடத்தி வந்தனன். மக்களுக்குக் காட்சியளாகும்படி பல மகத்துவங்களைக்காட்டி அடியார் துன்பங்களையொழித்தருளி வீற்றிருந்தருளும் அப்பெருமான் திருவருளால் யாதொரு பிடையுமில்லாது, காலட்டி † என்ற அக்கிரார மிருந்தது. அதனுள் வேதசாத்திரப் புலமையலாகிய நல்ல மரபில்வந்து சுரௌத ஸ்மார்த்த ஒழுக்கச் செல்வர்களாகிய அந்தணர்கள் பலர் முனிவராச்சிரமம்போலும் இன்பகரமாகிய இடங்களை வகுத்துக்கொண்டிருந்தனர். அவர்களுள், வித்தியாதிராசர் என்னும் வேதியர் தலைவர் கல்விகேள்விகளிற் சிறந்தோராய் அந்த இடபாசலத்து எழுந்தருளி சுயம்புலிங்கேசனைப் பூசித்துவந்தார். அப்போது, அக்கடவுளருளால் அந்த வேதியருக்குப் புத்திரோற்பத்தி யுண்டாயிற்று. அம்மகவினுக்குச் ‡ சிவகுரு என்று நாமகரணஞ் சாற்றிவளர்த்தனர். வளர்ந்த அச்சிறுவர் சௌளம் உபநயநம் முதலிய கருமங்களாற் சுத்தராய்ப் பிரம வொளிபெற்று ஞானத்தில் சிவனோடொப்பவராயும், வாக்கிற் பிரகற்பதியோடொப்பவராயு மிருத்தலினால் சிவகுரு என்னு மப்பெயர் தகுதியான பொருளுடையதா யிருக்கின்றதென்று யாவராலும் புகழ் பெற்றிருந்தனர்.

---

* அவ்வரையன் பெயர் - இராஜசேகரன்.

† காலடி என்றும் பெயர். இது கொச்சின் ஷோரனூர் இருப்புப் பாதையில் ஓர் தங்கு மிடமாகிய ஆள்வாய் என்னுமூருக்கு ஆறுமயில் கிழக்கேயுள்ளது. சிவபெருமானது காலினடியிலவ்வக்கிரார முண்டாதல் பற்றி காலடி என்னப்பட்டது. "கேரளே சசலக்ராமே" என்றபடி மலைநாட்டில் சசலம் எனப்பண்டைய பெயரால் வழங்கப்பட் டிப்போது முள்ளது.

‡ இவரது கோத்திரம் - ஆத்திரேய கோத்திரம் - அத்திரிமகாரிஷி கோத்திரம்.

அப்பால் அப்பிரமசாரி குருமனை வாசஞ்செய்து ஆசிரியர் கட்டளைப்படி யொழுகிப் பிச்சைச்சோறுண்டு காலைமாலைப் பொழுதின் கண்ணே ஸ்நாநசந்திசமிதா தானமென்னும் வேள்வித்தீ இவைகளை வழுவாது நடத்தி உண்மை, சுத்தமுடைமை தவறாது அவ்வாச்சிரம விரத தீக்ஷையை யுடையவராய்த் தஞ்சாகையை யோதிக்கொண்டிருந்தனர். அவ்வாறு வேதவாசிரிய சூரியாக்கினிகளை முறைப்படி பூசித்திருக்கும் அவ்விடலையிடத்தில் குருவருளுண்டாய், பிரவணம், சிரத்தை, மேதை, பிரதிஞ்ஞை, தாரணை முதலிய சித்திகள் உண்டாயின. பின்பு சிலநாளிற்றானே மூன்று வேதங்களையு முற்றவும், பதம், கிரமம், சிக்ஷை முதலியவற்றோடும், ஆறு அங்கமாகிய சாத்திரங்களோடும் பயின்றனர். கருமானுட்டான முதலியன வேதத்தின் பயனாயிருத்தலான், அது பொருளுணர்ச்சியின்றி யுண்டாகாமையின் சுரௌத சூத்திரங்களோடு தரும ஆராய்ச்சியைக் கசடறச் செய்தார். வேதத்தின் கருத்தையறிவது மிகவும் அருமையாயுள்ளது. அது நிற்க, அந்த மாணைக்கராற் பணிவிடைகளைப் பெற்று ஆசிரியர் மனமுவந்து கருணையோடு கூறத்தொடங்கினர்.

## ஆசிரிய னில்லறம் பூணவிதித்தல்.

மைந்த! கடவுளருளால் உனக்குண்டாகிய கல்வி முதிர்ச்சி உன்பிதிரரைப் புண்ணியராகவும் எம்மைப் புண்ணியப் புகழுடையமாகவும் உன்னைமுற்றிய பயனுடையனாகவும் செய்தது. எமக்கு மிகவுங்களிப்பைத் தருகின்றது. பெருவாழ்நாளுடையாய் நீ! இன்பத்தோடு நெடுங்காலம் வாழ்வதே நமக்குக் குருதக்ஷிணையாக விருக்கின்றது. நீவித்தியாதிராய ரென்னும் வித்துவான் மகனாதலின் பிறப்பினளவானே சால்புடையனாக விருக்கின்றாய். அதற்குமேலும் உனக்குக் கல்வித்திறமு முண்டாயிருப்பது பொற்பூமணம் பெற்றவாறாயிற்று. நீ நம்மிடத்தில் கல்விபயிலுவதற்கு வந்து நெடுங்காலமாயிற்று உன் தாய் தந்தையருஞ் சுற்ற முதலியோரும் உன்னைப்பார்க்க மிகவும் விருப்ப முடையராக விருப்பர். ஆனால் நமக்கு உன்னிடத்தில் பெற்ற மகவினும் பெரிய வன்பு உண்மையால் அனுப்ப மனம் சம்மதிப்பதில்லை. ஆயினும், நமதுநண்பராகிய வித்தியாதிராயர் மனங்களிப்படைவதே நமக்கு வேண்டுவதா யிருத்தலால் இப்போது உனக்குக் கட்டளை தருகின்றோம். மைந்த! நீ உன்மனைக்குச் சென்று தாய் தந்தையரையும் சுற்றத்தினரையும் களிப்பிப்பாய் தடுக்காதே. ஏனெனில், முன் ஆராய்ச்சி யுள்ளபுருடன் பின்வருவதை நோக்குபவனால் உச்சிப் போதினுக்குமேல் பெற்றுக்கொள்ளத் தக்கபயனை "சுபஸ்யசீக்கிரம்" என்னும் வழக்கினால் முற்பகலினே பெறமுயற்சிக்கின்றான் என்னும் பொருள் நீதிநூலகளின் துணிபாக விருக்கின்

றது. தகுந்தகாலத்தில் விதைத்த விதை விளைவுண்டாகிப் பலித்தாற்போலும் பருவமல்லாத பருவத்து வித்தியவிதை பயன்றருமோ? தக்க பருவத்தில் மணம் புணர்ந்தால் இல்லற தருமங்களை அனுட்டிப்பதற்கும் மக்கட்பேறு முதலிய பேறுகளைப் பெறுதற்கும் ஒத்தவாறாக விருக்கும். மைந்தர்க்கு எப்பொழுது மணவினைமுடித்து வாழக்காண்போ மென்று வருடங்களை யெண்ணிக் கொண்டிருப்பது பெற்றோர் உரிமைத் தொழிலாகவு மியற்கையாகவு மிருக்கின்றது. தாய்தந்தையரைக் களிப்பிப்பதே மைந்தர்கடனாக விருக்கின்றது. அன்றியும் பிதிரர், மக்கள் வமிசம் விருத்தியாய் அதனால் தாங்கள் நற்கதி யடையவேண்டுமென்று, தமதுமரபோர்க்குக் கிரகத்தாச்சிரமம் உண்டாவதாக வென்று வாழ்த்திக்கொண்டிருப்பர். அல்லதூஉம் இதுவரையில் நீ செய்துவந்த வேதாத்தியயனத்திற்குப் பயனாகிய கருமானுட்டானத்திற்கு உத்தமியான மனையாளைப் பெற்றுக்கொள்வதே அவசியமாம். இல்லற நிலைமை, மற்றெல்லா நிலைமையிலும் சிறந்ததாயும் அந்நிலைமைகளை யெல்லாம் காப்பதாயு முள்ளது. ஆதலால் இப்போது நீ வேதவிரதங்களை முடித்து, உன்பிதிரர் கட்டளையால் மணம்புணர்ந்து இல்லறத்தானாய் இருக்க வேண்டுமென்று விதித்தனர்.

## சிவகுரு வைராகப்பிரசங்கம்.

அப்போது அச்செல்வ மாணாக்கர் அவரைநோக்கி, ஐயரே! தேவரீர் கட்டளைப்படி நடந்துகொள்வதற்கு அடியேன் உரியனாகவே யிருக்கின்றேன். ஆனால், இல்லறத்தானாகி மாதரைப்புணர்வதனால் எனக்குத் தோற்றுஞ் சில ஐயங்களையும், எனது விருப்பவகையினையும் விண்ணப்பிப்பதற்குக் கட்டளையானால் விண்ணப்பஞ் செய்கின்றேன் என்றார். நல்லபிள்ளாய்! நீ விரும்பிய விருப்பத்தை முற்றுவிப்பதே நமது விருப்பமாக, நீ அஞ்சுதலின்றி சொல்லுவசொல் என்று கூறினர். அதுகேட்டு விண்ணப்பிக்கத் தொடங்கினர். எம்பெருமானே! தேவரீர் கட்டளையிட்டது முற்றும் உண்மையதே ஆயினும் இம்மைமறுமை யிரண்டினையும் தரும் தேவரீர திருவடிப் பணிவிடை செய்துகொண்டு ஓதிய வேதத்தினை மீறவொருது சிந்தித்துச் சீவனுள்ளளவும்யில் நைட்டிகப் பிரம சாரியனா யிருத்தல் வேண்டுமென்பதே யெனது விருப்பு. இதனைவிடுத்து, துன்பமற்ற பிரம சாரியத்தைத் துறந்து பெரும்பாரமாகிய வில்லொழுக்கந் தலைமேற் கொள்வது தொடங்குங்காற் சிலர்க்கது சுகம்போலவே தோன்றினும் முடிவிற் பெரும்பிழையாகவே முடிகின்றது. அன்றியும் பிரமசாரியன் கிரகத்த நிலைக்கு வரவேண்டுமென்பதே நியமமுமல்லவாம். விவேகியேற றுறக்கனுந் துறக்கலாம். அங்ஙனமுமன்றி மணம் புணர்க்

தால், அரசாட்சி பாரம்பூண்ட அரசன் கணமேனும் ஓய்வின்றி புலகோம்புதலின் கண்ணேசெல்வதுபோல், இலௌகிக வைதிக மென்னும் இருவகைக் கருமங்களையு முற்றுவிப்பதற்குப் பெரு மைப்பு உழைக்கவேண்டியதாகின்றது. இல்லறத்தானுக்கு வரவர மூவேடணையின் மோகத்தொடக்கு வலுக்கின்றது. தொடக்கத் தில் சுத்தமாயிருந்த நெஞ்சு சிலநாளிற் கிலேசத்தின் பாற்படு கின்றது. குடும்பம் விருத்தியாமளவில் மிகவும் கடன், நோய், உழைப்பு, சுற்றம், மரணம், துக்க முதலியவற்றால் எவ்வளவே னும் கவலையொழிவதில்லை. வேள்வி முதலிய தருமகருமங்களை யனுட்டிப்பதற்குப் பொருளுதவி மிகவும் வேண்டும். அதுவிட யத்தில் மிகமுயன்றானும், பெரும்பாலும் பாவத்திற்கும் அவ மானத்திற்கும் அஞ்சுவோனுக்குப் பொருள் விசேடம் வாய்ப்ப தில்லை. வறியவனு யிருந்தால் குடும்ப பாரங்கொண்டவனுக்கு அதனினும்வேறு நரகம்வேண்டா. பொருளாசை மேற்கொண்ட வனுக்குப் புண்ணியசாதன மெங்குள்ளது? மறுமைப்பயன் எங் குள்ளது? அன்றி யொருக்கால் முற்பவத் தொடர்பால் முயற்சி யும் பலித்துப் பொருளுஞ் சிறிது கிடைத்தால் போகமேலிடுந் தோறும் ஆசை மேலிடுவதன்றித் திருத்தி யுண்டாவதில்லை. மேலும் அழகு, இளமை, பொருளிவற்றினுமேல் தானே சந்தோ ஷிப்பது மாதர்க்கு இயல்பான குணமாக விருத்தலன்றிக் கண வனோடொத்த கருத்தினளாய்க் கற்புடையவளாய் ஒழுகும் மனை விகிடைப்பது மிகவும் அருமையாக விருக்கின்றது. மக்களில்லா விடினும், துன்மார்க்கரான மைந்தர்பிறக்கினும், அங்கப்பழுதி னர், பெருநோயர், அற்பாயுளராய்ப் பிறந்தாலும் பெரிய அநர்த் தங்களுக்கு இடனாகின்றது. இவ்வாறு இவ்வில்லறத்துள் பலதுன் பங்களுண்டாகின்றன. முக்கியமாய் இழிசனர்களைப் பின்தொட ர்ந்து அவர்களுக்கு இதம்புரிந்து அவர்களால் ஒரு பயனை அடை வதைப் பார்க்கிலும் தாழ்வுள்ளது மற்றொன்றுள்ளதாக எனக் குத் தோன்றுவதில்லை. அஃதங்ஙன மிருக்க மறுமையாவது பெறலாமேயெனில், மாதர்புணர்ச்சி யுள்ளவனுக்கு யோகமார்க் கம் கைகூடுவதல்ல. யோகசாதன மில்லாதவர்க்கு ஞான சித்தி யும் கடவுளருளும் எளிதிற்பெறப்படுவன வல்லவாம். கருமயோ கத்தாலும் பத்தியோகத்தாலும் கதிபெறலா மென்னில், சமு சாரத்தில் பலதடைகள் உண்டாகின்றன.

எல்லாவிடயங்களிலும் ஒத்து வருவது சிவானுக்கிரகமு டைய பெரும் புண்ணியமுடையோன் யாரேனு மொருவனுக் கன்றி பொது நோக்கத்தால் யாவர்க்கும் ஒத்தபடியன்று. ஆத லால், எல்லாச் சுகத்தையும் கொடுப்பதற்குக் கண்கண்ட கற்பகத் தருப்போலும் தமது திருவடியை விடுத்துச் செல்வதற்கு எனது நெஞ்சுடன்படுவதில்லை என்றார்.

## சிவகுருவை ஆசிரியன் விதித்தது.

பின்னர், அவ்வாசிரியன் சமாதிநிட்டராய்ச் சிறிதுபோது சிவத்தியானஞ் செய்திருந்து வெளிமுகராகி, குழந்தாய்! நீ கடவுட் செல்வமுடையோனுகப் பிறந்தாய். இயன்றமட்டி லுண்மையோடு கடவுளைத் தொழுதிருக்கக் கடவை. சிவானுக்கிரகத்தால் நேர்வனமுழுவது நல்லனவே நேரும். முக்கியமாய், பரமேச்சுரனது ஞானவடிவம் உன்மரபிற் றோன்றி, உன்குடி மாத்திரமேயன்றி இவ்வுலகமுழுவதும் நிலைநிறுத்தப் படுவது சிவசங்கற்பமாகவிருத்தலின் அதற்கு மாருக உன் முயற்சி யொன்றும் நடவாது. ஆதலின் நீசென்று இல்லறத்தானுகவே யிருத்தல் வேண்டும் என்று கட்டளையிட்டார். அத்தருணத்தில், காலட்டி அக்கிராரத்திருந்து வித்தியாதிராயரென்னும் அந்தணர் தலைவர் தன்மகனைப்பார்க்க வருதலும், ஐவப்போடு சிறுபொருளைத் தக்ஷிணையாகப்பெற்றக்கல்வியாசிரியன், சிவகுரு என்னும் தன்மாணக்கரை அவர் தந்தையிடத் தொப்பித்து உபசரித்து அனுப்பினர்.

## சிவகுரு மணம் புரிதல்.

அவர்களும் தம்மூருக்குவந்து சேர்ந்தவுடனே சுற்றத்தார், நட்பினர், கற்றோர் முதலிய யாவரும்வந்து உபசரிக்கப்பட்டு நல்வரவு வினவிக் களிப்படைந்தனர். அங்கொருநாள் தேவதேவர் திருவிழாவின் பொருட்டுச் சபைகூடியவழி இச்சிவகுரு என்பவரது கல்விநிறைவு ஆராயப்பட்டு வெளியிடாய் அப்புகழ் நாடெங்கும் பரவிவந்தது. வித்தியாதிராயராகிய தந்தை தாமே பலவிடயங்களை விசாரித்து, பதினுன்கு வித்தையிலும் தம்மகனுருக்கு நிரம்பிய வுணர்ச்சி யுண்மையுணர்ந்து, மானுடயாக்கை பெற்றவர்கள் பெறவேண்டிய முழுவின்பத்தை யடைந்தனர். மகன் கல்வியிற் சிறந்தவனுய்த் தக்கதோர் நல்லொழுக்கத்திருந்து தன் பணிசெய்வானுயின் தந்தைக்கு அதனின் மேம்பட்ட வின்பமில்லை யன்றோ?

அங்ஙனமிருக்க, இச்செய்தியறிந்த வேதியர் பலர்தத்தம் கன்னியர்களை இம்மணமகனுக்குக் கொடுக்கவேண்டும் என்னும் எண்ணத்தோடும் நெடுந்தூர தேயத்தினின்றும் வரத்தொடங்கினர். வித்தியாதி ராயர் என்னும் வேதியர் தலைவர் அவரனைவரையும் உபசரித்து அனுப்பிவிட்டனரே யன்றித் தன்னிட்ட தெய்வமாகிய இடபாசலத்துச் சுயம்புலிங்கேசன் ஆணையின்றித் தன் மகனுக்கு யாதொரு கன்னிகையையும் கொள்ளுவதில்லை யென்னும் உள்ளத்துணிவோடு மிருந்தனர்.

அந்நாளில் அகத்தியனார் மாணக்கர் பாரம்பரையைச் சேர்ந்து, ஸ்ரீ சோமாஸ்கந்த மூர்த்தியைப் பூசித்துப் பெற்ற திருவரு

ளால் ஓர் கன்னி மணியைப் பயந்திருந்த முகிபண்டிதன் என்னும்
வேதியன் தன்மகளைக் கொடுப்பதாக வந்தனன். அங்கு அது
விடயத்தில் கோத்திர சம்பந்த நக்ஷத்திர சகுனமுதலிய வெல்
லாம் ஒத்தபடி நன்கமைந்ததேயன்றிக் கடவுள் ஆஞ்ஞையும்
கிடைத்தமையால் யாவரும் அக்கன்னியை மணம்புரிய விசைந்
தனர்கள். அப்போது, அம்முகிபண்டிதன் தன்னாற்றலைக் கடந்து,
வரதக்ஷிணைகொடுக்கின்றேன். ஆதலால் மணமகன் தன்மனைக்கு
வரவேண்டுமென்று பிரார்த்தித்தான். உமக்குப் பொருட்செல
வின்றி மணம் புரிதலாம். ஆகவே இங்குத்தானே வரவேண்டு
மென்று வித்தியாதிராயருங் கூறினார். இவ்வளவில், காலந்தாழ்க்
கில் வேறு யாரேனும் தங் கன்னியை மணம்புரிவிக்கவுங் கூடு
மென்று, அங்குள்ள பெரியோர் குறிப்பித்ததால் அம்முகிபண்டி
தன் தகுதியான மணச்சிறப்பினோடு தன் குடும்பம், பரிவாரம்,
சுற்றம், நட்பினரோடு தன்மகளையு மழைத்துக்கொண்டு காலட்டி
யென்னும் அக்கிராரம் வந்துசேர்ந்தான். பின்பு சிறந்த சோதி
டர்களால் நிச்சயிக்கப்பட்ட நல்லமுகூர்த்தத்தில், எல்லாவுவகைச்
சிறப்போடும் நூல் விதிப்படி திருத்தமுற மணவினைப் பெரு
விழாவை முடித்தனர். பின் ஆரியாம்பாள் என்னும் அக்கன்னி
கையோடு சிவகுரு என்னும் அம்மணமகன், அதிதியைப் புணர்
ந்த காசிபரைப்போலும், அநசூயையைப் புணர்ந்த அத்திரிபோ
லும், அருந்ததியைப் புணர்ந்த வசிட்டரைப்போலும் இல்லற
வொழுக்கத்தை நடத்திப் புகழுற்றிருந்தார். அவரது கல்வி கேள்
வியொழுக்கச் சிறப்பினால் அக்குடியில் எல்லாச் சுகங்களும் மேன்
மேலும் வளர்ந்து வந்தன. அத்தம்பதிகள், பெரியோர்களையும்,
தேவர்களையும், ஓம்புதல்செய்து தவநியமம் பூண்டாராய்த் தரு
மத்தைக் கடைப்பிடித்து நின்றனர். அவ்வாரியாம்பாளது கற்
பின் விசேடத்தால் அச்சிவகுரு என்னும் அந்தணரது இல்லற
வொழுக்கம் அவருக்குச் சுவர்க்கத்தினும் பேரின்பம் விளைத்திருந்
தது. அழகு, இளமை, நற்குணம், நல்லொழுக்கம், நற்கல்வி,
பெருமை, புண்ணியம், புகழ், பொருள், செல்வவிருத்தி, மாறா
க்கருணைமை, நோயற்றவாழ்வு, ஒத்தகருத்தி னிருவரொழுக்கும்
உண்டாய், வேள்வி முதலிய நற்கருமங்களைச் செய்து பிரிவற்
றுச் சிவபூசை செய்திருக்கும் அம்மகினாற் குறைவறுக்கப்பட்டு
வித்தியாதிராயர் பிறந்த பேறு பெற்றனர்.

## சிவகுரு மக்கட்பேறு விரும்புதல்.

அவ்வளவில் காலவியல்பால் சிறந்த பிதிர்கருமத்தை முடி
த்து, அச்சிவகுருவானவர் கயையிலும் கங்கையிலுஞ் செய்யத்
தகுவனவாகிய நீர்க்கடன் முதலிய கருமங்களைத் தீர்த்துத் தீர்
த்த யாத்திரைசெய்து தன் பன்னியோடு எல்லாப் புண்ணியவிர

தங்களையும் தானதரும முதலியவற்றையும் புரிந்து பரோபகாரி
யாய்க் கல்வியாற்போது கழித்துத் தபோயோக நிட்டையோடு
மிருந்தனர். ஆனால் அவ்விருவர்க்கும் எவ்வகைக் குறையும் இல்
லையாயினும் மக்கட்பேறில்லையே யென்னுங் குறைமாத்திரம்
மிகப் பெரிதாயிருந்தது. கறுத்த உரோமம் உள்ளபோது மக்கட்
பேறில்லாதிருப்பது பெருவேள்வி செய்த வுரிமைக்குக் குறை
வன்றோ? மாந்தர் மக்கட்பேற்றொன்றினானே முற்றும் பெற்றவ
ராகின்றார்கள் என்று வேதங் கூறுகின்றது. புத்திரன் பிறந்தா
லன்றோ பெற்றோர்க்குப் புட்டென்ற பெயருடைய நரகமொழி
யும். மகனைப்பெற்றோ னன்றோ தென்புலத்தார் கடனைத் தீர்
த்தவனாவான். அக்காதலனாலன்றோ குடியின் பெயர் விளங்கும்.
மகப்பேற்றினுக்காயினும் சிறந்த களிப்பும், அது இல்லாமை
யினுஞ் சிறந்த துன்பமும், ஓர் குடும்பிக்கு வேறு இல்லையன்றோ?
என்று அந்தச்சிவகுரு என்னும் வேதியர் தனிமையில் தம்மனைவி
யோடும் சிந்தித்திருக்கையில், அவ்வாரியாம்பையாரும் தங்கண
வரோடுங் கூறுவதாயினர்.

பிராணநாதரே! எல்லாமுணர்ந்த தமதுசந்நிதியிலே என்னை
விண்ணப்பஞ்செய்ய வல்லளாமேனுயினும் தமது சந்நிதியருளா
லாகிய உணர்ச்சி வலியால் உண்டாகிய நம்பிக்கையால் கூறுவ
தென்னெனில் தேவரீர் எல்லாவற்றையும் சிவனுக்கு ஆக்கிப்
பயனொன்றனையும் குறியாது கருமங்களை யெல்லாம் ஈசுரார்ப்
பணஞ் செய்தலால் தமக்கு வேண்டுவனவற்றை யவ்விறைவனே
முடிப்பிக்கின்றார். அடியேற்குத் தேவரீரே அவ்விறைவனுமாத
லின் அக்கவலையே யின்று. ஆதலால் நம்மிருவர்க்கும் நல்லசந்ததி
உண்டாகவேண்டிய நற்காலம் தவறாது வருமென்று முன்னே
குறிப்பிக்கின்ற சகுனமுதலியன உண்டாயிருத்தலின் மனத்துளக்
குறைவில்லை. ஆயின் தேவரீர் அடியேன் மனத்தினைச் சோதிக்
கும் பொருட்டு என்னோடு இந்தத்துன்பம் உண்டாயதுபோலும்
குறிப்பித்திருக்கலா மென்று தோற்றுகின்றது. நான் அவ்வள
வினுக்கு ஆற்றவல்லளோ? தேவரீர் மக்கட்பேறு வேண்டுமென்
னும் எண்ணத்தோடு கடவுளைப் பிரார்த்தித்தால் அடியார்களது
இச்சை யெல்லாவற்றினையு முடித்தருளவல்ல மஹாதேவர்க்கு
இஃது ஒரு அருமையோ? ஆதலால் தேவரீர் காமியதவஞ்செய்ய
வேண்டுவ தொன்றே குறைவாக விருக்கின்றது. இவ்வெண்ண
மெனக்குஞ் சிலகாலமாக உண்டாயிருந்ததா மாயினும் விருப்பின்
றிக் கடவுளருச்சனை செய்துவரும் தம்மொடு விண்ணப்பித்தால்
திருவுளத்தில் என்ன தோன்றுமோ என்னும் ஐயத்தால் சும்மா
விருந்தேன். இப்போது காலம் வாய்த்ததால் விண்ணப்பித்தேன்
என்றார்.

## சிவகுரு புதல்வர்க்காகத் தவம்புரிதல்.

அதுகேட்டு அவர், ஒப்பாதவளே! இல்லறத்தான் தருமமாவது, தரும பத்தினியோடு நியமவிதியைக் கடைப்பிடித்துப் போகிப்பது பிரமசரியத்திற்குத் தாழ்ந்ததல்ல. தருமத்தோடு முரணாத காமம் சிவானுக்கிரகமாமாதலின் அது நிட்காமத்திற்கு வேறல்ல. அதனால், பிதிர்க்கடன் ஒழிவு, மரபு விளங்கல் முதலிய பயனையுடைய புத்திரனைப் பெறத்தக்க காமியதவம் நமக்குத் தடையானதல்ல. இதுவே யென்கருத்தாக விருக்கினும் என்னோடொத்த தருமமுடைய உனது கருத்தினையும் அறிந்துபின்னர் நாமிருவரும் பரமேச்சுரனை ஆராதிக்கவேண்டுமென உன்னோடு கூறினேன். என்று நல்லோர்வரையில் நூல்களுள் விதித்தவண்ணம் தமக்குக் குரவனருள் கிடைத்துள்ள வழியால், பத்தி, ஞான, கிரியானுட்டானத்தோடு சிவயோகத் தவஞ்செய்ய, அத்தம்பதிகளிருவரும் தீக்ஷை செய்துகொண்டு முறைப்படி நடத்தி வந்தனர். ஒவ்வொருவருடம் ஒவ்வொரு புண்ணியத் தலங்களில் தவஞ்செய்து, மந்திர செபசாந்திசெய்து பன்னிரண்டாமாண்டில் இடபாசலத்தில் சுயம்புலிங்கேச்சுர சந்நிதியடுத்த பூரணவாகினி நதிதீரத்தில் தவஞ்செய்திருந்தனர். அங்கு ஒருநாள் பரமதயாநிதியாகிய சிவபெருமான் அத்தம்பதிகளிருவர்க்கும் ஒரேகாலத்துள் தியான யோகத்தில் நித்திரைவருவித்து அவர்கள் கனவில் அந்தணர் கோலமாகத் தரிசனை கொடுத்துச் சந்தான பலத்தையருள்செய்தார். பின்பவர்களின் தெளிந்துவிழித் தளவில் எல்லாத்தேவரும் வணங்கப் பேரொளிப்பிழம்பாய இடபாரூடராய் உமாபதியார் தரிசனை யளித்து மறைந்தனர். கடவுட்டரிசனத்தால் அத்தம்பதிகளுக்கு ஆனந்தக்கண்ணீர் பெருக்கும் புளகமும் உண்டாய்ப்பின் சிலபோதுவரையில் வியப்புக்கடலுள் மூழ்கியெழுந்திருந்தனர்.

அதன்பின்னர் அவ்விருவரும் தத்தமக்கு உண்டாகிய ஒரே தன்மையான கனவினை யுரைத்து ஒப்புக்கண்டு தவமுற்றிற்று என்னும் அசரீரியையுங் கேட்டு, தம்மிருப்பிடம்வந்து மந்திர செபசாந்தி எல்லாமுடித்துப் புத்திரகாமேஷ்டியுஞ்செய்து, மறுநாள் நியமத்தோடு தருப்பை சயனத்தில் படுத்திருக்கையில் அன்றிரவின் கனவில் பரமேச்சுரன் வேதியர் கோலமாகவந்துபசரிக்கப்பட்டுச் சிலகாலமே வயதுடைய ஞானநிறைவுள்ள மகனொருவனே சாலுமோ? நெடுங்காலம் பிழைக்கத்தக்க பேதை மக்கள் பலர்வேண்டுமோ? என்றுவினவினர். அப்போதவர்கள் ஞானபூரணனாகிய மகனொருவனே போதும். ஆயுள்வேண்டின், கொடுப்பதற்கு மிருத்தியுஞ்சயனாகிய பெருமானுள்ளான். மார்க்கண்டேயனைக் காத்ததில்லையோ? என்று கூறினர். உடனே விழித்

தெழுந்து சிவத்தியானத்தோடி மிருந்து, மறுநாள் புத்திரகாமேஷ்டியை முடித்து, பிராமண சந்தர்ப்பணை தான தருமமுதலிய செய்து, பெரியோராசி மொழிபெற்று வேள்விச் சேடமாகிய பாயசத்தைப் பகிர்ந்து உண்டு, பிரணவ பஞ்சாக்கரமுதலிய மஹாமந்திரத்தாலமைத்த பூரணகலசநீரை உட்கொண்டு அவ்விருவரும் சிவத்தியானத்தோடு மிருந்தனர்.

## சங்கரர் திருவவதாரம்.

அப்போது, எங்குநிறைந்த சச்சிதானந்த சுத்த சிவசைதந்யம் சுபாவ ஞானசத்தித்தொழில் முதலிய செல்வத்தையுடைய அருளோடு அம்மந்த்தில் பிரவேசித்து முழுக்கலையோடு அச்சிவகுருவின் தேகத்துள் சமூகவொளி செய்திருந்தது. பின்பு அவரது தருமபத்தினி ஆரியாம்பாள் கருப்பந்தாங்கிய அளவில் அம்முகவொளி என்றுங் கண்டறியாத பிரமவொளியதாய் இருசுடரொளியினும் சிறந்திருந்தது. அதுமுதல் பூவுலகத்தில் காலமழையும், பெருவிளைவும், நோயின்மையும், தருமபுத்தியும் உண்டாய் மக்களனைவரும் சந்தோடமாக விருந்தனர். எல்லாப்பொருளும் மலிவுற்றன. எல்லாக்கலைகளிலும் ஓதுவோர் உள்ளம் தெளிவுற்றிருந்தன. அந்தவூரில் நற்குறிகளுண்டாயின. அக்கருப்பிணிக்கு ஒரு காலத்தில் தேகத்துள் உலகமுழுவதும்தோன்றி வியப்பைக் கொடுத்தன.

எல்லாமுடைய கடவுள்கலையே, கருவாக வயிற்றுள் ளுண்டாயிருக்கையிலிஃதொரு வியப்பல்ல. அத்தாயின் கனவிலே வெள்ளைநிற இடபத்தின்மீது வீற்றிருந்த தாகவும், தேவர்களால் துதிக்கப்படுவதாகவும், கந்தருவரால் கீதம்பாடப்படுதாகவும் கண்டு ஜெஜெயவென்ற பிரார்த்தனை ஓசையும் தேவதுந்துமி முழக்கமுங்கேட்டு விழித்துணர்ந்து தன்னுடம்பின் மேல்வீழ்ந்திருந்த மல்லிகை பாரிசாதமுதலிய நல்லமணமுள்ள பூக்களைப்பார்த்து அதிசயித்திருந்தனர்.

பரமேச்சுரன் மாயையைத் தன்வசத்தில்வைத்துக்கொண்டு சுதந்தரனாகத் தானிருப்பவனாதலால்ஆகாயம்போலெல்லாவுடம்பினிடத்தும் கலந்துள்ளவனாய், வாயுப்போல வுள்ளுயிராய்ச் சச்சிதாநந்த ரூபமாய்க் கூட்டமற்று எங்கு நிறைந்தவனாய் முக்காலத்து முள்ளவனாதலால் அந்தப்பொருளுக்குப் பிறவிக்கருமமெங்குள்ளது? கருவிற்கிடத்த லெங்குள்ளது? பிறப்பெங்குள்ளது? தோற்ற மற்றவனேயன்றோ? பிறவியில்லாதவனே யாயினுந் தன்னிச்சையின் விளையாட்டினாய்ப் பிறப்புடையவன்போல அவதரித்தவாறு மாயைதோற்றிய தன்றி வேறென்னுள்ளது? அச்சிவகுருவும், ஆரியாம்பையும் அநேகம் பிறவியிலுந் தவஞ்செய்து

சிவானுக்கிரகத்துக்குப் பாத்திரராய், அதிதிகாசிபரைப் போலப் பரிசுத்தராமாதலின் அவர்களிடத்துச் சிவகலை அவதரித்தது. ஈச்சுர அமிசை தருமநிலை நிறுத்தற்பொருட்டுக் கிருதயுகத்தில் கபிலராயும், திரேதாயுகத்தில் தத்தாத்திரேயராயும், துவாபர யுகத்தில் வியாசராயும், கலியுகத்தில் ஸ்ரீ சங்கராசாரியராயும் அவதரிக்குமென்று பிரமதேவன் சனற்குமாரற்குக் கூறியபடி இக் கலியுகத்தில் ஆதி சங்கரர்வதாரத்திற்கு எப்பொழுது சுபமுகூர்த்தமோ? என்று அறிவுடையோ ரனைவரும் எதிர்பார்த்திருந்தனர்.

இங்ஙனமாக இக்கலியுகத்தில் மூவாயிரத்து ஐம்பத்தெட்டாவ தாண்டுக்குச் சரியான விக்கிரமசகம் பதினென்காவதாகிய ஈசுரவருடம் வைசாகமாதத்துள், பஞ்சாங்க சுத்தியுள்ள நல்ல நாளில் நல்லோரை நற்கோள் அமைதிகளும் கூடியகாலத்தில் சிவகுருவின் மனைவியாகிய ஆரியாம்பை, அநசூயை தூர்வாசரைப் பெற்றது போலும், அதிதிவாமனரைப் பெற்றதுபோலும் சங்கரமூர்த்தியைப் பிரசவித்தனர்.

அப்போதே, அவ்வம்மையாருக்குச் சிவஞான வொளி வெளிப்பட்டுச் சிறுபோது முற்று மாநந்தமயமா யிருக்கையில், மீட்டும் மாயையின் மறைப்பால் உலகசம்பந்தமான வேறுபட்ட மோகமுதலியன வுண்டாயின. சங்கராவதார புண்ணியகாலத்தில் தேவதுந்துமி முழங்கின. ஆகாயந் திசை உடுக்கள் விளக்கமாக விளங்கின. பகையுயிர்கள் தம்முட் பகையொழிந்தன. கொடிய மிருக முதலியன சாந்தத்தை யடைந்தன. பெரியோர்களுள்ளக் கமல மலர்ந்தன. பேதிவாதிகள் நூல் கைநழுவின. துன்மத வாதியர்க்குக் நிச்சகுநமுண்டாயின. அவதரித்த திருக்குழவியின் திருமேனி யொளியே அவ்வறைக்கணிருந்த விருளைப் புறம் போக்கியது. இங்ஙனம் இன்பவடிவர் உற்பத்தித் திருநாளில் எல்லா மின்பமேயாகவிருந்தது. இவ்வாறாகக் கருவாசம் பிறவித்துன்பம் யாதொன்றுமின்றித் தூணம் காரணமாக நரமடங்கற் பெருந்தகை தோற்றமாயினாற்போலும், மெய்யறிவின்பப் பொருளேயவதரித்தது. இக்குழவியும் அத்தெய்வத்தாய்க்கு நனவு கனவு முதலிய அவத்தைகளுட் கலவாது அற்புதத் தன்மையதாக விருந்தது.

அங்ஙனம் சிவகுருவானவர், அப்புதல்வர்ப்பேறு கேட்டுப் பெருநீர்த் தீர்த்தமாடி விதிப்படி சாதகரும முதலிய முடித்து வேதியர்க்கு விதை வழங்கல் முதலிய பலதானங்களைச் செய்து, அந்தணராசி மொழிபெற்றுச் சோதிடரைச் சாதகப்பயன் வினவினர். அதற்கவர்கள் இது மகாபுருட சாதகமாதலின் ஆயுண் முதலிய பயனை வரம்பறுத்துக் கூற வெம்மாலமையாது. எத்து

ணேப்பயன் கூறலாம்? எனக்கேட் டனைவரும் வியப்படைந்தனர்.

அங்கொருநாள், வெண்ணிறநாகமொன்று அக்குழவியைப் பூண் அணிந்தாற்போலுஞ் சூழ்ந்து மண்டலமிட்டுப் படமசைத்தாடி யிருக்கக்கண்ட மனைக்கணுள்ளவர் பயந்து அயலவர் முதலியரோடுந் திரண்டுவந்து பார்க்கையி லது வில்வமு முருத்திராக்கமணியுந் திருநீறுமாகத் தோற்றியது. அதுகண்டு இஃதொரு தெய்வச்செயலென அற்புதங் கொண்டனர்.

மற்றொருநாள் அக்குழவியைத் தாயிடத்துஇருக்கக்காணாது அச்சத்தோடுந் தேடுகையில் ஒளியோடுங்கூடிய விருத்தவேதியரொருவர் வீணையுட் சாமவேதம் பாடிக்கொண்டு பிச்சைக்கு வந்து அம்மனைக்கணிருந்த பூச்சுணேக்காயினைத் தரும்படி யிரந்தார். அதனை அவ்வாறே கொடுக்கையில் அது அவ்வேதியன் கை தவறிவிடக் கீழ்விழுந் துடைந்தது. அதனுள்ளே அக்குழவியிருக்கக் கண்டார்கள். அப்போதங்குள்ளவர்கள் காரணந் தோற்றாது ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கையில் கிழச்சுமங்கலிகள் கூடி அக்குழவிக்குச் சாந்திக்காப்பு முதலிய செய்து தாயிடங்கொண்டு போயினர். இந்த ஆரவாரத்துள்வந்த வேதியர்கண்படாது மறைந்தனர்.

அக்குழவிக்கு நெற்றியில் நுதற்கண்ணின் குறிப்பும், உச்சியில் எவ்வளவு தொடைக்கினும் உலராத ஈரமும், இளம்பிறையொத்த வெண்ணிறக்கீற்றும், கண்டத்தின் மீது கறுத்தமறுவும், கைகளில் தமருகஞ் சூல முதலிய விரேகைகளும், சந்திரகாந்தம் போலும் தேககாந்தியும், நீண்டதோளும், பரந்தமார்புமாகிய சிறந்த புருடவிலக்கணமும், இருசுடர்போ லொளிசெய்யும் அகன்ற கண்களும், அழகிய மேனியும் காண்பார்க்கு மங்கலம் விளைவித்துச் சிவசங்கராமிசத்தைக் குறிப்பித்து நிற்றலின் அக்குழவிக்குச் சங்கரர் என்னும் நாமகரணஞ் சாற்றினர். அம்மகவு வளர்பிறைபோலும் நாளுக்குநாள் வளர்ந்து வந்தது.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

# மூன்றாம் அத்தியாயம்.

## தேவர்கள் மண்ணிற் பிறத்தல்.

ஸ்ரீ பரமேச்சுரன் பூவுலகத்தில் ஸ்ரீ சங்கராவதாரஞ் செய்திருக்கையில், அவரைச் சேவிக்கும் பொருட்டு விஷ்ணுமுதலிய தேவர்கள் வேதியர் குலத்துள் அவதரித்தவாறு.

விஷ்ணு, விமலர் என்னும் வேதியர்க்கு மகனாகப் பிறந்தனர். அவரிடத்தே சூரியன் கலையுஞ் சேர்ந்தது. அவரே சனந்தனாசாரியராம். இவரேயினிப்பதுமபாதாசாரிய ரென்னும் காரணப் பெயர் பெறுவர். வாயு, பட்டகுமாரர் மாணாக்கராகிய பிரபாகர பட்டர் மகனாகப் பிறந்து, அஸ்தாமலகாசாரியர் என்னும் பெயர் பெற்றனர். அக்கினி, துரோடகாசாரியராகப் பிறந்தனர். நந்தி, வீரபத்திரர், கணபதி யென்னும் மூவர் கூறுஞ்சேர்ந்து உதங்க முனிவராகப் பிறந்தனர். பிரமதேவன் சுரேசுவராசாரியராய்ப் பிறந்தனர். அவருட்டானே முன்சார்வாகநூல் கூறிய குற்றம் கழியவேண்டிப் பிரகற்பதிகூறுஞ் சேர்ந்து மண்டனபட்டாசாரியர் என்னும் பெயரும் பெற்றனர். இவர்க்கு விசுவரூபாசாரியர் என்றொரு பெயருமுள்ளது. அவர்க்கே ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியருள் கலத்தலினால் விவரணாசாரியர் என்னும் வேறொரு பெயருமுண்டாம்.

நந்தியின் அமிசமும் பிரகற்பதி அமிசமுங்கூடி ஆநந்தகிரியாசாரியராகப் பிறந்தனர். வருணன், சிற்சுகாசாரியராய்ப் பிறந்தனர். இயமன், காலாநரன் என்னும் வாதியாகப் பிறந்தார். நிருதி; சாத்தேயர் மந்திரவாதியாகப் பிறந்தனர். ஏனைய தேவர்யாரும் அந்தந்தமத வாதியர்களாகப் பிறந்தனர்கள். அவர்களனைவரும் ஞானகிரியாசத்திகளை யடைந்து பலமாணாக்கர்களுக்கும் ஆசிரியர்களாய்ப் புகழ்பெற்றிருந்தனர். சரஸ்வதியானவர் துர்வாசர் சாபத்தினால் உபயபாரதி யென்னும் பெயரோடு பிறந்து சாரதா, சரசவாணி, மந்திரேசுவரி, அக்ஷரமாத்ருகை, வாக்குவாதினி, என்னும் பெயரை யடைந்தனர். இங்ஙனமாகத் தேவக்கூறுகளின் அவதாரவிரகசியம் பௌடியோத்தரத்தின் காலஞானகாண்டத்தில் தேவரகசிய விவரணத்துள் விரித்துக் கூறப்பட்டது.

முற்காலத்துள் மூதறிவோர்களாகிய முனிவர்கள் சத்திய லோகத்துள் பிரமாவினிடத்தில் தத்தம் வேதங்களை யோதியிருந்தனர், அங்கு சிவயோகியாகிய துர்வாசர் வேதமோதுகையில் ஓரிடத்தில ஒருசுரம் தவற, அதுகேட்ட கலைமகளாகிய சரஸ்வதி

யார் நகைத்தனர். அது கண்டு துர்வாசர் வெகுண்டு, கலைமகளே நீர்நம்மை அவமானஞ் செய்ததால் நிலவுலகத்து மானுடமாதா கப்பிறந்து தோல்வியடைந்து சந்நியாசி வயத்தராகக் கடவிர் என்று சபித்தனர். அதுகேட்டுக் கலைமகளார் இத்துர்வாசர் உக்கிரமாகிய ஆணையுடையவர் இவர்சொல் தவறுவதன்று ஆதலின் இவர்மேல் யார்முயற்சியுஞ் செல்வதல்லவாதலின் இவரையே வேண்டி அனுக்கிரகம் பெறவேண்டுமென்று எண்ணி அடங்கியவராய்த் துர்வாசரைப் புகழ்ந்து சாபத்தை விமோசிக்கும்படி வேண்டிக்கொண்டனர். அப்போது துர்வாசர் ஞானநோக்கத்தானோக்கிப் பரமேச்சுரனே பூவுலகத்தில் துறவிகோலமாயவதரித்து வரும்போது அவர்க்கு நீர்தோற்றுச் சாபவிமோசனமடைந்து உண்மையான தெய்வவடிவம் பெற்று அவர் வசத்திருப்பீராகலின் ஓர் அவமானமும் உமக்கு உண்டாகாதொழியுமென்று அனுக்கிரகித்துத் தம்மிடஞ் சென்றனர். அதனால் சரஸ்வதியார், சோணபத்திரையாற்றங் கரையில் விஷ்ணு மித்திரன் என்னும் வேதியன் மகளாய் உபயபாரதி யென்னும் பெயர் பூண்டு, சுவை பெறப் பேசுந்தரத்தால் சரசவாணியென்ற காரணப் பெயருடன் தருமஞானவடிவராய் வளர்ந்திருந்தனர். அறுபத்துநாலு கலைகளும் அவர் வடிவமாகவே யிருந்தன.

சரசவாணியாகிய அவ்வுபயபாரதி யென்னுங் கன்னிகை வடிவத்தாலழகுரு வெடுத்தாற்போலும், அறிவாற் கல்வியுரு வெடுத்தாற்போலும், ஆற்றலான் மந்திரயோக முருவெடுத்தாற் போலும், இயற்கையாற் புண்ணிய முருவெடுத்தாற்போலும், தொழிலாற் சதுரமோருரு வெடுத்தாற்போலு மிருந்தனர், என்று அக்கன்னிகையின் நற்குணமுதலியவற்றைச் சுரேசுரர் என்னும் பிரமசாரியினிடத்துந் தெரிவித்து, அவ்வாறே அச்சுரேசுரர் என்னும் மண்டனபட்டாசாரியர், நல்ல வேதியர் பரம்பரையிற் பிறந்து பட்டபாதாசாரியர்க்கு மாணுக்கராய் வேதமுதலிய கலைகளை அவற்றினிரகசியங்களோடு சாங்கமாக ஓதியுணர்ந்து, தவநிட்டைகளிற் சிறந்தோராய் எல்லாம் வல்ல தன்மையுடையவராய் "கருமகாண்டப் பிரதிஷ்டாபனசாரிய சித்தாந்தப் பிரவர்த்தகர்" என்றவிருதுபெற்று, மீமாம்ச ஜெயபேரி முதலியவற்றால் புகழ்ப்பெற்று, அரசர்க்கரசராற் சிறப்புற்றுத் தன் மாணுக்கராகிய பல புலவராற் சூழப்பட்டுச் செல்வங்கல்விகட்கிருப்பிடமாய்ப் பிரமதேவனோடொத்த பெருமைவாய்ந்து, இப்போது, இல்லறதருமத்தை யடைய விரும்பி மணம் புரிதற்பொருட்டுந் தனக்குத் தக்க கன்னிகையைத் தேடுவாரா யுள்ளனர் என்று அவ்வுபயபாரதியாரிடத்துந் தெரிவித்து அவ்விருவர்க்கும் அன்னியோன்னிய வன்பினையும், ஒருவரை யொருவர் விழையும் விருப்பத்தினையும் உண்டு பண்ணி, வேதியவடிவமாக

வுலகத்துத் திரியு நாரதர் முதலிய தேவ விருடியர் அவ்விருவர் பக்கத்தும் நடுவராக நின்று மணங் கூட்டுவித்தனர்.

பின், அம் மணமகன் பிதாவாகிய இமமித்திர பட்டாசாரிய ரும், மணமகள் தந்தையாகிய விஷ்ணுமித்திர பட்டாசாரியரும், வைதிக நிலைமை, வயசு, குலம், ஒழுக்கம், அறம், கோத்திரம், சுற்றமுறைமை, பொருத்தம், வடிவம், உருவம், முதலிய எல்லா வற்றுள்ளும் ஒத்தலுடைமை யாராய்ந்து, சுற்றத்தினரனைவரு டம்பாட்டினோடும் சோணபத்திரை யாற்றங்கரையில் நல்ல முகூ ர்த்தத்தில் பெருஞ் சிறப்போடும் நான்முறை தவறாது மணமுடி த்தனர். அங்ஙனம், பேரி, முரசு, படகம், மத்தளம், சங்கு, குழல், வீணைமுதலிய பலவாத்தியங்களும், வேதகோஷமும், திசைசெவி டுபட முழங்குகையில் அவ்விசுவரூபராகிய மண்டனமிசிரர் அவ் வுபயபாரதியென்னும் மடந்தையின் கைப்பற்றித் தன்சாகையின் விதியாகக்கொண்ட சூத்திரவிதிப்படி கருமங்களை யனுட்டித்து விவாகதீக்ஷையை முடித்து, அம்மாதின் பிறந்தக வரிசைபெற்று அத்தம்பதியர் இருவரும் சுற்றத்தாரா லுபசரிக்கப்பட்டு அங் கிருந்து புறப்பட்டுத் தமது மகிடமதி என்னும் நகரத்தையடைந் தனர்.

அங்கு, மாணாக்கர், பரிசனர், பொருள், பசு நிரை, பொற் பூண், மணி, ஆடை, மனைக்குரியகல முதலிய கருவி, நூற்கோசங் கள் முதலிய எல்லாச் செல்வமுநிறைந்து, அரசன் கோயிலினுஞ் சிறந்துள்ள தங்கள் மாளிகை சேர்ந்து, எவ்வகைப்பட்ட சுரௌ தஸ்மார்த்த கருமங்களையும் விதிப்படி நடத்திவந்தனர், அவ்விரு வர் அன்புமொருமையும் இம்மை மறுமைப் பயனிரண்டிற்கும் ஏற்றபெற்றியவாயிருந்தன. அவ்வம்மையைத் தேவமாதர்யாரும் பாங்கியராயும், பணிமாதராயும், கிளி, பூவை, முதலியவாயும் பிறந்துவந்து சூழ்ந்திருந்தனர். தேவரும் முனிவரும் தத்தங் கலைகளோடு அந்தணப்பிரமசாரிய மாணாக்கராய் வந்து, பிரமவடி வராகிய மண்டனபண்டித பட்டாசாரியரையும் அவர் பன்னியை யும் பணிந்து பணிசெய்திருந்தனர்.

கருமவீரராகிய அம்மண்டன பண்டிதர் நித்தவாசாரச்செல் வம், வேள்வித்தீக்காரியம், வேதமோதல், ஓதுவித்தல், மந்திர தீக்ஷை செபம் முதலிய புண்ணிய வினைவலியால் சாபமனுக் கிரக முதலிய மகிமைகளை யடைந்து, பரோபகாரத்தில் வல்லவரென்று யாவருங் கூறத் தருமவடிவராயும், சத்தியவிரதராயும், கல்வி யாற்ற லுடையராயும் ஆரிய வர்த்தாசிரியன் என்னும் பெயர் பெற்றவராயும் ஒப்பற்றவராயு மிருந்தனர். தருமமீமாம்ஸை முத லிய அங்க நூல்களில் அவர் விதித்த வொழுக்கமே கருமவாதி யரனைவர்க்கும் ஒருதலைவிதியாக விருந்தது. அவர் வாழ்க்கைத்

துணையாகிய வுபயபாரதிதேவியார் நீறுபூத்த நெருப்பைப் போலத் தூர்வாசர் சாபத்தால் மறைப்புண்டவரா யிருந்தும் தன்னியற்கையான ஞானவலிமையோடு மந்திரத் தலைவியாகிய தமது கல்விப்பெருக்க மப்போதைக்கப்போது வெளிப்படுத்திக் கடைக்கணோக்கம் ஒன்றனுனே மாணாக்கரனைவர்க்கும் முயற்சித்துன்பமின்றிச் சகலகலைகளும் உணர்தரவனுக்கிரகித்துக் கற்பகக்கொடிபோல விளங்கி, விருந்துபசரித்தல் முதலிய இல்லொழுக்கத்தினைக் காமதேனுப்போல அவரவர் கருத்தறிந்து அறுசுவையுண்டி யூட்டுவித்து, யாவருக்கும் அன்னைபாகத்தான் தன் கொழுநரை ஒருமைப் பாவனையால் பணிந்து கற்புக்கரசியாய்ப் பெருமையுற்றிருந்தனர்.

அத்தம்பதிய ரிருவருஞ் செய்த வேள்விகளும், நோன்பும், கொடைமடமும், பிறவுமாகிய நல்வினைகளனைத்துமே வசிட்டர், பராசரர், கௌதமர், வியாசர், ஜைமினிமுதலிய பெருமுனிவரிற் கூட்டங் கூட்டமாக வந்து இருத்துவிக்குரிமை கொண்டு அவ்வினை கடவுட்பக்கலாகும்படி செய்து அவராலுபசரிக்கபட்டு அவரிடத்துத் தயை யுடையவாயிருந்து செல்வதாயின.

இஃதிங்ஙனமாக, சங்கரர் அவதாரத்திற்கு முன்னரே, சிவனருள் கலந்த பிரமவிஷ்ணு உருத்திரராகிய வுலகபாலகர் கலைகள் கலந்த ஆதிசேடன் தேவகாரியப் பொருட்டு, கோவிந்த பகவற்பாதரென்னும் பெயரோடு அவதரித்து, சுகமுனிவர் மாணாக்கராகிய கௌடபாத மந்திரபட்டாரகரை யடைந்து பிரம வுபதேசம் அருளப்பெற்று, பதஞ்சலிமா முனிவர்பால் வியாகரணம், யோகம், வைத்தியம் முதலிய கலைகளை ஐயமுதலிய முக்குற்றமறத்தெளிந்து நருமதை யாற்றங்கரையில் "அநந்தயோகத்தவ" நிட்டையில் எழுந்தருளி யிருந்தனர்.

இனிக்கலிபுருடன் கூறும், மன்மதன் கூறுங்கூடி யுலகத்தில் அமரகன் என்னும் அரசனுப் பிறந்து, காமநூல், பேததந்திர நூல், தண்ட நீதிநூல், இவற்றுட் சிறந்தோனுய் வாச்சியாயன தந்திரம் முதலிய காமநூல்களை ஓதற்பரம்பரையில் அனுட்டாத்தோடு நிகழச் செய்திருந்தனன்.

மேற் காலவயிரவர்கூறும், அதர்வணத்தின் கூறும், தந்திராகமசாபர தேவதையின் கூறும், சைவவைஷ்ணவ பாரிடதர்கூறும், பாசுபத காபாலிகசௌரகாணுபத வைஷ்ணவசாத்தாதி மதவாதியராகப் பிறந்தன. குபேரன கேரளநாட்டு அரசனுகப் பிறந்தனன். வீராவளியின் கூறுமந்திர வாதியராகவும், நவக்கிரகங்களின் கூறு காலவாதியராகவும், அரக்கர் சார்வாகராகவும், அசுரர், சமணர் புத்தர் முதலியராகவும், தானவர், காமக்குரோதர்கள் துவை

தார்களாகவும், முன்னர் கௌதமர் ததீசி முதலியவர்களால் சாபமுற்றிறந்த வேதியர்கள் பாஸ்கரபட்ட ஸ்ரீ ஹரிட, அபினவகுத்த ராதியராகவும் பிறந்தனர். விடுவச்சேனர் முதலியோர் கூறு வைகானச பாஞ்சராத்திரத் தலைவராகப் பிறந்தனர்.

இவ்வாறு, தேவாசுரக் கூறுபாட்டினால் ஈச்சுராக்கினைப் படி பிறந்த மகாபுருடரனைவரும் பரவி மாணாக்கரைச் சேர்த்து வேதக்கருத்து வெளிப்பட பலவகை மதவொழுக்கங்களை வெளிப்படுத்திச் சிலர் பகையாலும் சிலர்பத்தியாலும் சிவமயப்பட்ட கருத்தினராயிருந்தனர். இங்ஙனம், பரிவாரத்தொடுங் கூடிய உலகப் பெருந்தலைவர் நிலவுலகத்தில் திருவவதாரஞ் செய்கையில் சேது முதல் இமயவரையுமுள்ள கருமபூமி தேவருலகத்தோ டொப்பப்புண்ணிய மணம் வீசத்தொடங்கியது.

மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

# நான்காம் அத்தியாயம்.

## சங்கரர் பாலலீலை.

பின்னர், இடபாசலத் திருப்பதியின் அகரத்துள்ள வேதியர், சுயம்புலிங் கேசருக்குக் கார்த்திகைத் திங்களின் இரவருச்சனையில் அர்ப்பித்தவில்வ வுருத்திராக்க மாலிகைகள் சிவகுருமகனாகிய சங்கரர் கண்டத்திற் சூடப்பட்டவாயின. அது கண்டைய முற்றதனால் அவ்வேதியர் ஆலயத்தை யடைந்து பார்க்குமிடத்து, அவை, அச்சுயம்புலிங்கேசன் திருமேனிமே லில்லாமையால் வியப்புற்றனராய் அம்மூர்த்தியே இவ்விளைய பெருந்தகைபோலு மென்றெண்ணிவந்து அட்டாங்க முறைப்படி வந்தனை வழிபாடு செய்தும், மீட்டும் அக்கடவுள் திரோபவத்தால் மறைப்புண்டவர்களாய் அவ்வுண்மையை மறந்தும் வந்தனர்.

மற்றொருநாள் அச்சிவகுருவென்பவர் மனையில் "சகத்திர வேதிய சந்தர்ப்பணை" என்னும் விரத நடந்து வருகையில் ஓர் சுழல்காற்று மழைநேர்ந்து தெய்வக்குழவியாகிய சங்கரர் ஆகாய வெளிக்குத் தூக்கிச் செல்லப்பட்டார். பின், அங்ஙனம் கொண்டு போகப்பட்ட குழவி யேதாயிற்று என்பது ஒருவர்க்கு முணரப் படாமையாக விருந்தது. இங்ஙனம் செய்வகையில்லாத அத்தெய்விகச் செய்கை நோக்கிச் சிவகுரு முதலியோர் பயபத்தியோடும் இடபாசலேசனைத் துதித்து, திசைகடோறுந்தேடுவாராயினர். அப்போது, தேடிச்சென்றாருள் எட்டுத்திசைக்க ணிருந்தும் வந்த வேதியர் எட்டுக்குழந்தைகளைத் தந்தனர். அக்குழந்தைகளை நோக்கி யுண்பதற்கு வந்திருந்த வேதியர்கள், நமது ஒரு சங்கரன் எட்டு மூர்த்தியா யுள்ளவாறென்னென்று வியப்புற்றிருக்கையில், மனைத்தலைவர் அக்குழவி யனைத்தினையும் ஓரிடத்து வரிசைப்பட விருத்தி "வேதியசந்தர்ப்பணையை" முடித்து, ஆசிமொழி அக்ஷதைபெற்றுக்கொண்டு இருக்கும்போது, குருவாயூர் என்னும் தலத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் ஆலயத்தில் சின்முத்திரை தரித்த கையினராய் விளங்கிக்கொண்டிருந்த சங்கரராகிய சிறுமைந்தரை நோக்கி முன் கண்டிருந்தாருட் சிலர்கொண்டுவர மனைக்கணிருந்த எட்டுக்குழவி வடிவுமுமறைந்து விட்டன. அதுகண்ட வேதியர்கள் அட்டமூர்த்தியும் ஒருவனேயன்றோ வெனத்துதித்தனர். அதன் பின், அருக்கிய நோக்கத்தோடு யோகத்திருந்த அம்மைந்தருக்குக் காப்புமுதலிய மங்களாசரணை செய்து நமது புண்ணியப்பயனாற் குழவி சுகமாகவந்து சேர்ந்ததென்று களித்திருந்தனர். அன்றிரவு கனவின்கண்ணே பிரகற்பதி சார்வாகர்—உலகாயிதர் முதலியோர் உத்தியிரகசியத்தையும், வாயு துவைத முதலிய விவகார விரகசியங்களையும், ஸ்ரீகண்ணன் சுத்தாத்துவித விரகசியத்தையும் அம்மகவுக்கு உபதேசித்து அனுப்பியதாகக் கண்டவர்

கள், அப்பகற்போது, நனவிலேகண்ட காட்சிக்கு ஒத்தவாறுதல் கண்டு வியப்படைந்தனர்.

அப்புறம், அச்சங்கரச் சிறுமைந்தர் இரண்டாமாண்டில், அகரமுதலிய எழுத்தின் வடிவங்களைச் சொல்லத்தொடங்கிய அளவிற்றானே மிகுந்த நாவன்மையுடைய வேறுவாதியர் நாவானது இருந்தாங் கிருந்தபடி யடங்கிவரக் கண்டனர். அம்மைந்தர் நன்றாகச் சிறுமொழிகூறத் தொடங்கியவளவில் அவ்வாதியர் நாக்குழறுதலை யடைந்தனர். எல்லாவிடயங்களையும் கேட்டளவிலே தானே நன்குணர்ந்து தெரிவிக்கத்தக்க அம்மைந்தர் மூன்றாமாண்டிற்றானே உலக வழக்கத்திலுள்ள வைதிக லௌகிக பாஷைகளெல்லாவற்றினையும் கசடற விவரிக்கத் தொடங்கினர். அதனைக் கேட்டவரனைவரும் ஈது என்னை? ஆச்சரியமென்று அசைவற்ற வரேயாயினர்.

மற்றொருநாள், இடபாசலேசருக்குத் திருத்தேர்விழா நடந்ததாகஅதனை நோக்குவோர் யாவர்க்கும் அத்தேரின்மீதே உச்சவைராத்திகோலம் கண்ணுக்குப் புலப்படாது இப்பால சங்கரரே தோற்றியவாறாகவிருந்தது. பின்பு ஒவ்வொரு கூட்டத்துள்ளும் இச்சிறுவரே யிருக்கக்கண்டனர். அக்கால், இஃதொரு சித்தபுருடக் கதையாகவிருக்கின்றது என்றசெய்தி எங்கும் பரவியது.

அப்போது, அவ்விளவேனிற் பருவத்திற் சிவகுரு தீக்ஷிதர் வேள்வி செய்தனர். அவ்வேள்விச்சாலையில் பதினாயிரம் அந்தணர்கூடி வேதசாத்திரப் பிரசங்கம் நடத்தியிருந்தனர். பண்டசாலையுள் காய்கறிக்குவைகளினருகே ஒட்டஞ்செய்து ஆடிக்கொண்டிருக்கும் சிறுமக்கள் கூட்டத்துள், ஒருவருக்கொருவர், இப்பூசணைக்காயினுள் எத்தனைவித்து, இக்கத்திரியுள் எத்தனைவித்து என்று வினவிச்சோதித்தறிந்து தோல்விவெற்றிகூறி விளையாடுமிடத்து அவரவர்க்கு வழக்குண்டாயவர்கள் இப்பால சங்கரரை வினவ "உலகவித்தின் கணக்கினையே உலகமுற்றுமாக நினைக்கலாம்" என்று கூறினர். அதனைப்பொருள் படுத்திக்கொள்ளவறியாத அச்சிறுவர்கள் அங்குகூடி யிருந்தவித்துவான்கள் பிரசங்கித்திருக்கும் அவைக்கண்வந்து கூறினர். அதுகேட்ட அவ்வேதியர் பொருள்தோன்றாது அக்காய்களைத் தருவித்துச் சோதிக்குமிடத்து, ஒவ்வொன்றனுள் ஒவ்வொன்றே யிருக்கக் கண்டு வியந்து, அச்சிறுவர் மொழிக்கு உரையிதுவேயென்று துணிவாகக் கொள்வது அருமையவாக, வெழுதிய சித்தரப்பாவைபோலும் அசைவற்றிருந்தனர். அதன்பின் அத்தெய்வச் சிறுமைந்தர் அந்தந்தக்குரவர்பால் அவ்வாறுதிங்களுள் வருந்த முயற்சிகளின்றிச் சகலகலையும் பயின்றனர். இயற்கையிற் முமுற்று முணர்ந்தவராயினும், மானுடயாக்கை கொண்டதற் கேற்ப

வுபநயநச் சடங்குமுற்றி குருமுன்னிலையானே புணரும் வரையில் வேதத்தை வாயினாலுங் கூறாதிருந்தனர். அச்சிவலீலாசங்கரராகிய பெருஞ்செல்வரது உத்திச்சொல்லிடிகள் கல்விச் செருக்கினர்களாகிய மதவாதியர் வாதமலைகளைப் பொடிபடுத்திவந்தன. சொற்சித்தியுடைய அச்சிறுவர் மொழிந்தவாறு கண்கூடாகப்பலித்து வருதனோக்கி விருத்தர் யாவரும், இவர் முதியராயவழி யென்செய்ய வல்லவரோ வென்று ஆச்சரிய முற்று மிகநன்கு மதிக்கலாயினர். கண்ணன் இளமைப் பருவத்துச் செய்த சிறு விளையாட்டினைப் போலும் இவ்வற்புதக் குழவியின் விளையாட்டும் எவர்க்கு மின்பம் விளைப்பனவாயும், சத்தமுள்ளனவாயும், கேட்பார்க்கு ஆக்கம் தருவன வாயுமிருந்தன.

## சிவகுருதீக்ஷிதர் கதியடைதல்.

அம்மூன்றாமாண்டின் முடிவில் தந்தையாய சிவகுரு தீக்ஷிதர் அப்பால சங்கரற்கு நன்னாளில் மயிர்வினைக் கருமமுடித்துப் பெருவிழாக் கொண்டாடினர். உடனே விருத்தராகிய அவ்வேதியர் தமது ஊழ்வினை முடிய வாழ்நாட் குறைவுற்றதை நிமித்தங்களாலுணர்ந்து, அம்மகவுக்குத் தாஞ் செய்ய வேண்டுவதாகிய உபநயநச் சடங்கினைச் செய்து சுத்தனுக்கு வதற்குக் காலம் போதாதென்று திடம்பெற வறிந்து, எல்லாமுணர்ந்த அச்சிறுவர்க்குத் தாம் உணர்த்தத்தக்க தொன்றுமில்லை யாயினும் குருபரம்பரை நிலைபெறச் செய்தலின் பொருட்டுத்தானே உபதேசிக்கத் தக்கதனைச் "சத்தியோதீக்ஷை" விதிப்படி அப்பொழுதே தீக்ஷித்து உபதேசித்து முன்னடத்தத் தக்கனவற்றைத் தமது தரும பத்தினியாகிய ஆரியாம்பைக்குத் தெரிவித்து, முடிப்பன முடித்தவராய் முறைப்படி தமது யோகத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்குச் செய்வன செய்து நெடுங்காலம் பழகிவந்த சிவயோக சாதனையால் துறக்கக்கதி பெற்றனர்.

அதன்பின் அச்சதிதேவியாரும், உயர்ந்தோர் சுற்றத்தினர், அறிஞர் முதலியவர் கூட்டத்தோடு சுரௌதவிதிப்படி செய்யத்தக்க உத்தரக்கடன் கழிக்கவேண்டி அரணிகடைந்து, தீக்கொண்டு கொழுநனாணையாலும், கடவுள் வலையாலும், மகவாசையாலும் கட்டுண்ட வராய்த் தெய்வச்செயலைக் கடக்கமாட்டாது இராமன் தாயாகிய கோசலைத் தாய்போலும், தான் கருதியவாறு உடன் கட்டை யேறுத லொழித்து, தான் செய்யுங் கருமங்களைத் தானும் ஞாதியராற் செயவிக்கத் தக்க கருமங்களை யவராலும் நடத்தியிருந்தனர்.

அக்கால் பாலசங்கரர் ஓர் தருப்பையைக்கிள்ளி அடுக்கியிறகின்மே லெறிந்த வளவில் ஓர் நன்மண முண்டாய் அத்திசை முழுவதும் கமழ்வுற்றது. அவ்வருடமுற்றும் கூடிய வகையி

லெல்லாங் குறைக் கருமங்களைச் செய்து கழித்துப் பிதிர்வேள்வி முற்றிவிட்டது.

## சங்கரர்க்கு உபநயந முதலிய நடத்தல்.

பின்பு, விரதவுபவாச நியமங்களோடு தவஞ்செய்து தீக்ஷையுடைய வரா யிருக்கும் அவ்வாரியாம்பை உத்தராயணத்துள் நல்லோரையில், ஞாதியர், விருத்தர், வேதமுணர்ந் தவர்களுமாகிய வேதியரோடு அச்சங்கரச் சிறுமைந்தருக்குத் தக்கபடி உபநயநச் சடங்கினைச் செய்தனர்.

பிரமவடிவராகிய அச்சிறுவர் பிரமத்தை யுணர்த்துவதாகிய பிரமவுபதேசத்தாற் பிரமானுபவம் பெற்று இன்பவடிவினரா யிருந்தனர். சூரியன், அக்கினி, மாதா, இம்மூவரையும் வணங்குதல் நியமமுடையவராய்க் குருமட மடைந்திருந்து, பிரமசரிய வொழுக்கத்தோடு விதிப்படித் தன் சாகைமுதலிய வேதசாகைகளையும், வேதத்தலைகளையும் குருவுரை வழிமுறைப்படி முற்று முடியுமளவும் சிலநாளிற்றானே அவ்வச்சாகை யுபாத்தியாயர் முன்னிலையி லோதியுணர்ந்து அவரவர் விரும்பிய தக்ஷிணைகளைத் தெய்வவுதவியாற் கொடுத்து அவராசி மொழிகளைப் பெற்று "மந்திரோபாகருமம், விரதோச்சர்ஜனம், பிரமசரிய தீக்ஷை" முதலியவற்றால் மந்திரங்களைச் சத்தியுடையனவாகச் செய்து சித்தி பெற்று, அம்மந்திரங்களையும், அவற்றின் பொருளினையும், அவற்றைச் செலுத்தும் வகைமைகளையும், இரகசியங்களோடும் முழுவதும் நன்றாகவுணர்ந்து நிபுணராய் எல்லாக்கல்வியும் கரை கண்டவராயினர்.

உச்சிமார்த்தாண்ட னொளியேபோலும் ஆற்றுவதற்கும் ஒழிப்பதற்கும் அருமையுடையாயிருந்த பிரமவொளி, அஞ்ஞான விருளினைத் துரந்து நல்லோர் பார்வைச் சக்கிரவாகப் புட்களைத்திருத்தி செய்திருந்தது. முஞ்சியும், பிரமதண்டமும், மான்றோலும் புனைந்த அச்சங்கரமாணி வாமன மாணியேபோலும் யாவரானும் பூசிக்கப் பெற்றவரா யிருந்தனர். அகரத்துள் "பிக்ஷாசரியம்" செய்துவரும் பாலசங்கரர், தாருகவனத்தும் தேவரில்லத்தும் பயிக்க நாடகஞ்செய்தருளிய சிவசங்கரப் பிரானைப்போலும் கண்டார் கண்களைப் பிணிக்கும் பெருந்திரு வுடையராக விருந்தனர். பின் அம்மைந்தர் சாமகானஞ் செய்திருக்கையில் எவ்வுயிர்க்கருத்து முணர்ந்தவரே யாதலின் விலங்கு பறவை யூர்வன முதலியஎல்லாவுயிர்களும்கேட்டுக்களிப்புற்றிருந்தனவேயன்றி, தாவரமனைத்தும் இசையனுகரணத்தால் சத்தப் பிரமமயமாயிருந்தன.

அச்சங்கரப் பிரமசாரி குருமடவாசியாய் வேதமோதியிருக்கையில், ஓர்நாள் ஒருசாலைமாணாக்கர், உடன்கற்போ ரிவர்களோடு

பிச்சைப்பொருட்டு அயாசித தீக்ஷிதர் என்னும் ஓர் வேதியர் மனைக்குட்சென்று அங்கு அம்மனையாட்டவரைக் காணப் பெருமை மையால், "பவதி பிக்ஷாந்தேஹி" என்றிரந்தனர், அப்போ தம் மனைக்குளிருந்த இல்லறக் கிழத்தி நற்பாத்திரத்துத் தங்கள் பயி க்கத்தை உதவப்பெறாத குறைவுக்கு வருத்தமுற்றுக் கிடைத்த தோர் நெல்லிப் பழத்தினைப் பத்தியோடு தந்தளித்து சிறுமைப் பட்ட நெஞ்சோடு மின்சொலுரைத்தலும், அச்சித்தச் சிறுவரா கிய சங்கரர் அக்குடும்பத்துத் தயவுடையவராய்த் தாம் எல்லாம் வல்லரேயாயினும் கொண்டவடிவத்திற் கேற்ப அப்பொழுது, ஸ்ரீ தேவி மந்திரத்தோடுங் கூடிய "கலியாண விருஷ்டிஸ்தவ" மென்பதனைச் செய்து மஹாலக்ஷ்மியைத் துதித்த அளவில் அவர் அங்ஙனே வெளிப்பட்டுக் கருதிய தென்னெனவினவ, இம்மனையவர் வறுமையைத்தாரத்தி யருளுகவென்று கூறலும், முற்பிறப்பிற் றருமதானஞ் செய்யாதவர்க்கு இப்பிறப்பி லெவ் வாறஃதுறுமென்று அவருரைப்பக் கேட்டு, எல்லாமுணர்ந்த அம்மே! இம்மையிற்றானே பெரும்புண்ணியஞ் செய்தார்க் கப் போதே பயனுண்டாமன்றோ என விண்ணப்பித்து "காருணிய பூர்ணஸ்தவம்" என்பதனைச் செய்து, இம்மனை இல்லறக்கிழத்தி நெல்லிப்பழத்தினைப் பிச்சையாக வளித்த பயனையேனு மிப் போது தரலாகாவோ எனவினவலும், அத்தேவியார் திருவுள முவந்து அங்ஙனே அம்மனையில் அறுபது கலம் பொன்னெல்லி க்கனி நிரம்பும்படி பொன்மழை பெய்வித்து இச்சங்கரரை வாழ் த்தி மறைந்தனர். அம்மனையில் பொன்னும் மனையவருளத்துக் களிப்பும், கேட்டாருள்ளத்து வியப்பும் இடஞ் சாலாவெனப் பொங்கி வழிந்தன. அதுபோல் பொருளிச்சையே யுடைய முழு வுலகியர்க்கும் இச்சங்கரரிடத்து மிகக்களிப் புண்டாயிற்று. கண் டவரெல்லாம், ஆ! இஃதென்னை? உலகத்துள் ஓர் வில்வத் தழை யினையேனும் பத்தியால், சங்கரனுக்கெனப் பார்த்திவலிங்கமீது சாத்திய தரும சீலர்க்கு எல்லாநலனு முண்டாவ தாகக்கண்கா ணவந்த சங்கரனார் கையில் ஓர் நெல்லிப்பழ மென்ப தென்னை? சுத்தமனத் தோடுங் கொடுத்த அப்புண்ணியர்க்கு அக்கணத்தே யவ்வளவு பொன்னெல்லி கிடைப்பது வியக்கத் தக்கதன்று என் றனர். உடனே அச்செய்தி யுலகெங்கும் பரவிநெடுந்தூரத்திலிரு ந்துபலமாந்தர் அப்பிரமசாரியின் தரிசனைக்குவரத்தொடங்கினர்.

## சங்கரர் ஒழுக்கம்.

இங்ஙனமாக பிரமசரிய விரதத்தோடு ஏழாமாண்டிற்றானே வேத சித்தியை யடைந்து, அறுபத்துநான்கு கலைகளையு முற்று முணர்ந்து, குருமடத்திருந்து தம்மனை யடைந்து, வேதம், அக் கினி, சூரியன், தாய் இவர்களை நாடோறும் வழிப்பட்டு, ஒப்பற்

று தருமவடிவ ராகிய இச்சங்கர மாணி வெண்ணீறு உருத்திர சாதனம் பூண்டவராய், அக்கமணிசெப வடமுஞ் சின்முத்திரை யுந்தரித்த கையினை யுடையவராய், வேதமுதலிய கலைகளின் உரைவிரித் தலாகிய வாக்குச் செல்வத்தை விளக்கி நிற்கையில் வட வாலிருந்த ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தியாகிய பரமாசிரியனார் மௌனம் விடுத்து இங்குவந்து உரைத்திறம் விளக்கி நின்றனரோ என்ன விருந்தனர். பொருள்களின் திறத்தினை யாராய்தலாற்காமத்தினையும், பொறாமையால் வெகுளியையும், திருத்திக்களிப்பினால் தேட்டச் சிற்றியல்பின் உலோபத்தினையும், பிறரைக் கண்டவழி அவர் குணங்களையே தேர்ந்துகொள்ளு மியல்பினால் ஆணவத் தருக்கினையும், வென்று, காமமுதலிய பகைகடந்த பேரின்பப் பேறுநுகர்ந்து, தேவரையும், அந்தணரையுங் களிப்பிக்கும் நிலகற்ப தருவென்ன யார்க்குமினிமை செய்வாராயிருந்தனர். உலகு தோன்றியது தொட்டிதுகாறுமித் துணையடக்கமறிவுடையார் ஒருவர் மானுடப் பிறவியிலிருந்தவாறு தோற்றிற்றில்லை. மேருவோடொத்த மலை, இல்லாவாறு போல, இவரோடொத்த கலைவல்ல அறிஞரில்லை. வித்தையால் விநயமும் விநயத்தால் வித்தையும், இவ்விரண்டாலு நல்லியல்பும், அவ்வியலாலிவரும், இவரால் இவர்மரபும் விளங்கிற்று. நயந்தவினிமையதாயாழ்ந்தவாய்மைப் பொருளினையுடையமொழி, உபகாரச் சுத்தவொழுக்கம், தீமையற்றவெண்ணம், மறுக்காப்பொருளுணரறிவு, பொருட்காரணவுணர்ச்சிவலி, ஆற்றலொளி நிறமுடைய தேகம், சமமுதலிய அறுவகையமைதி யுடைமையிற் சான்றோனாகிய மகனை நோக்குதல், தவத்தான் மெலிந்த தாயாகிய அவ்வாரியாம்பைக்குத் தலைவரையிழந்த துயரொழிக்கு மருந்தாயிற்று.

### சங்கரர்க்குத் தூர்வாசர் அருளல்.

மாஹேச்வர் அமிசைத் தோற்றத்திற்குப் பிறதெய்வங்களினருளால் ஆவதென்னுளது, எல்லாங் கைவந்த பெரியோனுக்கு ஏனைய முனிவராதியரால் பெறும் பேறென்னை யுள்ளது? ஆயினும் உலகியல் குறித்து, எல்லாத்தெய்வபத்தியும் பெரியரைப் பணிதலும் உடனே வளர்ந்து வருகையில், உக்கிர மஹேச்சுர அவதாரராகிய தூர்வாச முனிவர் தமது கூறுமிளவனுமென்ன நின்ற இப் பிரமசாரியிடம் வந்து எல்லாவித்தையிலுந் தலைமையளித்து அட்டாங்க யோகத்தை யுபதேசித்துத் தந்தவத்திறனையுமிவர்க்குக் கொடுத்து வாழ்த்திச் சென்றனர்.

### சங்கரர் சித்தியாடல்.

மற்றொருநாள் பட்டினி விரதங்களான் மெலிந்த விருத்தையாகிய இவர்தாய் யாற்றுநீராடச் சென்றுவருகையில் பெருங்

கோடைக்கு ஆற்றாளாய் மிகவருந்துஞ் செய்தியறிந்து மகனாகிய இம்மாணிசென்று நீருந் தாமரைமலருந் தந்து அவரைத்தேற்றி ஏனைய வேதியரோடு அவரை யுபசரித்து மெத்தென மனைபுகுத்திப்பின்னரவ்வாற்றினைத் தம்மகரத்தின்முன் தருவதற்குளெண்ணி, வசிய ஆகருடணபீச வெழுத்துக்களோடு கூடிய "மஹாபகாஸ்தவம்" என்பதனைப்பாடித் துதித்தளவில். அந்நதித் தெய்வமுன்றோன்றி நாளையுதயத்து நின்னெண்ணம் முடியுமென்று கூறிச்செல்ல, மறுநாட்காலையில் அப்பார்ப்பனச் சேரிக்கு அணித்தாக நீளிடையிருந்த அந்தயாறு கிருஷ்ணனாலயத்தை யுரிஞ்சிக்கொண்டு பெருகிச்சென்றது. அதனைக்கண்டார் யாரும் வியந்து இச்சங்கரர் ஆற்றலுணர்ந்து துதித்துக் களிப்புற்றிருந்தனர். ஆரியாம்பைத் தாயும் தம் விரதமிடையூறு அடையாது முற்றுப்பெறச் செய்த மகனாரை யுவந்திருந்தனர்.

பின் அந்தமலைநாட்டில், பெருமழை, மழையின்மை, நோய், முதலிய துன்பங்களின்றி முன்னிலும்சிறந்த நன்னிலைமை மேன்மேலு முண்டாகக் கண்ட சத்தியவன்மன் என்னு மரசன் ஏதுவாராய்ந்து, இச்சங்கரர் காரணமாவதறிந்து, தனக்குப் புதல்வர்ப்பேறில்லாமையின் இவரைத் தன்னகருக்குத் தருவித் துபசரித்து வரம்பெறவேண்டி, அழைத்து வரும்படித் தன் அமைச்சன் மதிபூடணனைச் செலுத்தினான். அவனும் வந்து அன்போடுமிவரைப்பணிந்து வருமாறு வேண்டுதலும், அவாவற்ற அம்மாணி, அவனை நோக்கிப் பிச்சைச்சோறும் தோலும் சாலுமென்றிருக்கும் எமக்கு அரசவைப்பேறு என்னைசெய்ய, அரசன்யாவரையுந் தத்த மொழுக்கந் தவறாதவரைப் புரப்பானாயி னவற்கது எல்லா மேன்மையையுந் தருமென்றுகூறி அனுப்பிவிட்டனர் அவ்வமைச்சனுஞ் சென்று அதனை யரசனுக்கு அறிவித்தனன். அதுகேட்டுப் புலமை சிறந்த அவ்வரசன் றான்செய்த மூன்று நாடகத்தினையும் பதினாயிரம் பொன்னையும் கொடுவந்து இச்சங்கரர்பால் கையடையாக வைத்துப் பணிந்து நிற்றலும், அக்கோமகனை வாழ்த்தி இந்நூல் இம்மலைநாடொன்றின் கண்ணே வழங்குகவெனவும், அப்பொருளை வேள்வித்தீ யந்தணர்க்கே உதவுக எனவும் கூறிப்புதல்வர் வேண்டிய அம்மன்னனுக்கு நன்மக்கட்பேறுண்டாம்படி யோர் வேள்விக்கருமத்தினை யுணர்த்திச் செலுத்தினர். அவ்வரசனும், அவ்வாறேபுரிந்து புதல்வர்ப் பேற்றுக் குருபத்தியால் தன்னாடு முழுவதும் நல்லொழுக்க நிலைபெறக் காத்து வந்தனன்.

நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

# ஐந்தாம் அத்தியாயம்.

அக்கால், இச்சங்கரரைத் தரிசிக்கவந்த பல நாட்டினர்க்குந் தக்கவாறு பயன் உண்டாயின. இவர் துதிசெய்த நூல்களைப் பத்தியோடு மோதுவோர்க்கட்கு இட்டசித்தி யுண்டாயின. எந்நாட்டிற்கும் துன்பம், தேவரிடையூறு, நோய், பூதவேதாளக்கொடுமைகள், இயற்கை வேறுபாடு, வறுமை, முதலியன வுண்டாகுந்தோறும் இச்சங்கரரை நினைத்த அளவின் அவையொழிந்துவந்தன. இவர் சொல்லளவிலே மாந்தற்குப்பொன் மணிவைப்பு முதலிய கிடைத்துவந்தன. ஓது வோர்க்குத் துன்பின்றி எவ்வகைக் கலைகளு மினிதுபெற வருள்செய்து வந்தமையால் பரம்பரை விளங்கியுண்மையான நூலும் அறிவுமுள்ளன வென்னும் நம்பிக்கையுமுண்டாயின. மந்திரம், தெய்வம், தவம், இவற்றின் பெருமையும், அருமையும், உண்மையும் யாவர்க்கும் விளக்கமாய் வெளிப்பட்டன. இவரது புகழும்பரவுற்றது.

## சங்கரர்க்கு முனிவர்கள் வந்தருளல்.

பின்பு, உபமன்னியர், ததீசி, கௌதமர், அகத்தி யருமாகிய இந்நால்வரும் இவரைக் காணவேண்டிவரலும், அவர்களை விதிப்படி அருக்கிய முவலியவற்றோடுபூசித்து உபசரிக்க, இச்சங்கராமணியை அவர்கள் நோக்கி சிவகலைபொருந்திய வாறு குறித்து வியந்து தத்தந் தவவண்மையை யளித்து, உலகியலை வேண்டித் தனித்தனி கருணைசெய்து அகத்தியர், சிதம்பரரகசியம், மந்திரலய ஹடராஜயோகங்களையும், உடனே சித்திகளைப் பெறுமுபாயங்களையும், உபமன்னிய முனிவர் சிவதத்துவத்தினையும், ததீசி சிவமான்மியத்தினையும், கௌதமர் தேவகரும விரகசியங்களையும் உபதேசித்தனர். எல்லாமறிந்தவிராயினும் பரம்பரை விளங்க அவ்வுபதேசப் பொருளைப் பெற்றுக்கொண்டு, அதைப்பயன்படச் செய்தலையே குருதக்ஷிணையாகக் கொடுத்து மரபு விளக்கி வந்தனர்.

அப்போது, மகனுர்க்கு மணஞ்செய்விக்குங் கருத்தால் சுற்றத்தினரோடுஉசாவியிருந்த தாயாரானவர்தமது மனைக்குப்பெரியர்வந்தார்கள் என்றசெய்தி கேட்டுவந்து அம்முனிவர்சந்நிதியிற் பணிந்துபூசித்து ஐயரே! இம்மகவுக்கு மணம் புணர்த்திச் சந்ததியுண்டாகி யென்மரபு விளங்கிப் பிதிரர்க்கு முத்தியுண்டாகவேண்டுமென்று எண்ணினேன். அதனுல் அது என்று முடியுமென்பதனை யெல்லாமுணர்ந்த நீவிர் கருணை செய்தருள்கவென்று விண்ணப்பித்தனர். அதுகேட்டு அவருள் அனைவருடன்பாட்

டாலு மகத்தியனார் கூறுவர். தாபதத்தலைமகளே! பலவகைப்பட்ட பழம்புண்ணியம் பழுத்து, இம்மகன் கடவுளே யென்னப் பிறந்துள்ளதே மரபுவிளங்கிய வாறன்றோ? கௌசலை, தேவகி போலும் நின் பிறப்புப் பெரும்பயன் பெற்றதாயிற்று. இவரானே நின்பிதிரர் யாரு நற்கதிபெற்றனர். உலகமுழுவதும் கடவுண்மக்களே யன்றோ? மேல் நடப்பதனைப்பற்றி நீரேன் கவலைப் படுகின்றீர்? நீர் எண்ணியவாறெல்லாம் முடிவுறாது. தேவரகசியம் எவ்வாறோ? கடவுட்டிருவுள்ளப்படி நடக்குமென்னுந் துணிவொடு இக்கருத்தினைப் பற்றறவிட்டுச் சிவத்தியானஞ் செய்வதே சிறந்தது. இச்சிறுவனுக்கு எட்டாமாண்டு முடிவுபெறுங் காலம் வந்தது. விரைவில் இவர் சந்நியாசம்பெற்றுப் பிறப்பினை மாற்றிக் கொள்ளில் ஆயுள் கூடிவரும் என்றனர். அதுகாறும் சும்மாவிருந்து மேற்கருமங்களைக் கூறுதபடி சன்னைசெய்து, மற்றையர் அகத்தியனாரை அழைத்துக்கொண்டு சென்று மறைந்தனர்.

அதுகேட்டு, ஆசைவிட்டவராய் மூர்ச்சையடைந்த அன்னையைச் சீதநீராலும் சிறுகாற்றாலும் உபசரித்து விருத்தராகிய சுற்றத்தினரோடும் அவர் கவலை யொழியும்படி தக்க புண்ணிய சரிதங்களைக் கூறித் தேற்றினர். அவர் கடவுள் திரோபவத்தால் அம்முனிவர் மொழிகளை மறந்து சிவபூசை முதலிய தவத்தாற் காலங்கழித்திருந்தனர்.

## சங்கரர் துறவுபூண முயலல்.

அங்கொருநாள், அச்சங்கரர் சாதன சதுட்டயமுடையவராதலால் சந்நியாசத்தினை விரும்பி, அதற்குத் தாயின் கட்டளை வேண்டியிருத்தலின் அவளை யுடன்படுத்தும்பொருட்டு உலக நூலின் கருத்தினையும், சமுசாரத்தின் பயனின்மையையும், முத்தி அடைதற்குரிய வைராக விலக்கணத்தினையும் உணர்த்த வல்ல புராண சரிதங்களைக் கூறும்படி வேதியர்களையேவி நடத்தி வருகையில் தமது கருத்தினைத் தாய்க்கு விண்ணப்பிக்க, ஆரியாம்பையும் துன்பம் பொறுக்க லாற்றாது, மகனே! ஆக்கவொழுக்கத்தினைச் செய்தபின் அன்றோ, ஒழித்தலொழுக்கஞ் செய்தல்வேண்டும். அவற்றினையும் இல்லறத்திருந்தே சனகனாதியரைப்போலும் பெறவேண்டுமென்றிச் சந்நியாசம் இக்கலியில் தக்கதல்லவென்ற சான்றோராகிய முனிவர் ஆணையைக் கடைப்பிடித்து நல்லோர் யாவரும விட்டொழித்தனர். உலகளித்த தலைவன் கருத்தும் ஆக்கவினையின்பாலதே என்பதற்கு சனகனாதியர்க்குப் பிரசாபத்தியத்திறமில்லாமலே காசிபன் தக்கனாதியர்க்குண்டாயிருப்பது யாருமுணர்ந்தபடியே. எத்துணையுணர்ந்தவரேயாயினும் தத்தம்பிதிரர்க்குக் கதியுதவாதிருத்த லாகாதென்பதற்குச்

சரற்கார முனிவர் முதலியவர் கதைகளையேனும் எண்ணிப்பார்க்கலாகாதோ? வசிட்டர் சரிதையுணர்ந்து, நீயும் அங்ஙனம் ஒழுகுதல்வேண்டும். சிருட்டி தொடங்கி இதுகாறும் நின் முன்னோரால் வளர்க்கப்பெற்ற இம்மரபுத்தரு நின்னால் முடிவுறலாகாது. உடம்பு நிலையற்றதென்பாய் மார்க்கண்டர் தவத்தால் தம்மாயுளை விருத்திசெய்து கொண்டாற்போலு நீயேன் செய்யலாகாது? நீ யுணர்ந்த வேதமெல்லாம், பல வேள்விகளைச் செய்து முடித்தாலன்றோ பயன்பெற்றவாறாம். இக்கலியில் விலக்கப்பட்டுள்ள சந்நியாச நிலைமை அதிகாரிபேதத்தாலின்று மாகலாமென நூலவால் நாட்டவல்லையேயாயினும், அச்சந்நியாசத்திற்கும் நீ அதிகாரியாமேயாயினும் அதற்கிதுவோகாலம்? என்னிறுதிக்கடனை முற்றியபின்னர் அங்ஙனஞ் செய்யலாமே யென்று கூறலும், மகனும் அவற்றிற்கெல்லாம் தக்கபடி விடைகூறி வந்தனர். முடிவில் தருமமுணர்ந்தோய்! சொற்கடக்கலாகாதே யென்ற தாய்மொழி கேட்டு, அம்மைந்தர் வாயடங்கி நின்றனர்.

## சங்கரர்க்கு நாரதர் முதலியோர் அருளலும், துறவும்.

மற்றொருதினம், நாரதரும், தத்தாத்திரேயரும், வந்து இம்மாணியால் பூசிக்கப்பெற்றுத் தனியிடத்தில் விஷ்ணுதத்துவ விரகசியங்களைப் போதித்து வைஷ்ணவ சம்பிரதாய வழக்கப்பொருட்டுச் செய்யத்தக்கனவற்றைத் தெரிவித்து வாழ்த்திச் சென்றனர். அன்றிரவே தருமராஜன் வந்து துதித்துச்சென்றனர். மறுநாளுதயத்தில் தாயாரும் மகனும் * நீராட யாற்றுக்குச் சென்றிருக்கையில் மிக வலியதோர் † முதலைவந்து இச்சங்கர மாணியின் காலைப்பற்றி யீர்க்கத் தொடங்கியது. அப்பொழுதுமிருந்த விரைவோடும் அதன் வயப்படாதபடி காலையூன்றி வைத்துக்கொண்டு தாயைக் கூவி "அம்மே சந்நியாசத்தாற் பிறவிப்பயனைப் பெறவேண்டுமென்றிருந்த யானிப்பொழுது இம்முதலைவாயி லகப்பட்டு நீரினுள்ளே துன்மரணமடைய நேரிட்டதே! சிறுபோதினுள்ளே முடிவுறுகின்றது. இப்போதேனும் சந்நியாசத்தினுக்குக் கட்டளையாலுற் கடைத்தேறுவேன்" என்றனர். அதுகேட்டு, அக்காலத்தில் நேரிட்ட தீர்க்கவழியில்லாத ஆபத்தை யொழித்துக் கொள்வதற்குத்தக்க உபாயத்தினையாராய்வதற்குச் சிறிதும் இடனின்மையால் அதிக விரைவோடும் அச்சமருட்கை யடைந்தவராய் அவ்வன்னை யழத் தொடங்கினர். அங்கே நீராட வந்த வேதியர் யாரும் "கிரகமோசன மந்திரம்"

* இந்நதியின்பெயர் "சூர்ணிப்புழை".

† அம்முதலையும் சங்கரர் சந்நியாசம் பெற்றால் தான் பிடித்த பிடியை விட்டுவிடுவதாக வாக்களித்ததாம்.

பாராயணஞ் செய்யத்தொடங்கினர். சிலர் சந்நியாசத்திற்கேனும் விரைவில் கட்டளையாகலாகாதா? என அவ்வம்மையைத் தூண்டினர். அப்போது, அசரீரிவாக்கு இப்போது தானே சந்நியாசம் பெற்றுக்கொண்டால் இன்னுமித்துணை நாள் பிழைத்திருக்கலாமென்றது. அதைக்கேட்டனைவரும் வியப்புற்றனர். அப்போது ஆரியாம்பை ஒன்றுந் தோன்றாது, மகனை யழைத்து "மகனே சந்நியாசியாகியாவது பிழைத்திடுதி" என்று உரத்துக் கூவிச் சொல்லினர்.

அவ்வாறு, தாய்க்கட்டளை பெற்ற கணமே சங்கரர் வைதிக விதிப்படி செய்யத்தக்கனவற்றை மனமொழிகளாற் செய்து மூவேடனை முதலியவற்றை யொழித்து, "பிரேஷமந்திரத்தை" உச்சரித்துப் பிரமவடிவராய் "அபயம் சர்வ பூதேப்பிய:"—எல்லாப் பூதங்களுக்கும் அபயம், என்று இரண்டு கைகளையும் உயரவெடுத்தனர். உடனே யம்முதலை அவர் காலைவிட்டுத் தன் னுடம்பினையுங் கழித்தது. கழிக்கவே யம்முதலை வடிவினின்றும் ஓர் பேரொளி ஆகாயத்தெழும்பி உருவமுற்றுப் பதினாறு வடசொற்செய்யுளால் இச்சங்கரத் துறவியைத் துதித்தது. முற்காலத்து நாரதர் சாபத்தால் சுரக்கிராகி என்னுங் கந்தருவன் முதலையாக அந்த யாற்றுள் வந்திருந்தானாதலின், அந்நாரதர் கூறியபடி சங்கரமுனிவர் பாதந் தொட்டமையால் சாபமொழிந்து தன்னுண்மை வடிவமுற்றுச் சுவர்க்கமடைந்தனன். இவ்வற்புதத்தைக் கண்டவர் யாவரும் தம்மை மறந்து ஆநந்தமுற்றனர்.

இங்ஙனம் சங்கரர் * சமுசார பந்தமொழித்து நீராடிக் கரையேறித் தாயை நோக்கி, "இனி யென்னாலுமக்காகவேண்டுவதென்னை?" என்று வினவினர். அதுகேட்ட அவ்வம்மை ஐய! நான் அநாதை யாயினும், மக்கட்பேறுடையேனென்னும் உள்ளத்தருக்கோடும் இருந்தேன். இனித்தள்ளாமை வயதிற்காப்பாரில்லையென்றும், இறுதிக்கடன் கழிப்பாரொருவரில்லையேயென்றும் கலக்கமுறவேண்டுங் காலமாயிற்று" என்றனர். அதுகேட்டு, சங்கரரும் ஒ! அன்னே! "நீரறியாததென்னுள்ளது? உமது கற்பே உம்மைக்காக்கின்றது. அஞ்ஞானத்தாற் பிறப்பிறப்புத் துன்பவெள்ளத்து வீழ்ந்து செல்லுகின்ற வுயிர்களுக்கு உடம்பெத்தனை? அவத்தைகளெத்தனை? மக்களெத்தனை? சத்திரங்களிற் சேர்ந்த கூட்டம்போலச் சிறுபோதே சேர்ந்திருந்து பிரிந்

* இது மறுபிறப்பென்பதால் அக்காலத்து **ஈச்சுரர்** இவரது சரீரத்துட் பிரவேசித்ததென்பர். ஈச்சுரன் யோனிவாய்ப்படாதவராதலாலும் கருவாசமில்லாதாராதலாலும், இத்தருவாயில் இவர் தேகத்துட் பிரவேசித்தனரென்பது தகுதியேயாம்.

தொழியும் குடும்பம் பொருள் முதலிய வற்றின்பொருட்டுத் துன்பக்கவலைக் கட்டினுள் அகப்படலாகாது. விடயங்களெல்லாம் கடனொழிந்தால் பிரிந்துபோகின்றன. உமது தேகமுள்ளதுணையும் உமக்குரிய தருமம் விடாது கடவுளைப் பூசித்திருத்தலே கடன். முன்வினைச் சேடமே உடலைக்காப்பதாக விருக்கின்றது, மனைக்கண்ணே முன்னையோர் தேடிவைத்த பொருளும் விசேடமாயிருத்தலின் அதனை யடையும் ஞாதியர் யானிருந்தாலெவ்வாறோ அவ்வாறே யும்மைக் காத்துச் செய்கடன் செய்வித்து, களிப்பித்து, முடிவினும் ஆதரித்து இறுதிக்கடன் செய்வர், பிறக்கும்பொழுதும் இறக்கும்பொழுதும் பிறர் ஒருவர் துணையின்றியே பிற்றல் உலகிய லென்றுணர்ந்தவர்கள் கடவுள் குரவனிவர்கள் துணையைப் பெற்றுத் தம்மைத்தாங் காத்தல் முறைமையாமன்றி, அந்நியர் யாரிருந்தென்னை? கவலைநோயுண்டான போது ஆராய்ச்சியே மருந்தாம்" என்று பல தேறுதல்களைச் சொல்லி, "இனி நான் போகின்றேன்" என்றார். அது கேட்ட ஆரியாம்பை புத்திரவாஞ்சையாற் பிரிந்திருக்கச் சகியாது கண்ணீர்விட்டு அருகியமொழியோடு "மகனே! நீ இந்த அகரத்துட்டானே பயிக்கஞ் செய்திருந்தால் சின்னாளுன்னைக் கண்டாயினும் ஆசைதீர்வேன், ஒருதலையாக இறுதிநாளில் நான் உன்கையானே கடன்கழிக்கப் பெற்று உன்னானே கதியடைய விரும்புகின்றேன். எங்ஙனமாயினும் இவ்விருப்பத்தினை முடித்தாற் போதும்" என்றனர்.

அதுகேட்ட சங்கரர் "தாயே! சந்நியாசம் பெற்றவன் ஓரிடம் பற்றி நின்று லவனுக்கு எனது என்னும் பெருங்கேட்டுக்கு இடனுண்டாம். அதுவுமன்றித் தான்பிறந்த வூரின் கண்ணேயிருத்தல் வெறுத்தவனுக்கு ஒருபோதுமாகாது. நான் தீர்த்தயாத்திரைக்குச் செல்வேன். ஆயின், உமது இறுதிநாளில் என்னை நினைத்தால் யான் எங்கிருப்பினும் அக்கணமே யும்மையடைந்து செய்கடன் முடித்துக் கதிபெறுவிப்பேன். இதிலையம்வேண்டாம். இன்புற்றிருமென்று" உறுதிகூறி, பெருமைப்போடு மவரை யுடன்படுத்தி ஞாதியரைவிளித்து அவ்வகரவேதியர் முன்பாக "விருத்தஞாதியரே! யான் வீடுபேற்றின் பொருட்டு முற்றுந்துறந்து போகின்றேன். என்னாற் காக்கப்படுவோளாயுள்ள இவ்வன்னையைப் பெருநிதிகொடுத்தாற்போல வும்பாற் கொடுத்தேன். நீவிர்மிகுந்த வெனது பிதிர்திரவியத்தை யடைந்து தருமந்தவறாது நன்றியறிந்தவரா யிவளைக் காத்தல்வேண்டும்" என்று கூறி அவர்களை யுடன்படுத்திக் தாய்க்குக் காவல்வகுத்து விதிப்படி தாயை வணங்கி விடைபெற்று, தாமியற்கையாகவே கைவந்த சந்நியாசியேயாயினும் சான்றோர் மர | கெடாமையின் குரவ

னருளால் முறையே சந்நியாசம் பெற்று அவருபதேச வலியால் சிறந்த தொழிலற்ற நிலைமைபெறவேண்டிய விரைவோடு புறப்பட்டு கிருஷ்ணன் ஆலயத்தினையடைந்து அன்று அவ்வகரவேதியராற் பூசிக்கப்பட் டங்கிருந்தனர்.

அப்போதருகுழவிருந்த பெருங்கல்விமாந்தர் யாருமிச்செய்தி கேள்வியுற்று அங்குவந்து "கலிதொடக்கத்தில் தரும வொழுக்கம் நன்குணர்ந்த ஸ்ரீராமன் முதலிய விருடியர் ஆராய்ந்தினிச் சந்நியாசம் தக்கதல்லவென்று விலக்கியுள்ளனர். ஆபத்தம்பமிருதியுள் "தருமமுணர்ந்தவர் செய்தகட்டளை சிறந்தது" என்றுள்ளது. கிரதுவானவர் செய்த மிருதியுள்ளும், பிரம புராணத்துள்ளும் கலியுகத்துச் சந்நியாசமாகாவென விலக்கப்பட்டுள்ளது. ஆகவே, நூலுக்கும் சான்றோராட்சிக்கும் மாறுபாடாகச் சந்நியாசம் இப்பொழுது எங்ஙனம் கொள்ளலாயிற்று? வேதவாணை "சந்ததிவிருத்திக் கயிற்றினையறுத்த லொழி" என்றுள்ளது; அங்ஙனமாகப் பிரமசாரி இல்லறம் பூண்பதன்றி சந்நியாசம் பெறுவது என்னை முறை என்று வினவினர். அதற்கச் சங்கரர், "எப்போது வெறுப்புத் தோற்றுமோ அப்போதே சந்நியாசம் பெறவேண்டும்" என்றது முதலிய அநேக உபநிடத முடிபுரைகளை எடுத்துக்கூறித் தக்கநியாயங்களோடு "சந்நியாசோத்தாரம்" என்னும் நூலினை அப்பொழுது செய்து அவரனைவரையும் திருத்தி செய்வித்தலும், அவரனைவரும் எல்லாமுணர்ந்த விவ்விளஞ் சந்நியாசி விருத்தரனைவர்க்கு மாரியனாயிருத்தலின், இவரே "சந்நியாசப் பிரதிட்டாபனா சாரியன்"—சந்நியாச நிலைநிறுத்திய ஆசிரியன், என்றழைத்துத்துதித்து வணங்கினர்.

அன்றிரவு அக்கோயிலின் கண்ணே கண்ணன்முன்தோன்றி, "நீகொண்டுவந்த யாற்றின்பெருக்கு இக்கோயிலையும் அவ்விக்கிரகவடிவையும் வெள்ளத்துட்கொண்டுபோகின்றது. இத்துன்ப மொழித்து, உன்கையானே வேறோர்நல்லிடத்து இதனைத்தாபித்துச்செல்க" என்று கூறினர். அதுகேட்ட சங்கரர், உடனே அம்மூர்த்தி வடிவு தானே நடந்து வரும்படி தோத்திர மந்திரவலியால் ஆகருடித்துக் கொண்டுபோய் நல்லதோர் துளவவனத்து "சத்தியோதீக்ஷையாக" வைதிகாகம விதிப்படிதாபித்து, அத்தீர்த்தமுதலியன நிருமாலிய தோஷமில்லாது வைதிகரும் கொள்ளத்தக்கதாம்படி வைணவ தந்திரங்களைநீக்கி நிலத்துண்மறைந்து கிடந்த வைப்புமுதலிய வற்றினைக் குறிப்பித்து, அப்பொருளால் அத்தேவகாரியம் என்றும் நடத்தும்படி அங்குள்ளார்க்கு விதித்து, அத்திசையின்கணுள்ள பசுக்களுக்குப் புலிமுதலியவற்றாலூறுபாடில்லாது பயிர் முதலிய வுண்டாய் நோயின்றி இன்பம் பெறவும், பசுப்பார்ப்பார்க்கு இன்பமுண்டாம் படியும் கருணை

செய்து அங்கிருந்து புறப்பட்டனர். அப்போது அவ்வாசிரியர் செய்த "நிர்திஸ்தவம்" என்பதனை ஓதுமிடத்தில், இன்று காறும் யார்க்கும் யாதோர் துன்பமும் நேருவதில்லை என்பது கைகண்டது.

இவ்வாறு, தாயின் அருளையும், கிருஷ்ணன் அருளையும் அடைந்து உண்முகத்துள்ள பிரமநோக்கமுடையராய் உதயகாலத்தில் நாராயணஸ்மரணையோடும் புறப்பட்ட அச்சங்கர முனிவரது உள்ளம் காமமுதலிய பகைதோன்றாமலே தெளிவுற்றிருந்தது. பிரமனாதி தேவரை வருத்திய அக்காமன்வன்மை, விஷ்ணு மோகினியவதாரத்து எம்மையும் வருந்த வந்ததாதலின் காமாந்தகன் என்னும் பெயரையுடைய யாம் அக்காமன் கையிற் படலாகாவென்றெண்ணிய ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி கலையால் அந்த ஸ்ரீ சங்கரனே இச் சங்கரமுனியாயினரோ என்னும்படி அக்காமாதி தோற்றங்கெட்டுச் சாந்தி நிரம்பியது.

## சங்கரர் ஆசிரியனை நாடிச்செல்லல்.

அச்சங்கர முனியரசு, புலன்தெறு காட்சிப்பூண் அணிந்து வீடுபேற்றின் வேட்கைப்பெருக்கக் குதிரையேறி வைராக்குடை நிழலில் உபநிடத மணங்கலந்த புண்ணியபரிபாகக் காற்று வீச அறிவிரவி வெயிலில் ஆரியனைத் தேடிச் சென்றனர். அங்ஙனஞ்செல்லுகையில் வழிக்கணுள்ள காடு செடி மலை யாறு குளம் கூவல் சோலை விளைநிலம் மரநிலை முதலியனவும், கரடி புலி புல்வாய் கடமை யாமா பசு யாடு முதலியனவுமாகிய சராசரங்களை யெல்லாம், இந்திரசாலப்பிரவஞ்ச நோக்குஞ் சாலவித்தையாளனைப்போலப் பிரமமேயாகக்கண்டு உபநிடதப்பசுவை, மதவாதியராகிய கொடியர்தத்தம் சிறுவழிவருமாறு வலிக்கையில் அவரைவிலக்கி அப்பசுவைக்காத்து அச்சமற்ற நல்வழி நடக்கும்படி செய்வதற்கோர் தடிவேண்டிற்றோ என்னும்படி யோர் தண்டத்தைக் கையிற்றாங்கிக் காவியுடுத்துக் கமண்டலமேந்தி நல்ல ஆச்சிரமங்களிலும் யாற்றங்கரையிலும், புண்ணிய க்ஷேத்திர மலை குகை முதலிய விடங்களிலும் நல்லாசிரியனை நாடி. மாலைப் போதினுக்கு நருமதை யாற்றங்கரைக்கணுள்ள ஸ்ரீகோவிந்த யோகியார் தவவனத்தருகுவந்து, அங்கு மரவுரி மான்றோல் போர்த்து முக்கால நீராடலாதி விரதத்தினை யுடையராய் விபூதி யுருத்திராக்கம்பூண்டு சத்துவகுணத்தராய் உபநிடதவாராய்ச்சியோடிருக்குந் தவத்தர் உறைவிடங்களையும் அங்கங்குள்ள யோகியரையும் கண்டு, இது எண்ணிய வெண்ண முடியத்தக்க விடமாம் என்று அம்மாலையில் சந்திரனைற் றோன்றிவரும் அந்த யாற்றங் கரையினின்றனர். நின்றவர் தியான நிலையினால், "அம்

மலைமுழையில் ஆதிசேடனாகிய * கோவிந்தயோகி ஞானச்செல்வராய்ச் சமாதியிலிருப்பதாகத் தோற்றியதால் விழித்து நோக்கும்போது "இவ்விடத்து ஆசிரியனைப் பெற்றவனாதி" என்றோர் அசரீரி எழுந்ததுகேட்டு, தவச்சாலையை யடைந்து அங்குள்ள பெரியரால் காட்டப்பட்ட குகையருகுசென்று அதனை வலம்வந்து கனிவகைக் கையடையோடும் இருகையுமேற்றுத் துதிக்கத் தொடங்கினர்.

## கோவிந்த யோகியரின் வரலாற்றுச் சுருக்கம்.

* ஓர்நாள் ஆதிசேடன் தன் மீதறிதுயில் கொள்ளும் விஷ்ணு மூர்த்தியின் பாரம் பொறுக்க லாற்றாதக் காரணத்தை யறிவிக்க வவரைப் பிரார்த்தித்தனர். அதற்கவர்தாம் யோகவன்மையால் மாயைத்திரையை நீக்கி உலகத்திற்குக் காரணமாய சத்தம் தம் வசமாயதைக்குறிக்க வலக்கைகளொன்றி லுடுக்கைதாங்கியும், மற்றொன்றால் ஞானத்திற்சிறந்த சாந்தியைக் குறிப்பித்தும், இடக்கைகளொன்றாற்றமது உபதேச மேம்பாட்டைத் தீயையேந்தி நிறுவியும், மற்றொன்றால் நிலையற்ற மனமாகிய மானைவிலக்கியும், அகம்பாவமாம் புலியை யுரித்ததோலையரைக் கசைத்தும், மாமாயையாகிய முயலகனை யோர்பதத்தா லூன்றியும், அளவில் பேரின்பங் கொடுப்பதாங் குஞ்சிதபதமும், மிகவும் குளிர்ந்த ஞானத்தைக் காட்டுக் கங்கையை, சோதியையும் ஆநந்தத்தையுங் காட்டுஞ் சந்திரனைத் தலையிற்றாங்கியுமுள்ள பரமேச்சுரனது காண்டற்கரியதும் முக்கிய தத்துவத்தை யுபதேசிக்கு மானந்தக்கூத்தை யனுபவித்ததால் பாரமடைந்ததென்றார். ஆதிசேடருமத்திருக்கூத்தைத் தரிசிக்க வேண்டத் திருத்தில்லைக்கேகித் திருநடங்கும்பிட்டுப் பாணினிவியாகரணத்திற்கு மாபாடியங்கூறிமீள வனுக்கிரகித்தனர். அவர் பதஞ்சலி முனியாகித் திருநடங்கும்பிட்டுப் பரமேச்சுரனது கட்டளையு மவ்வாறாகப் பாடியங்கூறித் தம்மை யடைந்த வாயிரம் மாணாக்கர்க்கும் தமக்கும் நடுவிற்றிரையிட்டதை விலக்கக் கேடுறுவரென் றாக்கியாபித்துத் தம்முண்மையுருவெடுத்தாயிரம் முகத்தாலு மொரே தறுவாயிற்கற்றுக் கொடுத்தனர். அம்மாணாக்கரிவாதாற்றத்திற்கு வியந்து ஓர் நாள் திரையைவிலக்க வவர் முகத்துமிழ்ந்த விடத்தினாற் றொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மர் சாம்பராயினர். அக்காலத்து ஜலமோசனத்திற்கு வெளிச்சென்ற ஒருவன் மிகுந்து தன் பிழையை மன்னிக்கவேண்டலுமவர் சாந்திபாடம் முடியுமுன் சென்றதற் கவனை பிரமராக்கதனாகச் சபிக்கலும், பின்னுமவன் வேண்டுகோட்கிரங்கி மானுடயாக்கையராயாவன் "பச்" என்னும் பகுதிக்கு நிஷ்டையில் "பக்வம்" என்று விடைகூறுவனவனுக்குப் பாடியத்தை யுபதேசிக்கச் சாபத்தீர்வாகுமென் றனுக்கிரகித்துத் தம்மிடமேகினர்.

அவ்வாறே அப்பிரமராக்கதனோராலமரமேறி அவ்விடம் வரும் பண்டிதர் "பசிதம்" என வவர்களைப் புசித்திருக்குங்கால், உஜ்ஜயினியிலிருந்து சந்திரகுப்தரென்னு மோரந்தணன் பாடியம் நாடி வந்து "பக்வம்" என்று விடைபகர, அவருக்குப் பாடியத்தை முற்று மோதித் தன்னுருவமொழித்துத் துறக்கமேகினன், சந்திரகுப்தரப் பாடியத்தைத் தன்னுகிராலாலிலையிலெழுதி மூட்டையாக்கித் தன்னூர்க்கு வழிக்கொள்ள, ஓராற்றில் நீருந்தித்துயின்றனர். அவ்விலைகளிற் பலவற்றை யோராடுபுசிக்க

## சங்கரர் குருவருள் பெறுதல்.

'கலுழக்கொடியோன் படுக்கையாயும், மாதேவர் பூணும், சத்த நூல் யோகநூல் வைத்திய நூல் தலைவராயும், இவ்வுலகைப் பணாமுடிகளாற் சுமந்தவராயும், எல்லாவடிவாயுமுள்ள அநந்தனே முத்தொழின் மூவர்கூறும் நம்மிற் காண்கின்றதே! யோகச் செல்வனே! உண்மை யுணரவேண்டிய வாசையோடு நின்னருள் வேண்டி அடைக்கலம்புகுந்த என்னைக்காத்தருள வேண்டுமென்றனர். அங்கு சமாதியிலிருந்த அவ்வாசிரியர் பெருந்தகை வெளிமுகராய் யோகக்கண்ணால் இவர் வரவினையும் மேல் நடக்குங் கருமங்களையு முணர்ந்து இருப்பைவிட்டு எழுந்து குகைவாயிலில் வருங்கால் அவருடம்பொளி அங்குள்ள விருளினைத் துரந்தது. வெளியிருளை இச்சங்கரமுனிவன் பிரமவொளிதுரந்தது. உள்ளத்தொளிவிடு மிரவி வெளிமுகச்சோதி மார்த்தாண்டனைப் பார்த்தாற்போலும், அக்கோவிந்தநாம ஆரியன் சங்கரமுனிவனை நோக்கி, நீயார்? என்று வினவினர். அதற்கிவர் ஐயரே! யான் * மண், நீர், தீ, கால், வெளியல்லேன், அவற்றின் குணமன்று பொறியன்று எல்லாவிலக்கணமு முடையதாய்க் காட்சியை யெல்லாமொழித்து நின்ற சச்சிதானந்த வடிவாகிய சுத்த வறிவாகிய நான்"—"**சிவோஹம்**" என்றனர். இதனைக்கேட்டு, அவ்வாசிரியன், சந்நியாசச் சிறுவ உன்னுரை வேதமுடி வுரையின் பொருளாயிருத்தலாலும், உன்கருத்து வேதமுடியின் முடிபாகிய சத்தியாத்துவிதத்திற்கு இதயமாகவே யிருத்தலாலும், உன் வடிவு சிவாகாரமாயிருத்தலாலும், உன்காட்சி மங்கலமாயிருத்தலாலும், உலகமுற்றும் மங்கலஞ் செய்வோராகிய அச்சிவசங்கரப் பெருந்தகையே உலகை அருளும்படி. இவ்வுருவோடு ஞானபலியை விரும்பிய விருந்துவடிவாக வந்தவரை யுபசரித்து

---

வவர் விழித்து வருந்திச் சிதறுண்ட விலைகளை யொருங்கு திரட்டினர். அக்காலத்து நான்குகன்னியரிவரையேநாட வவர்களை மணந்து, தம்மாலியன்றமட்டி லப்பாஷ்யத்தை முற்றுவித்தார். இவருக்கு அந்தணமாதிடம் **வரருசியும்**, க்ஷத்திரியமாதிடம் **விக்கிரமார்க்கனும்**, வைசியமாதிடம் **பட்டியும்**, சூத்திரமாதிடம் **பர்துருஹரியும்** மக்களாக, வவர்களுக்குப் பாஷ்யமோதிவைத்துத் தாம் ஸ்ரீகௌடபாதரிட முபதேசம் பெற்று இமயச்சாரலில் வதரிகாச்சிரமத்தோரொட்டைச் சாண்குகையில் **ஸ்ரீமத் கோவிந்தஸ்வாமி** எனப் பெயர் வாய்ந்து விளங்கித் தவம்புரிந்திருந்தனர். ஆதிசேடனது கூறுமிவர் பாலாயது.

* ஸ்ரீமத்கோவிந்தநாம ஆரியனதுகேள்விக்குசங்கரர் "**தசசுலோகி**" என்னும் நூலால் விடைபகர்ந்தனர். இதற்கு "**நிர்வாணதசக**" மென்று பெயர். இதற்கு இவர் பரம்பரைச்சீடர் ஸ்ரீ **மதுஸூதன சரஸ்வதி** என்பவர் "**சித்தாந்தபிந்து**" என்னும் விருத்தியுரை செய்தனர். அதற்குத் தமிழ் மொழிபெயர்ப்பு அச்சிடப்பட்டிருக்கின்றது.

நான் பயன்பெற்றவனாவேன் என்று சமாதியி லுணர்ந்தே வந்தனன். உண்மையை நோக்குமிடத்து யானே நீயாகவிருக்க நான் செய்யத்தக்கதொன்றுமில்லை. ஆயினும் வேதவியாசர் திருமகனான சுகமுனிவர்க்கு மாணாக்கராகிய கௌடபாத முனிவர் பெருமான் எனக்கருளிய பிரமவித்தையி னிரகசியத்தினைக் கூறி மரபுவிளக்கஞ் செய்யவந்த நின்னை மாணாக்கனாகக் கொள்ளுகின்றேன்" என்று கூறினர்.

பின்பு, ஏற்றுக்கோடலையே பொருளாகவுடைய வோங்காரத்தினை உச்சரித்துப் பிரமாசனத்தில் கிழக்குமுகமாக விருந்த அவர் திருவடிகளைச் சுத்தமனத்தோடும் வடக்கு முகராய்ச் சங்கரமுனிவர் பூசிக்க அக்குருபரன் மனமுவந்து, பெருங்கருணையால் அம்மாணாக்கரையெடுத்து அணைத்து மடிமீதிருத்திக் கருணைகாட்டி முறைப்படி சந்நியாசத்தை யளித்து, நான்கு வேதமுடிப் பொருளாகிய நான்கு பெருமொழிகளையும் உபதேசித்து அவற்றின் துணிபொருளை யொன்றுபடும்படி உத்தியனுபவக் கருவிகளோடு முறைத்து "மாண்டூக்கியோப நிடத" முதலியவற்றிற்கும் "கௌடபாத காரிகைக்கும்" எல்லா வேதமுடிபுகளுக்கும் உபக்கிரம முதலிய வறுவகை இலிங்கத்தோடு நிலைபெற்று விரிந்த கருத்தினைக் கூறிப் பிரணவப்பொருளினை அனுட்டிக்கு முறைமையினையும், யோகசூக்குமமார்க்கத்தினையும், இராஜயோக வித்தையி னுட்பொருளையும், துறவியின் தருமத்தினையும் உணர்த்தி பிரமன்முதலிய குருபரம்பரை வழக்கினை மாணாக்கரால் விருத்திசெய்யக் கட்டளையிட்டு, அவர் வழிபாட்டை ஏற்றுப் பிரணவநாராயண ஸ்மரணையோடும் வாழ்த்தும்போது, அவ்விருவரும் சமாதி நிட்டர்களாய்ச் சிலகாலம் பிரமாநந்த அனுபவஞ் செய்திருந்து, வெளிமுகரான அளவில் தவத்தராகிய யோகியர் பலர் அங்குவந்து, ஒப்பற்ற ஞானப்பேரொளியராய் விளங்கும் சங்கரமுனிவரைநோக்கி இவரே பரமாசிரியர் என்று துதித்தனர். கோவிந்தவாரியரும் அங்குநின்று மெழுந்து குகைக்குட்சென்று தமதுயோக நிலையிலிருந்தனர். சங்கரமுனிவர் உண்மைப் பொருளையுணர்ந்து பெருமகிழ்ச்சியோடும், அந்த இரேவாநதிக்கரைக்கு வந்து, அப்போதைய "சாதுர்மாசிய" விரதத்திற்கு அவ்விடத்தேதானே தங்கி அங்குள்ள அகரவேதியரால் பூசிக்கப்பெற்றுப் பெரியோர்களோடு வேதமுடிவைக் கேட்டல் சிந்தித்தலாதி செய்திருந்தனர்.

கோவிந்தபாதரது தவவனப் பக்கங்களில் வருடபசு வேள்விசெய்வாருடைய வேள்விச்சாலைகளிலும், சாதுர்மாசிய விரதத்தின் பொருட்டுநின்ற சந்நியாசியர் மடங்களிலும், உபநிடதபாராயண விடங்களாகிய பிரமசத்திரசாலைகளிலும், வேதமோதும் அந்த நருமதைக் கரையில் வேதியர்கள் பலர் வந்து சேர்ந்திருந்

தார்கள். ஒருநாள் அதிமழைபெய்து, மேற்கிலிருந்து பேரிரைச்சலோடு புதுவெள்ளம் எல்லையின்றி இருமருங்குமுள்ள சோலை, வனம், மரநிலை, ஊர், சேரி முதலியவற்றை அடியோடும்பேர்த்து எறிந்து இரண்டுகுரோச தூரநில முழுதும்படி பெருவேகத்தோடும்வர, அதனைப்பார்த்து ஓடிவிடுவதற்கும் இடமில்லாமல் அநேக முயிர்களும் சேதமாம்படி பிரளயம் நேரிட்டதே யென்னும் அச்சத்தோடும் மருண்டுபெருங் கூச்சலிடுகின்ற வேதியர்கள் ஓலமுழக்கங் கேட்டு, யோகநிட்டையிலிருந்த சங்கரமுனிவர் சமாதியி லெழுந்தருளியிருக்கு மாசிரியர்க்கு விண்ணப்பஞ் செய்யக் கூடாமையிற் றமது கமண்டலத்தினை யபிமந்திரித்து அவ்வெள்ளத்துள் வைத்தனர். அப்போது, அப்பெருவெள்ள நீர் முழுவதும் அக்கமண்டலத்துள் அடங்கி, அங்குள்ள எவ்வுயிர்க்கும் யாதொரு துன்பமும் இல்லையாயிற்று. அதுகண்டு அவ்விடத்துள்ளார் யாவரும் வியப்புற்று கடலை அங்கையிலடக்கியருளிய குறுமுனிவரே யிவ்வடிவோடு மிங்கெழுந்தருளினாற் போலுமென்று மயிர்க்குச்செறிய, அருள்வடிவராகிய அச்சங்கர முனிவரைத் துதித்தனர்.

மற்றொருநாள், கோவிந்தபாதர் நருமதை நீராடிவந்து நித்த கருமமுடித்துத் தமது ஆச்சிரமத்திற்குச் செல்லுகையிலுச்சி வெயில் வெப்பத்தினை நோக்கிச் சங்கரமுனிவர் தமது காவித்துண்டத்தினை ஆகாயத்தின் மேலெறிந்தனர். அது குடைபோலும் அக்குருபரனுக்கு நிழல்செய்து வந்தது. அதனை நோக்கினவர் யாவரும் வியந்து இவரது குருபத்தியைப் புகழ்ந்திருந்தனர். கோவிந்தபாதரும் தமது சங்கரமுனி செய்யும் பணிக்குத்திருவுளமுவந்து, அங்குள்ளயோகியர் அவரைப்பற்றிப்புகழும் புகழ்ச்சிசைக்கேட்டு யோகசித்திபெற்ற இவரே தமக்கு முன்வேதவியாசர் கூறியவாறு பிரமவித்தை மரபுநிலைபெறச்செய்து பெருங்குருவாய்த் தமது குலமரபைவிளக்கமுறச் செய்ய வல்லவர் என்று துணிந்து இவர் கடவுள் அமிசையை யுடையவர் மன்பதுணர்ந்திருத்தலினால் பெருங்களிப்போடு மிருந்தனர்.

## கோவிந்தபாதர் பாடியஞ்செய்யுக் கட்டளையிடல்.

பின் அச்சாதுர்மாசிய விரத முடிந்த வுடனே கோவிந்தபாதர் சங்கரமுனியை யழைத்து "ஐய! முன், நான் வதரிகவனத்துக்குச்சென்றங்கு அத்திரி முனிவரது வேள்வியிற் கூடியிருந்த முனிவர் அவைக்களத்து எமது பரமாசிரியராகிய வேதவியாதரைப் பணிவுற்றிருக்கையில் காலம்வாய்க்க, எம்பெருமான் செய்தருளிய பிரம சூத்திரத்திற்குத் துணிபொருளுணர்த்த வல்லதோர் பாஷியமிருக்கின் மதவாதியர் போரொழிவாமென விண்ணப்பித்தேனாக; அவரதற்குச் சிறுபோது சிந்தித்துத் தாம்

கைலைக்குச் சென்றிருந்த காலத்து உணரவந்த சில செய்திக ளால் அக்கருமம் அந்நியராற்செய்யத் தக்கதல்ல, சிவானுக்கிர கமே வேண்டும். ஆதலின் எமது வழிமகனாகிய நீர்சிவத் தியா னஞ்செய்து வருவீரேல் உமது திருமைந்தனால் இக்கருத்து முடிவுபெறும் என்று கட்டளையிட்டனராக, யான், அக்காலம் யாது? அதற்கு முற்குறியாதென்று வினவினேனாக. அவர், எந் தப்பாலசந்நியாசி நம்மால்வேதாந்த வுபதேசம் பெற்றுப் பெரு வெள்ள நீரைத்தன் கமண்டலத்தடக்கும் யோகசித்தியைப்பெறு வனோ அவனே பிரமசூத்திர முதலிய வேதமுடிபுகளினைத்தினுக் கும் விருத்தியுரை செய்வோனாய் வெற்றிபெற்றுப் பரம்பரைக் குப் புகழ் விளைவிப்பான். என்று திருவுளம் பற்றினர். அவ்வாறே நின்பாற் கண்டேனாதலின் இங்கிருந்து புறப்பட்டுப்போய் வேத வியாசர் திருவருளைப் பெற்று செய்யத் தகுவனசெய்து வெற்றி பெறுதி என்று கட்டளையிட்டுப் பெருங்கருணையோடும் வாழ்த் தினார்.

### சங்கரர் காசிக்கேகல்.

அப்போது சங்கரமுனிவர் அவர் திருப்பாதுகையை வண ங்கிப் பல்காலு நிலமுறப் பணிந்தெழுந்து, ஆசிரியனைப் பிரிய மாட்டாதும், கட்டளைமறுக்க வறியாதும், நெஞ்சுள் அவரைத் தியானித்துக்கொண்டு, அங்குநின்றும் புறப்பட்டு மாணாக்கர் சூழ அறிஞரு அறியவிரும்பினார்க்கு அறிவுணர்த்தும் சிவராஜ தானியாகிய காசி க்ஷேத்திரத்தை அடைந்து, அவ்வாரணசியின் கிழக்கில் வடமுகமாகச் செல்லும் தேவகங்கையைத் தரிசித்து, கங்காஷ்டகம் முதலிய தோத்திரங்களைச்செய்து, அம்மந்தாகினி யைப் பிரார்த்தித்து, அப்பாகீரதிக் கரைக்கண்ணதாகிய தாரகேச் சுரமஹா சந்நிதியில் மூன்றரைக்கோடி புண்ணிய தீர்த்தக் கலப் புள்ள மணிகன்னிகையில் உச்சிநீராடி க்ஷேத்திர யாத்திரையை முடித்துத் துண்டிராஜகணபதியையும், காலவயிரவரையும், விந்து மாதவரையும் அந்நபூரணி யாரையும், ஏனைய தேவர்களையும் குறி த்ததோத்திரப்பாடல் கூறி, பிரமவிஷ்ணு முதலிய யாவரும் பூசித்த விசுவநாதப்பிரானைத் தரிசித்து, வித்தை வல்லவராகிய பட்டாசாரியர்கள் சாத்திர சந்தேகங்களை நீக்கி யவ்விடத்துச் சந்நியாச ஆச்சிரம நிலைபெறுவித்துப் பன்னீராயிரம் புலவராற் சூழப்பட்டு, சிவபெருமான் ஆநந்தவனத்தில் வீற்றிருந்தனர்.

ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

# ஆறும் அத்தியாயம்.

## பற்பபாதர் மாணாக்கராயது.

சங்கர முனிவர் காசியில் இவ்வாறு சந்நியாச ஆச்சிரமத்தை வழங்குதல் செய்வித்து, அத்துவித முடிடை விருத்திசெய்து வருகையில், ஒருநாள் இரவு, கனவில் விந்துமாதவர், தன் கூறோடு பிறந்த பிரமசாரியொருவன் நாளையதினம்காலையில் உமக்கு மாணாக்கனாக வருவன் என்று தெரிவித்த செய்தியைத் தமது மாணாக்கரனைவர்க்குங் கூறி அவர்களோடு மறுநாட்காலையில் கங்கைநீராட வந்தனர். அப்போது, தென்னாட்டிற் பிறந்த * **சநந்தனன்** என்னும் மாணியொருவன் தனக்கு அகோபிலத் திருப்பதியினுள்ள ஸ்ரீ நாரசிங்கனார் கட்டளையிட்டபடி சற்குரவனை நாடி வடக்கு நோக்கி யாத்திரைவந்து கங்கைக்கரையின் கண்ணதாய வியாச காசியை யடைந்தனர். அங்கு, † சிவகாசித்திருப்பதி எல்லையிற் கங்கை நீராடவந்த சங்கரப் பெருமுனிவன் திருமேனி யொளி மார்த்தாண்ட மண்டலம்போலக் காட்டக்கண்டு, வியப்புற்றுக் காரணந்தோன்றாது உற்றுநோக்குழி, அவ்வொளியில் ஸ்ரீ விசுவநாதப்பெருமான் திருக்கோலம் வெளிப்பட்டது. வெளிப்படவே அங்கிருந்தபடியாக விழுந்து பணிந்தெழுந்து, இதுவே, என்னை உய்யக்கொள்ளவந்த வொரு பெருங்குருமணி யென்றுணர்ந்து அக்கணமே அச்சிவகாசிப் பதியை யடைந்து, அன்போடும் விதிப்படி சங்கரமுனிவன் திருவடிப்புகலடைந்து, அவ்வாரியர் பெருமானைச் சேவைசெய் திருந்தனர். அக்குருபரன் அம்மைந்தனைச் சோதித்து, கருணையாநோக்கி, ஆட்கொள்ளலும், அம்மாணி அக்குருநாதன் கரகமலத்துட்டோன்றினராய் முறையே சந்நியாசத்தைப் பெற்றுச் சநந்தனாசாரியனென்னும் புகழ்பெற்று குருபணியில் மிகுந்த ஆற்றலுடையராய் சந்நியாச ஆச்சிரம நிலைத்தருமம் வழுவாது யோகமுயற்சியினின்று கேட்டல் சிந்தித்தலாதி தவவினைசெய்து வந்தனர். இவரே அவ்வாரியர் பெருமான் மாணாக்கருட் சிறந்தோர். இவரிடத்துச் சங்கஞ் சக்கர முதலிய விரேகைகளும் மஹா புருட விலக்கணங்களும், விஷ்ணு மூர்த்தியின் கலைகளும் விளங்கி நின்றன. பின்பு அவ்வாறே தேவாமிசத்தாற் பிறந்த அந்தணச் சிறுவர் அப்போதைக் கப்போது, மாணாக்கராகவந்து பணிபுரிந்து காத்திருந்தனர்.

---

* இவர் **காவேரி** யாற்றடை. கரையோ ரக்கிராரத் தவதரித்தவர் இவர்க்கு **பற்பாத** ரென்றும் பெயர். ஆன்மலாபத்திற்காக சற்குரவனை நாடிக் காசியை யடைந்தனர்.

† வாரணாசி யென்றும் பெயர்.

சங்கரமுனிவர், இங்ஙனம், காசிப்பதியில் ஒன்பது திங்களிருந்தனர். அப்போது, இவரது பெருமையாலும், இவர் மாணாக்கர் பிரசங்கத்தாலும், அந்நாட்டின்கணுள்ள தொண்ணூற்றாறாயிரம் துவிதிகளுக்கும் சிறிது அத்துவிதவுணர்ச்சி யுண்டாயிற்று. தருக்கர், மீமாஞ்சகர், சாங்கியர் முதலியோர் கல்விச் செருக்கு ஒழிந்து வந்தன. அக்கால் கோவிந்தபாதர் சங்கரமுனிவருக்கு அருள் செய்திருந்த ஸ்ரீ கைலாய சந்திரமௌலீச்சுரச் சிவலிங்கம், அரதன கருப்பகணபதி, ஸ்ரீ சக்கரம், நவக்கிரகயந்திரம், நரசிங்க சாளிக்கிராமம் இவைகளை அவர் சநந்தனாசாரியரிடம் கொடுத்தனர். அவர், அத்தேவபூசையைச் செய்து உபசாரதருப்பணம் என்னும் உபநிடத பூசாவிதியைச்செய்து, தெய்வ பூசை, அந்தணருண்டி முதலிய கருமங்களை நடத்தி பஞ்சாயதன பூசை மார்க்கத்தை யாவர்க்கும் உபதேசித்து, அவற்றுள், எத்தெய்வத்தில் யார்க்குப் பத்தியோ அத்தெய்வத்தினிடத்தி லவர்க்குப் பத்திவரச்செய்து, அவரவர் எண்ணம் பலிக்கும்படி மகிமைகாட்டி, மாந்தரைக் கூட்டங் கூட்டமாகத் தம்வசம் சேர்த்து வந்தனர்.

## சங்கரர் விஸ்வநாதர் திருவருள்பெற்றது.

அங்கொருநாள், சங்கரபாதர் தமது மாணாக்கரோடும் சென்றுகங்கைநீராடி நித்தகருமவினை முடித்துவரும் வழியில், மிக நீண்ட வடிவுடையதோர் சண்டாளன் தலைமேல் கட்குடந்தாங்கி நான்கு நாய்களைத் தன் பின்னாக வரப்பற்றி இவர் அருகாக வருவானாயினன். அவனை இவர் கண்டு, "செல்க செல்க" என்ற கருத்தினையுடைய கைசன்னைசெய்தனர். அதுகண்ட அவன் அங்குதானேநின்று இவர்க்குச்செல்ல வழிவிடாது இவரை வினவத்தொடங்கினன் "அந்தணர் தலைவ! எந்த யேதுவினால், எதன்பொருட்டு, யாரை, எங்கு போகச்சொன்னை?" அன்னமயமாகிய தேகத்தினின்றும் அன்னமயமாகிய தேகத்தினைத் தூரமாகச் செல்லக் கூறுகின்றனையோ? அல்லது, அறிவினின்றும் மற்றோரறிவைச் செல்லக் கூறுகின்றனையோ? அலையடங்கிய பெருங்கடல்போலும், இயற்கையறிவின்பவுருவுடைய ஆன்மா எங்கும்நிறைந்திருக்க, அதனுள், இவன் அந்தணன் இவன் சண்டாளன் என்னும் வேறுபாடேன்? தேகத்தடையால் ஆன்மாவேறு என்பையேல் மட்குடத்தினும், பொற்குடத்தினும், ஆகாயம் வேறுவேறுள்ளதோ? கங்கை நீரிற்காணுறும் இரவிமண்டல விம்பத்திற்கும், புலைச்சேரி முற்றத்தி நீரிற்காணுறும் இரவிமண்டல விம்பத்திற்கும்வேறுபாடென்னை? வேற்றுவிம்பம் எத்தனை தோன்றினும் விம்பத்திற்கு வேறுபாடோ? அவ்வேறுபாடு செயற்கையேயன்றியியற்கையல்லவே? சுழுத்தியில் இங்ஙனவும் கனவுமாகிய பிரபஞ்சமுள்ளதோ? இல்லையே. பழுதையை நோக்கிப் பாம்

பெனமருண்டு அச்சத்தை யடைந்தவன் பாம்பன்று இது பழுதையே யென்ன அறிந்தபின், பார்வை வேறுபாட்டால் பாம்பைப்போற் றோன்றினும் அது பாம்பல்லவென்னு உண்மைத் தோற்றத்தினல் அச்ச முதலியன விட்டொழிவ தில்லையோ. நீ உண்மையான அத்துவிதக்கருத்தினை யுணர்ந்த வனே யாயின் இவ்வேற்றுமை மயக்கநின்னைவிடா தொழியுமோ? ஞானி என்று சந்நியாசவேடம் புனைந்து துவித வாதனையையே விருத்திசெய்து உலகத்தினை வஞ்சித்தலாகாது" என்றனர். அது கேட்டு சங்கரர் உள்ளத்தின்கண்ணே யனுபவித்திருந்த அத்து வித ஆநந்தம்பொங்கக் கூறுவாராயினர். எறும்பு முதற் பிரமனீ ருகவுள்ள எல்லாவுடம்பினிடத்தும், எல்லாப் பிரபஞ்சத்திடத் தும் ஓதப்ரோதம் குறுக்கிழை நெடுக்கிழைபோலும் நிரம்பிய அறிவாம் பொருளொன்றே உண்மையாயுள்ளது. அதுவே தன் வடிவம், அறிவில்லாமையாற் றன்னிடத்துத் தோன்றும் வேற் றுமை மயக்கமெல்லாம் கனவேபோலும் பொய்யாகவுள்ளது. என்ற இரகசியம் குரவன் முன்னிலையில் யாருணர்ந்து அனுபவப் படுவனே, அப்பெரியவன் சண்டாளனே யாயினும் வேதியனே யாயினும் எனக்குக் குருவென்பதே என்கருத்து" என்றதுமுத லிய பொருள்கோளுடைய "மனீஷாபஞ்சகம்" என்னும் செய்யு ட்களைக் கூறினர். அப்போது, சண்டாள வடிவமறைந்து, உண் மையறிவின்ப வடிவராயும் இடபவாகன ரூடராயும், சந்திரனைத் தரித்த திருமுடியுடையராயும், முக்கண்ணராயு மிருக்கின்ற ஸ்ரீவி சுவநாதப்பெருமான் காட்சிகொடுத்தருளினர். அக்கட்குடம், இயற்கையறிவின்ப வெள்ளமாகிய கங்கையாகப்பரந்தும், நான்கு நாய்களும் நான்கு வேதமூர்த்திகளாய்த் துதித்தும் நின்றன. அதுகண்டு சங்கரமுனிவன், அத்தெய்வப் பெருந்திருக்கோலத் தைக் காணத் தடைசெய்த ஆநந்தக்கண்ணீரைத் தொடைத்துக் கொண்டு 'சிவோஹம்' என்ற மகுடத்தோடுங் கூடிய செய்யுட்க ளாலும் "சிவ ஏவநாநியத்" என்ற செய்யுட்களாலும், சிவம்— ஞானம்-பூரணம்-அத்துவிதம்-ஆநந்தம் - நிர்த்துக்கம்-நிருபாதிகம்- நிஸ்ஸங்கம்-எனவும் வரும் வேதாந்த சாரமாயுள்ள செய்யுட்க ளாலும் "சிவாத்ம பூர்ணு பவஸ்தோத்திர மஞ்சரி" என்னும் எண்வகைத் தோத்திரங்களாலும் துதிசெய்தனர்.

அப்பொழுது, ஸ்ரீ விசுவநாத வள்ளலார் கருணைக்குறையு ளாதலின், எவ்வுலக நிலைப்பேற்றினுக்குங் காரணமேயாகிய அப யதிருக் கரத்தால்அச்சங்கரமுனிவரை விடையேற்றி வலக்காதில் பெருமறை முடிபையனுக்கிரகித்தருளி அக்கரத்தினைத்தலைமேல் வைத்தணைத்து "நாமே நீயாக விருக்கின்றாய்" என்றுகூறி, நமது அருள்வலியால் வேதமுடிபிற்குத் துணிபொருளுரை செய்து, பிரமசூத்திரக்கருத்தினை வெளிப்படுத்தி வியாசரைக்கேட்பித்து,

வாதியர்களையுடன்படுத்தி வீடுவிரும்பினுரை யுணர்த்தி ஞானமார்க்கத்தினை மாணுக்கர் பரம்பரையால் உலகத்து விளங்கப்புரிந்து எம்மையடைதி என்று கட்டளையிட்டு வாழ்த்தியருளினர். அக்காலத்தில் அக்காசித் தெய்வத் திருப்பதியில் பூமழை பொழிந்தது. தேவதுந்துமி முழங்கி, இத்தன்மைத்தென்று கூறலாகாததாயும், என்றும் அனுபவியாததாயும், கண்டார் யாவர்க்கும் மயிர்ப்புளகம் கண்ணீர் முதலிய அருதவின்பநோக்கமாயும், பாவிகட்கு அச்சம்விளையும் உற்பாதமாயும் உள்ளதோர் அருட்பெருஞ்சோதி விண்ணிடங் கவரவெழுந்து அடங்கியது. இவ்வற்புதங்கண்டிருந்த சநந்தனுசாரியர் முதலிய மாணுக்கர்கட்கு நனவுமன்றிக் கனவுமன்றி இது வெனலாகாத இன்பவவத்தையாக விருந்தன. இங்ஙனம், சிவனருட் டிருமேனிப் பரிசத்தால் சங்கரமுனிவர் ஞானமயரேயாயினர். பின் அவ்வாறே அனைவரும் விசுவநாதப் பெருந்தகையார் மஹாசந்நிதியை யடைந்து தரிசித்துத் துதித்து நிற்கையில் அச்சிவகுறியாகிய, இலிங்கோற்பவரிடத்திருந்து "சிவச்சத்தியம், சத்தியமத்துவிதம்" என்னும் இரண்டுவாக்கியங்கள் அனைவருங் கேட்கவெளிப்பட்டன. "ஜெகதாசாரிய திருசரியை" என்னும் கிரந்தத்துள் அன்றையநாளில் நடந்த சரிதைக்கு "ஆனந்த பூமிகை" என்று கூறப்பட்டுள்ளது.

## சங்கரர் வியாசரைத்தேடிச் சென்றுமீளல்.

பின்னர் சங்கரமுனிவர், சநந்தனர்முதலிய மாணுக்கரோடும் அக்காசித் திருப்பதியினின்றும் புறப்பட்டு வடதிசை யாத்திரை முற்றுஞ்செய்து குளிர்வெய்யிலைப்பொறுத்து, வழிநடப்போரோடு நடந்துமிகவுஞ் சீதத்தோடுங்கூடிய இமயபருப்பதத்தை யடைந்துவதரிகாச்சிரமம்புக்கு அங்குயோகு செய்திருந்த பெரியோரோடு வேதச்சிரப்பொருளை விசாரித்து உபநிடத வுரைப்பொருளைக் கேட்டல் சிந்தித்தல்தெளிதலால் நிலைபெறுத்திச் சநந்தனரையும், நூற்றிரளையும் அங்குவிடுத்துத்தாமொருவரும் வியாசனுரைத் தரிசிக்கும்பொருட்டு வதரிகவனத்துட்சென்று அவ்வுழை வியாசரைக்காணுது, அப்புறம், நரநாராயண வாச்சிரமஞ் சேர்ந்து விதிப்படி யவரை வணங்கினர். அவர் சங்கரனுரை விருந்துபசரித்து உனது இச்சையென்னவென்றுவினுவினர். அதற்குச் சங்கரனுர், ஐய, பிரமசூத்திரத்தினை வியாசனுர் எக்கருத்தோடு கூறினரோ? அந்தவிரகசியப் பொருளை யவரானே யுணர்ந்து, விளக்கமுற பாஷியஞ்செய்து யாவர்க்கும் பயன்படும்படி வெளிப்படுத்த வேண்டுமென்பதே யென்கருத்தென்று கூறினர். அதுகேட்ட நாராயணமுனி தழுவிக்கொண்டு, மைந்த! நீ எல்லா முணர்ந்தாயன்றே வியாசர் கருத்தே நின்கருத்தாக விருக்கின்றது. தூர்வாசனுர், வியாசனுர், நான், நீ, என்னும் நாம் நால்வரும் வேறானவரன்று. புறமுகமாகப் பார்ப்புழி இப்போது வியாசனுர்

தமது உள்ளக்கருத்துத்தம்மால் வெளிவந்த வாறாகாதபடி நின்
றால் வெளிப்பட்டபின் அதனாற் றங்கருத்தினை வெளிப்படுத்த
வெண்ணி யிப்பொழுது உனக்கு வெளிப்படாது மறைந்திருக்கி
ன்றனர். சிவனறிவுக்கு விஷ்ணுவும் விஷ்ணு அறிவுக்குச் சிவனும்
சாக்ஷியாக விருக்கின்றனர். ஆதலின் நீ செய்யப்போகின்ற பாஷி
யமே வியாசர் உள்ளக் கருத்தாக விருக்கும். நான், நீயிருவரு
மாக விருத்தலால் நம்மிருவர்கருத்தும் உணர்வேன். இவை முற்
றுநீயுணர்ந்தவனே யாயினும் மானுட கருமப்படி வினாவுகின்றாய்.
உனக்கு விசுவநாதப்பெருமான் திருவாணையா யிருக்கவில்லையோ?
இதுமிகநல்லகருமம். இதனை நீயொழிய முடிப்பாரில்லை. நானும்
கட்டளையிடுகின்றேன். நீசெய்ததனையே வியாதனார் உடன்படுகின்
றனர் என்று கூறிச் சந்நியாச தருமத்துப் பிரணவ செபமொ
ன்றினாலே சுத்தசைவ மாகாதபடி ஹரிஹர வேறுபாடு இல்லா
மைதோன்ற நமதுமாணாக்கர் வழியில் நாராயண ஸ்மரணைசெய்
யும்படி நியமஞ்செய்க, என்று இன்னும் பலவிடயங்களையு முண
ர்த்தித்தமது தவத்தின் வலிமையுங் கொடுத்து வாழ்த்தி யனுப்பி
னர். அங்கிருந்து சங்கரமுனிவர் வந்து முனிவர் திருக்கூட்டத்தை
யடைந்து, பிரமசூத்திரத்திற்கும் பத்து உபநிடதங்களுக்கும்
பஞ்சருத்திரோப நிடதங்களுக்கும், நரசிங்கதாபினிக்கும் கௌ
ஷீதகீ பிராமணத்திற்கும், ஸ்ரீ ருத்திராத்தியாயத்திற்கும் பகவற்
கீதைக்கும், சனற்சுஜாதீயத்திற்கும், விஷ்ணு சகத்திரநாமத்திற்
கும், பிறவற்றிற்கும் சுத்தாத்துவித சித்தாந்த பக்கமாகப் பாஷி
யங்களைச் செய்து “ஆன்மபோதம், தத்துவாலோகம், அபரோக்ஷா
னுபூதி, அத்துவிதசகத்திரம், உபதேசசகத்திரம்” முதலியபல சிறு
நூல்களைச் செய்து, சூதசங்கிதை முதலிய நூல்களைப் பதினெண்
முறை யாராய்ந்து அவற்றோடு பாஷிய முதலிய நூல்களுக்குக்
கருத்தொத்து வரும்படி நன்கு நிலைபெறச்செய்து, அந்தச்சாந்தி
நூல்களை மாணாக்கருக்கு உணர்த்திவந்தனர்.

இங்ஙனம் இவரது பன்னிரண்டா மாண்டிற்றானே தமது
எல்லா முணர்ந்ததன்மை வெளிப்படுமாறு எல்லா நூல்களுக்கும்
விரோதமின்றி பாஷியத்தினைச் செய்து மாணாக்கருக்குப் போதி
த்து ஆயிரங் கதிரவனைப்போலு மொளிவிட்டுப் பிரமாசனமாகிய
ஆசிரியபீடத்திருந்த ஆசிரியர் பெருந்தகையாகிய சங்கரபகவற்
பாதருக்கு வதரிகாரணியத்து வசித்து இருக்கும் ஆயிர முனிவ
ரும் மாணாக்கராகவந்து வேதாந்தபாஷியத்தினையோதியிருந்தனர்.
அப்போது, தேவருட் சிறந்தோராக வாழும் பற்பநாபரது அமி
சையாற் பிறந்த சநந்தனாசாரியர் அம்மாணாக்கருட் டலைவராயும்
குரவனாருக்கு மிகவுரியவராயு மிருந்தனர். அதுகண்டு, பல
மாணாக்கரும் அழுக்காறுகொண்டு, மனத்துள் அருவருப்படைந்
தனர். அக்கருத்து எல்லாமுணர்ந்த சங்கரமுனிவர் உடனே யுண

ர்ந்தனர். பின்னொருநாள் கங்கையினக்கரையில் தேவபூசையின் பொருட்டுத் துளவம், வில்வம், தும்பை, மல்லிகை, அறுகுமுத லிய எடுப்பித்து நிற்குஞ் சநந்தனரை உடனே வரும்படி இக்க ரையிருக்கும் சங்கரமுனிவர் அழைத்தனர். அக்கட்டளைகேட்ட வக்கணமே விசாரமின்றி, பிறவிக்கடல் கடத்தவல்ல குருபத்தி யால் அந்தயாற்று ளிறங்கி நிலத்தினடந்தாற்போலு நடக்கலா யினர். அக்கால் அக்குருபத்தியிற்சிறந்த சநந்தனரை யுபசரிக்கும் படி அவர் திருவடிக்குப் பாதுகைகொடுத்தாற்போலும் ஒவ்வோ ரடிக்கும், அப்பாகீரதியார் ஒவ்வோர் தாமரைப்பூவினைக் கொடு த்துவந்தனர். அதன்மேல் கால்வைத்துச்சென்று குருசந்நிதியை அடைந்தனர். இவ்வற்புதங்கண்டு மாணாக்கரனைவரும் வியந்து இத்தகைய குருபத்தியுடையார் விடயத்து யாமெண்ணியது தவ றெனக்கருதி அச்சத்தோடு அதுமுதலடங்கி யொழுகலாயினர். அப்போது ஆசிரியர் அம்மாணாக்கரைப் "பற்பபாதர்!" என்ற ழைத்தனர். அதுமுதல் அவர்க்கதுவே பெயராயிற்று.

## சங்கரர் பரமத வாது.

பின், அங்கிருந்து பற்பபாதர் முதலிய சிலமாணாக்கரோடு சாத்திரங்களை யெடுப்பித்துக்கொண்டு காசிக்கு வருகையில், கே தாரம், இரேவணம், சுவாலாமுகி, நேபாளம் முதலிய திருப்பதி களி லிருந்து வந்த, அகோரர், இரசேச்சுரர், நகுலேச்சுரர், பசு பதி, சித்தநாதர், சித்துவிலாசர், ஸ்ரீநாதர், உக்கிரவைரவர், கபாலி பிக்ஷு, சபரேச்சுரர், மிருகேந்திரநாதர், வாமகேச்சுரர், ஒட்டியா ணசித்தர், சாங்கியேச்சுரர், கோவர்த்தனர், சகந்நாதர், மிஹிராதி த்தர், அருக்கதாசர் முதலிய அவ்வச்சமயாசிரியர், பாசுபதம், கா பாலிகம், வீரசைவம், சித்தரகசியம், தேவிபாரமியம், மந்திரவித்தி யேசுவரீயம், சாத்தேயம், இராதாகிருஷ்ணம், சௌரம், காணப தம், வைரவம், குபேரம், காலவாதம் முதலிய மதங்களை விளக்க ஞ்செய்து வேறுவேறு சிலசிலமாணாக்கரோடும் சாத்திரங்களோ டும் கூட்டங்கூட்டமாகவந்து, அரித்துவாரம், பிரமகபாலம், கா ளிகட்டம், ஆரியாவருத்தம், பாடலிபுரம், சிந்துகருப்பம், இந்தி ரப்பிரத்தம், அயோத்தி, பிரமவருத்தம், விஷ்ணுபாதம், நவத்து வீபம், உத்தரகௌடம், பிரயாகை, சித்திரகூடம் முதலிய க்ஷே த்திரங்களிலும் பட்டணங்களிலும் சபைகூடி பதுமபாதர் முத லிய சங்கரர் மாணாக்கரோடு சபதஞ்செய்து வாதிட்டு, அத்துவி தாசிரியர் உத்திகளாற் றோல்வியடைந்து தத்தம் மதாபிமானங் களை யொழித்து, சாந்தவைராக்கங்களை யடைந்து அச்சங்கரமுனி வரைவணங்கி அத்துவித வுபதேசம்பெற்று, தத்தம்மாணாக்க ரோடும் அத்துவிதிகளாய் அந்தப்பாஷிய முதலிய நூல்களைப்பெ ற்றுத் தத்தம் மிடஞ்சேர்ந்து, குருவின் கட்டளைப்படி பாஷியத் தினை விளக்கிவந்தனர்.

அதன் பின், சங்கராசாரியர் சநந்தனாதி மாணாக்கரோடு சோமநாதம், துவாரகை, வடமதுரை, கோகுல முதலிய விடங்களிலுள்ள விஷ்ணு வர்த்தனர், நிம்பார்க்கர், எச்சநாராயணர் முதலிய விஷ்ணு பாகவதர்களையும், நந்திசுவாமி, மகேச்சுரதீர்த்தர், சங்கராநந்தர் முதலிய சிவபாகவதர்களையும், ஸ்ரீ சுவாமி பாஸ்கரபட்டர், ஸ்ரீ பூஜியபாதர் முதலிய தேவிபாகவதரையும், ஆதித்தியதாசர், அபரார்க்கர், மிஹிரேச்சுரர் முதலிய சூரிய பாகவதர்களையும், பத்திரநாதர், கபிலேச்சுரர் முதலிய கணபதி பாகவதர்களையும், உக்கிரமூர்த்தி முதலிய வைரவ பாகவதர்களையும் வாதில்வென்று சுருதியுத்தி அனுபவங்களாலும்; உபக்கிரமம் உபசங்காரம் முதலிய அறுவகைக் குறிகளாலும் நிச்சயிக்கப்பட்ட அத்துவிதத்தின் ஒப்பு, பகையின்மை, சாதனம், பயன் என்னும் நான்கு அத்தியாயமுடைய பாஷியப் பொருளையும் அவர்கட்கு உணர்த்தி அந்தந்த மதவாதியர்களும் அத்துவித மதத்தை யனுட்டித்து வரும்படியாகவும், பேதவாதத்தினை யொழிக்கும்படியாகவும் அவரவர் கடவுட்பத்தி அவ்வவ்வாறே விருத்திபெறவும், "பஞ்சாயதன அபேத சகுண நிர்க்குண வுபாசனைகளைப்" போதித்து அவரனைவரையும் மாணாக்கராக்கிக் கொண்டு அத்துவிதத்தினை நிலைபெறச்செய்து முன்னிருந்த மதங்களையும் அதற்கு விரோதமில்லாதபடி அமைத்தனர்.

அதற்குமேல், முழுவதும் வேறுபாடு கூறும் பேதவாதியரை வாதில் வென்று, தருக்கர் ஏதுவாதங்களை வேறு ஏதுக்களாற் கண்டித்து, நையாயிகர்செய்த அப்பிரயோசனசங்கை (பயனில்வினாக்கள்) களுக்கு அநுகூலதருக்கம் (உடன்பாட்டுமறுப்பு) கூறி, கணாதகௌதம மதத்தினையொழித்து, பிரமதருக்கயுத்திகளால் நிரீச்சுர சாங்கியனையும், சுருதியுத்தி யனுபவங்கட்கு விரோதமுணர்த்தலால், சேசுர சாங்கியனையும் வென்று அவர்களனைவர்க்கும் அத்துவிதவுண்மையினை யளித்துக் களிப்பச்செய்து, முன்பட்டபாதரால் வெல்லப்பட்டு அழிந்து மிக்கிருந்த நூல்களைக்கொண்டு வாதிடவந்த புத்தரோடு வாதிட்டுப் "பிரகிருதிப்பிரகாசம், சியாத்துவாதகண்டனம், சத்தபங்கீபஞ்ஜனம், பிரத்தியபாதோத்தாரம், சர்வஞ்ஞசாதனம், அத்துவயவிஞயகவாதகண்டனம்" என்னும் பிரகரணங்களையுடைய "யுக்திசுலோகஷட்சதி" என்னு நூலைச்செய்து அந்தயுத்திகளால் அவர்களை வென்று, அஞ்சியோடச் செய்து, அங்கிருந்து காசியையடைந்தனர்.

பின் காசியில், இருபத்துநாலாயிரம்பேர் பாஷியம் ஓதவந்தனர். அவருட்சிலர்க்குத் தாமாகவும், சிலர்க்குச் சநந்தனர்முதலிய மாணாக்கராலும் ஓதுவித்தனர். அங்கிருந்த பாசுபதாதி மதவாதியர் உலகத்திற்குப் பிரமம் அபின்ன நிமித்தோபாதானமோ? (பிரிவற்ற நிமித்தமுதற் காரணம்) கேவலநிமித்தகாரணமோ? (நிமி

த்த காரணமாத்திரம்) விவர்த்தோபாதானமோ ? (பிரிவுடைமுத ற்காரணம்) என்று வினவி அது விடயத்துப் பலவாதங்களுநட ந்து, கடைமுறை விவர்த்தோ பாதான மென்பதனை நிலைநாட்டிச் சூதசங்கிதை முதலிய நூற்பிரமாணங்களால்வரனைவரையும் சுத்த சிவாத்துவிதியராக்கிச் சிவாகமங்க ளனைத்திற்கும் சரியை, கிரி யை முதலியன, ஞானசாதனமாகப் பயனைவகுத்து, கௌடபாத காரிகைகளில் உள்ள, ஆகமசாந்நிக்கு வகைமைகளைக் கூறியவத னால் ஆகமக்கருத்தினை விளக்கி உலகத்தை அனுக்கிரகித்து, வா தியர் நியாயம், சற்பம், விதண்ட முதலிய வாதபேதங்களால், வே தாந்தப் பாற்கடலுள், மதங்களாகிய ஓடதிகளை (மூலிகைகள்) இட்டு, நியாயமந்தரமலையால் பிரமாண வாசுகிபிணித்து, வாதிப் பிரதிவாதிகளாகிய தேவாசுரர் கடையுமிடத்துண்டாகிய விடமு ண்டு, அத்துவித அமுதத்தினை, வீட்டு விருப்ப வானவர்க்குக் கொடுத்து, சங்கரபகவற் பாதராகிய சிகண்டமூர்த்தி, ஆநந்த சந் திர மோலியாய், யாவரானும் பூசிக்கப்பெற்றார்.

ஆறும் அத்தியாயம் முற்றிற்று.

## ஏழாம் அத்தியாயம்.

### சங்கரர் வியாசரோடு பிரசங்கித்தல்.

காசித் திருப்பதியின் கங்கைக்கரையில் சங்கர பகவற்பாதர் தமது மாணாக்கர்க்கு "சாரீரக மீமாம்ஸா பாஷியத்தினை" ஓதுவித்திருக்கையில், உச்சிப்போதாதலும் மாணாக்கர் சோலை ...... ராக அவர்களோதலைச்சாந்திசெய்து எழுந்திருக்கையில் மிக்க ஒளியினையுடையதோர் விருத்த வேதியர் அங்குவந்து, நீயார்? இவர்கட்கு என்னை சொல்கின்றாய்? என்று வினாவினார். அப்போது, பற்பாதர்முதலிய மாணாக்கர், இவரே! எமது ஆசிரியராகிய வேதாந்தபாடியகாரர். இப்போது பிரமசூத்திரபாடியத்தை உபதேசிக்கின்றனர் என்றார்கள். அது கேட்டு நீ வேதாந்த பாடியகாரனென்றும், பிரமசூத்திர பாடியத்தினை நின்பாலோதுகின்றோமென்றும் இவர்கள் கூறுகின்றனர். ஆதலின், நீ யறிந்துள்ள தேதேனுமிருக்கின் ஒரு சூத்திரத்தின் பொருள் கூறுதி என்று அவ்வேதியர் வினாவினார். அப்போது, சங்கரமுனி சூத்திரப்பொருளுணர்ந்த அப்பெரியர்க்கு வந்தனஞ்செய்து, நான் சூத்திரங்களுக்குப் பாடியஞ்செய்தோனென்னும் கொள்கையேன் அல்லன் ஆயினும் தேவரீர் எந்தச் சூத்திரத்தினைக்குறித்து வினாவுவதோ? அதனைக் கூறுகின்றேன் என்றனர்.

அதற்கு, அவர் பிரமசூத்திரம், மூன்றாமத்தியாயம், முதற்பாதம் "ததந்தரப்பிரதிபத்தௌ" என்றது முதலிய சூத்திரங்களுக்கு உரை வினாவினார். அதுகேட்டுச் சங்கரமுனிவர், "ஆன்மா வேறு ஒருடம்பினை யடையும்போது சூக்குமபூதங்களாற் றழுவப்பட்டுப்போகின்றான்" என்று "தாண்டிச்சுருதியில்" கூறும் கௌதமர் சைமினியின் வினாவிடை யுரைகளால் உணரப்படுகின்றதென்று விடைகூறினார். அதன்மேல், அவ்வேதியர் நூறுவகையாக வேறுபடுத்தி வினாவிவந்தனர். அவற்றிற்கெல்லாம் சங்கர முனிவர் ஓராயிரவகையாக விடை கூறினர். அங்ஙனம் அவ்விருவருக்கும் எட்டுநாள்வரையியில் தருக்கம் நடந்தது. நடந்தும் முடிவுபெற்றதில்லை. பதுமபாதரவற்றையெல்லாம் கேட்டுணர்ந்திருந்தனர். ஏனையர் அவ்வரிய விடயங்களை யுணரமாட்டாதவர்களாய், இங்ஙனம் இவ்வாதம் நடந்தால் முடிவதெவ்வாறு? இவ்வேதியர் யார்? என்று அப்பதுமபாதரைக் கேட்டனர். அவர் தியானநோக்கால் நோக்குழி அவ்விருவரும்அரி அரனாகத்தோற்ற வினாவினவர்களுக்கு ஐயன்மீர்! நமது குரவனே சங்கரப்பெருந்தகை, வேதியர் நாரணராகிய வேதவியாசனார் இவ்விருவர்க்கும் வாது நேர்ந்தவழி ஏவல் செய்வோனாகிய வேழை யென்செய்யவல்

லேன் என்று கூறினர். அதுகேட்டளவில், பராமுகமாகப் பிர சங்கத்திலிருந்த சங்கரமுனிவர் உள்ளுருத்தப்பட்டவராயினர்.

## வியாசர் சங்கரர்க்கு வெளிப்படல்.

அப்போது சங்கரர் வியாசரைத் துதித்து வணங்கிய வளவில் வியாசர் தமது நிசவடிவத்தோடு வெளிப்பட்டுக் கார்நிறமேனியும், மின்போன்ற சடைமுடியும், நீண்ட தோளிணையுடைய உயர்ந்த காத்திரமும், அகன்ற மார்பும், மலர்விழியும், அழகிய கோலமுகமாக தண்டம் - கமண்டலம் - மான்தோலும், திருவெண்ணீறும் உருத்திராக்கமும் பூண்டு ஒளிவிடுகின்ற படி வங்காட்ட, அதனைத் தரிசித்து, அச்சங்கர முனிவர் இன்பக் கடலுண் மூழ்கிப் பெரும்பத்தியோடு பரமாசிரியன் காட்சி கிடைக்கப்பெற்றதென்று பணிந்து, பதுமபாதரிடத் திருந்தபாடியச் சுவடியை வாங்கி அவர் சமுகத்து வைத்துத் தமது பிரமசூத்திரச் சூரியனுக்கு எனது பாடிய விளக்கால் தீபாராதனை செய்கின்றேன். வேதங்களைப் பிரித்தெடுத்துச் சாகை வகுத்து, சுமந்து, வைசம்பாயனர், பைலர் முதலிய மாணுக்கரால் உலகத்து விளக்கிப் பதினெண்புராணங்களையும் செய்து, அவ்வேத சாரமாகிய மகாபாரதம், ஐந்தாம் வேதயாம்படி வைத்து, எல்லாவற்றிற்கும் விதிப்பாகிய தத்துவ ரகசியமுடைய பிரமசூத்திரங்களைச்செய்து கலைமகள் செல்வமுற்றும் வெளிப்படுத்தியிருக்கும் தேவரீர் சமுகத்தில், நாணமின்றி பாடியஞ்செய்த எனது துணிவைப்பொறுத்து அதனுள் சொற்குற்ற முதலியன வுள்ளனவற்றைத் திருத்தியருளவேண்டுமென்று விண்ணப்பித்தனர். அதுகேட்டு எல்லாமுணர்ந்த அவ்வியாசர் அச்சங்கர பாடியத்தை ஒரு முகூர்த்தகாலம் வரையு முற்று நோக்கி அதனை மார்பிலணைத்து, ஐய! சங்கர! நீ அச்சங்கரரேபோலும், இல்லையேல் என் கருத்தினை யுள்ளவாறிங்ஙனம் வெளிப்படுத்தலாற்ருய் இதனைப் பார்த்ததனுல் எனக்குள்ள ஐயங்களும் ஒழிந்தன. இந்தப்பாடியத்துட் சொற்குற்ற முதலியன ஆராய்ப்புகின் எனதே துணிவுடைமையாமன்றி, நீ செய்தது துணிவுடைமையல்ல. கோவிந்தனுர் மாணுக்கனும் இயற்கை யறிவையுடையவனும் உள்ள உனது வாயினின்றுங் குற்றமுள்ள வுரையெவ்வாறுண்டாம்? நன்று இருந்தது! உன்செய்தி கைலாயத்திலுணர்ந்து இந்தப்பாடியத்தைப் பார்ப்பதற்கே யிங்கு வந்தேன். நான் பிரமசூத்திரம் செய்ததற்குப் பயனிப்பொழுதுதானுண்டாயிற்று. நான் மணிபோலும் மறைத்து வைத்திருந்த தத்துவரகசியங்கள், இப்பாடியத்தால் யாவரு மெளிதிற் பெறும்படி விளக்கப்பட்டன. நீ யென்னேடொத்தவனே! என்கருத்தே நின்கருத்தாகத் தோற்றியதனுல் நானே நீயாக விருக்கின்ருய். நமது ஆசாரிய பரம்பரை வேறுபட்டதில்லை. சுகன் எவ்வாறு எனக்குக் களிப்பைத் தருகின்ருனே! நீயுமவ்வாறே யெனக்கு

மகிழ்ச்சியைத் தருகின்றாய். இயற்கை விளக்கப்பொருளுக்கு மற்றோர் விளக்குக்காட்டவேண்டாம். இயற்கை விளக்காகிய நின்னை நான் ஒளிசெய்யக் கடவதில்லை. களிப்பாயிற்று. என தாச்சிரமஞ் செல்கின்றேனென்று கூறிமறைந்து போவதற்கு வியாசர் முயன்றனர்.

## சங்கரர் வியாசரிடம் அருள்பெறல்.

அப்போது, சங்கரர் பணிவோடும் பத்தியோடும் அவரைத் துதித்து, ஐய ! ஒரு முகூர்த்த காலவரையில் தேவரீர் கருணையோடு மிங்கெழுந்தருளியிருந்தால் இச்சந்நிதியிற்றானே கங்கைக் கரையில் அனித்தமாகிய இவ்வுடம்பினைவிட்டுக் கவலையற்றவனாவேன் என்று விண்ணப்பிக்க அவரை நோக்கி வியாசர், சிறுபோதுதியானித்து, உன்செய்தி நானறிவேன் எல்லாம் வல்லனேயாயினும், என்னை வஞ்சிக்கும்பொருட்டு இங்ஙனம் நடிக்கின்றாய் ! நல்லது ! உனக்குப் பிறப்பினால் நியதிப்பட்ட ஆயுள் எட்டு வருடமே ! நீ தேடிப்பெற்றுக்கொண்டது எட்டு வருடம் அப்பதினாறாண்டும் இப்போது முடிக்கின்றதன்றோ ? இது முதலின்னும் பதினாறு வருடம் நீ உலகுவலம் வரவேண்டுவதாக நான் பரமேச்சுரனைப் பிரார்த்திக்கின்றேன். என் கட்டளைப்படி நீ இன்னும் பதினாறாண்டளவும் இப்பிரமவித்தையை விளக்கஞ்செய்து, பிரமனாதி தேவதைகளின் அம்சங்களோடு பிறந்திருக்கும் மதவாதியரை வென்று அத்துவிதத்தினை நிலைநாட்டவேண்டும். கலியின் கொடுமையால் மகிமை குறைந்து வருகின்ற புராணத்துட் கூறப்பட்ட தெய்வத் திருப்பதிகளில் கலை விருத்தியாகும்படி செய்து, சைவ வைணவ முதலிய அறுசமய தருமங்களையும் முறைப்படி வகுத்து ஆற்றலில்லாதவர்களாயுள்ளவர்க்கு எளிதில் பிரமமுண்டாகவும், ஞானத்திற்குக் கருவியாகிய கருமபத்தி யோகமார்க்கங்கள், தக்கவர்களுக்கு உதவியாகவும், சில பலசிறு நூல்கள்செய்து இக்குருமரபு கெடாதபடி குருபீடங்களை வகுத்து முப்பத்திரண்டு வயது மானவுடனே கைலைக்கு யாக்கையோடு அடைந்து சிவசொரூபனாகின்றாய் என்று கூறினர்.

அதுகேட்ட அச்சங்கரர் ஐய ! தாம் கட்டளையிட்டவாறு நடப்பதற்கும், உலகத்தில் தமது பிரமசூத்திரத்திற்கு என் பாடியஞ் சிறப்பதற்கும் தேவரீரருளே வேண்டும் என்று விண்ணப்பித்தனர். அப்போது வியாசர் ஐய ! சங்கர ! உனக்கும் என்னருள் வேண்டுமோ ? அங்ஙனமே யாகுக ! உன்பாடியம் சுருதி யுத்தியனுபவமாயிருத்தலின் இதுவே துணிபென்று நன்காராய்வோரனைவர்க்குந் தானேதோன்றும், ஆயினும், என் கருத்தைக் காத்தலின்பொருட்டு அது வெற்றிபெறுக என்று நானும் வாழ்த்துகின்றேன். பரமேச்சுர ஆக்கினையால் அவ்வாறேயாம். கலிக்கொடுமையால் கௌதமர் முதலியோர் சாபத்தினாலழிந்த வேதியரிடத்

துக்காமம் வெகுளி முதலியன நுழைய அவர்கள் பிரிந்து, என் சூத்திரங்களுக்கு வேறு வேறு பொருள்கூறி காலத்திற் கேற்ற படி வல்லாமை செய்வர். அதுவுங் கடவுளாணையேயாயினும் அவ ற்றுள்ளும் தருமக்கருவியாகிய சில விடயங்கள் அமையும்படி தேவர் கூறுபாடு அவற்றுட்சேர்ந்து முயலாது விடாது. அவை இந்தப்பாடியத்தைக் குற்றங் கூறினும் இது புடமிட்ட பொன் போலும் வலுவுற்று விளங்குமன்றி மறைவுபடாது. அவ்வக்கால ங்களில் கடவுளாணையாய் ஒவ்வோர் பெரியர் தோன்றி நின்மாணு க்கர் பரம்பரை யடைந்து, வேண்டுவனவாகிய நூல்களைச்செய்து உன் கருத்தினை விளக்குவர். தேவிகரத்திற் பிறந்த கங்கை அனை வரையு முழுகுவித்து "உலகபாவினி" எனப்படும். சங்கரமுகத்துத் தோன்றியபாடிய "சூக்தி" யாவரையு மெடுத்துவிட்டு உலகபாவன மாக்குகின்றது. இதுவே வேறுபாடு. இவ்விரண்டற்கும் மூலம் சிவஞானமாதலின் அதுவே சிவனது கங்காதரத்தன்மையாம், அக்கடவுளிடத்துள்ள ஞானவின்பவெள்ளமே இப்பாடியவுரை வடிவாயும் கங்கை வடிவாயும் சுத்தமாக விருக்கின்றது. இக் கங்கை யுலகத்துட் சுத்தமாயுள்ளவரையில் உன்பாடியம் சுத்த மாய் வெற்றிபெறும் நீ சந்நியாசியே யல்ல சந்நியாசர் அரசாக விருக்கத்தக்காய். உனக்கு வியாக்கியான சிம்மாசனாதீசுவரன் என வும், ஷடுத்தரிசனஸ்தாபனாசாரியன் எனவும், ஸ்ரீமண்டலாசாரியனெ னவும், சருவதந்திர சுதந்தரனெனவும் நான் கொடுக்கும் நான்கு விருதுகளும் இம்மண்ணுலகத்தேயன்றி பிரமலோகத்தும் பிரம தேவன் நான்கு முகங்களாலும் உன்கைலாச யாத்திரை காலத்தில் உன்னைப்புகழ்வன். நீயும் உன் மாணுக்கர் பரம்பரையும், உலக குருவாக விருக்கக்கடவது என்று அனுக்கிரகித்து, தமது கமண் டல நீரால் அச்சங்கரமுனிக்கு அபிடேகஞ் செய்து, வாழ்த்தி மறைந்து போயினர். அப்போது "ததாஸ்து" என்று அசரீரி மொழியுண்டாயிற்று. விந்துமாதவர் காலவயிரவர் முதலிய தேவ வடிவங்கள் முற்றும் அதே சொல்லை எதிர் ஒலியாக வொலித் தன. அதனைக்கேட்டு அக்காசிப்பதியாரனைவரும் வியப்புற்றிருந் தனர். இவ்வாறு பரமாசிரியனருள்பெற்ற சங்கரமுனிவர் தம் மாணுக்கரோடும் அங்கிருந்தனர்.

## சங்கரர்பிரயாகையடைதல்.

பின்னர் சங்கரமுனிவர் மாணுக்கரோடும் பூசை புத்தகங்க ளோடும் புறப்பட்டு * பிரயாகையை யடைந்து, அங்கு வேதத் தாற் புகழப்பெற்ற கங்கை † யமுனை ‡ சரஸ்வதி யாற்றின் கூடல்

* இது இப்பொழுது "அல்லஹாபாத்" என்று பெயர்பெற்றிருக்கி றது.

† "காளிந்தி" என்றும் பெயர். சூரியனது மகள்.

‡ இந்நதி அந்தர்வாகினியாய்க் கலப்பதாய்ப் பிரமாணம்.

வடிவாகிய திரிவேணி வெள்ளத்தைக் கண்டுவணங்கித் தென்முக மாகவெண்ணிறக்கங்கைசத்துவஞானம்போலும், கிழக்குமுகமாக கருநிற யமுனை தாமதக்கிரியைபோலும் அக்ஷயவடத்தருகு ஊற் றினின்றும் செம்மைகலந்த பசுநிறச் சரஸ்வதி இராஜச விச்சை யைப்போலும் வர, அத்திரிவேணி இடைபிங்கலை சுழுமுனைநாடி களின் கூடலிடமாகிய புருவ நடுப்போலும் பிரணவவுபாசனைக் குத் தக்க சிவதீர்த்தமாதலின் அங்கு விதிப்படி * நீராடி நித்த கருமமுடித்து, திரிவேணிதுதிசெய்து, அதன்கரைக்கட் † சோலை யுள் சிறுபோதினைப்பரிறி யிருந்தனர்.

## சங்கரா பட்டபாதரைச் சந்தித்தல.

அங்கே கலிக்கொடுமையால் உலகாயுதர் புத்தர் அதிகரித்து அறமொழித்த வேதங்களை நிலைநிறுத்தி வேதியர் கூட்டத்தினைக் காக்கும்படி சுப்பிரமணியர் அவதரித்தாற்போலும் குமாரிள பட்டபாதர், அப்புறமத வாதியர்பால் நாத்திகநூலை நன்குணர்ந்து அரசவை யறிய அவரைவென்று மலையேறிக் குதித்துப் பிரமா ணஞ்செய்து வெற்றிபெற்று, கல்வியாசிரியர்களாகிய புத்தர் குலத்தை வேரறக்கெடுத்தாராதலின் அக்குருத்துரோக பாதகத் தினை யொழித்துக்கொள்ளும்படி வைதிகவிதிப்படி மரணாந்தப் பிராயச்சித்தம் செய்யவிரும்பி "துஷாக்னியில்" (உமித்தீ) சுடப் படுகின்றார் என்றொரு சத்தமுண்டாயிற்று.

அச்சத்தங் கேட்டளவில் சங்கரமுனிவர்மாணாக்கரோடு அத் தீயினருகு சென்றனர். அங்கு விரதவைராகத்தோடும் வெந்து கொண்டிருக்கும் பட்டபாதர், தமது மாணாக்கராகிய பிரபாகர ராதியரால் அச்சங்கரமுனிவரைப் பூசிப்பித்து, என் இறுதிக்கு இச்சங்கரமுனி சிவனைப்போல எனக்குத் தரிசனை கொடுத்தருள வந்தார். ஆயின் இவர்செய்த வேதாந்த பாடியத்தைக் கேட்டல் வேண்டுமென்றும், நான் பூருவ மீமாம்ஸை சாபர பாடியத்திற்கு எண்ணாயிரங் காரிகை விவரண மெழுதினாற்போலும் இவ்வுத்தர மீமாம்ஸை சங்கரபாடியத்திற்கும் விவரணமெழுதிப் பயன்பெறு மாறு மிகவேண்டி யிருந்தேன். அப்புண்ணியப்பேறு பெற்றேற னில்லை என்றும் கூறினார். அதுகேட்ட சங்கரமுனிவர், அவ்வா றாயின் இதற்குள் இவ்வளவுவிரைந்து இந்தக்கொடியநோன்பை

* இவ்விதம் சங்கரப்பெருந்தகை திரிவேணியில் நீராடும்போது தன தன்னையை நினைத்து முழுகினாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது "அன்னையும் பிதாவு முன்னறிதெய்வம்" என்ற முதுமொழியைப் பிறப்பி னமிசத்தானே அவ்வகைய வியற்கைய ரன்றெனினும் உலகறியத் தரும வொழுக்கம் நிறுத்தியபடியாம்.

† மேற்படி திரிவேணி நதிக்கரையிலோர்தமாலவிருக்கத் (பச்சிலை மரமூத்) தினடியி லிளைப்பாறி யிருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

யேன்பூண்டாயென்று வினவினர். அதற்குச் சிறந்த வேதியனாகப் பிறந்தகடனுக்கு வேதநிந்தகராகிய நாத்திகரையழித்து, அவ்வழி முள்ளையறக்களைந்து, நிலைபெற்றபுகழ்தேடவேண்டுமென்ற பெருங்கருமத்தினை யிளமையிற்றானே விரதம் பூண்டேன். அதற்குப் பெரியரருளால் ஆத்திகநூலை யெளிதுணர்ந்திருந்தும், நாத்திக நூலையாயினும் குருமரபானன்றி உண்மை யுணரலாகாமையின் புத்தமாணாக்கர்வேடம்பூண்டு அவர்களைக்கூடி அதனையுணர்ந்தேன். அவர் வேதநிந்தை செய்கையில் என்னளவைக் கடந்து கண்ணீர் வந்தது. அதனை நான் வேறுகுறியாகக் காட்டினும் அவர்கள் நம்பாது இவன் அந்தணனேயாமென்று குறிப்பில் உற்றறிந்து, ஆத்திகர் வேள்விப்பொருட்டாம் பசுக்கொலை ஹிம்சையில்லாதவாறு போல மதக்காப்பின்பொருட்டுச் செய்யும் * அந்நியக்கொலையும் அஹிம்சையேயென்று அவர்சமயவுட்கருத்தாதலின், யாமிருந்த அக்கல்விச்சாலையின் ஐந்தாவதடுக்கினின்றும் என்னைக் கீழ் ஊக்கித் தள்ளிவிட்டனர். நான்விழுகையில், வேதமுண்மையேல் நான் பிழைக்க என்றனன். அங்ஙனம் நிலத்தின் விழுந்தும்பழுதின்றிப் பிழைத்தெழுந்தேன். "உண்மையேல்" என்று ஐயப்பட்ட குற்றத்தால் ஒற்றைக்கண் எனக்கு இல்லையாயிற்று. அதுமுதலவர்க்குமெனக்கும் பெரும்பகையாயிற்று. அவ்வன்மத்தினை யுள்வைத்து பாம்பைப்போலும் வஞ்சம்பூண்டு, மிக அன்புவைத்துரைத்த அப்புத்த குருவினையும் † அக்குடியையும் வேரோடு நாசஞ்செய்தேன். அக்கொடுமை என்னுள்ளத்தைச் சுடுவதாயிற்று. "எழுத்தறிவித்தவ னிறைவ"னாகவே எனக்கு நூலறிவுகொளுத்தி மானுடனேயாகச் செய்தவனை யென்னென்பது? அப்படிப்பட்ட குரவனுக்குத் தீங்கு செய்த பெரும்பாதகமும், தருக்க யுத்திகளால் வென்று கடவுளுண்டென்று நிலைநாட்டிடப்பின் வேத கருமகாண்டத்துட் பிரமாணத்தினை நிலைநிறுத்தும்பொருட்டு ஜைமினிமதத்துட்புகுந்து மீமாம்ஸை யுத்திகளால் தருக்கரைமறுத்து, கருமத்திற்கே சுதந்தரமுடைமை நாட்டிக் கடவுள் வேறில்லையென்று நிலைநாட்டினேன். இப்படிப்பட்ட ஈசுவரனுக்குச் செய்த துரோகமாகிய பெரும்பாதகமும் அறக்கொடிய வாதலி னிவ்விரண்டிற்கும் பிராயச்சித்தஞ் செய்துகொள்ள வேண்டுவதாயிற்று. அங்ஙனம், வன்மத்தோடு கொடிய கருமஞ்செய்ததால் வேதவிதிப்படி அடயோகத்தால் இக்கொடிய நோன்பினைச்செய்து மரணாந்தப் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளக் கருதினேன். இப்படிப்பட்ட நான் பாவத்தை யொழித்துக் கொள்ளாமலே பரிசுத்தமாகிய உமது வேதாந்தபாடியத்திற்கு விவரணம்செய்வதற்கு எங்ஙனம்

---

* அஹிம்ஸா பரமோதர்ம:—"எல்லாவற்றிற்கும் மேம்பட்ட தருமம் இம்சைசெய்யாதிருப்பது" என்பது பௌத்தமதக்கொள்கை.

† புத்தகுருவுக்கு "ததாகதர்" என்றும் பெயர்வழங்கும்.

அதிகாரியாவேன்? பிராயச்சித்தக் கருத்துவந்தபின் முன் அதனைச்செய்துகொள்ளாது ஒழிக்கலாகாதே. இத்தடைகளால் என்னெண்ண முடிப்பதற்கிடமின்றி இங்ஙனம் விரைவுபட்டேன் என்றனர். *

அதைச் சங்கரமுனிவர்கேட்டு, அந்தணர்தலைவ! வேதபத்தியால் இத்துணைப்பாடுபட்டதன்றி உன் குடும்பப்பயன்பொருட்டன்று. அதுவுமன்றி, எல்லாப்பாவங்களையும் போக்கவல்ல வேதமந்திரங்களை நன்கு ஓதியுள்ளனை, அல்லதூஉம், உன்னுள்ளத்தில் அதுபற்றி அநுதாபமும் உண்டாயிற்று. நூலுணர்ந்தநல்லறிவுடைப் புலவனுமாயினாய், இக்காரணங்களால் உனக்கு அத்துணைப்பாவமில்லை. ஆன்மஞானமாகிய தீயைப்பெற்றுக்கொண்டால் எவ்வளவுபெரும் பாவமாயினும் பருத்திமலையைத் தீச்சுட்டாற்போலுஞ் சுட்டுவிடலாம். குருவருளால் அதனையடையாமல் இக்கொடுமைவழிச்செல்வது நின்போல்வார்க்குத் தக்கதன்று. ஆயினும், வேதத்தின் உளவறியாது கருமவேட்கையால் இவ்விரதம்பூண்டனை, பூணினும் குற்றமின்று, இக்கமண்டலநீரால் பாதிவெந்த வுன்னுடம்பைத் தழையச்செய்து ஆற்றலைத்தந்து பிழைப்பிக்கின்றேன். நீ உன்னாற்றல் முழுவதுங்காட்டி யெமது பாடியத்திற்கு விவரணஞ் செய்தி என்று கூறினர்.

அதுகேட்ட பட்டபாதர், தம்முடம்பு பாதிவரையினும் வெந்துவந்திருந்துந் தமது அடயோகவன்மையால், அத்தீவெப்ப வேதனைக்குச் சிறிதும் கவற்சியடையாமல் சிறுபோது தியானிக்கையில், அவர்க்கு அச்சங்கரமுனி சிவரூபமாகத் தோற்றக்கண்டு வேதமந்திரங்களால் துதித்து, ஐய! உலகமுழுதும் இச்சையளவால் செய்யவல்ல உமக்கு இஃதோர் அருமையதோ? உம்மைத்தரிசித்தபின் பாவமேது? கழுவாயேது? ஒன்றும் வேண்டாவாயினும், பிறந்தது முதலின்றளவும் வைதிககருமங்குறைவற நடத்திவந்து, இப்போது, உமதுபாடிய விவரணஞ் செய்தலாகிய புகழிச்சையால் இவ்வநித்த வுடம்பினை வேண்டித்தொடங்கிய விரதத்தினைக் கெடுப்பது மரபன்று. நான் தீயால் வேகப்படினும் யோகவாற்றலால் தமது பாடியத்தினைக் கேட்டு விடயங்களை நன்குணரவல்லேன். ஆதலின், கருணைசெய்து, அந்நூலை, என்மாணாக்கன் பிரபாகரன் கையிற் கொடுத்தால் அங்கங்குச் சிறந்த பாகங்களைக் கேட்டுப் பின் என் கருத்தைக் கூறுவேன் என்றனர்.

* இப்பட்டபாதர் "இளையபிள்ளையார்" அம்சமாகத் தான்கருதி வந்த கருமமார்க்கத் தாபனம் நிலவச்செய்து மேல்நடக்கவேண்டும் ஞானமார்க்கம் சங்கரப் பெருந்தகையாலேயே நிலவுமாதலாலும் தாமியற்ற வேண்டியவேறு கருமமின்றியதாலும் இவ்வாறு "உமித்தீயால்" தாம்முடிவடைந்தனரென்றுஞ் சொல்லப்படும்.

## சங்கரரைப் பட்டபாதர் மண்டன பண்டிதரிடம் செலுத்தல்.

அப்போது, அச்சங்கராசாரியர் கட்டளையால் பதுமபாதர்கொடுத்த பாடிய நூலை, பிரபாகரபட்டர்ஓதினர், அதனைப்பட்டபாதர் திருந்தக்கேட்டு, தாமுணர்ந்திருந்த எல்லா நூற்கருத்து மொப்ப நோக்கி, வேதாந்தமே யிந்தப் பாடியமாக விருக்கின்றது. ஆயின் உபநிடதப்பொருள் வெளிப்படாதுள்ளது. இதனுள்வெளிப்பட்டுள்ளது, இவ்வளவே வேறுபாடன்றி வேறு ஒரு சிறிதுங்கண்டதில்லை, இதற்கியார்விவரணம் எவ்வளவு எழுதினும் இதனுமொரு சொல்லினுற்றல் சாலாது. ஆதலினிதுவே சாலும்எழுதத்தொடங்கின் எத்தனையிலக்கங் கிரந்தமெழுதினும் போதாது. கடவுள் ஒழிய பிறர்யாரிது செய்யவல்லவர். இதனைக்கேட்டதனுல், நான் ஓதியுணர்ந்தபயன் முழுவதும் பெற்றேன். இங்ஙனம், யான் அடைக்கலம்புகுந்து மாணுக்கனே ஆயினேன்; இறுதிக்காலத்து ஏழையாய்ப்பத்தி வைராகத்தோடு வீடுவேண்டி வருந்துவேனுக்குத் திருவடிதந்து, தாரகமுரைத்துக்காத்தல்வேண்டும். வாதிகளையொழிக்கும்பொருட்டு, இப்பாடிய விவரணஞ்செய்வதற்கு, வயதின்வலி, கல்வி மதம், காமக்குரோதமுஞ் சிறிதுள்ளதேல் அது இனிது முடியும். அதுநிமித்தம் நெடுநாளெனக்கு மாணுக்கனுகவிருந்தவன் இப்போதென்னினும் சிறந்தவறிவனாய் எல்லாம் வல்லகல்விச்செருக்கோடும் ஆரியாவருத்தப் புலவரெல்லாம் நன்குமதிக்க அரசர்க்கெல்லாம் குரவனுப் பலமாணுக்கரோடு கருமகாண்ட நிலைநிறுத்தும் ஆசிரியனென்று விசுவரூபமண்டன பட்டாசாரியன் என்னும் வேதியனெருவனுளன். அவன் பிரமனே போல்வன் அவன் இல்லறக்கிழத்தியாகிய உபயபாரதிதேவி அவனினும்சிறந்தவர், அவர் அறியாதவிடயமில்லை. அன்றியும்மந்திரசித்திமகிமையுடையராயு மிருக்கின்றார். அவர்பெயர் உண்மைப்பெயரெனக் கூறலாம். அவரே கலைமாதுபோலும், அவ்வேதியனைவெல்வது அருமை. எங்ஙனமாயினும் அவனைவென்று மாணுக்கனுக்கிக்கொண்டாற்போதும் உலகைவென்றது போலாம். பின்வேறுவெற்றி வேண்டாவாம். அவ்வேதியன் இப்பாடியத்திற்கு நல்லவிவரணஞ் செய்யவல்லன். அக்கருமம்புரியில் இமயமுதல் சேதுவரையினும் இப்பாடியம் நிலைபெற்றவாறு மென்றுகூறி, இனிப்போது எனக்கில்லையாதலின் விரைவில் பிரம உபதேசம்செய்ய வேண்டுமென்றனர்.

## சங்கரரிடம் பட்டபாதர் அனுக்கிரகம்பெறல்.

அப்போது, கருணைக்கடலாகிய அச்சங்கரமுனிவர், மைந்த என்று அபயகரத்தோடும் அத்தீக்குட் சென்று, உச்சிதொட்டு வலக்காதில் தாரகநிலைமையை உபதேசித்து அனுக்கிரகித்து வந்தனர். உடனே அக்குருவின்கைப்பரிசத்தால் அப்பட்டாசாருக்கு, அத்துஷாக்கினியால் வேவது நிலவிலிருந்தாற்போலும் அமுத

வெள்ளத்துண் மூழ்கினாற்போலும் இன்பமாகவேயிருந்தது. அப்போதவர், குருவினாற்றலைத்தன் மாணாக்கர்க்குரைத்து, அவரனைவரையும் அக்குரவர்பிரபினுக்கு அவிரோதியாகவிருக்க நியமித்து, குருதுதிசெய்து, பின் ஷண்முகி முத்திரையால் புருவ நடுவட்டாரக நிலையில் மனத்தை நிறுவியோகநிட்டனாய், பிரமநிலைபற்றிச் சகுணஉபாசனையில்பிரமரந்திரநாடியால் "அர்ச்சிராதிமார்க்கத்தில்" தேகத்தைவிட்டனர். அங்குண்டாகிய நன்மணம் ஓர் யோசனை தூரத்தளவும் எவ்வுயிர்க்கும் இன்பம்விளைத்தது. யாவருங்காண அத்தீனின்றும்சொல்லமுடியாத பேரொளியொன்றுமேலெழும்பி அனைவர்கண்களையும் கூசும்படிசெய்து சென்றுவிட்டது. அவரிடத்திருந்த விஷ்ணுகலை விஷ்ணுவையடைந்தது. அங்ஙனம் அவ்வேதியனைப் பயன்படுத்திச் சங்கரமுனி மாணாக்கரோடு பாகீரதி மூழ்கி அன்று அப்பரத்துவாச ஆச்சிரமத்தில் அக்ஷயவடவாலடி தக்ஷிணாமூர்த்திபோல மாணாக்கருக்கு நன்கருளியிருந்தனர்.

ஏழாம் அத்தியாயம் முற்றிற்று.

# எட்டாம் அத்தியாயம்.

## சங்கரர் மகிடமதியடைதல்.

சங்கரமாமுனிவர் பதுமபாதர் முதலிய சீடர் கூட்டத்தாற் சூழப்பட்டவராய்ப் பிரயாகையினின்றும் புறப்பட்டு * இரேவா நதிப் பக்கத்துள்ள மகிடமதிநகரத்தின் உபவனத்தினையடைந்து அந்தயாற்றில் நித்தகருமங்களை முடித்து மாணுக்கரை யங்குவிடுத்து, தாமொருவரே † விசுவரூபமண்டன பட்டாசாரியரைப் பார்த்து வரவேண்டுமெனப் புறப்பட்டனர். அப்போது அம்மண்டனர் மனைக்கு இரேவாநதியினின்றும் சலந்திரட்டிச்செல்வாரை நோக்கி, மண்டன பட்டர் மனையெங்குள்ளதென்று வினவினர். அதற்கு அவர்கள், அரசன் கோயிலே போலும் மேன்மாடங்களோடும் விளங்குவதாய் எந்தமனைவாயிலின் அலங்காரப்பொருட்டுக்கட்டப்பட்ட கூடுகளிலுள்ள கிளிகள் "வேதம், சுதந்தரப்பிரமாணமா? பரதந்திரப் பிரமாணமா? வேதப்பிரமாணம் தானே விளங்குவதா? பிறிதொன்றால் விளங்குந்தரத்ததா?" என்று வினுக்களைக்கூறிச் சிலமீமாம்ஸபக்கமாயும், சிலதருக்கபக்கமாயும், வாதிப்பிரதி வாதிகளைப்போல் வாதப் பிரசங்கங்களைக்கூறி யவர் போலும் உரையாடுகின்றனவோ? வேறுசில உலகு நித்தமோ? அநித்தமோ? எனவும், பூவை முதலியன "தொழிற் கருத்தனுக்குக் கருமம் பயனைத்தருகின்றனவோ? கடவுள் தருகின்றாரோ? எனவும் பிரசங்கிப்பவோ? அது மண்டனபண்டிதர் மனையென்றுணரப்படும். அன்றியும் யார் மாணுக்கரும் அவர்கள் மாணுக்கருமாகிய கல்வி விருப்பத்தினர்களுடைய கோலாகலம் எந்தவீதியர் வீதியைச் சத்தப்பிரம மயமாகச் செய்கின்றனவோ? அதுவே மண்டன மிசிரர் அக்கிராரம் என்று கூறினர். பின்பு, அச்சங்கரமுனிவர் அங்குவந்து பார்ப்புழி வாயிற் கதவு மூடப்பட்டு, உச்சிப்போது, போசனகாலமாகவும் வேறுமனுடப்போக்குவர வில்லாததுமாகவும் இருந்ததால் தமது வரவையுள்ளே தெரிவிக்கக் கூடாததாகவிருந்தது. அப்போது, அவர் தமது யோகப்பழக்கத்தினுன் மேலெழும்பிக் கலைவெற்றிக்கொடியால் விளங்கும் மேன்மாடங்களைக் கடந்து, மிகுதியாகவிருக்கும், அம்மனை முற்றத்தின்கண்ணே யிழிந்தபோது, அம்மனைத் தலைவராகிய விசுவரூபமண்டன பட்டாசாரியர், வேதவியாசரையும், ஜைமினி முனிவரையும் தந்தவலிமையால் வருவித்துக்கொண்டு பிதிர்கரும

---

* "நருமதை" என்னும் கூறுதலுண்டு.

† இவர் தந்தையின் பெயர் "இமமித்திரர்"

த்துக்கு அவர்களை நிமந்திரணஞ்செய்து பூசித்துக்கொண்டிருந்த தலை நோக்கி, "* இது நல்லதருணம்" என்று சமீபத்திற் சென்றார்.

## சங்கரர் மண்டன பண்டிதரைச் சந்தித்தல்.

அப்போது, அம்மண்டனபண்டிதர் அவரைநோக்கி "குதோ முண்டி ?"=சந்நியாசி யெங்கிருந்து வந்தது ? என்றகருத்தால் வினவ அதற்கு அச்சங்கரமுனிவர் அச்சொல்லுக்கு எங்கிருந்து தலைமழிக்கப்பட்டது ? என்றபொருள்செய்து, "ஆகளான் முண்டி"=கழுத்தினுக்கு மேலிருந்து தலை மழிக்கப்பட்டது ? என்று விடைகூறினார்.

பின். (ம) "குத:"=எங்கிருந்து ? என்றமொழியால் வழி என்னால் வினவப்பட்டது என்று "பந்தான்தே புருச்சியதேமய" என்ற யோக்கியத்தைக் கூறினார். அதற்கு (ச) உன்னை வினவவில்லை மார்க்கத்தினை வினவினேன் என்றபொருட் கருத்தைச்செய்து "கிமஃபந்தா',=வழி என்னை கூறிற்று ? என்று வினவினர்.

அவ்வளவில் அம்மண்டண மிசிரர் வெகுளிகொண்டு "தேமா தாரண்டா"=உன்தாய் முண்டை என்று கூறிற்று என்றார். அது கேட்டுசங்கரர், "துவம்மாதாரண்டேத்தியாஹஹிமண்டன !" மண்டன, உன் தாய் முண்டையென்று கூறிற்றன்றோ ? என்றனர்.

"சுராபீதாவா"=கள்குடிக்கப்பப்பட்டதோ ? என்று மண்டனர் வினவினர். சங்கரர், கள் பசுமையதோ ? என்றவாறுகப்பொருள்படுத்தி "நஹிசுராசுவேதா"=அல்ல, கள் வெளுப்பன்றோ என்றனர்.

"அஹோஜாநாசி தத்வர்ணம்"=ஓகோ !! அதன் வண்ணமறிவீர் என மண்டனர் கூறினர். "அஹம்வர்ணம் பவாந்ரசம்"=நான் வண்ணமறிவேன்! நீசுவையறிவாய் எனச்சங்கரர் கூறினர்.

"ஓய் ! கொடுமை மனமுள்ளதுறவி ! கழுதையும் சுமக்கலாற்றாதபாரமுடைய கவந்தி சுமந்திருக்கின்ற வுனக்குக் குடுமியும் பூணநூலு மென்னை பாரமாயிற்று ? எனமண்டனர் வினவினர். அதற்குச் சங்கரர் உன்னப்பனாலும் சுமக்கமுடியாத கவந்திகை சுமந்திருக்கின்றேன். குடுமியும் பூணநூலும் வேதத்திற்குப்பாரமாகின்றது என்றனர்.

---

* மண்டனபண்டிதர் மகாவிஷ்ணுத் தானத்தில் தருப்பையை வைத்து அதற்கு பூசைசெய்யப்போகும் தறுவாயில் அவ்விடம் சங்கரப் பெருந்தகையின் இரண்டு பாதங்களிருப்பதைக் கண்டு, அவரை நிமிர்ந்து பார்த்து, கர்மகாண்ட விதிப்படி சந்நியாசிகளைச் சிரார்த்தத்தில் பார்க்கலாகாதென்ற வைராகத்தின்மேல் சங்கரரைப் பலபடவைததாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு, இடக்குரை, சலவுரை, விரோதாபாசம், என்ற அலங்கார வகைமைகளால் சில நேரம் வினாவிடைகள் நடக்கையில், அவற்றைக் கேள்வியுற்றிருந்த வியாசர், ஜைமினிமுனிவரிருவரும் "ஐய! விசுவரூப! நியமமாக விருக்கத்தக்க கருமகாலத்தில் இல்லறத்தான் வீணுரை யாடலாகாது. இச்சந்நியாசியின் தகுதியை நீயறியாய்! வேதாந்தங்களுக்கு உடன்பாடாயுள்ள சந்நியாசத்தினையடைந்து, பிச்சைவேண்டி வந்தவனை இல்லறத்தான் உபசரிக்கவேண்டுவது கடன். அதனுள்ளும், சிராத்தகாலத்தில் வந்தால் அவனை எவ்வளவும் விலக்கலாகாது. ஆதலின் எம்மோடு இச்சந்நியாசியையும் சிராத்தவுண்டிப் பொருட்டு நிமந்திரணஞ்செய்து, விசுவேதேவத்தானத்தாரினும், இருத்திப் பூசிப்பாயாக" என்று தருமபோத வுரைகளால் விதித்தனர்.

## சங்கரர் மண்டன பண்டிதரது பிச்சையை யேற்றல்.

அப்போது, குரவர்கள் மொழியின் சிறப்பினால் குணங்கொள்ளவல்ல மண்டனர், தங்கோபகுணத்தினைவிடுத்து, சாந்தபாவனையால் அச்சங்கரமுனிவர் பாதங்களைப் பூசித்துப் பிச்சையின் பொருட்டுத் தயவு செய்யவேண்டுமென்று அழைத்தனர். அப்போது, அச்சங்கர முனிவர், நான் சோற்றுப் பிச்சையின் பொருட்டுவந்தேனன்று, வாதபிச்சையின்பொருட்டு என்று கூறினர். அதற்கு மண்டனர் களிப்புற்று "என்னுடனின்று வாதிப்பாரும் கிடைப்பரோ? என்று நெடுங்காலமாக எதிர்பார்த்திருந்தவன், வாதிக்கவழைத்தால் விடுவதுண்டோ? நல்லது, நாளை யொருதலையாக வாதபிச்சையைத்தருகின்றேன். இன்று, எனக்குப் பிதிர் கருமகாலமாக விருத்தலின் நீர் என்னிடத்துக் கருணைவைத்து, இச்சோற்றுப் பிச்சையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்" என்று வேண்டிக்கொள்ளும்போது, அச்சங்கரமுனிவர் ஓம், உடன் பட்டோம், என்றனர். உடனே விசுவரூபர் உரையபடிய தன் வாய்க்குற்றத்திற்கு விஷ்ணுசூக்தாதி மந்திர செபங்களால் பிராயச்சித்தஞ் செய்துகொண்டு, அதற்கு முன்பாகவே, வேதவியாசரை விசுவேதேவஸ்தானத்திலும், ஜைமினிமுனிவரைப் பிதிர் ஸ்தானத்திலும் மந்திர விதிப்படி வகுத்துக் கொண்டமையால் சங்கர முனிவரை விஷ்ணு ஸ்தானத்தி லிருக்கவைத்து உபசரித்து, கருமத்தினை நிறைவேற்றிக்கொண்டனர்.

பின்பு, அம்முனிவர் மூவருமாகியவியாசர், ஜைமினி, சங்கரர் தனித்தோரிடத் திருந்து, இளைப்பாறி கலப்பினால் வேத இரகசியங்களைப் பற்றிப்புரையாடிக் கொண்டிருக்கையில் மண்டன பண்டிதர் அங்கு சென்று, "யாமிருவரும் வாதிக்கும்போது, எங்கள் குணக்குற்றங்களை யறிந்து, தோல்வி வெற்றிகளை வகுத்துக் கூறத் தக்ககல்வித்திறம், பெருமையுடைய நடுவோர் இல்லாவழி எங்கள் தருக்கம் வீணாய்க் குரலுலர்ச்சிக்கே காரணமாகின்றது. ஆதலின்

எம்மிடத்து நீவிரிருவரும் கருணைவைத்து, இத்தருக்கத்தில் நடுவராக விருத்தல் வேண்டும்" என்று, வியாசஜைமினி முனிவரை வேண்டிக்கொண்டார். அதற்கு அவர்கள், சிறிதுபோதுசிந்தித்து எல்லாமுணர்ந்தவரா மாதலின் விசுவரூபரே! கல்வியில் உம்முடைய தருமபத்தினியாகிய உபயபாரதிதேவி எல்லா முணர்ந்தவராயும் பக்கவாதியாகாது நடுநிலைமையைச் செலுத்தவல்லராயும் இருத்தலினால் அவரானே உங்கள் தருக்கம் ஒத்தவாறுதீர்மானிக்கப்படும் என்று கூறிமறைந்து விட்டனர். உடனே, சங்கரமுனிவர் யோகப்பயிற்சியால் வான்வழிக்கொண்டு வெளியேவந்து, இரேவாநதியின் கரையின் உபவனத்துள்ள சிவாலயத்திறங்கி யங்குத் தம்மை எதிர் பார்த்துக்காத்திருந்த மாணாக்கரோடு அன்று நடந்த சரிதங்களைக் கூறித் தாம் பிரமசமாதி நிட்டையிலிருந்தனர்.

## சங்கரர் மண்டன பண்டிதரோடுவாதிடல்.

மறுநாளுதயத்தில் அச்சங்கரமுனிவர், நித்தகருமங்களைமுடித்துக்கொண்டு தமதுமாணாக்கரோடு மண்டனபண்டிதர்மனைக்குச் சென்று, அங்கு தருக்கத்தின்பொருட்டு ஏற்படுத்தப்பட்டிருந்த மண்டபத்தில் வாதபீடத்தின்மீது விற்றிருந்தனர். உடனேமண்டனர்,எல்லாக் கலைகளையுமுணர்ந்தவராயும்தமது இல்லறக்கிழத்தியாகியும் இருக்கும் சாரதாதேவியாரைச்சபைத்தலைவராக வைத்துத் தான் வாதவூக்கமுடையராய் வாதபீடத்தின்மீதிருந்தனர். அப்போது, சாரதாதேவியார்சபைத்தலைவராக, அவ்விருவகையாரதுகல்வித்திறத்தினை வகுத்தற்பொருட்டு, மஹாவாதப் பிரசங்கவிதிப்படி, சொற்போர்க் களத்தினை வகுத்து, முரசார்ப்பு, கொடியேற்றம், தேவரைவரித்தல்,பிரமாணக்கோட்டி வகுப்பு, முதலியவாகச் செய்வனசெய்து, வாதித்தானம், பிரதி வாதித்தானம், நடு நிலைத்தானம், சிறந்த சாக்ஷிவரிசை, பிரசங்கவெழுத்துமுறை, இவைகளையும் வகுத்து, வாதவிலக்கணம், தோல்வித்தான விலக்கணம், சமயக் கட்டுப்பாடு, தோல்வி வெற்றிக்குறிப்பு, வாதவொட்டம்,முதலியவற்றையும் வகுத்து, சத்தியமாகிய தருமதேவதையின் சமுகத்தில், அந்தணப் புலவர் சங்கம், அரசாணைச்சமுகம் எதிராக, இருவகை வாதிகளாலும் அவரவர் தருக்கஞ்செய்து சாதிக்கத்தக்க பொருளிது வென்று வகுத்துக் கொண்டபின் வாதத்தினை மேற்கொண்டனர். அக்காலத்தில் எல்லாக் கலைகளையும் வடிவாகவும்,எழுத்தின் றோற்றுவாயாகவும், ஞானவின்ப நிலைமை யாகவும், வாக்கின்செல்வமாகவும் உள்ள சரஸ்வதியாகிய அவ்வுபயபாரதி என்னும் கற்பரசி அச்சபைநடுவே தலைவியாகவிருந்து, அங்கு வேறு சத்தமின்றி விற்றிருந்த வேதிய ரரசராகிய புலவர் கூட்டத்திற்குப் பார்க்கக் கூடாமையாயும் உலகத்து அரியவாயும் உள்ள ஓர் பெரிய ஒளிப்பிழம்பாய்த் தோற்றியவளவில் யாவரும்பயத்தியோடும் ஒருமைப்பட்ட மனத்தினையுடையராய் அந்த வாதசரித்

திரத்தினைக் கேட்டிருந்தனர். சரஸ்வதிதெய்வமே சாக்ஷியாகவுடைய அத்தருக்கவேள்வியில் மந்திரவிதியோடு ஆவாகனஞ்செய்து வருவித்தபடியால் எல்லாத்தேவரு முனிவருஞ் சித்தரும் அச்சபையின் மேலிடமாகிய வான வெல்லையில் நின்றுகேட்டிருந்தனர். தேவர் கலையாற் பிறந்த யோகசித்தரனேகர் வேதியர் வடிவோடு அச்சபைக்குவந்து நிறைந்திருந்திருந்தனர். பணிப்பெண்கள்வடிவுகொண்டு அரமாதர்கள் கவரி, சாந்தாற்றி, முதலியவற்றால் அச்சரஸ்வதிதேவியை யுபசரித்திருந்தனர். மண்டனபண்டிதர் மாணாக்கர் பலர், அச்சபையிலிருந்தா ரனைவரையும் உபசரித்திருந்தனர். சுண்ணந்தீற்றிவெண்மையவாய்ச் சித்திரித்த சுவர்த்தலங்கள் மேற்கட்டி அருகுதிண்டு கம்பல முதலியவற்றால் அழகுசெய்யப்பட்டு, தெய்வவடிவமுதலிய படங்களாலும் பூமாலை மணங்களாலும் குளிர்ந்த இளந்தென்றற்காற்றினாலும், நல்லவொளியாலும் இன்பம் விளைக்கப்பட்டனவாயும், இருவகைவாதிகளின் பிரசங்கங்களின் ஒவ்வொரு முடிவினும், இவைப்பாற்றலாதியின் பொருட்டுப் பலவாத்திய முழக்கத்தக்கவாயும், சாமகான முடையவாயும் விளங்குதலினால் சத்தியலோகத்துள்ள பிரமசபையே இங்கு வந்ததோ? என்றெண்ணும்படி சிறப்புள்ளதாயிருந்தது. அப்போது வாக்கின் செல்வியின் கட்டளைப்படி தருக்கத் தொடக்கத்திற்குக் குறியாகிய முரசார்ப்புச் செய்யப்பட்டது. சோதிடர்களால் அப்போதைக்கப்போது, நாழிகை வட்டிலைநோக்கியளந்து அறிவிக்கப்பட்ட மணியோசை காலக்காட்டாக விருந்தது.

சங்கரமுனிவர் தருக்கத்துட்டோல்வி யடைந்தால், சந்நியாசத்தை விடுத்து, மண்டனமிசிரருக்கு மாணாக்கராகவந்து விடுதல், அம்மண்டன பண்டிதர் தோல்வியுற்றால் சங்கரமுனிவர்க்கு மாணாக்கராய்ச் சந்நியாசம் பெறுவது என்ற ஒட்டம் இருவகை வாதியரும் உடன்பட்டுச் செய்தனர். பின்பு மண்டனரது வாதவூக்கத்தை முன்னுணர்ந்து, சங்கரமுனிவர், சிவேச்சுரர்களொன்றே யென்னும் தமது சித்தாந்தத்தினை பிரதிஞ்ஞையோடு கூறினர், எங்ஙனமெனில்?

பரமார்த்த சத்திய சொரூபமாயும், மலமற்றதாயும், உள்ள பிரமம் ஒன்றே நிபிடம்—நீக்கமற்றதாயும், அநாதியாயும் உள்ள அஞ்ஞான மென்னும் மறைப்பினால் கிளிஞ்சில் வெள்ளியாகத் தோற்றியதுபோல இந்தவுலகெல்லாந்தானாய் ஒளிசெய்கின்றது. இப்படிப்பட்ட திரிபினுக்கு முதலாகிய பிரம சொரூபத்தின் ஞானத்தால் அவித்தையும், அதன்காரியமாகியபிரவஞ்சமெல்லாமும் முழுவதும் விட்டொழிய மீட்டும் பிறவாமே தன்வடிவாயே தானிருத்தல் என்னும் முத்தியாகின்றது என்று உடன்படப் பட்டிருக்கின்றது. இங்கே வேதமுடிவு, எனவே உபநிட தங்களே அளவையாம், என்றவாறு. இதுவே, சங்கரமதம்.

உடனே, குடும்பிகளுட் சிறந்த விசுவரூபாசாரியர் என்னும் மண்டன பண்டிதர், தமது மதத்திற்கு விளக்கமுண்டாக்கும் பிரதிஞ்ஞையைச் செய்தனர். எங்ஙனமெனில்?

ஞானமூர்த்தியாகிய பரமான்ம வஸ்துவினிடத்தில் வேதமுடிவுகள் பிரமாணமாவதில்லை. ஏனெனில்? அந்தப்பொருள் உண்டு என்பதே பிரசித்தியல்ல: அல்லது, கருமசம்பந்தமில்லாத அந்த வஸ்துவினிடத்தில் சத்தங்களினுடைய சத்தி பற்றமாட்டாதாகையால் அந்த வேதமுடிவுகட்காயினும் உலக சம்பந்தப்பொருள்களை யுணர்த்துஞ் சொல்லாகிய வழக்குச்சொற்களால் உலகாரியங்களுக்கும் பிரமாணமுண்டாயிருப்பது போலும் வேதத்துள்ளும் பூருவகாண்ட வாக்கியங்களால் தெரிவிக்கப்பட்ட எல்லாக் கருமங்களும் என்னும்பொருளினிடத்தும் வேதமெல்லாம்பிரமாணமாக விருக்கின்றது. மற்றும், அவ்வகைப்பட்ட கருமங்களினுலே வீடுபேறும் உண்டாகின்றதென்று உடன் பட்டுள்ளது. அக்கருமத்தை இவ்வுலகத்துள்ளே மக்களாயுள்ளார் தாம்பிழைத்திருக்கும் வரையில் செய்துகொண்டிருக்கவேண்டும், எ-று. இதுவே விஸ்வரூபமண்டன பண்டிதர் மதம்.

இங்ஙனமாக அவரவரும் சாதிக்கவேண்டிய மதங்களை வரம்புசெய்து நாடோறும் ஒரு தலையாகச் செய்யவேண்டுவனவாகிய வைதிக நித்த கருமங்களுக்கும், உடற்பின் பாதுகாப்பொன்றினுக்கே வேண்டுவனவாகிய உண்டிவினை முதலிய உலககருமத்திற்கும், வேண்டுங்கால மாத்திரை விட்டொழித்து, மற்றைய காலமெல்லாம் ஓய்வில்லாமலே வகுத்துக்கொண்ட வரம்பு கடவாது, வெற்றியின் மேல் இலங்குவைத்து, சற்பப்பிரசங்கம்,எனவே, வாதம், சர்ப்பம், விதண்டம் என்னும்மூவகைப்பட்டபிரசங்கத்தினுள் விதண்ட வாத மொன்றினை விடுத்து, வெற்றியடைய விரும்பினோர் செய்யத்தக்க பிரசங்கத்தைத் தொடங்கினார்கள்.

பின்பு நடுவறியும் தலைவியாகவிருக்கும் உபயபாரதியார எல்லாமுணர்ந்தவராய்ப் பிரமவாதமென்னும் போர்த்தொழிலுக்குத் தீக்ஷைசெய்து கொண்டிருக்கும் அந்த வாதிப் பிரதிவாதிகளருவர் கழுத்திலும் தோல்விக்கும் வெற்றிக்கும் குறியாகப் பூமாலையொவ்வொன்றை மந்திரித்துச் சூட்டுவித்தார். இப்பூமாலைகள் எப்பொழுதும் வாடாத வியல்பினையுடையன. ஆதலால், யார் கழுத்திற் சூடப்பட்ட பூமாலை எப்பொழுது வதங்கியுலர்ந்து விடுமோ அப்போது, அவர்க்குத் தோல்வியுண்டானதென்று யாவரும் வெளிப்பட வுணரலாமென்று, அந்தச் சபையினுள்ளார் அனைவருக்கும் பொருந்தக்கூறி, பலைக்கண்ணே நிகழும் வேள்வித்தீககருமம், விருந்தோம்பல், பெரியோருண்டி, துறவிகளுக் குணவுமுதலிய தருமவினைகளை நிறைவேற்றும் பொருட்டுச் சென்றார்.

அப்பால், அவ்வாதியர் இருவர்க்கும் தருக்கவாது நடந்தது. வேதவாக்கியமே பிரமாணமாக எடுத்துக் கூறி அவற்றிற்குத் தாம் தாம் மேற்கொண்டு கூறிய பொருளின் கருத்துக்கு ஏற்கு மாறு, தருக்கநூல், வியாகரணநூல், மீமாஞ்சநூல், வேதாந்தநூல் முதலியவற்றின் உடன்பாட்டினையும் நியாயங்களையும் எடுத்துக்காட்டுக்களையும் காட்டித் தாந்தாம் ஒவ்வொரு கக்ஷிகளையும் கூறுங்கால் அதனைக் கேட்டிருக்கும் அந்தக் கல்விக்கழகத்தவர், நன்றாயிருக்கின்றது; நல்லயுத்தி; இதுவே நியாயமென்று புகழ்ந்து வருதலால் வாதிகளிருவருக்கும் ஊக்கமும் மானமும் அறிவும் யுத்திகளும், ஞாபகமும், பிறவுமாகிய குணங்கள் மேலும் மேலும் வளர்ந்து வந்தன. இன்றினும் நாளையதிகம், நாளையினும் மறுநாள் மிகுதியென, இவ்வகை வழக்கும் வளர்ந்து வந்தன. இந்த வரலாற்றைக் கேள்விப்பட்டுப் புறநாட்டின்கணுள்ள பெரியவித்துவான்கள், உணர்ச்சிமிகுதியைக்காண விரும்பிய ஏனைய செல்வர்கள், பிறரும் நாடோறும் மேன்மேல்வரத் தொடங்கினர். நித்தமும் உச்சிப்போதில், உபயபாரதிதேவியார், தமது கணவர் சந்நிதியடைந்து உண்டிவினைக் காலமாயிற்றென்றும், துறவிசமுகத்தினின்று பிச்சைக்காலமாயிற்றென்றும் தெரிவித்துச்செல்ல, அந்தணர் கூட்டத்தோடு எல்லாரும் சென்று, பகற்கடனும் உண்டிவினையும் தீர்த்துக்கொண்டுவந்து, மறுபடியும் வாதத்திற்குத் தொடங்குவர். அவ்விருவாதிபரும் ஒருவர்க்கொருவர் நியாயங்களைச் செலுத்தி அளவைகடவாது மறுப்பு யுத்திகளைக் கூறும்போது இருவர்முகமும் அமைதியோடும் விளக்கத்தோடும் புன்னகையோடும் கூடி விளங்கின. வியர்வை, நடுக்கம், மேல்நோக்கி ஆராய்தல், சிறிதுகாலந்தாழ்த்துநிற்றல், குற்றங்கூறிப்பின்னதனைத் திருத்திக்கொள்வது, மறந்து கூறுவது, எதிரியின் கருத்தறியா தொழிதல், தான் முற்கூறியதனை விடுத்து வேறுகூறுவது, தான் கூறியதொன்றற்குமுரணாகத் தானேகூறுவது, பிரமாணமாகாததனைப் பிரமாணமாகக் கற்பித்தல், பொருளல்லாப் பொருளைக் கூறுதல், கோபித்தல், சலம்பேசல், விடைகூறலாற்றாது மயங்கி மௌனமாயிருத்தல் முதலிய தோஷங்களொன்றும் பிறவாமல், ஒவ்வொரு கணத்திற்கும் நற்குணங்களே மேலிட, ஒருவர்க்கொருவர் சிறப்பப் பிரசங்கித்துவந்தனர். அந்தப்பிரசங்கங்களை அதிகவிரைவோடு சிறிதும் விடாது முறையே யெழுதி பூருவபக்க சித்தாந்த பத்திரத்தை யேற்படுத்துவிக்கும் கூட்டத்தாரும் அவற்றை யொத்திருக்க ஒப்புப்பார்க்கும் கூட்டத்தாரும் சோர்வின்றித் தங்கள் கருமத்தைச் செய்து வந்தனர். இவ்வாறு ஐந்தாறு நாள்வரையிலும், மச்சறப்பாக எல்லா நூல்களிலும் இருவருடைய கல்வித்திறமும் மிகுந்த சூக்குமங்களைப்பற்றி வாதித்தலால் விளக்கப்பட்டு வந்தன, அப்படிப்பட்ட சாதாரணப்பிரசங்கத்தில் தொகையாக விசாரிக்க வேண்டிய விடயங்களெல்லாம் முறையே விசாரிக்கப்பட்டன.

சீவனுக்கும் ஈச்சுரனுக்கும் ஐக்கத்தை நிலைபெறுத்துவதற்கு வேதாந்த வுரைகள் அளவையாவது எவ்வாறு, என்பதனைத் தொடங்கி, ஆகாதென்றுமறுப்பு மண்டனாசாரியரும், ஆமென்றவுடன்பாடு சங்கரமுனிவருமாகச்சிறிது போதுவாதிட்டு வருகையில் மண்டனமிசிரர் அந்த மார்க்கத்தினை யொழித்து, சீவனுக்கும் பிரமத்திற்கும் பேதத்தைச் சாதிக்கவந்தனர். சங்கரர் அதனை மறுத் தொழித்தனர். துவிதத்தையே குறிக்கும் சுருதிகளெல்லாம் விவகாரபேதங்களை யுணர்த்துகின்றன வெனவும், அத்துவிதச் சுருதிகளெல்லாம் சீவன்பிரமம் இவற்றின் அபேதங்களை யுணர்த்துகின்றன வெனவும், சிறந்த அத்துவிதசுருதிகள் விவகார சம்பந்தமான பேதங்களைக் கூறுகின்றன வெனவும், சித்தாந்தஞ் செய்தனர். அந்தப் பிரகரணத்தில் உலகு என்னும் அநாதி பாவா ஞ்ஞாநமும், அதன் காரியமாகத் தோற்றும் விவகாரசம்பந்தமான பூத பௌதிகபேதப் பிரவஞ்சமும் **மித்தை**—பொய் என்பது, பிரமஞானத்தால் முழுவதும் அழிந்துபோவது எனவும், குணமற்றதாயும், குற்றமற்றதாயும் விசேடமற்றதாயும், ஞானமாத்திரையாயும், நிறைவாயுமுள்ள சுத்தமான அத்துவிதப்பிரமம் ஒன்றேசத்திய மெனவும் தேற்றப்பட்டது. அஞ்ஞானவொழிவே முத்தியெனவும், அது இப்பிறவிக்கண்ணே தானே சீவன் முத்தியாய் அடையப்படு மெனவும், அப்படிப்பட்ட பிரமஞானங் கைகூடுவதற்கு **"சகுணநிற்குண உபாசனைகள்"** என்னும் பத்தியிலக்கணமாகிய சிவயோக சமாதி கருவி எனவும், அதற்கு வைராக விலக்கணமாகிய பிரமசரிய விரதமுடைய சந்நியாசமே தக்கதெனவும், நான்கு வேதங்களினுமுள்ள நான்கு மஹா வாக்கியங்களின் விரிவான உண்மை நோக்கப்பொருளை ஆசிரியன் முகமாக உபதேசித்தருளப்பெற்று, கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்பனவற்றால் **"சாப்தாபரோக்ஷம்"**—நூலால் உணரும் புறக்காட்சி என்னும் பிரமக்காட்சி யுண்டாய்ப்பின் சச்சிதானந்த சொரூபத்துள் எழுந்துதல் என்னும் அத்துவித சித்தியுண்டாகின்றது எனவும் முடிவுபெற்றது.

பின்பு, மண்டனமிசிரர் பக்ஷமெல்லாம் மறுக்கப்பட்டுபூருவ *அனிர்வசனீயக்கியாதி—உரையற்றகாட்சி, அசமுச்சிதஞானம்—

* சாதுநிச்சல தாஸவர்களின் விசாரசாகரத்திற் கண்டபடி.

யாண்டு ரஜ்ஜுவில் சர்ப்பம், கிளிஞ்சலில் வெள்ளி முதலியன பிரமமாயிருக்கின்றனவோ, ஆண்டு—

1. சூனியவாதிகள், **அசத்கியாதியும்,**
2. க்ஷணிக விஞ்ஞானவாதிகள், **ஆத்மக்கியாதியும்,**
3. நியாயவைசேஷிகர், **அந்நியதாக்கியாதியும்,**
4. சாங்கியப் பிரபாகரர்கள், **அக்கியாதியும்,**

கருமத்தோடு கலவாதவறிவு, நைஷ்கர்மியசித்தி—பிரமத்தைப் பெறுதல் முதலிய அத்துவிதவேதாந்த சாரத்தின் விடயங்களெல்லாம் சங்கரமுனிவரால் சித்தாந்தஞ் செய்யப்பட்டன. அவர்கரு

5. வைணவ முதலிய பூர்வபக்ஷிகளில் சிலர், சத்கியாதியும்,

6. வேதாந்த சித்தாந்திகள், அனிர்வசனீயக்கியாதியும், கொள்வர்.

1. ரஜ்ஜுவிலும், வேறிடத்திலும் அத்தியந்த அசத்தாகயிருக்கிற சர்ப்பத்தின் பிரதீதி ரஜ்ஜுவிலுண்டாகிறது. ஷை சர்ப்பத்தின் கியாதி அதாவது விளக்கமும் சொல்லுதலும் அசத்கியாதி எனப்படும்.

2. ரஜ்ஜுவிடத்தும், வேறிடத்தும் புத்திக்கு வெளியில் சர்ப்பமில்லை. சகல பதார்த்தமும் புத்திக்கு வெளியிலில்லை. அவைகளின் ஆகாரத்தை புத்தியே தரிக்கிறது. அந்தப் புத்திக்ஷணிக விஞ்ஞான ரூபமாகவிருக்கிறது. க்ஷணிகந்தோறு•முற்பத்தி நாசங்களையடையும் விஞ்ஞானம் எதுவோ அதுவே சர்ப்பரூபமாகப் பிரதீதியாகிறது. இதற்கு ஆத்மக்கியாதியென்று பெயர். ஆத்மா என்றால் க்ஷணிக விஞ்ஞான ரூபபுத்தி, அதன் கியாதியென்பது தோற்றமும் சொல்லுதலுமாம்.

3. புற்று முதலிய விடங்களில் மெய்யான சர்ப்பம் இருக்க நேத்திரத்தினற் பார்க்கப்படுகின்றது. நேத்திரதோஷ பலத்தினுல் சர்ப்பம் சமீபத்தில் தோற்றுகிறது. மெய்யான சர்ப்பத்திற்கும் நேத்திரத்திற்கும் மத்தியில் சுவர் முதலிய மறைவுகளிருந்தாலும் தோஷசகித நேத்திரத்தினுல் மறைபட்ட சர்ப்பமும் பார்க்கப்படுகின்றது. தோஷத்தினுல் சாமர்த்தியம் குறைவதன்றி விர்த்தியாவதில்லை. நேத்திரத்தின் சாமர்த்தியம் திமிரமுதலிய தோஷத்தினுல் குறையும். புற்று முதலிய விடங்களிலுள்ள சர்ப்பம் தோஷசகித நேத்திரத்தால் அறியப்பட்டால் சுத்தநேத்திரத்திற்கு மறைவிலிருக்கிற பொருளின் பிரத்தியக்ஷ ஞானம் உண்டாகாது; ஆனுல் தோஷசகித நேத்திரத்திற்குண்டாகும். ஆதலால் "தோஷமுள்ள நேத்திரத்திற்குச் சாமர்த்தியம் அதிகமாகிறது," என்று கொள்ளும் சங்கைபொருந்தாது. எனெனில், பித்ததோஷத்தினுல் ஜடராக்கினியின் ஜீரண சக்தி அதிகப்படுகிறதைப்போல, நேத்திரத்திலும் இருள் முதலிய தோஷங்களால் வேறிடத்திலிருக்கும் சர்ப்பத்தின் பிரத்தியக்ஷஞ் செய்யத்தக்க சாமர்த்தியம் விர்த்தியாகிறது.

இவ்விதத்தால் புற்று முதலிய ஸ்தலங்களில் இருக்கப்பட்ட சர்ப்பம் அந்நியதா அதாவது வேறு பிரகாரமாய் எதிரிலிருக்கிற ரஜ்ஜுவில் கியாதி (தோற்றதலும் சொல்லுதலும்) எதுவோ அது அந்நியதாக்கியாதி எனப்படும். இது பிராசீனர்மதம். [இந்தமதத்தில் ஓரிடத்திலிருக்கிற வஸ்து வேறோரிடத்தில் தோற்றுவதே பிராந்தி என்று சொல்லப்படுகிறது. வேதாந்த சித்தாந்தத்திற் சொல்லிய அர்த்தாத்தியாஸ ஞானத்தியாஸ ரூபப்பிராந்தி இம்மதத்தில் அங்கீகரிக்கப்படவில்லை.] தோஷமுள்ள நேத்திரத்தினுல் புற்றிலுள்ள பாம்பு பார்க்கப்படுமாயின், மத்தியிலுள்ள வேறு பதார்த்தங்களும் பார்க்கப்படவேண்டும். ஆதலால் மறைவிலிருக்கிற பொருள் நேத்திரத்தினுல் அறியப்படமாட்டாது. ஆனுல், தோஷமுள்ள நேத்திரத்திற்கு ரஜ்ஜுவானது தன் சொரூபத்தோடு விளங்குகிறதில்லை. சர்ப்ப ரூபமாக விளங்குகிறது. ஆதலால் ரஜ்ஜுவின் அந்நியதா அதாவது வேறுவிதமாய்ச்சர்ப்பரூபமான கியாதி (தோற்றமும் சொ

மகாண்டப் பிரமாணங்க ளெல்லாவற்றிற்கும் சங்கரரால் அத்து விதவுரை கூறப்பட்டது. இவ்விருவர்க்கும் நடந்த வாதுமுறைக ளெல்லாம் எழுதப்பட்டு "மஹாவாதாவளி" என்னும் பெயரு

---

ல் லுதலும்) அந்நியதாக்கியாதி எனப்படும். இது சிந்தாமணிக்காரர் என்னும் நவீன நையாயிகர்மதம் [இந்த மதத்தில் ஒரு வஸ்து வேறு ரூபமாய்த் தோற்றுவதாகிய ஞானத்தியாசமே பிராந்தி எனப்படுகிறது.]

4. (a) அசத்கியாதி மதப்படி அசத்தின் தோற்றமுண்டாகும்பக்ஷத்தில் மலடி மகன் முயற்கொம்பு முதலியனவும் தோற்றவேண்டும். அப்படித்தோற்றாமையால் அசத்கியாதிமதம் பொருத்தமுடையதன்று.

(b) க்ஷணிக விஞ்ஞானவாதியின் மதப்படி க்ஷணிகந்தோறும் மாறும் புத்தி சர்ப்பாகாரத்தைத் தரிக்கும்பக்ஷத்தில் க்ஷணத்துக்குமேல் அச்சர்ப்பந்தோற்றலாகாது. ஆதலால் ஆத்மக்கியாதிமதம் ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று.

(c) அந்நிய தாக்கியாதியின் முதற்கிரமம் சிந்தாமணிக்காரருடைய அந்நிய தாக்கியாதி மதத்தினாற் கண்டிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் சிந்தாமணிக்காரர் மதப்படியும் அந்நியதாக்கியாதிமதம் அசங்கதமாம். ஏனெனின் ஞேயானுசாரமாக ஞானமுண்டாகிறது. "ஞேயம்-ரஜ்ஜு, ஞானம் சர்ப்பத்தினது" என்று கூறுதல் முற்றும் விரோதமாம். ஆதலால் இந்தக்கிரமம் மதிக்கத்தக்கதாம்:—யாண்டு ரஜ்ஜுவிற் சர்ப்பப்பிரமமுளதோ ஆண்டு நேத்திரத்திற்குத் தன் விருத்தி வாயிலாக ரஜ்ஜுவுடன் சம்பந்தமுண்டாய், 'இது' என ரஜ்ஜுவின் சாமானிய ஞானமுண்டாகிறது. சர்ப்பத்தின் ஸ்மரணையு முண்டாகிறது. "இது சர்ப்பம்" என்பதில் இரண்டு ஞானங்களுள.

(1) "இது" என்னும் அம்சமோ ரஜ்ஜுவின் சாமானியப் பிரத்தியக்ஷ ஞானமாம்.

(2) "சர்ப்பம் இருக்கிறது" என்பது சர்ப்பத்தின் ஸ்மிருதி ஞானமாம்.

இவ்விதத்தால் "இது சர்ப்பம்" என்பதில் இரண்டு ஞானங்களுள. ஆனால், பிரமாதாவில் பயதோஷமும் பிரமாணத்தின் இருள்தோஷமுமாகிய இவைகளின் பலத்தினால் "எனக்கு இரண்டு ஞானங்களுமுண்டாயிருக்கின்றன" வென்று புருஷனுக்கு விவேகமுண்டாகிறதில்லை. "இது" என்னும் அம்சமான ரஜ்ஜுவின் சாமானிய ஞானம், யதார்த்தமாம். முன்பார்த்த சர்ப்பத்தின் ஸ்மரண ரூபஞானமு முண்மையேயாம் என்றாலும், "எனக்கிரண்டு ஞானங்களுண்டாயின, அவைகளில் ரஜ்ஜுவின் சாமானியப் பிரத்தியக்ஷஞானமொன்று; சர்ப்பத்தின் ஸ்மரண ரூப ஞானமொன்று" என்னும் விவேகமுண்டாகிறதில்லை. இவ்விரண்டு ஞானங்களின் அவிவேகத்துக்குச் சாங்கியப் பிரபாகரமதத்தில் பிரமமென்பர். பிரமமுண்டாகிற இடங்களிலெல்லாம் இப்படியே யறிய வேண்டும்.

அக்கியாதிமதமும் அசங்கதமாம். ஏனெனின், "இது சர்ப்பம்" என்னும் ஞானத்தில்,—

1. "இது" என்னும் அம்சமோ இரஜ்ஜுவின் சாமானியமாகிய பிரத்தியக்ஷமாம்.

டைய பன்னீராயிரங்கிரந்த மாயிற்று. அதனைக் கேட்டிருந்த புலவர்கழகத்திற்கு அறியத்தக்க நூலினுட்பொருள்பலவும் வெளிப்பட்டன.

2. "சர்ப்பம்" என்பது முன்பார்த்த சர்ப்பத்தின் ஸ்மரண ரூப ஞானம்.

இது அக்கியாதிவாதியின் மதமாம். ஆண்டு முன்பார்த்த சர்ப்பத்தின் ஸ்மரணையினையே அங்கீகரித்து, எதிரிலிருக்கும் ரஜ்ஜுவில் சர்ப்ப ஞானத்தை அங்கீகரியாவிடின், எதிரிலிருக்கும் ரஜ்ஜுவைக்கண்டு புருஷன் பயப்பட்டு ஓடுகிறான். அந்தப்பயமும் ஓடுதலு முண்டாகலாகாது. ஆதலால் எதிரிலிருக்கும் ரஜ்ஜுவிற்றான் சர்ப்பம் தோற்றுகிறது; முன்பார்த்த சர்ப்பத்தின் ஸ்மரணமுண்டாகிறதில்லை.

அல்லது,

(a). ரஜ்ஜுவின் விசேஷவடிவமான பதார்த்தஞான முண்டான பிறகு, "எனக்கு ரஜ்ஜுவினிடத்தில் மித்தியாசர்ப்பம் தோற்றியது" என்ற புருஷனுக்குண்டாகும் பார்த்தலாலும் ரஜ்ஜுவினிடத்திலேயே சர்ப்பம் பிரதீதியாகிறது; முன் பார்த்த சர்ப்பத்தின் ஸ்மிருதி யுண்டாகிறதில்லை.

(b). "இது சர்ப்பம்" என்னுமிடத்தில் ஒரே ஞானமுண்டாகிறது. இரண்டு ஞானங்களுண்டாகிறதில்லை.

(c). ஒரேகாலத்தில் அந்தக்கரணத்தில் ஸ்மரணரூப ஞானமும் பிரத்தியக்ஷரூப ஞானமும் உண்டாகமாட்டா.

5. சுத்தியின் அவயவங்களோடு இரஜதத்தினவயவமும் எப்போதுமிருக்கின்றது. சுத்தியின் அவயவம் சத்தியமாயிருப்பதுபோல இரஜதத்தின் அவயவமும் சத்தியமாம்; மித்தையன்று. தோஷத்தோடுகூடிய நேத்திர சம்பந்தத்தால் சித்தாந்தத்தில் அவித்தையால் பரிணாமமாக அநிர்வசனீய ரஜதம் உண்டாவதுபோல, தோஷத்தோடு கூடிய நேத்திர சம்பந்தத்தால் இரஜதாவயவத்தினின்று சத்தியரஜதமும் உண்டாகின்றது. சித்தாந்தத்தில் அதிஷ்டான ஞானத்தால் அநிர்வசனீயரஜதம் நிவர்த்தியாவதுபோல, சுத்தி ஞானத்தால் சத்திய ரஜதமும் தனது அவயவத்திற் செறிவதாகிறது. இம்மதமும் தள்ளத்தக்கது. ஏனெனின் சுத்தி ரஜத திருஷ்டாந்தத்தினால் பிரபஞ்சமித்தை என்னும் அநுமிதி உண்டாகின்றது. சத்கியாதிவாதத்தில் சுத்தியில் இரஜதம் சத்தியமாம். இதைத் திருஷ்டாந்தமாக வைத்துக்கொண்டு பிரபஞ்சத்தில் மித்தியாத்துவ சித்திபெறுவது முடியாது.

6. அநிர்வசனீயக் கியாதியின் தன்மை அந்தக்கரணத்தின் விருத்தி நேத்திர வாயிலாக வெளிப்பட்டு விஷயசமானாகாரமாகிறது. அதனால் விஷயத்தின் ஆவரணம் நீங்கி விஷயந் தோற்றுக்கிறது. அதற்குச் (சூரியாதி) பிரகாசமும் சாதகமாயிருக்கிறது; பிரகாசமின்றிப் பதார்த்தம் விளங்குகிறதில்லை.

யாண்டு ரஜ்ஜுவில் சர்ப்பப் பிரம முண்டாகின்றதோ, ஆண்டு அந்தக் கரணத்தின் விருத்தி நேத்திர வாயிலாக வெளிப்படுகின்றது; ரஜ்ஜுவுடன் அதன் சம்பந்தமு முண்டாகின்றது. இருள் முதலிய தோஷங்கள் பிரதி பந்தகமாயிருக்கின்றன. [இருள் சம்பந்தத்தால் மந்தாந்தகாரமும்

## மண்டன பண்டிதர் தோல்வி.

இவ்வாறு, சங்கராசாரியருடைய வலியயுத்திகள் அத்துவித சித்தாந்தத்தை நிலைசெய்யும்போது அதனை, அளவை, வழக்கு, அனுபவம், இவற்றால் உடைக்க மாட்டாதமண்டன பண்டிதர் கழுத்திலிருந்தபிரமாணக்குறியாகியதெய்வமலர்மாலைஉடனே வதங்கி

---

கொள்ளத்தக்கது. ஏனெனின் தோஷமின்றிய கண்ணுடையவனுக்கு நல்ல வெளிச்சத்தில் ரஜ்ஜு முதலிய அதிஷ்டானத்தினது விசேஷரூபத்தின் அஞ்ஞானம் உண்டாகிறதில்லை. அதிஷ்டானத்தின் சாமானியவடிவமான "இதந்தையின் ஞானமுண்டாகிறதில்லை. அதிஷ்டானத்தின் சாமானிய ரூபஞான மின்றியும் விசேஷரூப அஞ்ஞானமின்றியும் அத்தியாசமுண்டாகிறதில்லை. மந்தாந்தகாரத்தில் விசேஷரூபத்தின் அஞ்ஞானமும் சாமானிய ரூபத்தின் ஞானமுமாகிய இரண்டும் பொருந்துகின்றன. ஆதலால் நேத்திரத்னது விஷயுத்தின்கணுள்ள அத்தியாசத்தில் மந்தாந்தகாரத்தின் அபேக்ஷை யிருத்தலின் அதுவும் கொள்ளப்படும். இரண்டில் ஒன்றுளதாயின் அப்போது பிரமமுண்டாம். முதலிய என்னும் சொல்லால் காமாலைமுதலிய நேத்திரத்தின் ரோகங்களும் கொள்ளப்படும் ] ஆதலால் விருத்தியின் சொரூபம் ரஜ்ஜுவின் சமானாதிகாரமாகிறதில்லை. அதனால் ரஜ்ஜுவின் ஆவரணம் நாசமாகிறதில்லை.

இவ்விதத்தால் ஆவரண பங்கத்தின் பொருட்டு விருத்தியின் சம்பந்த முண்டாகியும், எப்போது ரஜ்ஜுவின் ஆவரணம் பங்கமாகிறதில்லையோ, அப்போது ரஜ்ஜு சேதனத்திலுள்ள அவத்தையால் க்ஷோப (கலக்க) முண்டாய் அவ்வித்தை சர்ப்பாகார பரிணாமத்தை யடைகிறது.

(1) அந்த அவித்தையின் காரியமான சர்ப்பம் சத்தாயிருக்குமாயின் அது ரஜ்ஜு ஞானத்தினால் பாதமாகாது ; ஆனால் பாதமாகிறது. ஆதலால் சர்ப்பம் சத்தன்று.

2. அச்சர்ப்பம் அசத்தாமாயின் மலடி மகன்போலத் தோற்றாது ஆனால், அநுபவத்தில் தோற்றுகிறது. ஆதலால் அது அசத்துமன்று.

ஆனால், சதசத்துக்கு விலக்ஷணமான அநிர்வசனீயமாம். [சத்தின் விலக்ஷணம் அசத்து; அதனை அசத்துக்கு விலக்ஷணம் என்று சொல்லுதல் விருத்தம். அசத்துக்கு விலக்ஷணம் சத்து. அதனைச் சத்தின் விலக்ஷணமென்று சொல்லுதல் விருத்தம். சதசத்துக்கு வேறான மூன்றாவது பதார்த்தமில்லாமையினால், அநிர்வசனீய சப்தத்தினது அர்த்தத்தின் உணர்ச்சியே யில்லை யென்னும் சங்கைக்கு, இது சமாதானம்:—(1) மூன்றுகாலத்திலும் பாதிக்கப்படாதது சத்தெனப்படும். அதற்கு விலக்ஷணமென்பதனால் பாதிக்கத்தக்கதென்று ஏற்படுகிறது. (2) ஸ்வரூபமில்லாத மலடி மகன் முதலியவை அசத்தெனப்படும். அதற்கு விலக்ஷணமென்பதனால் ஸ்வரூபமுடையதென்று ஏற்படுகிறது.] கிளிஞ்சில் முதலியவைகளில் வெள்ளி முதலியவைகளும் இவ்வாறு அநிர்வசனீயமாய் உற்பத்தியாகின்றன. இந்த அநிர்வசனீயத்தின் கியாதி அதாவது பிரதீதியும் சொல்லுதலும் அநிர்வசனீயக்கியாதி எனப்படும்.

'இம்மதங்களின் பிரதி பாதனமும், கண்டனமும் விவரணம் ஸ்வராஜ்ய சித்தியாதி கிரந்தங்களிற் கண்டுகொள்க.

ப்புலர்ந்து கருகிவிட்டது, சபையிலிருந்த தெய்வசந்நிதிமுன் மந்திரத்தால் தாபிக்கப்பட்ட பிராமணக்கோட்டி என்னும் ஆலை சங்கரமுனிவர் பக்கல்வெற்றியைக் குறிப்பித்தது. யாவருங்காண இவ்வாதிலேக்கேட்டுக் காட்சிப்பிரமாணக் குறிகளையும் பார்த்திருந்ததனுல் மண்டனபண்டிதர் தோற்றனர் என்றும் சங்கரமுனிவர்வென்றனர் என்றும் அந்த அவைக்களிருந்தாரனைவரும் உணர்ந்தனர். அப்போது, பேரறிவுடையவராகிய உபயபாரதி தேவியார் நடுநிலையோடு நியாயத்தையுணர்ந்து, சத்தியத்தோடு செய்துகொண்ட சூளுறவைக் காக்கும்பொருட்டுச் சபைநடுவே நின்று உபயவாதிகட்கும் பிச்சைக்காலமாயிற்று என்றுகூறியதால் மண்டனபண்டிதர்க்குச் சந்நியாச ஆச்சிரமமே தக்கதென்றவாறு யிற்று.

உடனே, சரஸ்வதி அவதாரமாகிய அவ்வுபயபாரதியார், சங்கரரைப் பார்த்து ' வெற்றிகொண்ட நீத்தோனே முக்காலத்துக்கோவசீ சொல்வராகிய தூருவாசமுனிவர் மானுடமாதாகப் பிறக்கும்படி எனக்கிட்டசாபத்தின் காலவெல்லை, சிவாவதாரமாகிய உமது வெற்றியால் இப்பொழுது முடிந்தது. எனவே என் சாபம் தீர்ந்ததென்றபடி. இனிநான் எங்கிருந்து வந்தேனே அங்குபோகின்றேன்'' என்றுசொல்லி அக்கமாலை, புத்தகம், கிளி, வீணையிவற்றைத் தாங்கிய கரத்தோடும், அலங்கரிக்கப்பட்ட வெண்ணிறமுடைய அழகிய தம் தெய்வவடிவத்தினை யாவரும் தரிசிக்கவருளிச், சத்தியலோகநோக்கி ஒளியுருவாய் ஆகாயமார்க்கஞ் செல்லத் தொடங்கினர்.

உடனே, "மந்திரலயஹட ராஜயோக" முதலிய சித்திகளையும் உடைய சங்கராசாரியர் மந்திரநூலின் கண்ணதாகியமஹாவித்தையின் தலைமைபெற்ற வனதுர்க்கை மந்திரத்தை உச்சரித்து, அந்தக்ககலைமாதினைச் சத்தியலோகம் போகவொட்டாது பந்தித்து ஆகருடணம் செய்துகொண்டார். அதனுல் அக்கலைமாது கட்டுப்பட்டவராய் ஆகாயத்தினின்றும் இறங்கி அவைக்கருகேவந்து கால் நிலத்திற் படாதபடி அந்தரமேநின்று, அவரைநோக்கி உனக்குவேண்டும் வரம் யாதென்று வினவினர். அப்போது, சங்கரர் தாம் நிலைநிறுத்திய அத்துவித முடிவை யின்னும் வலியதாகவுலகத்துள் நிலைநிறுத்தவேண்டுமெனநினைத்து "வாகீஸ்வரீஸ்தவம்" என்ற தோத்திரத்தினைச் செய்து பிரார்த்தித்து, என்னம்மே! தேவரீர், சத்தியோஜாத மூர்த்தியின் திருமுகத்திற் பிறந்த எழுத்தின் தாயென்னும் உமது ஞானவடிவத்தின் பெரும்புகழும் அவதாரவுண்மையும் யானுணர்வேன். பரதெய்வமாகிய தாயே! நீர் அடியார்களுக்கு வசப்பட்டவராகவே யிருக்கவேண்டும். ஆதலால் உமது அடியவனுகிய யான் நீர் சத்தியலோகம் செல்லுவதற்கு உடன்பட்டு விண்ணப்பிக்கும் வரையில் கருணையோடும் ஈண்டே

விற்றிருந்தருளி அடியோங்கள் விண்ணப்பிக்கும்போது எதிர் காட்சி கொடுத்து உரையருள வேண்டுவது என்று வேண்டிக் கொண்டார். அப்போது, அவ்வன்னையார் அவ்வாறாக என்றருளிச் செய்தார். அதனால் களித்த மனத்தினையுடைய சங்கரர் மண்டனபண்டிதருடைய மனத்தினை உணரவேண்டுமென்று கருதினார்.

எட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

# ஒன்பதாம் அத்தியாயம்.

## சங்கரர் மண்டன பண்டிதர்க்கு ஐயமகற்றல்.

அப்பால், சங்கரமுனிவரிடத்தில் மண்டனபண்டிதர் "சுவாமி தேவரீர்சித்தாந்தத்தை நிலைபெறுத்தியதால் எனது துரபிமான மொழிந்து உண்மையுள்ளத்திற் பொருந்திற்றாயினும், அறிவின் வன்மையால் எனக்குண்டாகிய தோல்வி துன்பஞ் செய்யாவிடினும், நான்வைராக வின்பத்தை அனுபவிப்பதற்கோர் ஐயம் வந்து வாதிக்கின்றது. அதாவது, ஆசிரியர் ஜைமினியார் மஹாரிஷியன்றோ அவர் கருமகாண்டமே முக்கிய மென்று செய்திருக்கும் சூத்திரங்கள் பயனற்றதாக விருக்குமோ? அங்ஙனமிராதே அவர்கருத்தெதுவோ அதுவிளங்கும் வரையில் எதனிடத்தும் எனக்கு நம்பிக்கையுண்டாகாது" என்று கூறினார்.

அதுகேட்ட சங்கரர், "ஆசிரியர் ஜைமினியார் பிரமத்தினிடத்தே கருத்தினையுடையவர்தாம். ஆயினும், உலகத்தை யுணர்த்தவேண்டிக்கடவுளாணை வடிவாகிய வேதத்தினைப்பற்றி அங்ஙனம் கூறினர். ஆன்மாக்களுக்கு அநாதிதொட்டுப் புத்தி, விடய வெள்ளத்தின்வழியே ஒழுகுதலை யுடையதாக விருக்கின்றது. அப்படிப்பட்டவர்க்குப் பிரமவித்தையில் அதிகாரத்தை யுண்டாக்கும்பொருட்டு ஞானத்திற்குக் காரணமாகிய கருமத்தையே சிறந்ததாகக் கூறினர். கருமத்தால் ஞானத்திற்குத் தடையாயுள்ள பாவவொழிவும், மனம் விடயங்களின் அபிமானம் பற்றியே செல்லாத சித்தசுத்தியும் உண்டாகின்றது. புண்ணியகருமம் வேண்டியவழி நல்லபோகப்பயனையு முதவி, குருதெய்வபத்திகளையும், உண்டாக்குகின்றது. அக்குருபத்தி ஞானத்தையும் ஈசுரபத்தி கடவுளருளினையும் உண்டுபண்ணுகின்றன. அங்ஙனம் அருளோடுங் கூடிய ஞானம் பேதவுணர்ச்சியை யொழித்து அத்துவிதஞானத்தை யுண்டுபண்ணுகின்றது. அதனால் அவித்தையும் அதன் காரியமாகிய பொருளல்லாத சமுசாரமும் முற்றும் கெட்டொழியச் சச்சிதானந்த சொரூபம் தானாக விளங்குகின்றது. இதுவேவீடு. இந்தமேலான பெரும்பயன் பொருட்டே படியேற்றுவிப்பதுபோல முதற்கண்ணே மறுமைப்பயன் புண்ணியபாவங்கள் உண்டென விதித்து, அவற்றுள் நற்பயனை யடைவதற்குப் பேதத்தோடுங் கூடிய கருமமார்க்கத்தைப் போதித்து, அதனால் பாவத்தை யொழிப்பித்து, பின்பு பயன்விருப்பத்தையு மொழிப்பித்து, கருமநிலைமையை யுணர்த்திப் பிரமதத்துவத்தை உணர்த்துவித்து, அது கைவசப்படும்பொருட்டு முதலில் சகுணவுபாசனை கூறிப்பின்பு பேதத்தின்பொய்யை ஒழிப்பித்தற்குநிர்க்குண வுபாசனைகூறி அதன்பின் உண்மையான அத்துவித வுண்மையினை முடிவான வுபதேசமாக அடிக்கடி கூறி இதுவே எனது துணிவானகருத்து, இதனை யொழித்து வேறோர்மார்க்கமில்லை

என்று வேதம், தாய்மக்களுக்கு உபாயவழியால் உணர்ச்சி வருவிப்பது போலும், உலகத்தைக் காக்கின்றது. மேற்கூறிய கருத்தெல்லாம் கருமகாண்டம் பிரமகாண்ட மிரண்டையும் நான்கு வேதத்துள்ளும் முதலிலிருந்து முடிவுவரையிலு நோக்கி யாராய்ந்தவழி வேறுகருத்திடனில்லாமல் உண்மைப்படுகின்றது. அஃதெங்ஙனமெனில்! கேட்பீராக வென்று தொடங்கி மேற்கூறிய கருத்தினுக்குச் சரியான, சான்றாகச் சுருதிவாக்கியங்களை யெடுத்துக்கூறி இது ஆசிரியர் ஜைமினியார் கருத்தென்று நான் உண்மையாகக் கூறவல்லேன். ஆயின் அவர்கருத்து நீரெவ்வாறுணர்வீர் என்பீரேல் ஆசிரியர் ஜைமினியார் குரவரான வேதவியாசர் பிரமசூத்திரமுதலிய தமது நூலில் இதுவே தங்கருத்தாகக் கூறியிருக்கின்றனர். மாணுக்கன் கருத்துக்குருவின் கருத்துக்கு மாறுபடாது. அதனுலே, வியாசர் தமது மாணுக்கர் கருத்தினைத் தமது கருத்தினுக்கு உடன்பாட்டின் எடுத்துக்காட்டாகக் கொண்டனர், என்பது முதலிய பல விரகசியங்களை மண்டன பண்டிதர்க்கு நன்குணர்த்தினர்.

அம்மண்டன பண்டிதர், "அற்றேல் ஜைமினிமுனிவர் கருமமே பயனைத் தருகின்ற தென்று பரமேச்சுரனை நிராகரிப்பதென்னை யென்றுவினுவினுர். அதுகேட்ட சங்கரர்நகைத்து, நாத்திகர்கடவுளில்லையென்றே சாதிக்கவில்லையா? தருக்கர் முழுவதும், யுத்திவாதத்தால் ஒருவகையால் கடவுளுண்டென்று நிலைநாட்டினர். அப்படிப்பட்ட விலக்கணமுடைய ஈச்சுரன் அனுமானம் = கருதலளவையால் கொள்ளப்பட்டவாறன்றிக் காட்சியளவையால் அக்கடவுள் வடிவமும், அதையறிந்து உபாசிக்கும் வழியும் வேதாந்தநூல் ஒன்றுனே நிச்சயிக்கவேண்டுவதாகவிருக்கின்றது. அதனை நிலைபெறுத்துங் கருத்தானே யுத்திவாத மொன்றனையே யுடைய நையாயிகர்களை மறுத்தற்பொருட்டு ஆசிரியர் ஜைமினியார் தருக்கருடன்பட்டாற்போலுங் கடவுளுண்மையை யாமுடன்படுவதில்லை யென்றுநிராகரித்தனர். அவ்வளவானே ஜைமினியார் நிரீச்சுரவாதி யல்லர், என்று கூறினர்.

இவ்வாறு, நெடுந்தூரம் விசாரித்த வழியும் உள்ளத்தின்கண்ணே ஐயமேகொண்டிருக்கும் மண்டனுசாரியர் தன்னுள்ளத்தில் தனது குரவராகிய ஜைமினியாரைத் தியானித்தனர். நெடுங்காலமாகத் தன்னூலினையே நம்பியுள்ள இம்மாணுக்கனைக் கடைத்தேற்றுவதற்கிது நல்ல சமயமென்னுங்கருத்தோடு, ஆசியர்ஜைமினியார் உடனே எதிர்தோன்றி "வேதத்தினையும் கருமமார்க்கத்தினையும் நம்பிப்பாவபயத்துடனே ஆசிரிய பத்திசெய்து,கருமத்தில் ஒழுகியதால் இனி ஞான அதிகாரியாகத்தக்க விசுவரூபரே! இந்தப் பரமஹம்ஸ ஸந்நியாசி கூறியதே என்னுள்ளக் கருத்து, என் குரவராகிய வியாசர் கருத்துக்கு மாறுகொள யான் ஒன்றும்

கூறியதில்லை. இதுவரையில் உனக்கு யான்குரவன். இனி இவரே யுனக்குக் குரு என்கருத்தை இந்தச்சந்நியாசி எவ்வாறுணர்ந்தனர் என்பாயேல், இவர் என் னுள்ளமொன்றனையே யன்று எல்லா வுயிர்களின் கருத்தினையும் வேதமுதலிய எல்லாக்கலைகளின் கருத்தினையும் உணர்ந்த பேரறிவனாக விருக்கின்றார் என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஜைமினிமுனிவர் கண்களுக்குச் சங்கரர் தக்ஷிணாமூர்த்தியாகத் தோற்றினர். அப்போது யோகக்கண்ணால் நோக்கித் துதித்து இன்பமடைந்து, சிவாஞ்ஞைப்படி "ஓ! மண்டனபண்டித! உன் புண்ணியம் பழுத்துவந்தது. இந்தச் சந்நியாசி மானுடனே யென்றாவது, அல்லது எம்போலிய ரென்றாவது கருதவேண்டா. இவர், உலகத்தைத் தேற்றும்பொருட்டு அவதரித்த பரமேச்சுரனாகவே யிருக்கின்றார். கிருதயுகத்தில் கபிலர், திரேதாயுகத்தில் தத்தாத்திரேயர், துவாபரத்தில் வியாசர், கலியில் சங்கரர் ஞானாசாரியர்களென்று சிவபுராணங்களுட் கூறப்பட்டுள்ளன காண்பயாக. அவரே இவர். நீயும் சாதாரணியல்லை. உன் பிறப்பு *பிரமதேவன் கூற்றினால் வந்ததென்று நான் உணர்வேன். இந்தவுலககுரவன் கழலைச்சேவித்து நீதன்னியனாகவேண்டுமென்று உபதேசித்து ஞான நோக்கத்தையும் கொடுத்து, மறைந்துவிட்டனர்.

பின்னர் மண்டனபண்டிதர் ஞானநோக்கத்தினாற் சங்கரரை நோக்கலும் உண்மை யறிவாநந்தவடிவராகிய ஸ்ரீ குருதக்ஷிணாமூர்த்தி வடிவாகத்தோற்றினர். அதனால் மனத்திருந்த ஐயமெல்லாமொழிந்து, அச்சங்கரரைத் துதித்துக் கொண்டிருந்த அந்த விசுவரூபமண்டனர், அவர் மாணாக்கர் முதலிய சபையாருக்குச் சதுமுகபிரமனாகத் தோற்றினர். அவரனைவரும் அதிகவியப்பினையும் ஆநந்தத்தினையும் அடைந்தனர். பின்பு, அம்மண்டன பண்டிதர் தம்மைந்தர்க்கு மனை, பொருள் முதலியன கொடுத்துத்தாந் தேடிய பொருளினைத் தான தருமஞ்செய்து அந்தச் சங்கரரைக் களிப்பித்துக் கருமார்க்கமுறையே வைராகமேற்கொண்டு சுத்த சத்துவ குணத்தோடு தம்மாணாக்கர் தம்மைச்சூழத் தாம் சங்கரரைத்தியானித்துச் சந்நியாச ஆச்சிரமத்தை வேண்டிநின்றனர்.

## உபயபாரதியாருடன் சங்கரர்வாதித்தல்.

பின்னர்சங்கரர் உபயபாரதிதேவியாரைத் *தியானிக்கஅவர் முன் தோன்றிநின்றனர். அப்போது என்வெற்றிப்பாட்டிலே

* சங்கராச்சாரிய ஸ்வாமிகள் சத்தியலோகத்திற்குப் போகும் பாரதிதேவியை, வனதுர்க்கா மந்திரத்தாற் கட்டிநிறுத்தி "மண்டனமிசிரருக்குப் பத்தினியானதுபற்றித் தாங்கள் அவருடைய அர்த்தசரீரமாகிறீர்கள். ஆதலால், தங்களுடனும் வாதுபுரிந்து தங்களையும் வென்றால் தான் மண்டனரை முழுதும் வென்றதாகும்" என்று மொழிந்து வாதுக் கழைத்ததாகச் சொல்லப்படுகிறது.

யுமது கருத்தென்னை என்று வினவினர். அதற்கு அவர், எனது இளமைப்பருவத்தில் நான் என்தாயினிடத் திருக்கையில் விபூதி உருத்திராக்கந் தரித்துப்பாசுபத விரதத்தோடு சடைமுடியுடையரும் பேரொளியுடையருமாகியவோர் சைவமுனிவந்தனர். என் தாய் அவர்க்கு அருக்கியபாத்திய முதலிய கொடுத்து அவரைப் பூசித்து, சுவாமீ! என் மகளாகிய விவள் எவ்வாறு உய்வள். வயதெவ்வளவு, கணவன்றிறமெது என்று வினவினர். அதற்கவர் கண்மூடிச் சிறிதுபோது தியானத்திருந்து முறையே எங்கள்முன்பின்வரலாறு எல்லாவற்றினையும் உரைத்தனர். இன்றையவரையில் அவர் கூறியவற்றுள் ஓர்சிறிதும் தவறிற்றன்று. அவற்றுள் ஒரு விரகசியமுண்டு. அதுவாவது, "உம்மகள் சரஸ்வதி கூற்றினாற் பிறந்தவள். கலிபரிவாரங்களின் தோற்றமாகிய பௌத்தர் முதலிய புறச்சமயத்தவர்களால் வேதமார்க்கம் துன்பமுறுகையில், கடவுளாணையால் முருகக்கடவுள் கூறு, பட்டகுமாரராகப் பிறந்து, சார்வாக பௌத்த சைநர்களை வென்றபின் பிரமன் கூற்றினாற் பிறந்த விசுவரூபராகிய மண்டன பட்டாசாரியர் அவர்க்கு மாணாக்கராய் வேதத்தின் முதற்காண்டமாகிய ஜைமினிநூல்முற்றுமுணர்ந்து, வேதமார்க்கம்நிலைபெறுவித்தகுரவனென்னுந் துதிபெற்றுதேவர்கள் கூறுபாட்டாற் பிறந்த வேதியர்களால் புகழ்பெற்று, திக்குப்பாலகர் கூறுபாட்டாற் பிறந்த அரசர்களால்வணங்கப்பெற்று, புலவனென்னும் பெயர்க்குரியவரிவரே யென்னவிருப்பர், அவர்க்கு உன்மகள் மனையாவள். வேதத்தின் பின்பாகமாகிய ஞானபாகத்தை நிலைநிறுத்தவேண்டி ஈசுவரர் கூறுபாடே சங்கரராகப்பிறந்து சந்நியாசி வடிவுடன் மாணாக்கரோடுவந்து, வாதபிக்ஷைபெற்று அம்மண்டன பண்டிதரை வென்று வெற்றியடைவர். அப்போ துன்மகள் பிரமன் பாதி அங்கமேயாகலின், அச்சங்கரரோடு வாது செய்வள், என்று கூறி மறைந்துவிட்டனர். ஆதலால் வாதில் என்னை வெல்லாவிட்டால் உமக்கு முழுவெற்றி யுண்டானதாகமாட்டாது" என்று கூறினர்.

அதுகேட்ட சங்கரர், மானத்தினையுடைய ஆண்மக்களுள்ளும் விரத்தராகிய சந்நியாசியர்க்குப் பெண்பாலோடு வாதுசெய்தல் கூடுமோ? என்றார். அப்போதவர் "வேதசாத்திரங்களை நன்குணர்ந்த நீரே யிவ்வாறு கூறின் யான் என்சொல்வது, பெண்ணானென்னை? சண்டாளனானென்னை? திரியக்கு செந்துவானாலும் என்னை? அறிவு சிறந்ததோ? உடல் சிறந்ததோ? விரத்த சந்நியாசிகட்கு வாது ஏன்? சமயவேற்பாடு செய்யத்தக்க உலகோபகார காரியங்களில் ஒழுகுவோர் சிறந்த அதிகாரிகளே யொழிய சாமானியரல்லரே. அவ்வளவு காரியஞ் செய்யாவழி வெற்றியுண்டாமா? நீர் கூறிய விவ்வுரை உலகவழக்கினைப் பற்றியவாறொழிய வேறல்ல. நீர் எல்லாச் சுதந்தரமுமுடைய ஈச்சுர னமிச

மென்று நான் அறிவேன். வாதின்பொருட்டு விருதிட்டபின் யார் வரினும் வாதிடவேண்டுவதேயாம். கார்க்கி என்னும் மாதினோடு யாஞ்ஞவற்கிய முனிவர் வாதுசெய்ய வில்லையா? சுலபை என்பவளோடு சனகராஜன் வாதுசெய்ய வில்லையா? அவர்கள் பிரமவாதிகளாகிய பெரியரன்றோ? அவர்கள் புகழ்க்கு என்ன குறையுள்ளது. ஓ! சுவாமீ! நான் எந்த வித்தையிலாவது குறைந்தவளா யிருந்தால் தம்மோடு வாது செய்யத் தக்கவ ளல்லளே யாம். எல்லாவித்தைகளிலும் உம்மோடு வாது செய்ய விரும்புகின்றேன். ஆதலால், தயவுசெய்து வாதுசெய்யவேண்டு" மென்று வேண்டிக்கொண்டார்.

அப்போது சங்கரர் சபையா ருடன்பாட்டோடு வாதிட வுடன்பட்டனர். எல்லாவித்தைக்கும் வித்திடும் தந்தையாகிய ஈசுரனுக்கும், அவ்வித்தைகளையே வடிவமாகவுடைய சரஸ்வதிக்கும் வாது நடந்தால் அதனை அநந்தனேயாயினும் பிரகஸ்பதியே யாயினும் உணரவல்லரோ? ஒய்வின்றி நடுநிலையோடு முண்மையோடும் தருமவழக்குகட்குக் குறைவில்லாமலும், அளவைக்கும் அனுபவத்திற்கும் ஒப்பச் சொற்பொருட்டிறஞ் சுத்தமாயும் அமைதியோடும் நடந்த அந்த வாதப்பிரசங்கம் எல்லா வித்தைகளின் விசாரங்களிலும் முடிவுபெற்று அவ்வுபயபாரதியின் ஐயமெல்லாம் ஒழிந்துவந்தன. அவ்வாறு பதினேழுநாள் வாதிற்கழிந்தன. வேதம், ஆகமம், மிருதி, புராணம், இதிகாசம், சங்கிதை, தந்திரம், அங்கநூல், உபாங்கநூல், சூத்திரங்கள், சித்திகள், கலைகள், வித்தையின் இரகசியங்கள், முதலிய எல்லாநூல்களிலும் இந்தச் சங்கரர் அளவற்ற அறிவினை யுடையராயிருந்தனர். எதனுள்ளும் இவரை வெல்லலாகாது. இனி எவ்வாற்றயினும் இவர் விடை கூறமாட்டாது வாய் மூடும்படி யுத்திசெய்து அவ்வளவாயினும் இவரைத் தோல்வி செய்ததாகச் செய்யவேண்டுமென்று அவ்வுபயபாரதியார் தம் மனத்துள் ளெண்ணினராய், இந்தச் சங்கரர் மிகுந்த இளமைப் பருவத்திற்றனே சந்நியாசம்பெற்றுள்ளனர், சிறிதும் விரதங் கெடுவதற்கு இடனில்லாதபடி ஆச்சிரமதருமத்தை நடத்துகின்றனர். இவர்க்குக் காமநூலில் பயிற்சியில்லை. அறிவின் விசேடத்தாலும் நூல்வலியாலும் சில விடயங்களைக் கூறலாமாயினும் அதுவும் அவ்வாச்சிரமத்துக்குப் பகையே. இவர் உலகத்தில் பெரியராகிய சிறந்த வேதியர்க்கெல்லாம் குருத்தானத்தில் சிறப்புச் செய்யப்படுகின்றார், இவரை யவ்விடயங்களைப்பற்றிக் கேட்டால் அனுபவமில்லாமையால் விடை கூறமாட்டார். தெரியா விடயங்களிற் பிரசங்கிப்பவரு மல்லர். வினவியதற்கு விடை கொடாவிட்டால் தோல்வியடைகின்றார். நூலாலறிந்தளவு கூறினும் தமது நிலைமைக்கு மாறுபாடாதலால் ஆசிரியத் தலைமக்கு மூறண்வருகின்றது. ஆதலால், அவ்வாறு வினவினால்

என்செய்வரோ பார்ப்போம் என்று துணிவுசெய்துகொண்டு, பிரசங்க விடயத்தை உண்டுபண்ணிக்கொண்டு வினவத் தொடங்கினர். என்னையெனில்?

மன்மதன் கலை எத்தனை? அவை எவ்வாறிருக்கின்றன? எவ்வெவ்விடங்களிலுள்ளன? வளர்பிறையிலெவ்வாறு? தேய்பிறையிலெவ்வாறு? ஆடவர்களிடத்து எவ்வாறு? மாதர்களிடத்தெவ்வாறு? இவற்றை முறையே கூறவேண்டுமென்று முடித்தனர்.

சங்கரர், உபயபாரதியார் வினவைக்கேட்டு, யாதொரு விடையுங் கூறிலர். விசேட அறிவினை யுடையவராதலின் தம்முள்ளே சிறிது சிந்தித்து, விடைகூறுவிடிற் சிற்றறிவினை யுடையனுவேன். சொன்னால் தருமங் கெடுகின்றது. என்று எண்ணிப் பேரறிவினை யுடையவரேயாயினும், அம்மே! ஒருதிங்கள் வரையும் காலவெல்லைதரின், பின்னர் உமது வினவுக்கு விடையுண்டாம் என்றார். அவரும் அதற்குடன்பட்டனர். பதினெட்டாநாளின் பிரசங்கம் அவ்வளவின் முற்றிற்று. சபையின்கணுள்ளார் யாவரும் எழுந்தார்கள்.

உடனே, சங்கரர், மாணுக்கரோடு யோகப்பயிற்சியால் வான்வழிக்கொண்டு, செல்லுகையில், ஒரு நாட்டினைச்சேர்ந்த பெரியதொரு காட்டின்கண்ணேயுள்ள தொரு பெருமரத்தடியில் ஓரிரவுப்போதிலே ஓர் பிணத்தையிட்டுச் சூழ்ந்து மாதர்களும பரிவாரங்களுமாக அழுதுகிடந்தார்கள். இவர், அப்போது, அங்கொரு மலைமே லிறங்கிப் பிறரறியக்கூடாததாயும் யோகசமாதிக்கு ஒத்தவிடமாயு முள்ளதோர் குகைக்கண்ணே வீற்றிருந்து, யோகப்பார்வையாற் பார்த்துத் தமது மாணுக்கருகிய பதுமபாதாசாரியரோடு கூறத் தொடங்கினர்.

ஐயா! காமசாத்திர முதலியவற்றுள் மிகச் சதுரனுகிய அமரகனென்னும் அரசன், மிகுந்த பிரவிடைகளாகிய தனது மனைவியர் நூற்றுவரோடு உய்யானவனம் வந்து, அவ்வாறே வேட்டைக்குச்சென்று, அங்கு தன் வாழ்நாள் முடிந்தமையால் இப்பொழுதுதான் அம்மரத்தினடியில் உயிர்துறந்து விழுந்தான். அந்த வேந்தன் பிணத்தேகத்தில் நான்புகுந்து மூர்ச்சித்து எழுந்தாற்போலும் எழுந்து பட்டணத்தை யடைந்து, அவன் மகனை மகுடஞ்சூட்டி, அவன் மனைவியருடைய காமக்கலையின் றேர்ச்சிக்குச் சான்றுயிருந்து யோகப்பழக்கத்தால் மறுபடியும் வந்து, இந்தச் சந்நியாசியுடம்பிற் சேரவேண்டும் என்று எண்ணினேன். நான் வருமளவும் நீவிர் அனைவரும் இந்த வுடம்பினைக் காத்திருக்க வேண்டும் என்று விதித்தனர்.

அப்போது, அச்சநதனுசாரியர் எழுந்து வணங்கி நின்று, பேரறிவாளராய எங்குரவ! தாமறியாத தொன்றுமில்லை. ஆயி

னும், எனது பக்தி பேசுவிக்கின்றது. அதாவது, முன்னே, மச்சேந்திரர் என்னும் சித்தயோகி தம்முடம்பைக் காத்திருக்கும் பொருட்டு, கோரக்ஷன் என்னும் தம்மாணாக்கனை விதித்து இறந்துகிடந்த ஓர் அரசனுடலிற் புகுந்து அந்த நாட்டினை யரசாண்டிருந்தார். அப்போது, அவ்வரசாட்சி முன்னினும் சிறந்து, தருமம், சுகம், காலமழை, பயிர்விளைவு, மிகுதிப்பட்டிருந்தன. அது கண்டு, அறிவிற்சிறந்த மந்திரியர் அவ்வுண்மை யறிந்து, யாரோ வோர் மஹாபுருடன் பரகாயப் பிரவேசஞ் செய்திருக்கலாமென்று நிச்சயித்து அவரை விடாமல் அவ்விடத்தேதானே நிறுத்திக் கொள்ளவேண்டு மென்னும் எண்ணத்தினோடும் நல்ல பருவமுடைய சுந்தரமாதர்களைக் கூட்டமாகச் சேர்த்து, அவரைவயஞ் செய்து கொள்ள முயற்சிசெய்தார்கள். அந்த மாதர்களினுடைய ஆடல், பாடல், அணி, இங்கிதம், உணர்ச்சிகட் குட்பட்டு, மோசமடைந்து அந்தச் சித்தயோகி தமது யோக சமாதியை மறந்து, சாதாரண மூடனைப்போலும் விடய வின்பங்களையே நுகர்ந்திருந்தார். அவர் மாணாக்கரான கோரக்ஷர் தமது குரவன் தேகத்தினை எல்லா முயற்சியோடும் சோர்வுபடாம லிருக்கவைக்துத்தான் கூத்தாட்டுவிக்கும் ஆரியன் வேடம்பூண்டு, அரசமாதர்க்குப் பரத நூலைப் பயிற்றுவிப்பதற்காக அந்தப்புரம் போய்வருகையில் அரசனுக்கு மிகவும் அன்புடையராய்க் காலம் பார்த்திருந்து, தனித்த சமயம் வாய்த்தபோது தங்குரவனுக்குத் தாம் குரவனாய் யோகமார்க்கத்தினை யுணர்த்தினராக அவர்க்கு முன்னுடம்பின் கணடைந்த யோகவாசனை ஞாபகத்திற்கு வந்து அப்பொழுதே அந்தத்தேகத்தை விட்டொழித்து மீட்டும் தமது முன்னைய யாக்கையை யடைந்தனர். என்ற புராணகதை கேட்டுள்ளேன். மேலும், மாதர் கூட்டுறவு எவ்வகைப் பட்டவனையும் விழுங்கி விடுமல்லாது மீளவிடாது. அன்றியும், தேவரீர், வெளிவிடா வீரியமுடையவரா யிருக்கும் விரதத்தைக் கெடுத்துக் கொண்டால் பெரியபாவம் வராதோ. சந்நியாசிகளாகிய நம்முடைய பெரிய நோன்பெங்கே? நூல்களால் மிகவுமிழித்துக் கூறப்பட்ட காம விகாரமெங்கே? ஆரியராகிய தேவரீர்க்கே இந்த ஞாபகம் பிறந்தால் உம்மைப்பார்த்து உலகெல்லாம் கெடாதோ? * இந்த வையகத்தில் சந்நியாச தருமத்தை விளக்கும் பொருட்டு விருது கட்டி

* யத்³யதா³சரதி ஶ்ரேஷ்ட²ஸ்தத்ததே³வேதரோ ஜந꞉ |
ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்தத³நுவர்ததே ||

‘ இவ்வுலகில் பெரியவர்கள் எதெதை ஆசரிக்கிறார்களோ அதையே தான் ஸாமான்ய ஜனங்களும் செய்கிறார்கள். அவர்கள் எதைப்பிரமாணமாக அங்கீகரிக்கிறார்களோ அதையேதான் இவர்களும் பின்றொடருகிறார்கள்.” என்பது நீதி.

யிருக்கும் உமக்குத் தெரியாத தென்னையுள்ளது. ஆயினும் நண்பினாற் கூறினேன். அதனைப்பொறுத்து, எது செய்யத்தக்கதோ அது செய்வதற்குத் தாம் உரியவர்." என்று கூறினார்.

அதுகேட்டு, பிரகற்பதியோடொத்த வச்சங்கரமுனி, "தக்கதே நீர்கூறினர். அறிவரே! கேளும், உடம்பில் யான் எனது என்னும் பற்றுடைய சமுசாரியுயிர்களுக்கே அக்காம வெண்ணமுயற்சி தடையாமன்றி யோகசித்திபெற்ற பிரமஞானி பற்றற்றவனாயிருத்தலின் விதிநிஷேதங்க ளவனைப்பற்றாது. சிவயோகமுடைய ஸ்ரீ கண்ணனுக்கு ஆய்ச்சியர் கூட்டுறவு துன்பஞ்செய்ததில்லை. ஓ! மைந்த! "வச்சிரோலி" * என்றதோர் யோகவித்தையுண்டு. அது எது செய்யினும் சுக்கிலத்தை வெளியிடவொட்டாது. அதனால், எமக்கு விரதபங்க முண்டாகாது. எண்ணமேயன்றோ இச்சைக்கெல்லாம் வித்து. அஃதெமக்குள்ளதோ! காமாந்தகனான சிவனுக்குக் காமபயமுண்டோ! தேகமேதான் என்னும் அறிவுடையவனுக்கு விதிநிஷேத நூல்களெல்லாம் தொழில் செய்யும். பிரமந்தானென்பவனுக்கு வருணாச்சிரம முதலிய துன்பங்களில்லை. பேதநோக்குடையவனுக்கு உலகு முண்மையாகத் தோற்றுமன்றி, அத்துவிதம் வாய்த்தவனுக்கு உலகெல்லாம் பொய்யாயிருக்கையில் ஒரு பயமும் துன்பமுமில்லை. அவன் நூறு அசுவமேதவேள்வி செய்தாலும் அளவற்ற பிரமகத்தி பாதகஞ் செய்தாலும் ஞானவொளியால் அவ்விருவினைச் சம்பந்த முண்டாகாது. ஏனெனில் அவன் அத்தொழில் தன்னதென்னும் செருக்கில்லை. இந்திரன், பிரமஞான மில்லாத நூறு சந்நியாசிகளைத் தலையுடைத்து நரிகளுக்கு இரையாகக் கொடுத்தனன். மூன்றுதலைகளை யுடைய விச்சுவரூபனாகிய துவட்டா என்னும் ஓர் பிரமன்மகனைக் கொன்றான். அந்தப்பாவமெல்லாம் ஞான சித்தனாகிய அவ்விந்திரனது சிறு உரோமத்தினையும் சின்னஞ்செய்ய லாற்றாது போயிற்று என்று இருக்குவேதத்துள் கூறப்பட்டுள்ளது. விதேகசனகராஜன், பெரும்பொருட்கொடை கொடுத்து, பெரிய வேள்விகளைச் செய்தான். அந்தப் புண்ணியமெல்லாம் அவனைச் சுவர்க்க போகத்தினுட் செலுத்தியதில்லை. அவனுக்குண்டாயிருந்த பிரமஞானத்தால் அச்சமற்ற வின்ப வடிவமாகிய முத்தியே கிடைத்ததுஎன்று சுக்கில எஜுர் வேதத்துள் கூறப்பட்டது. அவ்வாறே, எமக்கும் அவ்விருவினைப் பற்றுமில்லை. ஆதலால், இந்தவுடம்போடு இந்தப்பொறி முதலிய கருவிகளால் மன்மதநூற் பயிற்சி செய்தாலும் குற்றமில்லை.

* "வச்சிரோளிகை" யென்னும் யோகவித்தி யடைந்தவர்களுக்கு ரேதஸ்ஸானது எப்பொழுதும் மேனோக்கி யிருத்தலால் எச்சமயத்திலும் இந்திரியத்தை ஆகர்ஷணம் செய்து கொள்ளத் திறமையுண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆயினும் உலகத்தின் பொருட்டுச் சான்றோர் ஒழுக்க நெறியைப் பற்றி இவ்வுடம்போடு விரதக்கேடு இல்லாமல் இவ்வுடம்பினைக் காத்துவைத்து, வேறுடம்புகொண்டு முயற்சிக்கின்றேன் என்று கூறலும் பதுமபாதர் உடன் பட்டிருந்தனர்.

பின்பு, தகுதியான விடத்தில் ஒத்ததோர் * பாறையின்மேல் சங்கரர் யோகநிலையிலிருந்து, பிராணாயாமஞ் செய்து யோகவலி யால் வாயுவைப் பெருவிரல் தொடங்கிப்படிப்படி மேலிழுத்து, எல்லாப்பொறிகளி னிடத்திலும் சென்றுகலந்து இழுத்துப் பத் தாவது வாயில் வரையில் ஈர்த்து அங்கே கும்பித்து, ஐந்துவாயு, ஐம்பொறி, ஐங்கருமக்கருவி, மனம், புத்தி, என்னும் பதினேழு தத்துவமுடைய இலிங்கதேகத்தை இத்தூல வுடம்பிலிருந்து தலையின் கண்ணதாகிய பிரமரந்திரவழியே பேர்த்துக்கொண்டு வெளிப்பட்டுச் செத்துக்கிடக்கும் அமரகராஜனுடைய வுடம்பில் காற்பெருவிரல் நகக்கண்வழியே புகுந்து படிப்படி உடம்பு முழு வதுங் கலந்து, அவ்வவ்விடங்களில் அந்தந்தத் தத்துவங்களை அவ்வத்தொழிலில் நிறுத்தினர். இவ்வாறு இவர் பரகாயப் பிர வேசஞ்செய்த அளவில் அவ்வரசனுடம்பில் வலித்துக் கொண் டிருந்த தனஞ்செய னென்னுங் காற்று தளர்ந்துவிட்டது. சூடும் பிறந்தது. நெஞ்சு துடிப்புற்றது. உதிர ஓட்டமும், மூச்சு விடுத லும் உண்டாய், கண்திறந்து உறங்கினவன் விழித் தெழுந்தாற் போலக் கைகால் அசைத்து மெதுவாக வெழுந்தனன்.

பின்பு அவ்வரசமாதரும் பரிவாரமும் அரசனுக்கு மூர்ச்சை யுண்டாயிருந்ததுபோலும் என்றெண்ணித் துன்பத்தினை யொழி த்து மகிழ்ச்சி ஆரவாரத்தோடு உபசரித்து, பயபத்தியோடுபணி செய் திருந்தனர், அச்சமயத்தில் சூரியோதயமுமாயிற்று. அரசன் பரி வாரத்தோடு தாமரைத்தடத்தில் நீராடன்முதலியநித்தகரும முடித்துக்கொண்டு வாத்தியங்கள் முழங்க நகரமடைந்தனன்.

---

*இரிசிருங்கம் (மலையினுச்சி)என்றும், மரப்பொந்து என்றும் இரண்டு விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

# பத்தாம் அத்தியாயம்.

இவ்வாறு நகரஞ்சேர்ந்தபின்பு, புரோகிதர், அமைச்சர் முதலிய அரசவையாரோடு சாந்திகருமஞ் செய்துக்கொண்டு பட்டத் தியானையேறி ஊர்வலம்வந்து, மங்கல வாழ்த்தோடு சிங்காசனமேறி, சத்திய தருமமும் உலகவழக்கும் மாறுபடாதபடி நீதிநூலினைப் பின்பற்றிஉயிர்களையோம்பி, எல்லாநற்குணங்களோடும் அமரகமஹாராஜன் அரசாட்சி செய்திருந்தனன். அந்த வுத்தமனது பெருமையால் கலியுகங்கிருதயுகமே யாயிற்று. சதுரப்பாடு, சூக்குமபுத்தி, ஆற்றல், வீரம், கொடை, கல்வி, வலிமை, முதலியன மிகுதியாதலாலும், காலநிலைமையுந் தேசநிலைமையும் அதிகவிரைவிற்றிரிந்து நன்மையாதலாலும், இறந்தவரசன் மீட்டு முயிர்பெற்றெழுந்த வியப்பினாலும் மந்திரியர் இஃதோர் புதுமைபோலும் என்று சிந்தித்து, இவ்வரசதேகத்துள் யாரோ ஒருசித்தமுனிவன் பரகாயப்பிரவேசவித்தையால் சேர்ந்திருக்கலாமென்று நிச்சயித்து, உடனே, அந்த நாட்டினுள் எங்காயினும் மூச்சற்றவுடம்பு எப்படி கிடக்கினும் அந்தக்கணம் அவ்வுடம்பினை வேறு யோசியாது சுட்டொழிப்பது என்று ஆணைசெய்து ஏவலர்களை விடுத்தனர்.

அஃதங்ஙனமாக; அரசாட்சியை மேற்கொண்ட அந்தப்பெரியவர்அரசியலை நிலைநிறுத்திஅமைச்சர் வசமாக்கித் தாம், இராஜபத்தினியர் நூற்றுவரோடு காமநூல் விதிப்படி விடய வின்பநுகர்ச்சிக்குத் தொடங்கி, முன் ஸ்ரீ கண்ணன் போகநுகர்ந்தாற்போலும், தாம் சலிப்பற்ற பிரமசாரியேயாயினும் இன்பநிறைவைத் துய்த்து, வாச்சியாயனர் சூத்திரத்தினையும், காமகலாபாடியத்தினையும் நன்காராய்ந்து, அந்த அரசவுடம்போடு ஓர் புதியநூலினைச் செய்தனர். "நூறுசெய்யுளோடு கூடிய அமரகம்" என்னும் அந்த நூல் காமக்கலைக்கடலுக்கு ஒரு முழுமதிபோலும் உள்ளது. இவ்வாறு இப்பெரியன் மாதர்போகத்திருந்தனர்.

இங்கிவ்வாருக, அங்குமலைமேற் சங்கரப் பேருடம்பைக் காத்திருந்த சநந்தனர் முதலிய மாணாக்கர்கள் தமது ஆசிரியர் கட்டளைப்படி ஓர் திங்கள்வரையும் காத்திருந்தும், அவ்வெல்லைப்படி அவர்வராமையால் அம்மாணாக்கர் வருந்தி, ஐந்துநாள்வரையிலும் பலவாறு குரவனைப பிரார்த்தித்திருந்தனர். அப்போதைக்கும் ஆசிரியன்வராமையால் இனிகாலப்போக்கும் ஆகாதென்றெண்ணி ஆசிரியனைத்தேடி வெளிப்பட்டுப் பட்டினத்துட் புகுந்து இசைப்புலவர் வேடம்பூண்டு முன்னிலைப் புறமொழியாக வண்டினுக்கும்

யோகிக்குமாகப் பொருள்பட வோர் * செய்யுளை யமைத்துக்கொண்டு அதில் "தத்துவமசி" என்னும் வேதமுடிவுரையைப் பல்லவி—அடிமேல் வைப்பு ஆக்கிவைத்து இனிமை பெறப்பாடிக்கொண்டு கூட்டமாக அரசனெதிரில் வந்து சேர்ந்தார்கள். அதனை கேட்டு ஆன்மவுணர்ச்சி தோன்றுதலும், இசைச்சுவையில் மயங்கிச் சோர்வுபட்டதுபோல நடித்து, அரசன் யாக்கையின் கணுள்ள தமது இலிங்கவுடம்பினை வெளிப்படுத்திக்கொண்டு பிரமரந்திரவழியாக வெளிப்பட்டனர். இங்ஙனம் அரசதேகம் மூர்ச்சையாதலும் அங்கு கூக்குரலாயிற்று. இசைப்புலவர்களும் தாம் வந்தவழியே போய்விட்டனர்.

இதனடுவே, அரசனேவலர்கள், சமாதியிலிருந்தாற் போலும் அசைவற்றிருந்த சங்கரயாக்கையைத் † தீமூட்டிச்செல்ல; அது எரிந்துகிடந்தது. அப்போது, சங்கரவுணர்வு, கொளுத்தப்பட்டுள்ள வுடம்பிற்புகுந்து, அக்கினியைத் தணித்தற் பொருட்டுச்சுவாலா நரசிங்கதோத்திரத்தைச் செய்தலும் அப்பெருந்தீ தணிந்தது. பின் "லக்ஷ்மீந்ருசிம்ஹ மம தேஹிகராவலம்பம்" என்று இலக்குமிநரசிங்க முன்னிலையாகக் "கராவலம்பம்" என்னும் துதி செய்தளவில் ‡ திருமாலானவர் இலக்குமி நரசிங்கராக முன்றோ

---

* 𑌨𑍇𑌤𑌿 𑌨𑍇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌨𑌿𑌗𑌮𑌵𑌚𑌨𑍇𑌨
[illegible]
[illegible]
[illegible]

(இ-ள்) ஓ! இராஜனே! தாங்கள் ஸாதாரண அரசனல்ல. இதுவன்று இதுவன்று என்று வேதவசனங்களால் ஸமஸ்த சராசரங்களும் நிஷேதிக்கப்பட்டு ஆனால் யோகிகளுடைய ஸ்வாத்மாநுபவத்தினால் முற்றுமே ஒன்றுமல்லவென்று மறுக்ககூடாததாயும் மஹான்களுக் நமட்டில் தெரிந்ததாயும் எந்த வஸ்துவிருக்கிறதோ அதுவேதான் தாங்கள் என்பதுமுதலிய செய்யுள்களாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

† அமரகராஜனுடைய மந்திரிகளேவலால் அரசனேவலர்கள் சங்கரரது நிஜவுடம்பைக் கண்ணுற்று, அதைக்காத்திருந்த சங்கரப் பெருந்தகையின் மாணாக்கர்கள் தடுத்தும் முரட்டுத்தனமா யவ்வுடலை மயானத்துக்குத் தூக்கிப்போய் தீமூட்டும்பொழுது சங்கரர் தாம் சேமித்தவிடத்திற் காணாது மயானஞ்சென்று ஜடுதியில் பிரவேசிக்க, மீண்டு முயிர்வந்ததையுமவர்கள் கவனியாது தீமூட்டினதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

‡ சங்கரப்பெருந்தகை திருமாலைப்பிரார்த்திக்க அக்கடவுள் மழை பெய்வித்துத்தீயைத்தணித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவன்றி அத்திருமாலானவர் முன்றோன்றிக் கொழுந்துவிட்டெரியும் நெருப்பையணைத்து, கட்டுக்களையெல்லா மறுத்துத் தமது கையாலேயே சங்கரப் பெருந்தகையைத் தூக்கிவிட்டுப் பிறகு மறைந்தனர். இதைக்கண்ணுற்றங்கிருந்த அரசனேவலர்கள் பயந்தோடிவிட்டதாகவும் சொல்லப்பட்டி

ன்றி கைகொடுத்து மேல் தூக்கிவிட்டுத்தழுவி யருளிப்போயினர். அதனால் சங்கரர் மேனி திவ்வியதேகமாயிற்று. அத்தருணம் மாணாக்கரும் வந்துசேர்ந்தனர். அவர்களை ஆதரித்து உடன் அழைத்துக்கொண்டு யோகப்பயிற்சியால் வான்வழி வந்துமண்டனபண்டிதர் மனையடைந்தார்கள்.

## சங்கரர் உபயபாரதியாரை வென்றது.

அப்போது மண்டனபட்டர் தன் மாணாக்கரோடு எழுந்து அருக்கியமுதலிய கொடுத்து அருச்சித்து வணங்கிநின்றனர். அங்கு உபயபாரதியார் வந்து, சங்கரமுனி மாணாக்கர் செய்தவந்தனத்தை 'யேற்று எல்லாமுணர்ந்தவராதலின், அமரகராஜன் யாக்கையால் சங்கரர் நடத்திய சரிதமுணர்ந்து வியந்து வேதமுடிவுரையால் துதித்தனர். அப்போது சங்கரர் மந்திரவித்தை வலிமையால் ஆகருடிக்கப்பட்ட "அமரகம்"என்றநூல் வான்வழிவந்து அச்சபைக் கண்ணே விழுந்தது. அதனைநோக்கி, விடயங்களையுணர்ந்து அங்கிருந்தாரெல்லாம் பெருவியப்படைந்தார்கள். உபயபாரதிதேவியார் சங்கரமுனிவருக்கு முழுவெற்றியைக் கூறினர். உடனே பிரமலோகத்திற்குச்செல்ல முயன்ற அந்தச் சரஸ்வதியாரை நோக்கி "ஞாநசாரஸ்வத" துதியால் வேண்டலும் அந்த அன்னை வானவெளியிடத்தேநின்று, இனி நீர் வேண்டுவதென்னென்று வினவினர். அதற்குச் சங்கரர் நான் எந்தத்தலத்துள் இயந்திரத்தாபனைசெய்து உம்மை யெழுந்தருளச் செய்வேனே அங்கு இலக்குமி பார்வதி சரஸ்வதியென்னும் வடிவோடும் வீற்றிருந்தருளவேண்டும் என்று வேண்டலும் அந்தத் தேவநாயகியும் அங்ஙனமாகவென்று வரமருளி மறைந்து பிரமலோகம்போயினர். * அவ்வதிசயநோக்கி எல்லாரும் அற்புதமடைந்தனர்.

* சரஸ்வதிதேவியார் பிரமலோகம் போக வான்வழிக்கொள்ளலும், சங்கரர் ஆகருடித்துத்தடுத்து சிருங்கேரிக்குத் தம்முடனழைத்துப் போனதாகச் சித்துவிலாஸ சுவாமி கூறுகின்றனர்.

மாதவாசாரியரென்னும் வித்தியாரண்ணியரும், சித்விலாச சுவாமிகளும் உபயபாரதியாரைப்பற்றிப்பின் வருமாறு கூறியிருக்கின்றனர்:—

உபயபாரதியார் தமது கணவராகியமண்டனர் வாதில்சங்கரருக்குத் தோற்றதும் தானுமிவ்வுலகப் பற்றையறவே விட்டொழித்து சந்நியாசினியாகினர். மண்டனர் சுரேசுராகிச் சிருங்கேரி மடத்தில் வீற்றிருந்தபோது, பாரதியாருமுடன் சென்று அங்குதபசிலும், வேதாந்தப் பிரசங்கத்திலும் காலஞ்செலுத்திவந்தனர். தாம் சந்நியாசம் பெற்றதும்அவருக்குத் தம் கணவருயிர் துறந்தவராகவேதாமும் தாபதநிலைமையைக் கைக்கொண்டனர். ஆகையால் உபயபாரதியார் நாளைக்கும் ஷை சிருங்கேரி மடத்தில் வீற்றிருப்பதாகச் சொல்வது பொருத்தமுடையதேயாம்.

## மண்டநர் சந்நியாசம்.

பின்பு, மண்டனமிசிரர், நித்தவேள்வித் தீயினைத் தம்முள் கலப்பாக்கிக்கொண்டு விதிப்படி சங்கராசாரியரால் சந்நியாசமும் பெற்றனர். அங்கே, அந்த ஞானாசிரியன் வேதாந்தவுண்மைகளை உபதேசித்து அத்துவிதநூல் அனைத்தினையும் நன்குரைகப்போதித்து முற்றுந் தேற்றினர். அம்மாணாக்கர், குரவன் சிவனேயாமாதலின் அந்தநம்பிக்கையுடையராய்க் கருமபந்த மொழியவே சிவயோக சமாதி கைகூடி பிரமானந்தம் வெளிப்படப் பெற்றனர். பின்ஆசிரியன் ஆணையால் அம்மண்டன பண்டிதர்க்குச் சுரேசுராசாரியர் என்னும்யோகபட்டப்பெயருண்டாய்அவ்வாசிரியர் மாணாக்கருட் டலைவராயினர். பதுமபாதர் முதன்மாணாக்கரேயாயினும், கல்வி மேம்பட்டினாலும் குரவனாணையாலும் அவரங்ஙனமாயினர். அப்போது,மண்டனபண்டிதர் மாணாக்கராகவிருந்த அந்தணர்கள் அரசர் முதலியோருமாகப் பல்லாயிரவர் அத்துவிதத்தை விரும்பி அச்சங்கரமுனிவரைச் சரணடைந்தார்கள். அவருள் நிராசையடைந்தவர்க ளனேகர், சமுசாரத்தைவிட்டுக் குருபணிவிடைசெய்து பின்றொடர்ந்தனர். அச்செய்தியெல்லாம் உலகெங்கும் பரவியது. வடநாடு முற்றும் அத்துவிதபாடிய முதலியநூல் எதிர்ப்பாரற்று, அளவையென் றுடன்பாட்டோடும் பரவுற்றது.

அப்பால் சங்கரர் மாணாக்கரோடு புறப்பட்டு முறையே அங்கங்கே ஞானநூலினைப்பரவச்செய்து ஸ்ரீ சைலத்தையடைந்தனர். அவ்விடத்துப் பாதாளகங்கையில் முழுகி ஸ்ரீ பிரமராம்பிகை மல்லிகார்ச்சுனப்பிரானைத் தரிசித்து, அங்கு "சிகரகலாயந்திரப்" பிரதிட்டைசெய்து, கிருஷ்ணையின் கரையிலுள்ள பாசுபதசாத்தேய வைஷ்ணவமுதலிய மதவாதியரைத் தோல்வி யடையச்செய்து பரிபாகப்பட்டு வந்தவர்களுக்கு உண்மையை உபதேசித்து சிலநாள் அங்குதானே அந்தப் புண்ணியதலத்தில் தவநிட்டையைச் செய்திருந்தவரால் உபசரிக்கப்பட்டு இருந்தார். அப்போது அங்குவந்த ஆயிரத்திருநூறு புறமதவாதியர்களைச் சுரேசுரர், சநந்தர் முதலிய மாணாக்கரே வென்றனர். உலகத்தவர்க்கு நம்பிக்கையுண்டாக்கும் பொருட்டு "சத்தியமத்வைதம்" என்ற வாக்கியத்தை ஸ்ரீ மல்லிகார்ச்சுன லிங்கக் குறியினிடத்துத் தோற்றுவித்து, ஸ்ரீ சைலக்கொடுமுடியில் தரிசனை கொடுப்பித்து ஞானமார்க்கத்தை விளக்கினர்.

பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

# பதினோராம் அத்தியாயம்.

## உக்கிரவைரவனைத் தண்டித்தது.

ஸ்ரீ சங்கரர், அங்கிருக்கையில் காபாலிக மதத்தர் அனைவர்க்கும் தலைவனாகிய உக்கிரவைரவன் என்பவனொருவன் அச்சங்கரரால் காபாலிக சமயம் மறுக்கப்பட்டதென்ற மானத்தால் வாதிட்டு வெல்ல முடியாதாயினும், மந்திரயேவல் செல்லாவிடினும், பலவற் காரத்தினாற் கொல்லவு முடியாதாயினும், இராவணன் சீதையைக்கொண்டு சென்றாற்போல வஞ்சித்துக் கொல்லவேண்டிப் பரிபாக சித்த முடையவனைப்போல் வேடம் பூண்டு சத்துவ குணமும் பத்தியுங் காட்டித் திருநீறு உருத்திராக்க மணிந்து அத்துவித நூலோதிக்கொண்டு அவர் மாணாக்கர் கூட்டத்துட் சேர்ந்து காலம் பார்த்திருந்தான். ஒருநாள் மாணாக்கரனைவரும் நீராட ஆற்றுக்குச் சென்றிருக்கையில், தனித்து இருக்கும் சங்கர முனிவர்பால் வந்து துதித்து வேண்டிக்கொள்ள அவ்வாசிரியர் வெளித்தோன்றி யுனக்கு வேண்டுவ தென்னென; அவன், "ஐய! நீர்முற்றும் வெறுத்தனிர். உமக்குத் தேகவிழைவில்லை. இரந்தவரைத் திருத்தி செய்வதில் நிரம்பிய அருளுடையவராக விருக்கின்றீர். நானோ இச்சையை யுடையவனாக விருக்கின்றேன் பன்னிரண்டு யாண்டு மிகவருந்தி வைரவபூசை செய்தேன். பின் அவர் எனக்கு முன்றோன்றி நரபலிவேண்டினார். வேறொன்றினைக் கொடுப்பதற்கு முடன் படுதலில்லை. உலகாளும் பேரரசன்றலையே யாயினும் எல்லாமுணர்ந்த பிரமஞானி தலையேயாயினும் பலியாகத்தந்தால் உன் விருப்பம் பலிக்கும் என்றதனால் அதற்குத்தக்க அரசன் கிடைப்பதில்லை. தாமொருவரொழிய பிரமஞானியும்வேறு கிடைப்பதில்லை. யாகலின், உம்மையான் இரக்கின்றேன். ஆதலால் நீர் அத்தலையைக் கொடுப்பதனால் வருநஷ்டமும் தமக்கொன்றுமில்லை. அதனால் நான் பெரும் பயனைப பெறுவேன் ஆதலால் அதனைக் கொடுக்கவேண்டும் என்று யாசித்தான். அதுகேட்ட சங்கரர், காணவில்லார் நீர்குடித்துச் சென்றாலென்னை? எனக்கியாதொரு குறைவுமில்லை உன்கருத்தின்படி செய்துகொள்க என்று கூறிச சங்கரர் கண்மூடிச் சமாதியிடையிலிருந்தார். அப்போது, அக்காபாலிகன், சநந்தர் முதலியோர் வருவதற்குள் தன் கருத்தை முடிக்கவேண்டி விரைந்துசென்று வாள்சூலங்கொண்டு அருகேவந்தான. அதற்குள் * சநந்தனாசாரி

---

* ஸ்ரீ பதுமபாதர்ிடம் நரமடங்கல் தோன்றியவரலாறு. உக்கிரவைரவன் சங்கரப்பொருந்தகையிடம் ஆயுதபாணியாய் நெருங்கியதும், ஷை சுவாமிகளின் மாணாக்கராகிய ஸ்ரீ பதுமபாதருக்கு ஓர் கலக்கம்உண்டாய்த் திகைத்துநிற்க ஸ்ரீநரமடங்கல் அவர்மீதார்ப்பவித்து கர்ஜித்து சங்கர

யர் அங்குவந்தா ராதலின் பெருங்கோபத்தோடு ஹுங்கார சத்தம்செய்து, நரசிங்க! என்று சிந்தித்தனர். அப்போது, பதும பாதர் உச்சியில் ஓர் சுவாலை தோன்றியவளவில் கோரைப்பற்களும் அச்சத்தத்தைத்தரும் கராளமுகமும் அழற்சிகை போன்றகேசமும், கூரிய வைரநகங்களுமுடைய உக்கிரநரசிங்கமூர்த்தி தோன்றி, இரணியகசிபனை யழித்தாற்போல அவ்வைரவனைக் கிழித்தெறிந்தனர். மாணாக்கரனைவரும் அக்காலத்தில்வந்து சேர்ந்து, அந்நரசிங்க வொளியால் மடத்துட்புகமாட்டாது வெளி நின்றவாறே விசாரித்தனர். அப்போது பதுமபாதர், தாம் அகோபிலமடத்தில் தவஞ்செய்திருந்தபோது, நரசிங்கர் முன்றோன்றி வேண்டியபோது வந்து வரங்கொடுத்தல் செய்தியைக்கூறினர். உடனே நரசிங்கமூர்த்தி முகத்திருந்தொருசத்த முண்டாயிற்று. உலகு நடுக்குற்றது. தேவர் அந்தரத்தே நின்று துதித்தனர். அவ்வொலியால் சமாதிவிட்டுச் சங்கரர் வெளிமுகமாய் உபநிடதங்களாற்றுதிக்க அம்மூர்த்தி சாந்த மடைந்தனர். ஞானியர் தேகத்தைக்காப்பது, உலகளிக்குந் திருமால் கடனாதலின் அங்ஙனமாயிற்று. சுரேச்சுராசாரியர் முதலிய மாணாக்கர் யாருஞ்சங்கரரையும் சநந்தனரையும் துதித்து, வந்ததுன்பமெளிதில் ஒழிந்ததைப் பற்றிக்களித்தனர். சங்கரர் செய்த நரசிங்கத் துதியையும் இக்கதையையும் பத்தியாற் கேட்போருக்கும் படிப்போருக்கும் அவமிருத்தியுவொழிந்து மேன்மையுண்டாம்.

---

சமாதியி லிருக்குமிடம் வந்து கோபத்துடன் அவ்வுக்கிர வைரவனைக் கிழித்தொழித்தனர். சங்கரப்பெருந்தகை சமாதி கலைந்து நரமடங்கலைத் துதித்து சாந்தப்படுத்தினர். அப்புறம் அவ்விடம் குழுமிய சீடரனைவரும் பதுமபாதரை வினவ அவர் "முன்னொருகாலத்தில் அகோபலபர்வதத்திலோர்குகையில் நான் நரமடங்கலை நோக்கித் தவங்கிடந்தேன். ஒருநாள் ஒருவேடச் சிறுவன் வந்து, எதற்காக வெகுநாளாக இந்தக் குகையில் நீர் தனித்திருக்கின்றீரென்று வினவினன். அதற்கு நான் 'இக் காட்டில் ஒரு அற்புத மிருகம் கழுத்துவரையில் அழகிய மானுடவுருவம்' முகம் சிங்க உருவம் உள்ளது அதைப் பார்க்கவேண்டுமென்று நான் இத்தனை நாள் இருந்தும் அது என் கண்ணுக்குப் புலப்படவில்லை. ஆதலால் வருந்துகின்றேனென்றனன். உடனே அவன் அக்காட்டி நடுவிற் புகுந்து கணப்பொழுதில் நரமடங்கலை நெடுநாட் பழகியவற்றைக் கூட்டிவருவது போல் ஒரு கொடியால் கழுத்திற் கட்டிக்கொண்டுவந்தான். மகாவிருடிகளுக்கு மனசாலும் எட்டவொண்ணாவுருவம் எக்காரணத்தால் இவனுக்கு வசமாயிற்றென்று அவனைக் கேட்க, 'இவன் என்னை மனமொருத்தித் தியானித்தவண்ணம் யாவரும் என்னைத் தியானிக்கவில்லை. உன் தவத்திற்கு உவந்தேன் நல்ல சமையத்து அனுக்கிரகம் புரிகின்றேன்'' என்று மறைந்தனர். சற்றுமுன் நமது குரவன் றலையைக் கொள்ள வைரவன் வந்ததாக வெனக்குத் தோற்றலும் இந்நர மடங்க லுருவமும் தோன்றிற்று. மேல் நடந்தவை யானறியேன் என்றனர். இக்காரணத்தால் நரமடங்கல் தோன்றி உக்கிரவைரவனைக் கிழித்தொழித்தது.

பதினோராம் அத்தியாயம் முற்றிற்று.

# பன்னிரண்டாம் அத்தியாயம்.

பின்னொருநாள், நீத்தோர் தலைவராகிய சங்கரமுனிவர் மாணாக்கரோடு தீர்த்தயாத்திரை செய்துகொண்டு, பிரமவிஷ்ணு முதலிய தேவர்வணங்கும் ஸ்ரீமஹாபலேசுவரர் வீற்றிருந்தருளும் திருக்கோகரணம் வந்து சேர்ந்தனர். அங்கு மூன்று நாளிருந்து ஸ்ரீ மஹாபல நாதரைத் தரிசித்திருக்கையில் அவர்க்குமுன் அக்கடவுளார் பெருமானெழுந்தருளி, தரிசனை கொடுத்துத் திருவருள் செய்தார். அங்கிருந்து அத்துவிதமார்க்கத்திற்கு எடுத்துக் காட்டாகவிருக்கும், ஹரிசங்கர க்ஷேத்திரத்திற்கு வந்து, ஸ்ரீ சங்கர நாராயணர்களின் பிரிவற்றகோல விலிங்கமாகிய ஹரிஹரேச்சுரரைத் தரிசித்து, அவ்விருமூர்த்திகளுக்குஞ் சிலேடையாகத் துதிசெய்து, அருள்பெற்று, அப்பால் மூகாம்பிகை க்ஷேத்திர மடைந்தனர்.

## சங்கரர் இறந்த அந்தணமகனை யெழுப்பியது.

ஸ்ரீவல்ஹூர் என்றுவழங்கும் அந்தக்ஷேத்திரத்தில் தெருவே இவர்கள் வருகையில் பெரியரு முதியருமாகிய வேதிய ரொருவர் மனைவியோடு தங்குலம் விளக்குமொரே பேறாகியமகன் ஒருவன் இறந்தானாக அப்பிணத்தைக் கிடத்தியழுது கொண்டிருந்தனர். அவர்கள் துன்பநோக்கிச் சங்கரர்க்கு தயவுண்டாயிற்று. அங்கு காக்கும் வல்லமை யில்லாதவன் தயை வீணென்று அசரீரிமொழிஉண்டாக; அதுகேட்டு, "மூவுலகுங்காக்கவல்ல நின்னொருவனுக்கு மாத்திரமே அது தக்கது" என்று சங்கரமுனிவர் கூற, அங்கிறந்துகிடந்தமகன் உறங்கி விழித்தாற்போற் பிழைத்தெழுந்தனன். யாவரும் இதுகண்டு களிப்பும் வியப்பு மடைந்தனர்.

## சங்கரர் அத்தாமலகரைச் சந்தித்தல்.

அதன்பிறகு சங்கரர் ஒருஇனிய சோலையில் வீற்றிருக்கும் சகல மந்திரவடிவராகிய ஸ்ரீ மூகாம்பியாரைத் தரிசித்து "கலா ரோகணம்" என்றதுதிசெய்து அவர் அருள்பெற்று, அருகுள்ள * ஸ்ரீவல்லிபுரம் என்னும் அகரத்துள் பிக்ஷைசெய்து சிலமாதமங்கிருந்தார். அந்த அகரத்தில் கருமகாண்ட நிட்டர்களாகிய ஈராயிரம் வேதியரும் அவர்தலைவரான பிரபாகரபட்டரும் சாத்திரவல்லவராக விருந்தனர். அந்த அக்கிராரமுற்றும் வேதமுதலிய கலை தருமவொழுக்க நிரம்பியிருந்தன. தென்னாட்டுள்ள அந்தணரனைவரும் அவர்போதனைப்படி ஜைமினிமதத்தினையே

---

* ஸ்ரீ பலிபுரம் என்பது ஸம்ஸ்கிருத பெயர்.

அநுட்டித்து வந்தனர். அவர் பூருவ மீமாம்ஸத்தில் ஓர் ஆசிரியராகவு மிருந்தனர். அவர்க்கு * ஒரே புதல்வனுள்ளனன். அச்சிறுவன் அழகினால் மன்மதனையும், ஒளியாற் கதிரையும் ஒத்து, சந்திரன்போலும் முகத்தனு மிருந்தான். ஆனால் முதிர்ந்தவனைப் போலும் உலகவிடயங்களில் சேட்டையற்றுத் தியானித்திருப்பவனைப்போல் வாய்பேசாதும், ஒன்றனையுங் கேளாது மிருந்தான். அதுகண்டு அவன் பேய்க்கோட் பட்டானோ? அல்லது இயற்கைதானோ? முன்வினைத்திட்பமோ? நோய்தானோ? எனவையமுற்றுச் சிறந்த பெரியோர் யாரேனும்வரின், அவரைத் தரிசிப்பித்துத் திருத்துவோமென்று பிரபாகரர் சிந்தித்திருக்கையில், அனேக மாணக்கரோடு பேரறிவராகிய சித்த சந்நியாசி யொருவர் வந்தனரென்று கேள்விப்பட்டு, அவர் தரிசனைக்குத் தமதுமைந்தனோடு பழவகைகளைக் கையடையாகக்கொண்டு சென்று சங்கரரை வணங்கி நீறுபூத்த நெருப்பேபோலும் அந்தச்சிறுவனையும் வணங்கச் செய்வித்தனர். அப்போது சங்கரர் கருணையோடும் அம்மகவை யெடுத்துவிட்டனர், இச்சிறுவன் ஐந்தாண்டுவரையில் உணர்ச்சிஇன்றியிருந்ததால் இப்போது எட்டாண்டாயிற்று. மிகமுயன்று உபநயனஞ் செய்வித்தேன். வேதசாத்திர மோதுவித்தால் ஓதான். வெகுளுதலுஞ் செய்யான். உலகினுக்கு வேறாகவிருக்கின்றான். இவன் மருளின் காரணந்தோன்றிற் றில்லையென்று விண்ணப்பித்தார். அதுகேட்ட அச் சங்கர முனிவர் அம்மைந்தனைத் தயவால் நோக்கி, நீயார்? ஏன் இவ்வாறு சடன்போ லிருக்கின்றனையென்று வினவினர். அதற்கச் சிறுவன், நான் சடனல்லன் என் எதிரில் சடமும் நடை பெறுகின்றதென்று தொடங்கி, தமது சச்சிதாநந்த சொரூப அத்துவித சித்தியைக் குறிக்கத்தக்க அநுபவத்தினை யிலக்கண வழுவறப் பன்னிரண்டு வடமொழிச் செய்யுளைக் கூறினர். எழுத்தின்மணமே யறியப்பெறாத சிறுவன் வாயில் அங்கைக்கனி போலப் பிரம வுண்மையினை யுணர்த்துஞ் செய்யுளுண்டானது யாவர்க்கும் பெருவியப்புக் கிடமாயிற்று. அப்போது சங்கர முனிவர் கருணையோடுவலக்கையை அம்மகவின் தலைமேற்சாத்தி, "ஹஸ்தாமலகர்" என்று பேரிட்டழைத்து, பின்னர், கண்டீரோ பிரபாகரபட்டரே! இச்சிறுவரோ சடர். இவர் உமக்கு உதவமாட்டார். உம்மிடத்து இவர் ஒன்றினையும் விரும்பார். முற்பிறப்பிற் செய்த பழக்கவலியால் இயற்கையாகவே பேரறிவுண்டாயிருக்கின்றது. இவர் தாமே முழுதுணர்ந்தவராயினர். இவர்க்கு உலகம் வேறென்னும் மயக்கம் ஒழிந்தது. என்று கூற; அச்சிறுவர் ஆரியா! தேவரீர் அருள் என்னிடத் துண்டாவதும், திரு

* பிரபாகரபட்டருக்கு அநேகம் குமாரர்களிருந்ததாகவும் மற்றொருவித கதையுண்டு. இப்புதல்வன் சங்கரரிடம் பதின்மூன்று வயதுள்ளவராகக் கொண்டுவரப்பட்டார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

வடிவென் சென்னி தீண்டப் பெறுவதுமாகிய இவற்றினும் வேறு உபதேசமொழி வேண்டுமோ? உமது திருவடி மகிமை என்னை எனக்குணர்த்திய தென்று மீட்டும் வணங்கினர். அப்போது சங்கரர் பிரபாகரபட்டரே! இவர் உம் வயிற்றிற் பிறந்ததால் உம்முடன் உம் மரபினர் அனைவரும் நற்கதி பெற்றவராயினர் என்று சொல்லி, அம்மைந்தனை யழைத்துக்கொண்டு வெளிப்பட்டனர்.

## சங்கரர் சிருங்ககிரி யடைதல்.

பின்பு சிவரூபமாகிய சங்கர முனிவர் விஷ்ணு பிரமர் முதலிய தேவர்களாகிய மாணாக்கரால் வணங்கப்பெற்று, தமது அவதார காரியத்தில் திருத்திபெற்று, சிருங்ககிரிக்கு வந்தனர். கங்கை முதலிய யாறுகளினும் சிறந்த புனிதமுடைமையால் துங்கபத்திரையென்னும் பெயருடைய யாற்றங்கரையில், "ருஷிய சிருங்க மஹருஷி" என்னும் கலைக்கோட்டு முனிவர் * ஆச்சிரமத்திலிருக்கும் வேட்டல் முதலிய அறுதொழில் வல்லராகிய அந்தணப் பெரியர்க்குச் சூத்திரபாஷ்ய முதலிய நூல்களை ஓதுவித்து, சில காலமிருந்து அப்புண்ணிய பூமி, மிகச் சிறந்ததென் றுணர்ந்து, அங்கு பெரியதோர் கோயிலொன்று செய்து கலைத்தெய்வமாகிய சரஸ்வதியைத் தாபித்து என்றும் பூசை விழா நடக்கும்படி திட்டஞ்செய்து, அப்பால், ஓர் † மடமொன்று அமைத்து "சாரதா பீடம்" "வியாக்கியான சிங்காசனம்" "பாரதீசம்பிரதாயம்," இவைகளைத் தாபித்து, அங்கு தமது தலைமாணாக்கராகிய சுரேஸ்வராசாரியர்க்கு இவ்வுலகத்துள் சிறந்த ஆசாரியாபிஷேகம் செய்தனர். பின்பு உலகத்தில் ஞானத்தை வேண்டிய அத்துவித மதத்தருள் யார் இந்தப் பாரதி பீடத்தினைப் பழித்தல் செய்வரோ அவன் ஒழியாநரகம்பெறுக. யார் பத்தியோடு வணங்குவரோ அவனுக்கு ஞானசித்தியுண்டாகவென்று நிக்கிரகம் அனுக்கிரக மிரண்டினையும் விதித்தனர். அந்தச் சுரேஸ்வரர் முதல் அப்பீடத்தில் இடைவிடாத பரம்பரையார் ஜகத்குருவாக விருக்கவென்று ஆசீர்வதித்துவரங்கொடுத்தார். அதுமுதல் அச்சிருங்ககிரி வித்தியாபீடத்தில் ஸ்ரீ சாரதாம்பை வீற்றிருந்து அருச்சனைகொண்டு அவர்களுக்கு வரங்கொடுத்து வருகின்றனர்.

---

* இதற்கு விபாண்டகாச்சிரமவன மென்றும் பெயர். விபாண்டகர்—கலைக்கோட்டு முனிவர் தந்தை. இவ்விடத்து, காசிபர், வசிட்டர், பராசரர் முதலிய இருடிக ளாச்சிரமங்களுண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்து பரமசிவம் - **மலஹாநிகரர்** (அழுக்கைப் போகச்செய்பவர்) என்ற திருநாமத்தோடு வசிக்கின்றனர். சாரதாதேவியை யிவ்விடமே தாபிக்கும்படியாக அசரீரியுமுண்டாயிற்றாம்.

† இவ்விடம் மடமொன் றேற்படுத்த அக்காலத் தவ்விடத் தரசு செய்திருந்த **வீரசேன**னென்னு மரசன் சங்கரப்பெருந்தகைக் குதவிபுரிந்ததாகச் **சித்துவிலாச** சுவாமி கூறியிருக்கின்றனர்.

## சங்கரர் ஆனந்த கிரியாருக்கு அருளல்.

இப்பால், மெல்லுரையாளரும் சிறந்தவருமாயுள்ள வோர் மாணாக்கர் இச்சங்கரர் சந்நிதியடைந்து உடம்பை நிழல்பற்றிச் செல்வதுபோல ஒத்தபடி சுத்தம் பொறுமை அறிவுமுதலியவற்றோடு குருபணி நன்றாகச் செய்திருந்தனர். அவர் மாணாக்கரனைவருள்ளும் சிறந்த வருளுக்குரியவராய் ஆசிரியன் கருத்தையுணர்ந்து குறியாமலே தொண்டுசெய்து வந்தார். அன்றி யேனையர்போல வோதினாருமல்லர். சிந்தித்தவரு மல்லர். என்றும் களிப்போடும் யாரெது கூறினும் மறுமொழியின்றி மலைபோன்ற பெருமையோடு மிருந்தனர். அதனால் ஆசிரியர் அம்மாணாக்கருக்கு ஆநந்தகிரியென்று பேரிட்டழைத்தனர். ஒருநாள் மாணாக்கரெல்லாரையும் வைத்துக்கொண்டு வேதாந்தசாந்திபாடஞ் செய்வித்திருக்கையில் ஆனந்தகிரியென்னு மாணாக்கர் ஆசிரியர் காஷாயவாடையைச் சுத்தஞ்செய்துவர யாற்றுக்குப்போயிருந்தார். மாணாக்கர் பாடத்தை வேண்டிநிற்கையில் அவர்வரட்டுமென்று குரவன் கட்டளையாயிற்று. அப்போது பதுமபாத ரெழுந்து வணங்கி, ஐயா! அவர் செய்யுந் திருப்பணி செய்துகொண்டே யிருக்கின்றனர். அவர் வராமை யெங்கள் பாடத்திற்குத் தடையோ? என்று வினாவினர். அப்போது அக்குரவன் பதுமபாதருக் குண்டாயிருக்குங் கல்விச்செருக்கினை யறிந்தும், தயவினால், அவர்க்கு நோய் உண்டாகாது அச்செருக்கு ஒன்றே யழியும்படி, கல்வியின்றிப் பத்திமாத்திரையே செய்து கொண்டிருக்கும் ஆநந்தகிரிக்கு எல்லாக்கலைகளையும் தமது மனத்துட்டானே தானஞ்செய்துவிட்டார். உடனே அவர்வந்து, மாணாக்கரனைவருள்ளுஞ் சிறப்பத் தமக்குண்டாகிய ஞானத்தைவெளிப்படுத்தும்படி "துரோடகம்" என்னும் விருத்தத்தால் குருதுதிசெய்தனர். அதனால், குருபணிவிடையின் பெருமையை யறிந்து பதுமபாதர் முதலிய மாணாக்கர் அனைவரும் கல்விச்செருக்கினை முற்றும் ஒழித்தனர். குருபத்தியால் அவர் வாயினின்றும் முதலில் "துரோடகவிருத்தம்" வந்தமையால் அவர்க்குத் "துரோடகாசாரியர்" என்றும் மற்றோர் பெயராம். அதுமுதல் அவரும் ஓர் சிறந்த மாணாக்கராயினர். அச்சங்கரமுனிவரின் மாணாக்கர் பல்லாயிரவருள், சுரேஸ்வரர், பதுமபாதர், ஹஸ்தாமலகர், துரோடகர் என்ற இந்நால்வரும் நான்கு திசையினையும் வெல்லத்தக்க ஆற்றலுடையராய்ப் பிரமனது நான்குமுகம் போலும், வேதம்போலும், புருடார்த்தம்போலும், சிறப்புற்றுக் குருபணி செய்திருந்தனர். குரவன் புகழென்னும் முழுமதிவிளக்கம் ஞானவமுதக் கதிர்களோடு அஞ்ஞான விருளை யொதுக்கி இன்பக்குளிர்ச்சியை விளைவித்திருந்தது.

பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

# பதின்மூன்றும் அத்தியாயம்.

அதன்பின் ஒருகாலத்து, சுரேஸ்வராசாரியர் தனக்குத் தன்னைக்கொடுத்த குரவனைவணங்கி, சிறந்து ஆழ்ந்தகருத்தினையுடைய "சாரீரகபாஷியத்துக்குச் சுத்தமானவுரை யெழுதவேண்டுமென்னுங் கருத்தால், சுவாமீ! பத்தியுடைய மாணாக்கன்தான் பிழைத்திருக்கும்நாளிற் செய்யத்தக்கபணியாது அதனையெனக்கு விதித்துத் திருத்தவேண்டும் என்று வினவினர். அதற்கவ் வாரியன் களிப்புற்று, நான்செய்த * பாஷியத்திற்கு நீர்வார்த்திகம்—

* சாரீரக சூத்திரமென்பது பிரம்ம சூத்திரமாம். இது ஸ்ரீ வியாசராற் செய்யப்பட்டது. 555-சூத்திரங்க ளுடையது. இதற்கு அடியிற் கண்டபடி வியாக்கியானங்களுள.

1. ஸ்ரீசங்கரர், பிரம்மசூத்திரம், சாரீரகபாஷியம், 10,000.
2. பதுமபாதர், சாரீரகபாஷியம், விஜயாபிதண்டிகீ, அக்கினியி லிறந்தது.
3. ஸ்ரீ சங்கரர், சாரீரகபாஷியம், பஞ்சபாதிகா, 5500.
4. ஸ்ரீ பிரகாசாத்மசரணர், பஞ்சபாதிகா, விவரணம், 14,000.
5. சந்நியாஸி, விவரணம், சந்தீபனம், 25,000.
6. வாஜஸ்பதிமிசிரர், சாரீரகபாஷியம், பாமதீநிபந்தம், 12,000.
7. கங்காதரசுவாமி, பாமதீநிபந்தம், கல்பதரு, 14,000.
8. நாநாசாஸ்திரீ, கல்பதரு, பரிமளம், 9,000.
9. சந்நியாஸி, சாரீரகபாஷியம், பிரம்மவித்தியாபரணம், 26,000.
10. ஆனந்தகிரி, சாரீரகபாஷியம், ஆனந்தகிரீயம், 1,800.
11. ராமாசிரமர், சாரீரகபாஷியம், ரத்னப்பிரபா, 11,000.
12. சர்வஞ்ஞாத்மர், சாரீரகபாஷியம், சம்க்ஷேபசாரீரகம், 2,500.
13. மதுசூதனஸ்வாமி, சம்க்ஷேபசாரீரகம், சம்-சாரீரகம், 15,000.
14. ராமாசிரமர், சம்க்ஷேபசாரீரகம், சம்க்ஷேபசாரீரகம், 12,000.
15. மதுசூதனஸ்வாமி, சூத்திரபாஷியம், கல்பலதா, 4,500.
16. ராமாசிரமர், பிரம்மசூத்திரம், ராமாசிரமீ, 6,000.
17. நாராயணபட்டர், பிரம்மசூத்திரம், சூத்திரவிர்த்தி, 4,000.
18. அப்பையதீக்ஷிதர், பிரம்மசூத்திரம், சூத்திரவிர்த்தி, 2,000.
19. சங்கரானந்தர், பிரம்மசூத்திரம், சூத்திரவிர்த்தி, 1,500;192 அதிகரண சூத்திரம்.
20. வித்தியாரண்ணியர், அதிகரணசூத்திரம், அதிகரண ரத்னமாலா, 400. ஷை டீகை 4,000.
21. ரகுநாதசாஸ்திரி, பிரம்மசூத்திரம், சங்கரபாத பூஷணம் 7,000

ஆக வியாக்கியானங்களின் மொத்தம் 208400.

சங்கரருடைய பாஷியமன்றி ராமாநுஜ பாஷியம், மத்துவ பாஷியம், பாஸ்கராசாரிய பாஷியம், விஷ்ணு ஸ்வாமி பாஷியம், விஞ்ஞானேந்திரபிக்ஷு பாஷியம், நீலகண்ட பாஷியம் முதலியவைகளுமுண்டு.

விருத்திசெய்யும் என்று கட்டளையிட்டனர். ஐய! தருக்க வியா கரணமுதலிய நூல்களால் யாப்புற்று ஆழ்ந்த கருத்தினையுடைய வுமது சித்தாந்தத்தினைப்பார்த்து நன்குணரும் தரம் எனக்கில்லா விடினும், செய்யக் கட்டளையானது. அவ்வருள் வலியால் நானும் செய்யவல்லேனென்னு மூக்கமுடைய னாயினேன் என்று, ஆசீர் வாதத்தினையும் ஆணையையும் பெற்றுக்கொண்டு போயினர்.

அதன்மேற் பதுமபாதாசாரியர்க்கு நண்பரும் ஒரு சாலை மாணாக்கருமாயுள்ள சிற்சுகாசாரியர் முதலியோர், ஆசிரியர் தனித்திருக்கையில் ஒவ்வொருவராகவந்து, மெல்லமெல்ல, சுவா மிசுரேஸ்வராசாரியர்க்குச் சந்நியாசத்தினும் தொழிலறுதியினும் உள்ளத்திற் கருத்தில்லை. அன்றியும், சந்நியாசம் வேதவுடன்பா டல்லவென்று தன் மனைக்கட் பிச்சைக்கு வரும் சந்நியாசிகளை உள்ளே விடவொட்டாது பரிசனரை வைத்துத் தடுத்தவர். அவர்க்குமுன் தாமனுட்டித்திருந்த ஜைமினி மதமான பூருவ மீமாம்ஸைத்திற் சிறந்த கருத்தினை யுடையவர், ஆகலினன்றோ? சந்நியாசத்தினைக் கூறும் சுருதி மிருதிகளுக்குக் கருமஞ்செய்யுந் திறமில்லாத அலி, குருடு, செவிடு, ஊமை, பங்கு முதலிய குறை யுறுப்பினர்பாலது என்று அந்த மீமாம்ஸ உரையிலெழுதினர். ஆதலால், அவர் தேவரீர் பாஷ்யத்திற்கு விருத்தி யெழுதினால் அது மாறுபடுமாகவே யார்க்கு முடன்பா டாகமாட்டாது. அன் றியும், கண்கண்ட மகிமையோடுங்கூடிய ஞானதிகாரரான தமது முதல் மாணாக்கர் பதுமபாதர் செய்தால் அதுயாவர்க்கு முடன் பாடாம், என்று ஒரே கருத்தாகப் பலருங் கூறினர்.

அப்புறம், அப்பதுமபாதாசாரியரே குரவன் பக்கல்வந்து, அத்தாமலகாசாரியரைப் புகழ்ந்து, அவர் தமது பாஷ்யத்திற்கு வார்த்திக மெழுதினால் அழகாக விருக்குமென்று கூறினர். அது கேட்டு, சங்கரர், "ஆம் தக்கவாறே ஆனால், எப்பொழுதும் அவர் உண்முக நோக்க முடையவர், புறநோக்க மில்லாதவர் ஆதலின் வாது நூலுக்கு உதவார்." எனவே, பதுமபாதர், ஆயின் அவர் க்கு அந்தத் தரமுள்ளதென்று எங்ஙனம் உடன்படலாம் என் றார். அப்போது சங்கரர், கேளும் பதுமபாதரே! முன் யமுனைக் கரையில் சித்தபுருடனான வோர்விரதன் தவநிட்டையுடையவ னாய் என்றும் உண்ணோக்க முடையவனாகவே யிருந்தான். அவ் வாறிருக்க நீராட அந்த யாற்றின்றுறைக்கு வந்தவோர் அந்தண மாது இந்த அத்தாமலகராகிய இரண்டு வருடத்திய மகவை அந்த யோகிபக்க லிருக்கவைத்து, ஐய! சிறிதுபோது பார்த்திருந்தால் நான் நீராடி வருவேனென்ன விடுத்துப்போயினள். பின் அக்குழ ந்தை விளையாடிக்கொண்டே சென்று அந்த யாற்றில் விழுந்து இறந்தது. அப்போது அந்தமாதும் அவள் சுற்றத்தாரும் இறந்த குழந்தையை அந்த யோகிபாலிட்டு அழுதிருந்தார்கள். அந்தக்

கூக்குரலால் அவர் சமாதிகலைந்து வெளிமுகமாய்த்திரும்பி, அவ்வனைத்தக்கண்டுபார்த்து, கருணையுண்டாகித் தமது கிழயாக்கையைவிட்டுப் பரகாயப் பிரவேசவகையால் பிரவேசித்தனர். அவரே இவர். ஆதலால், எவ்வளவு அறிவின் முயற்சிக்குந் தக்கவரேயாம். ஆயினும், புறநோக்கமில்லாமையால் வார்த்திகவுரை செய்யலாற்றார். என்னோடு நெடுங்காலம் வாதுசெய்தவராதலின் சுரேஸ்வரரது தரம் நன்றாகவறிவேன். அவர் பிரமதேவனேயாமன்றிச் சாதாரணரல்லர். அவரையொழிய என் பாஷியத்திற்குத் தக்க வார்த்திக வுரைக்காரன் தோற்றப்படவில்லை. ஆனால், ஒருவிடயத்தில் பலவிரோதிகள் ஏற்பட்ட பக்ஷத்தில், யார்க்கும் விரோதமான செய்கையை யான் செய்யமாட்டேன் என்று கூறினார். அதுகேட்ட மாணாக்கரனைவரும் ஒருமுகமாக இச்சநந்தனாசாரியர்க்குக் கட்டளையாகலாமே யென்று சொன்னார்கள். அதற்கு அவர், "அவ்வாறே அவர் வேறொருவுரை செய்து கொள்ளலாமன்றி எமது கருத்துப்போலும் வார்த்திகவுரை செய்யலாகாது" என்று கூறிச் சுரேசுரரை யழைத்து, உமது புகழைப்பற்றி பலபேர் பொறாமைப் படுகின்றன ராதலின் இனி நீர் அவ்வார்த்திகவுரை செய்யவேண்டாம். ஆனால் என்பாஷியத்திற்குத் தக்க விருத்தியுரையில்லையே யென்னுங் கருத்து என்னை வாதியாது, நீர் வேறு நூல் செய்யும்" என்று ஆணையிட்டனர். புகழ் முதலிய பயனொன்றினையும் கருதாது, சுரேச்சுவரர் குரவனாணையைத் தலைமேற்கொண்டு "நைஷ்கர்மியசித்தி, சம்க்ஷேபசாரீரகம்" முதலிய நூல்களைச்செய்து குரவன் சமுகத்திட்டனர். அதனால், ஞான நூல்விளக்கந் தெளிவுற்றுச் சீடர்களுக்கு ஐயமொழிந்து பெரிய வுபகாரமாயிற்று. குரவருங்களிப்புற்றனர். பின்பு சுரேச்சுரருக்கு வெகுளியுண்டாய் கமண்டல நீரைக் கையில் வாங்கிக்கொண்டு, குரவனாணைப்படி நான்செய்து வந்த பணிவிடைக்கு விரோதஞ்செய்தவர்கள், என்னைப் போற்செய்யு நூல்களெல்லாம் அவர்கள் கருதியபடி நிறைவேறாமற் போகக்கடவது என்று சபித்தனர்.

அதுவரையில் பதுமபாதர், பிரமசூத்திர பாஷியத்திற்குத் தாம் எழுதிவைத்திருக்கும் ஐந்துபாதத்தின் உரையையும், குருசந்நிதியில் வாசித்துக் கேட்பித்தனர். பின்பு சாபம் பிறந்ததனால் குரவன் கட்டளை பெற்றுத் தன் மாணாக்கரோடு புண்ணிய க்ஷேத்திரங்கடோறுஞ் சென்று, பரமேச்சுரனைப் பூசித்து, இராமலிங்க தரிசனமும் சேதுஸ்நானமுஞ்செய்து, அந்த நூலை நிறைவேற்றி வரவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டனர்.

## சங்கரர் சுரேச்சுரர் முதலியோர்க் கருளல்.

அவ்வளவாயினும், குரவனாணைக்கும் தடை நேரிட்டதேயென்னும் கலக்கம் சுரேச்சுரர் உள்ளத்தினை விட்டொழிந்த

தில்லை. அக்கவலையுணர்ந்த ஆசிரியனார், சுரேச்சுவரரையழைத்து, அந்நியசாகை மாணாக்கர் தடையறும்படி, நான் கிருஷ்ணயஜுஸுவின் சாகையன், நீர் சுக்கில யஜுஸுவின் சாகையர், இவ்விரண்டு சாகையினுக்கும் நான்செய்திருக்கும் பாஷியங்களுக்கு இரண்டு வார்த்திகவுரையு மெழுதுமென்று விதித்தனர். அவ்வாறேயவரும் அவ்விரண்டு நூலினையும் முடித்துக் குருதக்ஷிணையா வொப்புவித்தார். அவையுலகிற் சிறந்து விளங்குகின்றன.

பதுமபாதர், தாமும் குருதக்ஷிணை கொடுக்கவேண்டுமென்னும் எண்ணத்தோடு பிரமசூத்திரத்தி னுரைக்கே ஆராய்ச்சி செய்து மிகுந்த யுத்திகளோடு "விஜயடிண்டிமம்" என்னும் பெயரிய நூலொன்றுசெய்து குருகாணிக்கை வைத்தார். சங்கரமுனி அதனைநோக்கி, இது வாதுக்குரியயுத்தி விசேடமாக விருப்பதேயன்றி யுணர்ச்சி யனுபவத்திற்குப் போதாது என்றுவிட்டு நீர்செய்திருக்கும் "பஞ்சபாதிகையே" போதும். அதனுள்ளும் முதற்கணுள்ள ஐந்துசூத்திரன் பாஷியத்திற்கு நீர் செய்திருக்கும் உரைதக்கது, அவற்றுள்ளும் முதலிரண்டு சூத்திரபாஷிய வியாக்கியானமே எமக்குக் குரு தக்ஷிணையாம். உமதுகல்வியயன்படும் என்று கட்டளையிட்டனர். அப்போது, பதுமபாதர் மிகவும் குருதுதிசெய்து, இன்னுமுறை செய்திருக்கும் பதினொரு பாதங்களுக்கும் உமது பாஷியத்திற்கு என் வியாக்கியானம் உண்டாயிருக்கும்படி அருளவேண்டுமென மிகவும் வேண்டிக்கொண்டனர். அப்போது, சிவகிருபையால் வேறுவிதமாக முடிவையடையுமென்று குரவன் கட்டளையாயிற்று. அதனாலே இப்போது பாஷியத்துக்குப் பதுமபாதர் செய்தவுரையில் முன்பாகத்திற்கு "பஞ்சபாதிகை" எனவும், பின்பாகத்திற்கு "விவரணம்" எனவும் பெயருண்டாய் வழங்கிவருகின்றது. உடனே சுரேச்சுரர்தமக்கு மாத்திரம்சூத்திரபாஷியத்திற்கு வியாக்கியானஞ்செய்யத்தக்கபுண்ணியமில்லாமற் போயிற்றே யென்று வருந்துகையில் அக்குரவன் தயவோடு நீர் இன்னும் எண்ணூறுவருடம் இந்தவுடம்போடு தவஞ்செய்திருந்து, பின்பு மறுபிறப்பு, எடுத்து அப்பிறப்பின்நாளெல்லாம் உரையெழுதுவதிலே செலுத்தி, வாஜஸ்பதி யென்னும் பெயரோடு, ஆறு ஆஸ்திகபாடியங்களுக்கும், ஆறுநாஸ்திகபாடியங்களுக்கும் நீரே உரையாசிரியராய்ப்பின்பு எல்லாவற்றின் மீதுஞ் சித்தாந்தமாக என்பாடியத்திற்குப் பெரிய வுரையெழுதி அழிவற்ற புண்ணியச் சீர்த்தியை அடைவீராக. உம்மிடத்தி லுள்ள பிரகற்பதி கூறு, வாஜஸ்பதி பிறப்பில் செய்யத்தக்க காரியங்களைச் செய்து முடிப்பதனால் புனிதமாகின்றது. அப்படிப்பட்ட "வாஜஸ்பத்தியம" என்ற நூலுக்கு உரைகளும், அவற்றி னுரைகளுமாகவுண்டாயவை மிகவிருத்தியாய் நெடுங்காலஞ் சிறந்திருக்கு மாதலால் நீர்வருந்த வேண்டாவென்று வரங் கொடுக்கக் குருவருள் பெற்றுச் சுரேசுரர் திருத்தியடைந்தனர்.

பின்னர், ஆநந்தகிரி முதலிய மாணாக்கரையழைத்து நீவிரனைவரும் அத்துவித சித்தாந்தினைப் பற்றித் தக்கபடி நூல்கள் செய்வீர்களாகவென்று விதித்தனர். அவர்களுமவ்வாறே தத்தமக்குள்ள ஆற்றலளவின்படி தன்னறிவென்னுந் தாமரைக்குச்சூரியனே போலும்நூல்கள் பலபலசெய்து பத்தியால் குருதக்ஷிணை கொடுத்தனர். அப்பால், சங்கரா அவைகளையெல்லாம் தயவோடு பெற்றுக்கொண்டு மாணாக்கர் கல்வி பயன்படும்படி வாழ்த்தினர்.

பதின்மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

# பதினான்காம் அத்தியாயம்.

## பதுமபாதர் யாத்திரை.

அப்பால், பதுமபாதாசாரியர் தீர்த்த யாத்திரையின் பொருட்டு ஆரியன் சமுகத்து விண்ணப்பஞ்செய்ய, அந்த யாத்திரையின்விதி, அதற்குரிய அதிகாரி, சந்நியாசிகளின் பிரிவு, ஞானிகளின் தீர்த்த யாத்திரையின் இரகசியம், தேயுந்திரிவதன் குணதோஷங்கள், அவ்விடயத்திலிருவகைச் சந்நியாசிகளின் ஒழுக்கம் இவற்றைத் தெரிவித்து, அவ்வாரியன் சிருங்க கிரியினின்றும் யாத்திரைக்கு விடை கொடுத்தனுப்பினர்.

## சங்கரர் தாய்க்கருமம் புரிதல்.

அதன்மேல் சங்கரர் யோகநோக்கினால் தமது தாயின் முடிவுநாளுணர்ந்து, வான்வழிக்கொண்டு மலைநாடுசேர்ந்து, தாயெதிரில் நின்றார். அங்கு தன் முடிவுநாளுக்கு வந்துதவிய மகனாரைப் பார்த்து, மைந்த ! வந்தனையோ ? யான் நெடுங்காலமாக விழைவுற்றிருந்தபயன் இப்பொழுது பெறலாயிற்று. உன்னைப்பார்ப்பதினும் மேற்பட்டதில்லை. நீயே என்கருமத்தை முடித்து * நற்கதியடைவிக்க வேண்டுமென்று தெரிவித்தார்.

சங்கரர், அவ்வம்மையார்க்கு அத்துவிதவுண்மையாகிய நிர்க்குண தத்துவ உபாசனை மார்க்கங் † கூறிய அளவில், அவர், மகனே ? என்னறிவு நிர்க்குணதத்துவ வுபாசனைக்குத்தக்கதல்ல. அவ்வளவு பழக்க முயற்சியும் எனக்கில்லை. ஆனால், சகுணோபாசனையினுள்ளே சிறந்ததொன்று வேண்டுமென்னுங் கருத்துண்டு. அவ்வளவு பெரும்பயன் வருந்திமுயலாது இப்பொழுதேபெறச் செய்யவல்லையோ ? என்று வினவ; சங்கரர், எட்டு "புஜங்கப்பிரயாத விருத்தத்தினால்" சிவதுதிசெய்தார். உடனே சிவாக்கினையால் அவ்வம்மையார் விழிக்குச் சூலபாணிகளாகிய சிவகணங்கள் தோன்றினர். அவர் கண்களை இறுகமூடி, மகனே ! மகனே ! நான் இவர்களோடு செல்ல மாட்டேன் என்றார். உமக்கு இந்தப்பெரும் பயனும் கிடையாது ஒழிந்ததோ ? என்று சிந்தித்து, அவர்க்குத்

---

* ஸந்ந்யஸ்தோ பித்ருகார்யம் விஹிதம் வர்ஜயேத்ஸதா |
ஸர்வ வந்த்யேந யதிநா ப்ரஸூர் வந்த்யா ப்ரயத்நத: ||

ஸந்யாஸிகள் கர்மம் செய்யலாமோவெனின் ஸ்மார்த்த புராணம் எல்லாராலும் வந்தனம் செய்யத்தகுந்த ஸந்யாஸியால் தாய் எவ்விதத்திலும் வணங்குதற்கு உரியள், என்று விதந்திருக்கிறது.

† இதற்கு "உபதேச ஸாஹஸ்ரி" என்று பெயர்.

தக்க கதியிது வெனத்தமது ஞானநோக்கத்தா லுணர்ந்து, நான்கு தோளும் சங்குசக்கிரம் ஸ்ரீவற்சம் துளவ முதலிய விளங்க தாமரைக் கண்ணும் அபயவரதகரமும் பொன்னுடையுமுடைய விஷ்ணு மூர்த்தித் தியானத்தை ஞாபகப்படுத்தினர். அவ்வம்மை "நாராயண, கிருஷ்ண, வாசுதேவ, முகுந்த. சரகணாகதரக்ஷக சரணம் பவ" என்று அக்கடவுளது தெய்வநாமங்களைத் துதித்து, அந்நெடுமால் திருவடிகளில் நெஞ்சையிருத்தித் தேகத்தை விடுத்தார். அப்போது, சங்கரர் "விஷ்ணுபுஜங்க" தோத்திரஞ்செய்ய வைஷ்ணவ தூதர்கள் அவ்வம்மையாரைத் தெய்வமான மீதிருத்தி முறையான முத்திவகையே விஷ்ணுவுலகத்தினை அடைவித்தனர்.

அப்போது, சங்கரமுனிவர் தமது முன்னாச்சிரமத்தின் தாய் உடம்பினைச் சமஸ்காரம் செய்யும்பொருட்டு அவர் சுற்றத்தினரைத் தருவித்து, வேதமுணர்ந்த வேள்வித்தீயாளர் மனையிலிருந்து சுத்தமான தீயைக்கொடுக்கவென்று யாசித்தார். அதற்கவரனைவரும் ஒன்றாகி இவர் சந்நியாசியின் தருமத்திற்கு விரோதமாக நடக்கின்றார் எனச்சிலரும், சந்நியாசி யென்றால சாதாரணியுமல்லர். யோகசித்தர்களின் சரிதை யிதுவென்று குறிக்கலாகாது. நம்போலும் அவர்க்குவிதி நிடேதபந்தமில்லை. அவர்க்கு முரணாக நாம் நடந்தால் குற்றமேயாம் என்று சிலரும், தக்கவரென்பது நூன்முறைதவறாது நடப்பவர்களன்றோ ? என்று சிலரும், சந்நியாசியானாற்றானென்னை ? தாய்க்குக்கருமஞ் செய்வதாற் குற்றமில்லை. பரசிராமன் தாயையும் தமையனையும் கொன்றாலும் பாவத்தையடைந்ததில்லை யல்லவா ? என்று சிலருமாகத் தத்தமக்குத் தோன்றியவாறே வார்த்தை சொல்லிக்கொண்டு கடைமுறை நெருப்புதவாமலே போய்விட்டார்கள் அப்போது சங்கரர் அவர்களைப்பார்த்து உங்களுக்குச் சந்நியாசி பிச்சைதரும் தகுதியில்லாமற்போகுக. * நீவிர் வேதத்திற்குப் புறம்பான வராகுக. உங்கள் மனைக்கட்டானே மயானம் உண்டாகுக என்றுகூறி, தாயைச்சுமந்து செல்லுமவர்கள் கிடையாமையால் இரண்டு கைகளையும் தேய்த்துவலக்கரத்திற் றீயை உண்டுபண்ணி மந்திரவிதிப்படி அந்தமனையையே விறகாக்கி, அந்நிலத்தினை மயானஞ்செய்து தகன கருமத்தைமுடித்து, கமண்டலசலத்தை மந்திரித்திறைத்துக் கங்கையை யபிரார்த்தித்து, "அஸ்திஹாரிணி" என்னுந் தீர்த்தத்தினைப்படை

* சங்கரர் தமது தாயிறந்ததற்கு அவ்வூரார் உதவி செய்யாமை பற்றிச் சபித்துத் தாயை வாழைப்பட்டை யடுக்கித் தமது கமண்டல நீரிறைத்து, தாயின் தேகத்தைத் துண்டுகளாக சிதைத்துத் தீமூட்டி எரித்தாரென்றும், அதைப்பற்றியே இக்காலத்தும் அக்காலடி கிராமத்திலுள்ளவர்கள் தத்தம் புறக்கடையையே சுடுகாடாகவும், துண்டுதுண்டாக சிதைப்பதற்குப் பதி லோர்வெட்டுக்காயம் செய்தே பிணத்தைத் தீமூட்டும் வழக்கம் வைத்திருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அக்கிராமத்தில் எவரும் பிச்சை கொள்வ தில்லையாம்.

த்து, வேதியரில்லாமையால் பறவைகளையே வேதியராக வைத்துக் கொண்டு, தாய்க்கடனை முடித்துவிட்டு, இத்தேயம் சந்நியாசிகள் வருதற்குத் தகுதியற்றதாகுக; என்று, வான்வழிக்கொண்டே புறப்பட்டனர்.

## பதுமபாதர் பாஷியவுரை யிழந்துபோனது.

பதுமபாதர், வடநாடு முற்றும் முத்திவிற்றுமேன திரிந்து வந்திருந்தமையால் தென்னாடு நோக்கிப்புறப்பட்டு, திருக்காளத்தி, திருக்காஞ்சி, சிதம்பரம், † முதலிய திருப்பதிகளை யடைந்து புண்ணிய நீராடி அங்குள்ள மூர்த்திகளையும் தரிசித்துச் சிரங்கமடைந்து, தமது முன்னாச்சிரமத்தின் அம்மான் மனைக்குப் பிச்சைப் பொருட்டுச்சென்றார். அங்கு மீமாம்ஸர்களையும், வைணவர்களையும் வாதத்திற் றோல்விகண்டு, பிரபாகரர் மாணாக்கராயும், பல்லாயிரமாணாக்கர்க்கு ஆசிரியனாயும், பூர்வமீமாம்ஸ நூலின் அபிமானியாயும், சகல நூலினும் சிறந்த பண்டிதனாயுமுள்ள தம் அம்மானுக்குத்தாம் செய்த பாஷிய வியாக்கியானத்தைக்காட்ட ! அவர் நூலினை நோக்கிக் களிப்புற்றாலும் தமதுமதக்கொள்கைக்கு மறுப்புண்டாயிற்றே யென்னும் துக்கத்தை வெளிக்காட்டாமல் நூலினைப்புகழ்ந்தார். பின்பு, பதுமபாதர், தமது நூல்களையெல்லாம் பழுதுபடாமல் வைத்திருக்கவென்று கூறி இராமேச்சுர யாத்திரைக்குச் சென்றார்.

அப்போது, அந்த அம்மான் மதவிரோதத்தினால் கெடுநினைவையெண்ணி ஊர்ப்பழிப்புக்குத்தான் அகப்படாமையின் பொருட்டுத் தன்மனைக்குத்தானே தீயிட்டு, அதனுள்ளிருந்தவர்களையும் வேண்டும் பொருள்களையும் வெளிப்படுத்திக் கொளுத்திவிட்டுத் தன்பொருள் போனாலும்போக, அந்தோ! சந்நியாசியின்பொருள் போயிற்றே யென்ற வருத்தங்காட்டிக் கொண்டிருந்தார்.

பின் பதுமபாதர், மாயூரம், மத்தியார்ச்சுனம், கும்பகோணம், மதுரை முதலிய ஸ்தலங்களின் யாத்திரையும், காவேரி, தாம்பரப்பருணி முதலிய தீர்த்தஸ்நானமும் செய்துகொண்டு தென்னாடு முழுவதும் வாதிகளைவென்று சக்கிராங்க வைணவத்தினை மறுத்துச் சுத்த வைஷ்ணவாத்துவிதத்தினை நிலைநாட்டித் தருப்பசயனமடைந்து, அகஸ்தியரை நோக்கி மூன்றுநாள் தவஞ்செய்து, அவரைத் தரிசித்து, அவரருளால் பல ரகசியங்களையு முணர்ந்து, முன் ஸ்ரீராமன் இராவணனை வெல்லும் உபாயங் கேட்ட வழி அகத்தியர் கூறிய உபதேச கதைகளையும் இராமலிங்கத்தின் மான்மியங்களையும் அவராலுணர்ந்து ஆசீர்வாதம் பெற்று, இராமேச்சுரம் சென்று அங்குவந்த வாதிகளோடு வாதித்து இராமே

† ஸ்ரீசிதம்பரம் என்னும் தலம் பதுமபாதரவதரித்த வீடமென்பர் "சிந்துவிலாச" சுவாமிகள்.

ச்சுர மென்னும் சொற்பொருளைச் சித்தாந்தஞ்செய்து, இருவரைகட்டுபட்ட சேதுஸ்நாநத்தையும் விளக்கி யிராமலிங்கத்தைத் தரிசித்து, மறுபடியும் சீரங்கத்திற்கு வந்து, புத்தகங்களெல்லாம் தீப்பட்டெரிந்துபோன செய்தி கேள்விப்பட்டு வருத்தமுற்றுத் தைரியத்தோடு மீட்டும் உரையெழுதத் தொடங்கினார். அப்போதவர் கல்வி யறிவு வல்லமையை அழிக்கவேண்டுமென்று எண்ணி அவர் அம்மான்செய்த மருந்திட்டினால் அறிவுமயங்கி நூல் செய்வதற்கு நுண்ணறிவு இல்லாமலே மிகுந்த வருத்தத்தினால் சிறிது சிறிது எழுதிக்கொண்டு, சையகிரிப் பக்கலிலிருந்த சங்கராசாரியர் சந்நிதிக்கு வந்துசேர்ந்தார்.

## பதுமபாதர் துன்பொழிந்தது.

பின்பு பதுமபாதர்க்குக் குரு தரிசனத்தால் அறிவின் மயக்கக் குற்றமொழிந்தது. நூல் செய்யுமாற்றன் மாத்திரம் அமைந்ததில்லை. அதனைக் குறித்தும் தந்நூல் சுடடொழிந்த காரணம் பற்றியும் ஆசிரியரை வினவ; அவர், சுரேச்சுரர் சாபத்தா லிவ்வாறுண்டாயிற்றென்றும், அம்மானே அதனைக்கொளுத்தி யெறிந்தனர் என்றும், மருந்திட்டினால் அறிவு மயங்கிற்றென்றும் கூறித் தாய்கேட்டிருந்த வளவில் "பஞ்சபாதிகை" என்னு நூலினைத் தாமேகூறி யெழுதுவித்து பாதோதகத்தால் பதுமபாதர்க்கு அறிவைவிளக்கு வித்தமையால் அவர் இட்டசித்தி பெற்றவராய்க் களித்திருந்தார். அச்செய்தி யுணர்ந்து, கவி சிரோமணியான கேரளதேயத்தரசன் இராஜசேகரன் என்பவன் தன் "சரஸ்வதி பண்டாரம்" என்னும் புத்தகசாலை எரிந்துவிட்டமையால் அதில் அழிந்துபோன தன் கவித்துவ நூலைப் பற்றிக் கவலையுற்று, சங்கர முனிவரை யடைந்து வணங்கி விண்ணப்பித்தான். அப்போது சங்கரர் அவனது நூல்களையெல்லாங் கூறிய பல இரகசியங்களையும் உபதேசித்தார். பின் அரசன் தனக்கென்ன கட்டளையென்று கேட்க; உனது நாட்டு வேதியர் வேதத்திற்குப் புறம்பானவர்களாய் மனையிற்றானே மயானஞ் செய்துகொண்டு சந்நியாசி பிக்ஷையில்லாம லிருக்கவேண்டுமென்று கூறிவிட்டு, சுரேச்சுரர், பதுமபாதர்முதலிய மாணாக்கர்களோடு அங்கிருந்தும் புறப்பட்டார்.

பதினான்காம் அத்தியாயம் முற்றிற்று.

# பதினைந்தாம் அத்தியாயம்.

## சங்கரர் திக்கு விஜயத்திற்குச் செல்லல்.

அப்பால், பதுமபாதர், அத்தாமலகர், சமித்பாணி, சித்விலாசர், விஞ்ஞானகந்தர், விஷ்ணுமுத்தர், சுத்தகீர்த்தி, பானு, மரீசி, கிருஷ்ணர், தரிசனபுத்தி, விரிஞ்சிபாதர், சுத்தாநந்தர், ஆநந்தகிரிமுதலிய மாணாக்கருடன் சங்கரமுனிவர், சேனைகளோடு வில்லம்பேந்தி சுதன்மராஜன் உடன்வரத் திக்குவிசயத்தின்பொருட்டு வெளிப்பட்டுமுதலில் திருவிடைமருதூர்வந்து, சிவதரிசனஞ்செய்து, அங்குசேர்ந்த சனங்களினுள்ளே "**சத்யமத்துவைதம்**" என்று சொல்லிய மகாலிங்கேசுர வாக்கியத்தால் யாவர்க்கும் நம்பிக்கை வருவித்து, அந்நாட்டவர்யாவரையும், ஐம்பெரும் வேள்வி, ஐங்கடவுளரருச்சனை, அத்துவித ஆன்மானுசந்தான முடையவர்களாக்கிய, பல சமயவாதிகளாகியும் வேதப்பொருளில் ஐயமுற்று வாதிபபவராயு முள்ளவரெல்லாம் வந்தபோது,

## சங்கரர் பிரசங்கம்.

இலிங்கந் தரித்தலாகிய வீரசைவ விரத மொன்றொழிய சைவத்தை அனுட்டிக்கின்றோம். சக்கிராங்கமென்னும் வீரவைணவதீக்ஷையொழிய விஷ்ணுபக்ஷம் எங்களுக்கு விரோதமானதல்ல. சடைதரித்தல் எலும்பை யணிதல் முதலிய தோஷமொழியக் கபாலிமூர்த்தியைப் பூசிப்பது எமக்கு உடன்பாடே. மதுமாமிசங்களொழியச் சத்தியை யுபாசித்தல் எங்கள் மதமேயாம். இரதசந்தன மொழியச் சூரியனை பூசிப்பது எங்களுக்குத் தருமமே. எச்சிற் குற்றமொழிய கணபதியைப் பூசிப்பது எமக்குச் சிறந்தகருமமே. சுருதி மிருதி பெரிய ரொழுக்கங்களினால் விலக்கப்பட்டுள்ள கொடுமையுள்ள தாமதக் குற்றங்களை யொழித்துச் சாந்தமாகிய சத்துவ வண்ணத்தால் பூததயை, சத்தியம், சுத்தம், பொறி புலனடக்கல், குரு தெய்வபத்தி முதலிய நற்குணங்களையடைந்து, வேதமாகிய தாயின் கருத்தினை யுணர்ந்து, சிரத்தை, பத்தி, தியானம், ஞானம், யோகங்களினால் சாதனமடைந்தவனாய், சிவவிஷ்ணுசத்தி வைரவசூரிய கணபதி ரூபமாயுலகையாளபவனாயும், எல்லாத் தெய்வமுந் தானாயும், எல்லாவுயிர்க்கும் அறிவாய் விளங்குபவனும், அளவற்ற நற்குணக்கடலாகியும், எல்லாம் வல்லவனும், எல்லாமுணர்ந்தவனும, எங்கு நிறைந்தவனும், வேதமுடிவுரையா லுணரபபடுபவனும், தனனிச்சை வடிவமான மாயாசத்தியினிடத்தில் பலவுலகமென்னும் ஞானநாடகங்காட்டவல்ல ஒரே கடவுளுமாகிய பரசிவமொழிய வுண்மைப்பொருள் வேறில்லையென்று, எல்லாவேதாந்த உளவை

யாலும் சித்தாந்தஞ்செய்து, சுருதி, உத்தி அநுபவம், என்னும் மூன்றினாலும் அப்படிப்பட்ட பரசிவானந்த பூரணாநுபவத்திற்கு மித்தைவடிவாகிய பேதநோக்கம் தடையாதலின் தன்னிடத்தே ஆன்மலிங்கோபாசனை செய்து, அதனிடத்து, தனக்கு வேண்டிய தெய்வம் ஒன்றினைக் குருமொழிப்படி மந்திரயோக தியான வுபாசனை செய்து பூரணத்தன்மை பெறும்பொருட்டுச் சகுண வித்தையால் அத்துவிதபாவனையை அநுசந்தானம் செய்து, கருமகாண்டத்தினால் விரதம் யாகந்தவஞ் செய்து, குருமூர்த்தியைப் பூசித்து, பாவத்தை யொழித்து புண்ணிய வலியால் ஆஸ்திகத் தன்மையையும் குருதெய்வ பத்தியையும் வலுப்பண்ணிக் கொண்டு, யோகப்பயிற்சியால் சித்த சுத்தியடைந்து, வேதாந்தக் கேள்வி முதலியவற்றால் விவேக வைராக்கியங்களை யடைந்து, சகுணோபாசனையால், கடவுளருளைப்பெற்று, குருவருளால் நிர்க்குணோபாசனை பெற்றுச்சமாதி நிட்டனாய் ஆன்மாநுபவமுண்டாய்ச் சிவன் முத்தனாய்ச் சுத்தாத்துவித சித்தியடைந்து, விதேக கைவல்லியம் என்னும் சிவானந்த சின்மாத்திர மகுடமாதலே எங்கள் சித்தாந்தம் என்று சுருதி உத்தி அநுபவங்காட்டி வாதிகளனைவரையும் உடன்படுத்தித் தமது மாணாக்கர்களாக்கினர். சங்கரர், திக்குவிசயத்தின் பொருட்டுக் காமக்குரோதங்களைப்பற்றி வித்தை மதத்தால் வாதிகளைவென்றதில்லை. எல்லா வுயிர்களினிடத்திலும் அபேதமான தயையோடு கூடிய சிவயோக சித்தியுடைய குருலீலை இவ்வாறு நடந்தது. முக்கியமாய்த் தெய்வபேதம், ஆன்மபேதம், தேகம், அதன் சம்பந்தமான விஷய சுகப்பிரவஞ்சமே சத்தியமென்று நம்புவது, தெய்வவுயர்ச்சி தாழ்ச்சி, முதலியவற்றால் காமக்குரோத முதலிய தீக்குணங்களும், தாமதமும், கலகமும், கெட்ட அபிமானங்களும் உண்டாவதன்றிச் சித்தசுத்தி யுண்டாவதில்லையாகலின் சிவஞானம் ஒன்றாகவே யிருத்தலால் அகண்டமாகிய பிரணவப்பொருளை யெவ்வகை யுபாசனையாலாயினும் பிரிவற்றவுபாசனை செய்யாவிட்டால் மேற்குறித்த குற்றமொழிவதில்லை. உபநிடத முதலிய பிரமாண வுடன்பட்டால் யாவர்க்கும் இவ்வொரு பிறப்பில்தானே ஆன்மாநுபவ வின்பமுண்டாய்ப் பயமற்று ஐயமற்ற முத்தியைப் பெறுவித்தற்பொருட்டு எல்லாமதத்தவர்க்கும் பகைமையில்லாது உடன் பாடாகத்தக்கதாக அத்துவித சித்தாந்தத்தினை உலகத்தில் நிலைநிறுத்தி வெளிப்படுத்தினர். அதன் பொருட்டுச் சங்கரர் செய்த திக்குவிஜய கதைகளும் வாதவிவரமும் விரிந்திருத்தலின் அவைகளைப் பெருநூல்நோக்கியறியலாம்.

## சங்கரர் தேசசஞ்சாரமும் வாதும்.

சங்கரர், அப்பால், இராமேச்சுர யாத்திரைசெய்து, சாத்தேயத்தை மறுத்து, சுத்தசாத்தேயத்தை நிலைநிறுத்தி, சிதம்பரம்

வந்து, சிற்சபை யடைந்து எழுநாள் சிவயோக நிலையிலிருந்து சிவகங்கையை யுண்டாக்கி ஞானவித்தையை வெளிப்படுத்தி, காஞ்சிபுரம் வந்து, வீரவைணவர்களை மறுத்து, ஏகாம்பரநாதரைத் தரிசித்து, வரதரை அருச்சித்து, ஸ்ரீகாமாக்ஷியார் சந்நிதியில் **காமகோடி ஸ்ரீயந்திரத்தைத்தாபித்து**, நகரத்தின் கணுள்ள தேவாலயங்களைச் சிரணோத்தாரஞ்செய்து குகையை யடைந்து தமக்குக் கோவிந்த பகவற் பாதரும் அகத்தியரும் அனுக்கிரகஞ் செய்திருந்த சில வித்தைகளைச் சமாதியில் அனுட்டித்துச் சித்திசெய்துகொண்டு யோகவல்லமையால் அங்கிருந்து, சேஷமலையாகிய வேங்கடம் வந்து சிவலிங்க பூசையின் பொருட்டுத் தோன்றிய விஷ்ணு, சேடன், சுப்பிரமண்ணியர் கூறுபாடுமுடைய வேங்கடேசுர மூர்த்தியை வணங்கி அங்கு, **தனகலாயந்திரத்தைத்தாபித்து** அங்கங்குள்ள புண்ணிய க்ஷேத்திரங்களில், தேவதார்ச்சனைசெய்து அநேகந் தோத்திரங்களைச்செய்து, சோழநாடு, பாண்டிநாடு, விதர்ப்பநாட்டின் வரையும் வென்று, ஆந்திரவேதியரனைவரையும் மாணாக்கராக்கிக்கொண்டு, **உருத்திர பாடியத்தையும், லலிதா பாடியத்தையும்** கருணைசெய்து, விதர்ப்பராஜன் வணங்கிப் பின்வர கொடியராகிய காபாலியர் நிரம்பியிருக்கும் கன்னடதேயத்திற்கு வந்தார்.

அங்கு * கிரகசன் என்னும் காபாலிககுரு சுடுகாட்டுச் சாம்பலைப்பூசிச் சடைவிரித்து எலும்பணிபூண்டு தலையோட்டினையும் கண்டக்கோடரியையும் கையிற்பிடித்து, மானுடர் தலையாகிய தாமரையால் வைரவ பூசைசெய்து நரமேத பசுவேள்விக்குக் காப்பணிந்து, தன்னைப்போல் ஆசாரமடைந்து ஆயுதபாணிகளாயிருக்கும் பன்னீராயிரம் மாணாக்கரோடு மலைகளில் வாசஞ்செய்து, ஊரிலுள்ளாரை எல்லாந்தங்கள் மாணாக்கராக்கி அச்சுறுத்தி அவரால் வணங்கப்பட்டு மானுடரைப் பிடித்து வைரவர்க்குப் பலிகொடுக்கும் வழக்கமுண்டா யிருந்தமையால் வேதியர் முதலிய எல்லா வருணத்தும் வேதவழக்கம் ஒளித்துப்போய், எங்கும் வைரவாகம வழக்கமே விளக்கமா யிருந்தது. சங்கரமுனி வரவுண்டாய் பலமாணாக்கரும் சேனைவலியும், காவலனாகிய அரசனும் சித்தாந்தநூலுபதேசமும் உண்டாயிருந்ததால் வைரவமத விளக்கங் குறைந்ததென்று அறிந்து, அந்தக் கிரகசன் என்பவன் ஆயுதபாணியாகிய சீடர் கூட்டங்களோடு, இவரைக்கொல்லவென்று மேல்விழுந்து வருகையில், பயந்தோடிவந்த வேதியர் கூட்டங்களைக் கண்டு, சுதன்மராஜன் தன்படையோடுவந்து போர்செய்திருந்தான். அப்போது கிரகசன் ஒருபுறம் தனது மந்திரவலியால் பகைவரை யறவெட்டிச் சாய்த்து, சங்கரர் மாணாக்கர் மீதுவந்துவிழ, சீடர்கள் திசைதப்பியோடினர். அதுகண்ட சங்க

* கிரகசம்-என்றால்-வாள் என்பது பொருள்.

ரர் உங்கார சத்தத்திலுல் பிறந்த தீ, காபாலிக் கூட்டத்தைக் கொளுத்திவிட்டது. அப்போதக் காபாலிகன் வைரவரைத் தியானித்து, கண்டக்கோடரியால் சங்கரரை வெட்டவந்தபோது, வைரவர் தன் வடிவாயிருக்கும் ஆன்மயோகிக்கு அபகாரம் எண்ணிய அக்காபாலிகன் றலையையே யறுத்துக்கொண்டு அச்சங்கரரால் துதிக்கப்பட்டு மறைந்துபோயினர். அது முதல் காபாலிகமதம் முற்றுமொழியவே, தேயத்தில் தரும பிரமகாண்டவழக்கம் விளக்கத்திற்கு வந்தது.

பின்பு, மேல்கடற்கரை தேயத்திலுள்ள கோகரணமுதலிய ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, அங்கு அரதத்தாசாரியர் முதலிய மாணாக்கர் கூட்டத்தோடு மிருந்த சைவசித்தாந்த பாடியகாரராகிய நீலகண்டா சாரியருக்கும், சங்கரா சாரியருக்கும் பெரிய வாது நடந்து அத்துவித சித்தாந்த யுத்திகளால் விசிட்டாத்துவித யுத்திகள் மறுக்கப்பட்டும் சிவசித்தாந்த சாமரசியம் உண்டாதலின் இருவர் கருத்தும் ஒருமையாய் அவரனைவரையும் அத்துவிதக் கருத்துடையவ ராகச்செய்து, அங்கிருந்து, கூர்ச்சர நாட்டையடைந்து, துவாரகையைச் சேர்ந்து பேத வாதியர்களாக விருக்கும் வைணவரனைவரையும் வென்று, அப்பால் பாகலீகதேயத்தை யடைந்து, நாஸ்திக மதங்க ளெல்லாவற்றினையும் வென்று, பின்பு அவந்திபுரத்திற்கு வந்து, பட்டபாஸ்கராசிரியரிடத்திற்குப் பதுமபாதரை யனுப்பிப் பெருவாது செய்வித்து மிகுந்த முயற்சியோடு வருந்தி வெற்றிகொண்டு, அதன்பின் வரிசையாக அங்கங்கு விளக்கமுற்றிருந்த பெருத்த எண்பத்தாறு துஷ்ட மதங்களையும், ஒருதலையாகச் சாங்கிய, கணாத, கௌதம மதங்களையும், மகாராட்டிரதேயத்துப் பிரசித்தியாயுள்ள தர்க்கை மதத்தினையும், மிதிலை நாட்டிலுள்ள சாக்தேய மதத்தினையும், வடமத்திய தேயத்துள்ள சௌரமதத்தினையும், வடகீழ் நாட்டிலுள்ள காணபத்திய மதத்தையும், நேபாள தேயத்துள்ள பாசுபதமதத்தினையும், கௌடதேயத்துள்ள நிரீச்சுரசாங்கிய மதத்தினையும், குபேரம், இந்திரம், சேஷம், வாயு, விருஷபம், அனுமம், கருடம முதலிய இருநூற்றுநாற்பத்தெட்டுச் சிறுமதங்களையும், பாதஞ்சலம், தன்வந்திரி முதலிய மதங்களையும், நவக்கிரக மதங்களையும், காலஞானசோதி மதத்தையும், இரேணுகை, மல்லாரி மதங்களையும், சுவாலாமுகி, நரசிங்க, இராம, கிருஷ்ண, காயத்த, கராடி, வாமாசாரமுதலிய மதங்களையும், நியாயவிசாரத்தால் வென்று, துட்டரனைவரையும் தண்டித்து, தக்கோர் யாவரையும் காத்து, சங்கராசாரியர் விஜயஞ்செய்ததால் உலகத்தில் மதச்சண்டைமுற்றுஞ் சாந்தமாய் பாடிய விளக்கத்தினுல், குருசம்பிரதாயமாய்வந்த ஞானப்பிரகாசம் நிரம்பப்பரவியது.

பதினைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

# பதினாறும் அத்தியாயம்.

நீத்த சந்நியாசிகளின் அரசாகிய சங்கரமுனிவர், பின்பு, கங்கைக்கரைக்கண்ணே வேதாந்த விசாரஞ் செய்துகொண்டிருக்கையில், அபிநவகுத்தர் என்னும் மந்திரசித்தியுடையவர் ஒருவர் வாதில் தோற்றமானத்தினால், அதர்வண வேதமுறைப்படி அச்சங்கரர்மேல் ஏவற்கருமஞ்செய்ய அதுவந்து சங்கரரை ஒன்றுஞ் செய்யலாற்றாது சென்றது. ஆயினும்சபையிலுள்ள புலவர்களைத் தோல்வியடையச் செய்து அவமானப்படுத்தி மனஞ்சிறுகும்படி வித்தைச் செருக்கினைக் காட்டினால் அதிபாதகமென்று கூறும் நான்முறைகளைப் பிரமாண மாக்குவித்தற் பொருட்டு உலகவிலையைப் பின்தொடர்ந்து,அச்சங்கரர் உடன்பட்டதால்,அந்தஏவற்றெய்வம் இச்சங்கரரது ஆசனத்தையடைந்து, உதிரம் வெளிப்படும்படி * மூலநோயை உண்டுபண்ணிற்று. மறுநாள் காவியாடையைக் கங்கையிற் றுவைக்கும்படி கொண்டுசென்ற தோடகாசாரியர் அதனை யறிந்துவந்து, ஆரிய! தேவரீர் தேகத்தில் நோய் வந்தாற்போலும் உள்ளது. இதற்கு விரைவில் பரிகாரஞ்செய்ய வேண்டுமென்று கூறினர். அதற்கவர், நீர்மேற்குமிழிக்குப் பூண் கட்டவேண்டுமோ?என்று சொல்ல,அந்த மாணாக்கர் தங்களுக்குத் தேகாபிமானம் இல்லாவிடினும்அந்தத்திருமேனி சுகமாவிருப்பது மாணாக்கர் உய்தற்குக் காரணமாயிருத்தலின் எங்கள் வேண்டுகோளின்படி தாம்பரிகாரத்தையுடன் படவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். அப்போதவர்,மைந்த! கேள் ஊழ்வினையாகவந்தவிவ்வுடம்பினுக்கு நோய் வருவதானால் இரண்டுகாரணமுண்டு. அவற்றுள், முதலாவது வினைக்கெடுதி, இரண்டாவது தாதுக்களின் குற்றம். அவற்றுள், முதலாவது, அனுபவிப்பதனாலொழிவதன்றி அதன்பொருட்டுக் கருமஃண்ணம் பிறவாது. இரண்டாவதன் பொருட்டும் பரிகாரஞ் செய்வதில்லை, எப்போதேனும் விழுந்து போகத்தக்க வுடம்புகாலம் வந்தாலொழிகின்றது. அதனை வைத்திருக்கவேண்டுமென்னும் இச்சையெமக்கில்லையென்று கூறினார். அதுகேட்டு, தோடகர்,தங்களுக்குத் தேகாபிமானம்,இல்லாவிடினும் எமக்கு வேண்டுங் கருமத்தை யாங்கள் செய்துகொள்வோமென்று கூறியதற்கு அவர் மௌனமாயிருக்க, அதுவே கட்டளையானதாகக்கொண்டு, இராஜவைத்தியர்களைத்தருவித்து, பரிகாரஞ் செய்கையில் ஒரு குணமுந் தோன்றாமையால் வேதத்துட்கூறியபடி வைத்தியநாதேசுரரைப் பிரார்த்தித்தனர். அப்போது, அக்கடவுளருளால் அசுவனிதேவர் வேதியர் வடிவாகவந்து, நோயை

---

* பகந்தரம் என்னும் நோயுண்டாயிற்றென்று சொல்லப்பட்டிருக்கிறது.

விசாரித்து, இது அந்நியருடைய மந்திரவேவலால் வந்ததென்று கூறிமறைந்து போனார்கள். பின் பதுமபாதர்வெகுண்டு, அபிசார கருமத்தைச் செய்வதன்மேற் றானேமறித்துச் செலுத்த மகா மந்திரத்தைச் செபித்து, ஏவுவதற்கு நினைத்துத்தமது குரவனார் தயவால் வேண்டாமென்று தடுக்கவும் கோபத்தினைப் பொறுக் கலாற்றாது, மந்திரத்தை ஏவியதால், அந்தக் கருமதேவதை ஆசிரியர் தேகத்தைவிட்டு, பாவத்தொழில் செய்த அந்த அபினவ குத்தனது உடம்பினைப் பற்றிக்கொண்டு அந்த வியாதியினை அவனுக்கு உண்டுபண்ணி விரைவிற் கொன்றுவிட்டது. அச்செய்தியறிந்து கொடிய மந்திரவாதிகளனைவரும் பெரியோராகிய ஞானியர் சோலிக்குப் போனால் கெடுதிவருமென்று அஞ்சி, மந்திர அபிமானம் விட்டுச்சாந்த மடைந்தனர்.

மற்றொருநாள் கங்கைக்கரையில் சங்கரர் குகையில் வீற்றிருந்து மாணாக்கரை அங்குதானே இருக்க விதித்து, யோகப் பயிற்சியால் வடகுருநாட்டிற்கும், சித்தபுரத்திற்கும் சென்று அங்குள்ளவர்க்குப் பிரம வித்தையைப் போதித்து, சாத்தேய மதத்தினுள் வாமாசாரத்தினை மறுத்ததனால் உண்டாகிய மகாசத்திகள் வெகுளியைத் துதிகளால் ஒழித்து, "சௌந்தரியலகரி" முதலிய நூல்களை வெளிப்படுத்தி, பூ கைலாசம் சென்று ஸ்ரீ சந்திர மோலீச்சுரலிங்க முதலியவற்றைப் பெற்றுக்கொண்டுவந்து, கிம்புருட கண்டத்தில் காத்திருந்த பிரமராக்கதனக்குப் பிரம ஹத்தியை யொழித்து, அந்தப்பெரும் பூதத்தினைச் சீடர் மடங்களினைக் காத்தற்பொருட்டுக் கலியுகம் நான்கு இலக்ஷம் வருடம் வரையிலிருக்கவேண்டுமென்று பணிவிடையில் நிறுத்தி, அநேகம் சித்தமுனிவரால் புகழப்பட்டு, சுவாலாமுகி, பகளாமுகி, இரேவணகிரி, முதலிய தலங்களில் உள்ள அடியவர்களுக்கு அனுக்கிரகஞ்செய்து, மகிமைகாட்டி, அங்கங்குள்ள மானுடர்களின் கொடுமையான ஒழுக்கங்களை விலக்கி, பொறிபுலனடக்கல், மனமடக்கல் முதலிய ஞானவழியைப் போதித்துவந்து கங்கைக்கரையை யடைந்தார்.

பின்னொருநாள், பூகோள ககோளவுண்மைகளை வினவிய பதுமபாதரை அருள்செய்து யோகப்பழக்கத்தா லவரையும் அழைத்துக்கொண்டு, வான்வழிச்சென்று, அவ்வாகாயமண்டலம் எல்லாந் திரிந்து, மேருசிகரம், துருவநிலை, கிரகமண்டலம், கிரக கக்ஷி, கிராந்திவிருத்தம், விக்ஷேப விருத்தம், பாதம், உச்சம், முதலிய கதிநிலைகளைத் தெரிவித்து, அயனசக்கிரத்தின் கதியை உணர்த்திப் பூகோளம் எல்லாவற்றினையும், அங்கைக்கனிபோ லுணர்த்துவித்துக் கருமக்கருவியாகிய சித்தாந்த பஞ்சாங்க கணிதமுறையினையும், கிரகணம், கிரகசமாகமம் முதலிய திருக்குச் சாதனத்திற்கு வேண்டும், பீசசமஸ்கார சித்தாந்த கணித ரகசியங்களை

யும் காலஞானம், பலஞானம் முதலியவற்றினையும், ஓரை, பிரசினை முதலிய இரகசியங்களையும், சுரகால சக்கிரங்களையும், அகத்திய சோதிவித்தையினையும், முற்றும் தெரிவித்து மீட்டும் வந்து கங்கையைச் சேர்ந்தார்கள்.

வேறொருநாள் சங்கரருடைய சுதந்தர விளையாட்டினைப் பார்த்துத் தாமும் அச்சமின்றி நடக்கலாமென்று, நினைத்த சில மாணாக்கர்களைக்குறித்து, பல மகிமைக் காட்சிகளைக் கண்காணக் காட்டி, அவரவர்க்கும் பாவமொழியும்படி சாபவிமோசன காலங்களை உணர்த்தி, அந்தப்பிரசங்கத்தில் பஞ்சத்திரமிடம், பஞ்சகௌடம் என்னும் பத்துவித பிராமணர்களின் முக்கிய பிரிவுகளுக்கும், திரமிடருள்ளே பலவாகிய சிறு சிறு பேதங்களையும், கௌடருள்ளுமுள்ள உட்பிரிவுகளையும், தெரிவித்து, எல்லாவருணாச்சிரம தருமங்களின் ஒழுக்கத்தினையும், அத்துவித வுபாசனையின் சம்பிரதாயங்களையும் ஏற்படுத்தினர்.

அப்பாலொருநாள், கங்கைக்கரையில் சங்கரர் தெளிதலாகிய நிதித்தியாசனம் செய்துகொண்டிருக்கையிலவரைப்பார்த்து, அருள்செய்து, ஆநந்திப்பதின் பொருட்டு, சுகாசாரியர் மாணாக்கராயும் ஸ்ரீநாராயணசொரூபராயு மிருக்கும் சிரஞ்சீவியாகிய ஸ்ரீ கௌடபாத சுவாமிகளென்னும் சித்தமுனிவர் யோகப்பயிற்சியால் ஆகாய வழியாக அங்குவந்து தரிசனம் கொடுத்தருளச் சங்கரர் தமது குரவராகிய கோவிந்த பகவற்பாதருக்கு ஆசிரியர் ஆதலின், தமக்குப் பரமாசிரியராகிய அவருக்கு விதிப்படி வழிபாடு செய்து, பூசித்துத் துதித்து நிற்க; அவர், மைந்த! உன்சரிதையை அப்போதைக்கப்போது, கோவிந்தர் சொல்லத்தெரிந்துகொண்டு உன்னைப்பார்க்கவேண்டுமென்னும் எண்ணம் உண்டாயிருந்ததால் இப்போது வந்தோம். நீ செய்த நூல்களைச் சொல்லென அவற்றையெல்லாம் காட்டி, இன்றியமையாத விடங்களைக்கேட்பித்து விசேடமாக மாண்டூக்கிய வுபநிடத பாஷியத்தினை முற்றும் ஓதி கௌடபாதாசாரியருடைய "காரிகைக்குத்" தாஞ்செய்த பாஷியத்தைப் படித்த பின் அவர் அவற்றையெல்லாம் கேட்டுத் தம்முடைய கருத்தினைச் சரியாகக்கண்டுபிடித்து உரைகளின் உட்பொருளை வெளிப்படுத்திய அச்சங்கரரது ஆற்றலுக்கு மிகக்களித்துத் திருத்தியுற்று, மைந்த! நீ எம்மினும் அறிவிற் சிறந்தவன் என்று நம்பத்தக்கதாக விருக்கின்றது. பாவமிகுதியாகிய இக்காலத்தில் அரக்கர் குணமுடைய மானுடரை இந்த நல்லவழியில் திருப்பிய உன் ஆற்றலுக்கு வியப்புறுகின்றேன். உனக்குவேண்டும் வரங்கேளென்று கூறினர். அதுகேட்டு, சங்கரர், ஓ! பரமாசிரிய! எனக்குவேண்டுவதாகிய திருவடித்தரிசனை கிடைத்தது. இதனினும் மேம்பட்டதொன்று வேண்டுவதில்லை. ஆனால், தாம் கருணை செய்தபடியால் என்மனம் எப்போதும் ஆன்ம நிலையுணர்ச்சியில்

கலந்திருக்கும்படி அருளல்வேண்டும் என்றனர். கௌடபாதரும், அவ்வாறே யருள்செய்து சிவசொரூபாநந்தம் அனுபவித்து, மீட்டும் வான்வழியே சென்றனர்.

## சங்கரர் சருவஞ்ஞ சிங்காதனத் திருத்தல்.

பின்னையோர்பகல், சமாதியிலிருந்து வெளிமுகமாதலும் மாணாக்கருக்கு வருங்கால விரகசியத்தைச்சொல்ல, அவர்கள் எல்லா முணர்ந்தவரென்று துதித்தபோது, ஆசிரியர், மற்றொரு காரியம் குறைவுபட்டுள்ளதென்றார். அதனை யறிவதற்கு ஆசைகொண்ட பதுமபாதர் முதலிய மாணாக்கரோடு அவ்வாசிரியர் காஷ்மீர மண்டல மடைந்து, ஸ்ரீநகர நாட்டின் கணுள்ள சரஸ்வதியின் சருவஞ்ஞபீடத்தின்மீது ஏறுவதற்கு முயற்சித்தார். அஃதெனெனில்! அங்குதேவ இருடிகளால் அமைக்கப்பட்ட வித்தியாபீடமும் சரஸ்வதிதேவாலயமும் உள்ளது. அதனுள்ளிருக்கும் பத்திரமண்டபத்திற்கு நான்குதிசையிலும் வாயில் மூடியுள்ளன. வித்தியாபிமானி தேவதைகளை நம் அவற்றைக் காவல்செய்திருப்பர். எல்லாமுணர்ந்தவன் அக்கதவினைத் திறந்து சென்று உள்ளிருக்கும் சருவஞ்ஞ சிங்காதனமீது உட்கார்ந்திருந்தால் அவனுக்குச் சரஸ்வதி செல்வசசுகம் உண்டாம். வடக்கு, கிழக்கு, மேற்கு என்னும் மூன்று திசைவாயில்களும் முன்னமே அவ்வத்திசைகளினின்றும வந்த அறிஞராற்றிறக்கப்பட்டுள்ளன. இதுவரையும் தென்றிசையிலிருந்து முற்றறிவனுகிய பெரியவன் ஒருவன் வந்ததில்லை யாதலின் தெற்குவாயில் மூடப்பட்டுள்ளது. அதனைத் திறப்பதற்குச் சென்றவரெல்லாம் அங்குகாவலிருந்த வித்தைத் தெய்வங்கள் புலவர்வடிவாக அவ்வவ்வித்தைகளில் வினவிய வினைகளுக்கு விடைகூறலாற்றாது பின்திருப்பி வந்துவிட்டனர் என்றறிந்து, சங்கரமுனி அங்குசென்று அந்தவித்தை மண்டபத்தினை வலம்வந்து வாயிலைத் திறக்கும்படி அறுபத்துநான்குபடி ஏறத்தொடங்க வொவ்வொரு தெய்வமும் ஒவ்வோர் புலவன்வடிவாக வொவ்வொருபடி மீதும் நின்று ஒவ்வொரு வித்தையில் வினவிவர, இச்சங்கராசாரியர் மிகுந்த சூக்குமமாயும் மறைபொருளாயும பெருவருத்தத்தோடு விடைகூறத்தக்கதாயும், எத்துணைப் பெரிய கலைவல்லோர்க்கும் விடைகூறுவதற்கு அருமையாயும் இருக்கும் அவ்வினைகளுக்கெல்லாம், உண்மையாகவும் திருத்தியாயும் ஆக்ஷேபமில்லாமலு மிருக்கு முடிவான விடைகளை உடனே எளிதில் உரைத்துக்கொண்டு எல்லாவித்தையிலும் நிறைவுடைமையைக காட்டி எல்லாப் படிகளையுமேறிச் சநந்தனர் கையைப்பிடித்துககொண்டு வாயிலருகுசென்று உள்ளிருந்து வினவப்பட்ட அசரீரிக்கும் விடைகூறியபின தானே திறந்து அந்த வாயிலிற்புகுந்து சருவஞ்ஞ பீடமேறி அவ்வரசை யடைந்து நிறைந்த அபிடேகராய் பூமண்டலாசாரிய குரு தலைவனென்னும் விருதுடையவராய்

எல்லாக்கலைவல்லோரெதிரிலும் எல்லாத்தேவராலும் புகழப்பட்டார். அப்போது, அச்சங்கரர்மேல் தேவர்கள் பூமழைபொழிந்தனர். மங்களவாத்திய முழங்கியது.

சங்கரமுனிவர் மாணாக்கராற் சூழப்பட்டு அங்கு நின்றும் புறப்பட்டு இமயச்சாரலிலுள்ள கேதாரத்தையடைந்து, அங்கு தவஞ்செய் திருந்தாரனைவர்க்கும் வேதாந்த நூலைப் போதித்தனர். அப்போது, பக்கத்திருந்த மாணாக்கரும் மற்றையரும் குளிர்வாதையால் மிகவும் வருத்தப்பட் டிருக்கையில் உலகோபகாரமாக அச்சங்கரர் கருணைசெய்து, பரமேச்சுரனைப் பிரார்த்திக்க, அப்போது பரமன் வெந்நீர்யாற்றினை தோற்றுவித்ததனால் அது சனங்களின் சீதநோயை யொழித்துச் சுகத்தைச் செய்தது. அப்படிப்பட்ட * தீக்குண்ட ஸ்தலத்திற்குச் சென்று வணங்குவோர்க்கு இன்றும் கண்காணப் பாவமும் சீதநோயும் போகின்றது.

## சங்கரர் கைலைக்குச் செல்லல்.

பின்னர் சங்கரமுனி உலகம் பிழைக்கும் பொருட்டு அத்துவித சித்தாந்த வித்தை மரபு காக்கும்படி வதரிகாச்சிரமம், துவாரகை, சகந்நாதம் என்னும் இம் மூன்று ஸ்தலங்களிலும் மடஞ்சமைப்பித்து, அங்கு வேத மஹாவாக்கிய சம்பிரதாய தீர்த்ததேவதை யோகவட்ட பேதங்களுடைய குருத்தானங்களை ஏற்படுத்தி முறையே ஆநந்தகிரி, பதுமபாதர், அத்தாமலகரை அங்கு அபிஷேகஞ்செய்து அவ்வுலக குரவராகிய மூன்று பீடத்தவரும் சகத்துக் குருத்துவமுடைய சாரதா பீடத்தவர்க் குட்பட்டிருக்கவென்றும் நியமித்து அவரவர்க்கும் தேவதார்ச்சனைகளையும் கொடுத்துத் தாம்பிறந்த காரியங்களெல்லாம் நிறைவேறி விட்டதென்று திருத்தியடைந்தனர். அக்காலத்தில் முப்பத்திரண்டுவயதும் நிரம்பிவிட்டது.

பிரமன்முதலிய எல்லாத்தேவரும் வேண்டிக்கொண்டதால் பரமேசுர கிருபையால் நந்தீசரும் பிரமதகணமும் சித்தமுனிவரும் பிரமாதிதேவரும் இந்திரனாதி திக்குப்பாலரும் தெய்வவிடையும் ஆகாயவெளியிற்றோன்றி சங்கரமுனிவரைப் புகழ! † தத்தா

* ஸ்ரீ சங்கரர் தமது சரணாரவிந்தங்களி லிருந்து உண்டாக்கினதாகவும் சொல்லப்பட் டிருக்கிறது.

† சங்கரர், தமதிறுதிக் காலத்து தென்னாடடைந்து பஞ்சபூதத் தலங்களில் பிருதிவித் தலமாகியதும் "நகரேஷு காஞ்சி" என்றும், உலக மாதாவாகிய காமாக்ஷியம்மை, முப்பத்திரண்டறங்களை வளர்த்து, சச்சிதாநந்த ரூபியாகிய பரசிவத்துக்கு, வளைத்தழும்பும், முலைத்தழும்பும் கொடுத்த க்ஷேத்திரமுமாகிய காஞ்சிக் கண்ணின்றும் ஸ்ரீகைலைக் கேகினதாகவும் சொல்லப்பட் டிருக்கிறது. இதற்கிரண்டு காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன — (1) ஸ்ரீ காமாக்ஷியம்மை திருக்கோயிலுள் அவர்

த்திரேயர் குகைவாயிலில் மாணுக்கரனைவருக்கும் விடைகொடுத்துத்தாம் குகையிற் சிவயோக சாமாதியிலிருந்து ஞானவின்ப வடிவத் தெய்வலிங்க சரீரத்தை யோகசத்தியால் சிதம்பரத்துட் கலக்கப்பண்ணி வானத்தெழும்பி யிடபாரூடராய் தேவரெல்லாம் புகழக் கைலாயத்திற்கு விஜயஞ்செய்தார். *

சிவபுராண சித்தமாகிய இந்த புண்ணிய சரிதை ஞான யோகிகளால் இக்கலியுகத்திற் கண்காணப்பார்த்து எழுதப்பட்ட பழபகதைச் சுருக்கமாக விருக்கின்றது. இந்தப் புண்ணியமான குருகதையைப் பத்தியோடு கேட்டும் படித்தும் உணர்ந்தும் நம்பியும் தொழும் புண்ணியர்க்குச் சிவகிருபையால் இம்மையில் எல்லாச்சுகமும் முடிவில் மேலான ஞானமும தேகமுடிவில் சிவ ஞானந்த சுத்தாத்துவித அமுதபதமும் கிடைக்குமென்று மஹாத்மாக்களாகிய பெரியோர் கூறுவர்.

## பதினைரும் அத்தியாயமும்
## சங்கரவிஜயமும்
## முற்றிற்று.

---

விக்கிரகமொன்றுவைத் தின்றும் வணங்கப் படுகின்றது—(2) மற்றொன்று சிற்பமுறையாக அவ்விக்கிரகத்தி னடியில் அவர் தேகஞ் சேமிக்கப் பட்டிருக்கிற தென்பது.

* ஸ்ரீ சங்கரர், கி. பி. 828-ம் வருஷத்தில் கைலைக்கு எழுந்தருளினதாகச் சொல்லப்பட் டிருக்கிறது.

உ

கணபதிதுணை.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 6 | 4 | தாகாட்சி | தர்காட்சி |
| 6 | 26 | மேலெழுநது | மேலெழுந்து |
| 9 | 5 | அததேயத் | அத்தேயத் |
| 11 | 28 | வினறி | வின்றி |
| ,, | 31 | தேவரீா | தேவரீர் |
| 16 | 21 | பின்பவர்களின் | பின்பவர்கள் |
| 21 | 37 | பொருட்டுங் | பொருட்டுத் |
| 23 | 35 | குபேரன | குபேரன் |
| ,, | 36 | நவககிரக | நவக்கிரக |
| 27 | 19 | முனர்ந்த | முணர்ந்த |
| ,, | 35 | செயவிக்கத் | செய்விக்கத் |
| 31 | 31 | யந்தணாக்கே | யந்தணர்க்கே |
| 39 | 29 | தாற்றத்திற்கு | தாற்றலுக்கு |
| 41 | 39 | விடஙகளாகிய | விடங்களாகிய |
| 43 | 31 | வல்லவராகய | வல்லவராகிய |
| 44 | 17 | வெளிபபடவே | வெளிப்படவே |
| ,, | 21 | பபடி | ப்படி |
| 46 | 3 | பாம்பைப | பாம்பைப் |
| 47 | 29 | செனறு | சென்று |
| 48 | 11 | யிடுகினறேன் | யிடுகின்றேன் |
| 53 | 29 | ஆராய்ப்புகின் | ஆராயப்புகின் |
| 56 | 39 | மாமத் | மாத் |
| 57 | 7 | வேம்பூண்டு | வேடம்பூண்டு |
| ,, | 38 | பரடோதர்ம: | பரமோதர்ம: |
| 59 | 16 | விவாணங் | விவரணஞ் |
| 61 | 4 | யடைநது | யடைந்து |
| ,, | 31 | தவலிமையால் | தவவலிமையால் |
| 62 | 16 | சாரண்டா | தாரண்டா |
| 63 | 1 | விரோசாபா | விரோதாபா |
| ,, | 9 | எவ்வளவம் | எவ்வளவும் |
| ,, | 31 | விதிபபடி | விதிப்படி |
| 64 | 16 | தருக்கததின் | தருக்கத்தின் |
| ,, | 29 | வற்றையும | வற்றையும் |
| ,, | 31 | சாதக்கத் | சாதிக்கத் |
| ,, | 39 | பயத்தி | பயபத்தி |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| 65 | 6 | நிறைந்திருந்திருந்தனர் | நிறைந்திருந்தனர் |
| 66 | 4 | வேமுடி | வேதமுடி |
| 69 | 25 | சசித | சகித |
| 71 | 23 | மித்தயன்று | மித்தையன்று |
| 72 | 13 | திரத்னது | திரத்தினது |
| ,, | 21 | அவத்தையால் | அவித்தையால் |
| ,, | 22 | அவ்வித்தை | அவ்வவித்தை |
| ,, | 43 | சிந்தியாதி | சித்தியாதி |
| 73 | 27 | தக்ககலை | தக்கலை |
| 79 | 28 | மனத்துள்ளெ | மனத்துளெ |
| 84 | 31 | காததிருந்தும் | காத்திருந்தும் |
| ,, | 33 | குரவனைப | குரவனைப் |
| 88 | 27 | பயனைப | பயனைப் |
| ,, | 28 | கொடுகக | கொடுக்க |
| ,, | 31 | நிடடை | நிட்டை |
| ,, | 38 | சங்கர | சங்கரர் |
| 90 | 15 | சொல்லூர் | கொல்லூர் |
| 91 | 31 | கருனை | கருணை |
| 92 | 24 | பின்ப | பின்பு |
| 93 | 17 | யிருக்கினற | யிருக்கின்ற |
| 97 | 38 | பத்தியம | பத்தியம் |
| ,, | ,, | அவறறி | அவற்றி |
| ,, | 39 | நெடுங | நெடுங் |
| ,, | 40 | கொடுககக் | கொடுக்கக் |
| 98 | 6 | சங்கரா | சங்கரர் |
| 99 | 21 | கருத்துணடு | கருத்துண்டு |
| 102 | 18 | பஞசயா | பஞ்சயா |
| ,, | 19 | எழுதுவிதது | எழுதுவித்து |
| 103 | 31 | தன | தன் |
| 106 | 1 | காபாலிக் | காபாலிக |
| 108 | 3 | செய்வதன் | செய்தவன் |

கணபதிதுணை.

# இந் நூலாசிரியரியற்றிய நூல்கள்.

## வசனநடை.

பாராசரஸ்மிருதி ஆசாரகாண்டம்.
சங்கரவிஜயம்.
திருவெண்காடர் சரித்திரம்.
பெரியபுராணவசனம்.
மார்க்கண்டேய புராணம்.
வேளாண்மரபியல்.
யோக வித்தையைப் பற்றிய உபந்நியாசம்.
விநாயகசதுர்த்தி விரதசங்கிரகம்.
மகா வீரசரித்திர நாடகம்.

## செய்யுள் நடை.

### மூத்தபிள்ளையார்.

துவாதசநாம சங்கீர்த்தனம்.
திருப்பாதப்புகழ்ச்சிமாலை
சரணதசகம்.
மங்களம்.
பஞ்சரத்தினம்.

### இளையபிள்ளையார்.

ஸ்ரீ சிவசண்முக சரணாஷ்டகம்.
திருப்பதத் திருப்புகழ்மாலை.
திருக்கழற் பல்லாண்டுமாலை.
சித்திரயமக வந்தாதி.
திருத்தணிகைச் சித்திரமாலை.
,, பதிற்றுப்பத்தந்தாதி.
,, வெண்பா வந்தாதி.
திருத்தணிகை நான்மணிமாலை.
,, மும்மணிக்கோவை.
,, இரட்டைமணிமாலை.
,, கலம்பகம்.
திருப்போரூர் கலிவிண்ணப்பம்.
தனிப்பதிகங்கள்.

### சிவபெருமான்.

ஸ்ரீ சிவாட்டோத்தர சதநாமமஞ்சரி
ஸ்ரீ பாதத் திருப்புகழ்மாலை.
திருவடித்திருப்புகழ்மாலை.
திருப்பதியடிகாயிரத்தந்தாதி.
உடைக்கலமாலை.
அபயமாலை.
சிறுவிண்ணப்பமாலை.
சரணாகதிமாலை.
அம்பலக்குறம் (அமுதப்பாட்டு.)
கையடைமாலை.
சந்நிதிமுறையீட்டுமாலை.
ஓலமாலை.
தைநிய சரணியமாலை.
கையறவுமாலை.
அபராத க்ஷமிப்புமாலை.
இணைமணிமாலை.
அருண்மை பாராயணத்திரட்டு.
மகிழ்மாக்கலம்பகம்.

### வடிவுடையம்மையார்.

### சௌந்தரியாஷ்டகம்.

### திருவநட்பிரகாசனார் சந்நிதிமுறை.

[illegible]டைய பிள்ளையார்.
இ[illegible]ட்டைமணிமாலை.
[illegible]மாலை.
ஆளுடைய நம்பிகள்.
கலிவிண்ணப்பம்.

### சிவஞான பாலையதேசிகர் மும்மணிக்கோவை.

### நெஞ்சாற்றுப்படை.

### ஸ்ரீ தாததருநாதர் கலிமாலை.

Ripon Press.